S.347

உ

கடவுள் துணை.

தெய்வத்தன்மைபொருந்திய

திருவள்ளுவநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

# ஞானவெட்டியான் 1500.

இஃது.

திருவாலங்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பரிசோதிக்கலுற்று

பூமகள்விலாசஅச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னை.

பெத்துநாய்க்கன்பேட்டை

தாண்டவராயப்பிள்ளைவீதி

24 வது நெ-வீடு.

அ. இரங்கசாமிமுதலியார் அண்டுசென்ஸ்

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

அருந்தமிழறிந்த அன்பர்களே! சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தாண்டவராயப்பிள்ளை வீதி 24-வது நெம்பருடைய பூமகள்விலாச அச்சியந்திரசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்கு முதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த்த வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பாலியர்களுக்கு வேண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டு புஸ்தகங்களும், இசுலமானவர்களுக்கு வேண்டும் தமிழ் எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை- அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் ஊ-புஷ்பரதசெட்டியார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த வுபர்ங்கபுஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்கதாய் வெகு அழகான வேலைசெய்த றப்பர் சீல்களும் ஜெர்மன் சில்வராலும் எலெக்டிர்க்கங்கத்தாலும் செய்த நகைகளும், சாமான்களும் நல்ல வாசனைபொருந்தியதாயும் நாள்படவிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தினுசுகளும், பூசுபில்லைகளும், வாசனை வத்திகளும் இவைகளெல்லாம் தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல்விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும். என்னுடைய கேட்லாக் வேண்டுமானவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் இலவசமாய் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷபம் தெரியும்படி தெளிவாய் ஒவ்வொரு முறையிலும் தங்கள் பெயர் ஊர், இருப்பிடம், போஸ்டாபீஸ் தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை கட்டாயமெழுதவேண்டும்.

பூமகள்விலாச அச்சியந்திரசாலைத்தலைவர்

சௌகார்பேட்போஸ்டு மதராஸ்.

☞ அ-இரங்கசாமி முதலியார்

அண்டு ஸன்ஸ்,

உ

கடவுள்துணை.

# ஞானவெட்டியான்*

# 1500

---

## பாயிரம்.

### காப்பு.

### விருத்தம்.

அண்டபிண்டம்நிறைந்துநின்ற வயன்மால்போற்றி
யகண்டபரிபூரணத்தி னருளைப்போற்றி
மண்டலஞ்சூழிரவிமதி சுடரைப்போற்றி
மதுரதமிழ்ழோதுமகத் தியனைப்போற்றி
எண்டிசைபுகழுமெங்கள் குருநவைப்போற்றி
யிடைகலைபிங்கலைசுழிமுனையின் கமலம்போற்றி
குண்டலிக்குளமளர்ந்துநின்ற குகனைப்போற்றி
குருமுனியின்தாளிணையைப்போற்றிபோற்றி (௧)

குகனருளின்கிருபையினா லிந்நூல்ஞானங்
கூர்ந்துசிவசித்தர்மொழி குறித்தாராய்ந்து
புகழுயிர்த்தச்செந்தமிழா யிரத்தைந்நூறு
புகலவும்பூதக்களெல்லாஞ் செழித்துவாழ்க
ஆகமகிழுமம்பிகைப்பெண் ணருளினாலே
யவனிதனில்ஞானவெட்டியருளயானும்
நிகழ்திருவள்ளுவநயனா ருரைத்தவேத
நிரஞ்சனமாநிலவுபொழி ரவிகாப்பாமே. (௨)

நிலவுபொழிபிரவிமதி யருளினாலே
நின்றிலங்குநாதவிந்தி னிருவிகாப்பு
வலமிடமாய்சூழ்ந்துவருஞ் சாரசாரய்
வழலையெனுமாமதுர வாணிகாப்பு
வுலகமதிற்கடல்சூழ்ந்த புவனைவாலை
யோங்காரமூலகண பதியேகாப்பு
தலமதிதசனகாதி ரிஷிகள்பாதஞ்
சடாதாரசூஷ்மசடா தாரங்கப்பாம். ௩

---

* ஞானவெட்டியென்பதுஞானவழி.

சடாதாரமதிலிருந்தவளவாணி சரஸ்வதியும்பிரமன் பதமாலின்பாதம், நீடாழிலட்சுமிப்பெண்ணருளின்பாதம் நிரஞ்சனருத்திரன் பாதனேமிபாதங், கடாகமெல்லாம்நிறைந்துநின்றமயேசன் பாதங்கருணைமயேஸ்வரியினிருகமலபாதந், தடாதசதாசிவத்தின்மனோன்மணியின்பாதஞ் சாம்பசிவன்பொற்பதஞ்சந்ததமுங்காப்பாம். (௪)

பாதமடிமூலநடுவிந்தின்மூலம்பராபரையின்வீடுபரப்பிர்மவீடு, ஓதுசந்திரபுஸ்கரணிமாலின்வீடுஓரெழுகதாநின்றிலங்குமுருத்திரனவீடு, நாதவிந்திரனமேருமுடிசுடரின்வீடு நாதாந்தமயேஸ்வரத்தின்வாயுவின்வீடு, சூதமுனியீசனுறவாடும்வீடுசோதியெனுமாக்கினையின்காப்புத்தானே. (௫)

ஆக்கினைக்குள்சத்தம்பிரிதிவுபீட மப்புவின் வீடுவன்னிவாயுவினவீடு, ஏக்கமில்லாவாகாசமேருவீடு இரவிமதிசுடரிலகுமின்பவீடு, பார்க்கபணுமுடிநடுவில் நடனஞ்செய்யும் பராசத்தி சிவசிங்காதனத்தின்வீடு, பூர்க்குமலர்வாசியிருந்துலவும்வீடு புகழ்பெரியவைம்பூதம் புலன்காப்பாமே. (௬)

பூதாதியிருந்துவிளையாடுபீடம் பொற்கமலமாயிரத்தெட்டிதழின்பீடம், நாதாக்கள் திருநடன மௌனபீடம் நந்தியொளிவந்து செகநாதபீடம், வேதாந்தபூரணமெய்ஞ்ஞானபீடம் வித்தாரவாகமத்துக்கதீதமான, ஆதாரமூலவன்னியமர்ந்தபீட மாந்நடனசபையைந் துங்காப்பாம். (௭)

ஐந்துருவாயுடலெடுத்தவாறின் கூறுமசடில்லாத்தேகமென் சாணுக்துமக்கூறும், விந்துதித்துச்சடமெடுத்தநாதக்கூறும் விற்பனமாய்கடமுதித்தகாயக்கூறும், தந்திரமாய் நீர்க்குமிழியானகூறுந் தத்துவந்தொண்ணூற்றாறுசைலக்கூறும், இந்திரியசுக்கிலசுரோணிதத்தின்கூறுமியம்புதற்குத்தெசநாடியியல்புகாப்பாம். (௮)

தெசநாடிசுவாசமதுஞ் செனித்தவாறுஞ் ஜெகதலத்திலெனைபபழித்தசெய்தவாறும், அசைவதிருந்தாக்கை யழியாதவாறு மடி நடுவுமுடிவானகற்பவாறும், பசைந்தமண்ணீறப்புவ்வ ரெடுத்தவாறும் பஞ்சபட்சியஞ்சுநிலைத்திருந்தவாறும், இசையுந்திட்சமதிரவியன் வாறுமிராஜயோகத்தினருள்காப்புதானே. ௯

யோகாதியோகிநிலைத்திருந்தபோக்கு முற்பனயாங்கற்ப முண்டுசாகாப்போக்கும், வேகாததலையுமதிரவியின் போக்கும் வெணசாரைகருநெல்லிவிதித்தபோக்கும், போகாப்புனலுஞ்சவுக்காரப் பூநீர்போ

க்கும் பூதலமெலாமகிழும்பொருளினைபோக்கும், ஆகாதமனிதர்களைய
ற்றுமபோககு மசடில்லாமாதுரசகுளிகைகாப்பாம். (௰)

குளிகைரசமாதுகற்பக்குகையின் மூலங் குருபூசை குண்டலியின்
வாசிமூலம், எழிபறியு மவிழ்கமொடுநோய்கள்தீர வழலைமுப்பு வைத்
தியமுங்கிருதமலகியம், விழிமடவாளம் பிகைப்பெண்ணருளினுமேல வி
வேகமணிமாததிரையும் பஸ்பந்தானும், தெளிவுபெருஞ்சுண்ண மொ
டுசெந்தூரங்கள் திராவகமுஞ்செயநீலிஞ்செனனிகாப்பாம. (௰௧)

சென்னிவளர்சிவசிக்கா தனத்தின்மேவுஞ் சிதம்பரமாநடன சு
டைசித்ரகூடம், வனனிமதிப்பிரகாசசமலபீட மதுரவின்பவ மி தசங்
வாணிபீடம், உன்னிதமாய்க்கன்னி யெனக்கமிர்தமூட்டி யுயிருமுடல்
நிலத்திட வுபாயஞ்சொன்னாள், இனனிமித்தம் பொருத்த மெனக்களி
த்தஞ்ஞான விருளகற்றிப்பானரசமீந்தாள்காப்பாம். (௰௨)

## வேறு.

இருள் தனையகற்றுஞ்சோதி யீகபரவெளியேபோற்றி
அருள தருஞானதேசி யகத்தீசாருளினாலே
திருவுருதவளவாணி சிரோமணிக்கமலந்தனனில்
அருமலர்பொழியுஞான வமிர்தசெந்தமிழைச்சொல்வாம்.

## வேறு.

நந்தி யொளிப்பிரகாசவட்டத்துள்ளே நற்கமலமாயிரத்தெட்டி த
ழைப்போற்றி, உந்தி நிலையறிந்ததிருமூலர்பாத முந்மையுள்ளகாலாங்
கிப்போகர்பாதஞ், சிந்தையுள்ளமகிழ்ந்த சட்டைமுனியின பாதஞ் சி
வசமயங்கண்டகோரக்கர்பாதம், அந்திபசலறிந்தவிடைக்காட்டார் பா
த மருளுஞ்சகநாரர்பதமற்சித்தேனே. ௰௪

மதியிருந்துகுமுறிவிளையாடும்வீடு மகத்தானசெங்கதிரோன் மகி
ழ்ந்தவீடு, பதியிருந்துவிளையாடுமூலவீடு பத்திமருஞ்சித்திதரும் பரம
வீடு, துதிபெறவுநாற்சகிரமேலுநின்று துலங்குமபழிற்கணபதிவல்ல
பையைப்போற்றி, நிதிபெறவுமெனேயீன்றகுருவின்பாத நிகலாமலனுதி
னங்காப்புதானே. ௰௫

திருவிருந்துகனலெழுந்துஆடும்வீடு சிறந்தசத்திவல்லபை தன் க
ணவனை, மருவிருந்து கொஞ்சுதமிழ் நாவில்மேவு மகிழ்ந்தமத கரியி
னிருதாளைப்போற்றி, கருவிருந்தவொரு வீடுதாணடியப்பால் கணகுளி
ரநின்றநடுவணையிலேறி, மருவியுயிர்நாதவிந்து ஆயிபாதம் வணங்கியி
ந்தநூல்வனகயைப்புகழ்வேனுண்டே. ௰௬

தந்தைதாய் சுருவதனிலுதித்தவாறுந் தாரணியில்கருத்திரண்டு பி
றந்தவாறும், அந்தமுடன்சாதிகுலம்வகுத்தவாறு மவனிதனிற் "பெரி
யோர்களறிந்தவாறும், சிந்தைதனிலஞ் செழுத்தைப்போற்றி செய்து
செப்புகிறேனிந்நூலையிகழவேண்டாம், தந்திரமாமுக்கோணந் தன்னி
ல்நின்ற தந்திமுகன்கமலபதங்காப்புதானே. ௰எ

கதிரொத்தவிடங்கனிலேயிலகுஞ்சோதி கனகரத்னமிலகு திருமண
ண்டபத்தில், மதிபொத்து நின்றிலங்குஞ்சுவாதிஷ்டானம் வளர்ந்த
விதழிமமூன்றுமங்குலத்தில், நிகரொத்தபிரமன்சரஸ்பதியின் பாதம்
நினைந்துருகித்தாளிணையைப்போற்றிசெய்து, உதிரத்தில் சுக்குலந்தா
னவந்தவாறு மோரெழுந்தாநாதாவிந்தமைத்தவாறே. ௰அ

சொல்லரிதுமந்திரத்துக்கெட்டாவீடு சோதிமணி பூரகத்திலமர்ந்
தமூர்த்தி, வெல்லரிதுநாபியதின் கமலத்துள்ளே விறைந்த விதழீரைஞ்
சுபத்துமேலும், வல்லபமாய்நின்றிலங்குமாலின்கேரு வளர்ந்த சபை
த்திருமாலைவணங்கிப்போற்றித், தொல்லுலகிலுள்ளபெரியோர்கள் பா
தந் துதித்திந்நூல்விளம்புகிறேனுண்டேகேளீர். ௰௯

வட்டமிட்ட சதுஷ்கோணபாரின் மேலும் வளர்ந்த விதழீராறும
ங்குலத்தில், இட்டமிட்டவனுகத்தில்வீற்றிருந்த சிறந்தருணிம் ருத்தி
ரனுருத்திரியைப்போற்றி, வெட்டவெளிவேதமறை நான்கு மோதும்
வேதமெல்லாந்திரு நீருபானவாறும், அஷ்டதிசையறிந்துணர்ந்த பெ
ரியோர்பாத மைம்பத்தோரட்சரமுங்காப்புத்தானே. ௨௰

ஆறுகொண்டவம்பலத்திநின்றசோதி யம்பரமாங்கற் பாத்ன கயே
றிதிந்தம், வீறுகொண்டவறுகோணவீட்டின்மேலும் விளங்குய தழ்ப
திறுமேவுபீடம், பேறுபெற்றபேசனம யேஸ்பரியுமங்கே பேணிய
வரிருவர்பதக்கமலம்போற்றி, பாரிலுள்ளவேதமரியாமல்நின்ற பழம்
பொருளைப்பாடுகிறேனுண்டேகேளே, ௨௧

காலைவட்டமாலைவட்டமாகிநின்ற கதிர்மனையிற்கருதிமூனை யாடு
ஞ்சோதி, நீலவட்டங்கொண்டெழுந்த கலைபெண்ணுன் கும் நின்றில
ங்குமாக்கினையிலிதழு மூன்று, ஞாலமதிலாதியந்தரூபமான நற்கமல
மாயிரத் தெட்டிதழின்மேலும், ஆலவிடமுணடசதா சிவனைப்போற்றி
யம்பிகையின்கமலபதமர்ச்சித்தானே. ௨௨

திரைகடந்து திரைக்குமேற்பெரும் பாழ்தாண்டி சிறந்த காக்கா
லும்வேகாத்தலையுந்தாண்டி, மறைபுகுந்துவோதுகின்ற வேதந்தாண்டி
மதனகலியாணதிருவல்லிமாது, வரைபெழுந்தபதினெட்டாங் கோட்

5347

டின்மேலு மாதனம்பூவடிவுபஞ்ஞென்மணியைப்போற்றி, கரைகடந்து
பறையனென்றுதள்ளிவைத்த கருதனதையினிச்சொல்லுகிறேனுண்டே
களே ௨௩

அந்தமுள்ள குருவினடிக்கமலம்போற்றி யன்னை தந்தை யிருவருந்
தானனுபோகிக்க, தந்திரமாயிரவு தனிலணையும்போது நாதுவிந்துநா
தமதுமெழும்போதில், எந்தவுயிர்வேதமதை யறிந்ததாண்டே யிடும்
பரெல்லா நீசனென்று தள்ளினார்கள், வந்தவழிபோனவழி யிரண்டுஞ்சொ
ல்வேன் வகையறியாமாந்தர்களே யறிந்துகொள்வீர் ௨௪

பிரமகுலவேதியராய்ப்பிறந்தார்கோடி பெருமையுள்ளக்ஷத்திரிய
ர் பிறந்தார் கோடி, திறமையுள்ள வைசியர்களாய்ப்பிறந்தார் கோடி
தெளிவானசூத்திரராய்ப்பிறந்தார்க்கோடி, உறவதிதநால்வகையாய்ப பி
றந்தார்க்கோடி யுள்ளுணர்ந்துபாராமல்தள்ளினார்கள், அரனருளாம்ச
பைநிறைந்தவாணடமாறே யாதியிலேசாதிகுலமுறைசெப்வேனே. ௨௫

எங்கள் குலஞ்சுக்குலத்தா லெடுத்தவாறு மெண்ணரிய சுரோ
ணிதத்தால் வளர்ந்தவாறு, மங்காதவஞ்செழுக்கால் வந்தவாறும்
வகையுடனேயக்குலமோ தொண்ணூற்றாறு, சிங்காரமானமனம்புத்தி
சித்தம்செங்கனலாற்கொண்டெழுந்தவாங்காரந்தான், கங்கையணிசங்
கரனாரம்பிகைப்பெண் கருத்தாலேயெடுத்ததிக்காயமாண்டே. ௨௬

கருதிரண்டுகாயமதாயானவாறும் கருவியதிலேவளர்ந்துவெழுக்க
வாறும், உருதிரண்டுகால்கைகள் வகுத்தவாறு முடம்புக்குள்சதை நி
ணங்கள்கரித்தவாறும், திருவிருந்தமண்டபங்கள்சமைந்தவாறும் சிறு
பிள்ளைபாய்ப்பிவியுல் பிறந்தவாறும், அருபியெனுநாதாக்களபாதம் போ
ற்றியாதியிலேசாதிகுலமுறைப்பேனுண்டே. ௨௭

பாயிரம்-முற்றிற்று.

---

# நூல்

## கரு

தந்தனதனனா தந்தனாதனா-தன்னனா.

மூலமுமுதலறிந்து-சிவசிவ-முத்திகரநஞ்சுழிமுனையறிந்து, பாலமு
ந்தாணடியப்பால்-பரிபூரண-பானுமதியமிர்தபானமுண்டு, சீலமுநிறை
ந்துநிறை-மூலமணிதிருமாலின்பொற்கமலச்செயலறிந்து, ஞாலமுங்கட
ந்துநிறை-வுபர்குல-ஞானவெட்டியார்நான்காணும்-கந். ( )

நடுவணைதனிலேறி-சிவசிவ-நாடியகுண்டலிவட்டத்துள்ளே, அடி
நடுமுடியறிந்து-சுடரதில்-அனுதினமவாசிகொண்டமிர்தமுண்டு, படியறி

ந்திசைநாதம்-சிவசிவ-பத்து மொருமித்துவருபழக்கமதால், வடிவுள்ள ஜெகஜ்ஜோதி-கமலமலர்-வந்துபணிந்தவனுன்காணும்-தங், ௨௯

வீம்புகள்பேசுகிறீர்-சிவசிவ-வேடிக்கையாயின்பம் விளம்புகிறீர் வேம்புகருமபதுவாம்மா-மகத்துகளின-விற்பனத்தைக்கண்டறியா விழலென்கிறீர், சாம்பவ மூர்த்திபர்கம்க-பட்டமது-ஸ்தாபித்த சாம்புவனுன்காணும, தீம்புகளறவீசி-தெளிந்தவர்கள்சீர் பாதங்கண்டவர் போல் தெறிசிக்கிறீர்தங் ௩௰

சபைதனிலுள்ளவர்கள்- ஆண்டையேகேள்-சாதியிலீனனென்ச்சாற்றுகிறீர், உறுபயமில்லாமலும்-அங்கசுத்தி-யுடலரிபாசம்செபங்களோது இன்றீர், வகையமாதாகிட நூல்கள்-வீண்பிலுக்கா-வாசிப்பறியாமலுமேமயங்குகிறீர், ஓளவையார்குலத்திலவந்த-வள்ளுவனெனும்-ஆதிபீடமுநான்காணும-தங். ௩௧

சிக்கியநூல்பிணைப்பார்-சிவசிவ-சேணியசாதியிலுள்ளபடி; புக்கிய நூலிழைக்கும-பூதங்களில்-புரிந்தநூலிழைகளைப் பூட்டிவைப்பார், தக்கியபறையெனவும்-சிவசிவசாதிகளில்முதல்ஜாதியெனு, முக்கியநூல் பிணைக்கும்-மெஞ்ஞான-மூர்த்திசாம்பவனுனகாணும்-தங். ௩௨

அருந்ததுநூல்பிணைக்கும்-சிவசிவ-அச்சனும்பாவதுகண்டமட்டும்; சிறந்ததுநூல்பிணைக்கும-சிவசிவ-சித்திரச்சாம்புவனுன்காணும், பறந்த பஞ்சதுநூலா-இழைபிசகா-பன்றநூலதுபஞ்சவர்ணமதாய், நிரந்தரவிசிதமெனும்-சிவசிவ-நிஷ்டைதனில்மிகுந்தநிர்மலனகாண-தங். ௩௩

ஆதியந்தமுங்கடந்து-ஆதாரமூலம்-அதுகடந்தபரவெளிதாண்டி, நீதியினமறைவிளங்கும்-முப்பாழ்கடந்து-நிறைபரிபூரணத்தின நிலைகடந்து, ஓதுமறைவேதமுந்தாண்டி-பிரகாசவொளி-ஓங்காரத்ங்காசனத்திலுதியதாய்ச், சோதியின்நிலையில்நின்ற-சுழிமுனையில-துதித்துதொழுதசாம்புவனகாணும்-தங். ௩௪

பூணநூல்பிறந்ததெங்கே-சிவசிவ-பின்கொடுமையானதுவுமானதெங்கே, வானோர்கள் துதிப்பதெங்கே-மணிமந்திர - வாக்கியசெபதபங்கள் வாழ்க்கையங்கே, கோனருள்புரிவதெங்கே-யாகசாலைக்-குருக்களாச்சாரியென்றுங்கூர்வதெங்கே, வீணிலேமயாதுகின்ற-வேதியர்களே- வேதம் பிறந்திடமுஞ்சொல்விர்காண. ௩௫

ஒளிவெளிமதிதாண்டி-சிவசிவ-ஒன்பதுவாசலுங்கட்டறுந்து, தெளியவுமபொறிபுலனும-சிக்கறுத்துச்-சிந்தையகற்றி மன தெருப்படுத்திப், பொழிபவுமமிர்தரசம்-பொசிக்க விளம்பம்-பூசிக்கப் பூசிக்க ஞானம்

ணம்பூரணமதாய், சுழிதனிலெழுந்ததொரு - வாசியெனும்-சோதியைக் கண்டவனுமநான்கஉணும் தங். கூசு

செத்ததோர்மாடெடுப்போம் - சிவசிவ - சுடுகாடனுதினங்காத்திருப்போம், நித்தமுங்கடவுள்தனே - ரவியின்மதி-நேசமுடனேயுறுதிவாசஞ்செய்வோம், சுத்தவீரசைவமுடன் - வாசிவாவெனும்- தோத்திரஞ்செய்தேபொசித்துக்காத்திருப்போம், கர்த்தனேயந்திசந்தி - உச்சமதிலும்-கருத்தினிலேவினைபபோ மாண்டேகேளீர்-தங். கூஎ

கட்டையுமடுக்கிக்கொள்வோம் - பிணமதற்கு - காற்பணமுமக்துண்டுவாங்கிக்கொள்வோம, அட்டவிதப்பரிட்சைகளும் - ஆண்டை கேளீர் - அங்கசுத்திகளுஞ்செய்ய அடவெடுப்போம், சுட்டதொரு அஸ்திகளுமே- சேதமவராமல் - துரிதமாய்பொருக்கியேகூட்டிடுவோம், நட்டணைநடைநடப்போம்- ஆதியருள் - நாதனேயனுதினமும்போற்றிசெய்வோம்-தங். கூஅ

நால்வகையோனிதனில் - பிரந்துதித்த- நால்வேதஞானமும்வந்துதித்ததுகாண், கோலமிதையறியாமல் - உலகருமே - குருடர்கள்வேறுசெய்தினம்பிறிப்பார், மாலப்பறையனெனறே - உலகர்கூடி - வாய்பிதற்றி வழக்குவாதாடுவர்காண், பாலரறியாமலென்னைப் பழித்துப்-பகடித்தனராண்டேகேளீர்-தங். கூகூ

பூரணநூல்தரித்துக்கொள்வோம்-சிவசிவ - பொறியுமைம்புலனையுந்தொழுதுக்கொள்வோம், வேணவிருதுகளும் - விசிதமதாய்-வெண்குடைவெண்சாமரமும் பிடித்துக்கொள்வோம், வானவர்முனிவர்தொழும்-பொன்விசிரி - மரகதகுண்டலத்தின் கவசங்களும், ஞானேப்பிரகாசவொளி-திவ்வியரச-நாதவிந்தர்ச்சனேகளில்நாம்துதிப்போம்-தங். சய

சாதியிலுயர்ந்தவன்காண் - நவரத்ன-சங்கப்பலகையின்மேலிருந்தவன்காண், வேதியர்சாஸ்திரியர் - துதிசெய்யும் - விருதுபெற்றிடும்வீரசாம்புவன்காண் பாதிமதிசடையணிந்தோன் - சிரசில்வளர்- பங்கயக்கங்கையமிர்தச்செங்கநதியில், சுருதியின்பொற்கமலம் - மதிரவியின்-சூட்டிடுஞ்சாமபுவனெனபோன்காணும்-தங். சக

அந்தணர்வேதியர்கள் - என்குலத்தை - அசட்டிப்பறையனென்றுதள்ளினர்காண, சந்தியுஞ்சடங்கருத்து - வள்ளுவனென்னேச்-சாம்பவமூர்த்தியென்றேதான்தொழுதார், விந்துவுநாதமுங்கூடி - எங்கெங்குமேவும் - எண்பத்துநான்குயிர்க்குமேலதிகமாம், வந்தவழிதனேயறியார்-பிர்ம்மகுல-வங்கிஷவானென் றுமவர்போற்றிசெய்வார்-தங். சஉ

வேதமுநான்காணும்-சிவசிவ - வேதாங்கசாரமுநான்காணும், மாதவமுனிவர்க்கெல்லாம - உயர்கின்ற - வள்ளுவசாம்புவனைகாணும், பேதபேதங்களறிய - என்னூல்வகையில் - பிரட்டுவுருட்டுகளும்-பிரித்துரைப்போம், ஆகாரமூலமெல்லாம் - அசடில்லாமல்-அவனிதனிலுரைப்போமாணைடேகேளீர்-தங். ௪௩

சத்தியுநான்காணும்-சிவசிவ - சாம்பவமூர்த்தியெனுநான்காணும் புத்தியிலுதித்தவன்காண்-சிவசிவ-புவனமதில் புகழ்ந்திருவள்ளுவன்காண, சித்தியிலுதித்தவன்காண-சிவசிவ-சிங்காதனத்திலிருந்தெங்கெங்குமாய், அத்திமுதலெரும்புகடை- யாவாக்ளும்-அறபுதமெஞ்ஞானவெட்டியாண்டேகேளீர்-தங். ௪௪

வித்தையிலதிகமெந்தன் - விளங்குந்திரு-வேதாந்தசாரமுண்டுமேதினியில்வாழ், எத்திசையெல்லாம்புகழும்- இரவிமதி-யோகாக்ஷரத்தைகண்டுசாகாமல்நான, பத்தியில்புத்திதரும் - உலகமதில் - பறைநூலறிந்தசாம்புவன்காணும். முத்தியுமெஞ்ஞானநெறி - முக்கண்ணுடையமூர்த்திபரனவர்கள்தமமூலத்தினால்-தங். ௪௫

உதிரமுந்திரண்டதெங்கே - நாதமதி-லோடியேதான்விந்ததுவும் பாடந்ததெங்கே, மதியொளிரவியுமெங்கே - அமிர்தாச-வாருதியுமானவராறுமெங்கே, சதிரமும் பிறந்ததெங்கே - உலகுதனில்-சாஸ்திரியாசாரிகளோதானுரைப்பீர்காண், அதிதவேதங்களோடும் - சூரியசந்திரர் அறவிருந்தவர்களாண்மையுரைப்பீர்-தங் ௪௬

கருவதுந்தரித்ததெங்கே - சிவசிவ - சாயமாயுதித்தவந்தக்கருத்துமெங்கே, அருவுருவானதெங்கே-அண்டபிண்டங்க-ளாதியுமந்தமுங்கூடியமைத்ததெங்கே, உருவடிநிவுமெங்கே-ஓங்காரமெனும் - உடலுயிரெடுத்தவிதவுகமையெங்கே, மருவியநால்வேதஞ்சொலும்- மதிகெட்டமாந்தர்களிதைபரிந்துவகுத்துரைப்பீர்-தங். ௪௭

தீர்த்தமுமாடிக்கொள்வீர்-தெளிந்தவர்போல்- செபதபசாஸ்திரங்களோதிக்கொள்வீர் - யாத்திரைதீர்த்தங்களாடி-நதிகள்தோறும் - அலைந்துஅலைந்துசுற்றிஅலைபுகிறீர், மாற்றிபேபிறபமென்று- பொய்ப்பிரட்டு-வாய்சமத்துசாஸ்திரஞ்சொல்மடையர்களே, பாத்திராபாத்திரமறியா-பாவிகள்தான்-பாடுபட்டுங்கூறறியாமாடுகள்தான்-தங். ௪௮

அண்டபிண்டப்பிறந்ததெங்கே - சிவசிவ - அந்தணர்முனிவர்வந்துதித்ததெங்கே பிண்டம்பலவுயிரும்வந்து - பிறந்தவகை - பிரபஞ்சமிதையறிந்துபேசுவீர்காண், மண்டலமும் மண்டலஞ்சூழுங்-கதிர்மதியு

ம், வள்ளியும்பிறந்ததெங்கேவானுமெங்கே, விண்டபொருளண்டருங் காணார்-வேதியர்களே-விஸ்வரூபமறிந்துவிளங்குவீரே-தங், ௪௬

சாஸ்திரம்பிறந்ததெங்கே-சிவசிவ-சாதியினல்வகைகளுமானதெங்கே, கோத்திரம்வகுத்ததெங்கே-'சிவசிவ-குருவுடன்சிஷனும்வந்துதித்ததெங்கே, போற்றிடுஞ்சற்குருவுமெங்கே - பொய்க்குருவினல் - பூசையனுஷ்டானமுறைப்பொருளுமெங்கே, சோற்றிலெய்துங்கல்லறியாசுணங்கர்களே-சொர்ணமலரென்னமுவமன்னமலர்காண்-தங். ௫௰

அண்டபிண்டபுவனத்துக்கும் - சந்திரனொளி- ஆதித்தனவருருவுமானதெங்கே, சண்டைப்பிரசண்டமதாய் - மந்திரமோதுஞ் - சவுக்கலேதானரியாய்ச்சாற்றிடுவீர்காண், உண்டதோருணவறியார்- உவரசத்தின்-னுப்புவினுவாகற்றியுண்டுமறியார், கண்டபொருள்விண்டதறியார்-கல்லுப்புவந்த-காரணத்தைக்கண்டறிபாக்காமிகளேகேள்-தங். ௫௧

நாதவிந்துதானரிய-சிவசிவ-டுவணைச்சுடரதுவங்காண்டியப்பால், போதரவாயுடலெடுத்த-தத்துவத்தின் - புதுமையைச்சொல்லுகிறேனுணடையேகேளீர், மாதர்கள்சையோனிதனிலுட-வந்துதித்த- மார்க்கமிதுவாளெடுத்தவாறறிந்திடீர், ஏதெனவென்றேவிளங்க -இப்புவிதனி-லிந்திரியமாதவிடாயிணமதுகாண-தங். ௫௨

தந்தையுந்தாயுங்கூடி-இருவருஞ் சருவியேரதிகேளியாடையிலேவிந்தையில்யான்பிறந்த-சரித்திரத்தை-விளம்புவேனுண்டே யிந்தமேதினிதனிலும், உந்தியின்கமலமதி- லுதித்தவித- முற்பனமாகியதோற்கற்பனைசொல்வேன், சந்தையங்கள்தீர்ந்துவிடும் -மாதாபிதாவின்-சங்கைகளறியவிந்நூல்சாக்ஷியிதுகாண-தங். ௫௩

விருத்தம்.

சோதிமதிசுடரொளியாய்தரித்தவாருஞ் சுடருருவாய்நாதவிந்துதோன்றும்வாறும், நீதியில்லாப்பாழ்வீட்டினிலேத்தவாறு நெல்லியதின்கனியதுபோல திரண்டவாறும், கோதிலாக்கனியெனவேபழுத்தவாறுங் குழவியெனப்புவிதனிலேபிறந்தவாறும், ஆதியிலேகருவூரில்குடியிருந்து அறிவாலேபுவியில்வந்தமைந்தேனுண்டே. ௫௪

தன்னையினிதானரியார்தலமுங்காணார் தான்பிறந்தசரித்திரமுந்தடமுங்காணார், இன்னதென்றுவேதமறைவழியுங்காணாரிடும்பரெல்லாம்வாய்மதத்தாலிகழ்ச்சிசொல்வார், பின்னையொருபொருளறியார்தவத்தைக்காணார் பிதற்றுகின்றபேடையர்கள்தான்பெருமைபேசி, என்

னைத்தான்பறையனென்றுதள்ளினார்க ளென்பிறப்பைச் சபைதனிலே
யியம்புவேனே, ௫௫

தில்லையெனுமம்பலமாங்கமலபீடஞ் சிறந்தவிந்துநாதமதில் செ
னித்தவாறும், வல்லவர்கள்போற்றுந்திரு மண்டபத்தில் வழிகடந்து
ஆறுதலந்தாண்டியப்பால், சொல்லரியமுக்கோணவீடுந்தாண்டி சோதி
மதிநடுவணைமுப்பாழுந்தாண்டி, எல்லையெனுமூலமதிநாதவிந்து வின்
பமுடனுதித்தவகையினிசொல்வேனே. ௫௬

மடைதிறந்துநாதவிந்துவந்தவாறு மாறியிருகலைபிரிந்துவளர்ந்த
வாறும், திடமுடனேபதிமூன்றுங்கோட்டின்மேலுஞ் செங்கதிபோ
லவும்வந்துதித்தவாறும்,உடலெடுத்துஆவியதிலுதித்தவாறு மூமையெ
ன்றவெழுத்ததனிலுயர்ந்தவாறும்; யிடைநடுவேயெனைப்பறையனென்
றவாறு மென்னுடலேயெடுத்தவகை யினஞ்சொல்வேனே. ௫௭

ஆதியிலேகருவூருநாட்டுக்குள்ளே அம்பரமாஞ்சிற்பரத்துப்பெரு
ம்பாழுள்ளே. வீதியிலேசிறந்தசிவநாதவிந்து வெளிகடந்துவாயிரத்தெ
ட்டிதழிற்பொங்கி, சோதியிலுஞ்சுழிமுனையாய்தேய்ந்தபின்பு சுக்குல
முஞ்சுரோணிதத்தாலெடுத்தபாண்டம்,சாதியிலுமெனைப்பறையனென்
றேசொல்லுஞ் சண்டாளர்க்கிந்நூலைச்சாற்றுவேனே. ௫௮

கால்கரமும்பாதமுதலானவாறுங் கணுவிறலுநகஞ்சதையுந்தரித்
தவாறும், விலாக்கொடிதானெலும்புநிணம்வகுத்தவாறு மிரதமொடு
மார்புகழுத்தானவாறுந், தோலானதுடைவயிறுதொக்கின்வாறுங்கொ
ருத்தநரம்பதுவுஞ் சடஞ்சூட்டும்வாறும், மாலானமாதர்கருக்குழியிற்
சேர்ந்த வயணமிதையின்னதென்றுவகுப்பேனண்டே ௫௯

நாடிநரம்பதுவுதிரநயந்தவாறு, நலமானதசவாய்வுசெனித்தவாறு
ம், நீடியதோரெலும்புகளுநிகழ்ந்தவாறுநிலையானகருவியெல்லாந்தனி
த்தவாறும், கூடியதோர்குய்யம்வந்துதித்தவாறுங் குறிப்பறியபஞ்சக
ர்த்தாள்குடிவவாறும்,சூடியதோர்மார்புகண்கள்வநதவாருஞ் சொல்லு
இறேன்விபரமினியாண்டேகேளே. ௬௰

சிறுகுடலுந்தொந்திவயிறானவாறுஞ் சிறந்தபொறியதிற்கலந்துநி
ன்றவாறும், பெருங்குடலுமொருபுறமாய்ப் பிறந்தவாறும், பேர்பெரி
யவீரல்குலைசமைநதவாறும், மறுமடலாயிரல்நுரையிரண்டுங்கூடிவள
ர்ந்ததுவுஞ்சாதகமாய்மகிழ்ந்தவாறும், உருவுடனேசெவிநாசியுதடுநாக்
குவுகளையுடனெடுத்தவகையுரைப்பேனண்டே. ௬

தரு·

தந்தனதன-தனனு-தானதன-தந்தனதனதன-தானதன்னு·

தந்தையுடனேயெனது-தாயுமிருவர் - சரசவுல்லாச லீலையாடையிலே, மந்திரமதாகவிந்து-நாதமுங்கூடி-வருகிறவழி சொல்வேனுனைடேயிதுகாண், இந்திரியசாதிலிங்க-முலைதக்கெல்லா - மேகபரநாத விந்துயாகமதாகி, வந்தவிதங்கோசபீச - பிரபஞ்சமதாய்-வாய்த்தவித மூலகில்வகுத்தனர்காண்-தந். (௬௨)

ஆவிடையார் கோவிலிலே-யமைத்தகுறி - ஆதாரவாகவே சேர்ந்துமாதர்களினுல், மேவியதோர்நாத விந்து-வெகுவிசித - விற்பனையறியவொருகற்பனைசொல்வேன், பாவிகளிதையறியார்-கல்லுகள் தனில்-பாவனையொப்பாகவுமேதாவிதஞ்செய்தார், ஆவியென்றுமரியாமல் - செலவழிய-ஆத்துமலிங்கமதனைப்பார்த்துணராமல்-தந்- (௬௩)

வன்னியும்வாயுவுங்கூடி-உயர்கின்ற-மண்டபமார்க்கத்தின் வீதிதனிலே, உன்னதமாய நாதவிந்து-உறவாடியுமே - ஒருவழியாகவந் துதித்ததுகாண், முன்னிலையாய்ச்சுடரதனில்-மூலவன்னி - முப்பொருளுஞ்சேர்ந்துவொருவும்பனமதாய், சென்னிதனில்வளரியல்பாம் -நாதமெனுஞ்-சித்திரப்பூஞ்சாவடியில்மத்திபத்திலே-தந். (௬௪)

வருகிறவழியதனில் - நவரத்ன - மண்டபத்துக்குள்ளவச்சிரப்பையதனில், பெருகியநாதமது - சதாசிவத்தின் - பிரணவமூலப்பிரகாசப்பேரொளியினில், உருவியமலர்க்கமலம்-போற்றியருள் - உற்பன மருள்தருங்கற்பகத்தில்வாழ், அருள்வந்தெய்தெடினுங் - திருவடியதின் - அனுதினம்பூசித்துமிகவடி பணிந்தேனே-தந். (௬௫)

போற்றியமண்டபம்விட்டு - மறையவர்தன் - புகழுஞ்சிங்கார மெனும்புரவிவிட்டு - சாற்றியமயேஸ்பரத்தில்-சம்பிரமத்துடன - சத்திரத்தில்வந்துசித்திரச்சாவடியினில் -கார்த்திருங்கேன் திருநடனம் - ரத்ன மணி-கனகசபையைகண்டுநான்மகிழ்ந்தேன் - பூக்கசெங்கமலமலர் -இங்கிதநாதப்-பொக்கிஷத்தைகண்டறிந்து யானமகிழ்ந்தேன்காண்-தந்·

தெண்டனிட்டுமண்டபம்விட்டுக் கருவூர்தனில் சித்திரப் பூஞ்சாவடிதன்முகப்பும்விட்டு தொண்டர்கள்பணியும் ருத்திரன் திருவடியைதொழுதனுதினம்பணிந்து துதித்துநின்றேன்· அண்டர்கள் போற்றுகின்ற பிரகாசவொளி - அவ்விடத்திலேமனதையடக்கியேகாண், கண்டுகளிகூர்ந்துமிக மதியின்மலா - கங்கையத்தின் பங்கயக்கண் சிங்காதனத்தில்-தந்· ௬௭

நின்றுபதிபம்பரம்விட்டு-நிலைபிசகா- நினைவுக்கரிய தொரு பொறி கடந்து, வேண்டியவரமருளும்-திருமால்திரு-மெல்லடி பணிந்து பதம் வணங்கியபின், சென்றுமூலவாசியைக்கொண்டு - இராஜயோகந் தேசிப்பிரகாசமூலகேசரத்திலயான், ஒன்றுதவநெறிபிசகா - ரேசிக்க விருள் - ஓடியேமூலாக்கினிநாடிவணங்க தந். ௬௮

வணங்கியபதிகடந்து - திருநடன - மாடியகூத்தனுஞ் சபையதுகடந்து, இணங்கியபிர்ம ருத்திரன்-கமலமலர் - இணையடி தொழுதுமேயான்பணிந்தேன், குணமவரதிசெயமா -மென்றலுரைக்க - கூடுமோகோடானகோடி மேடானமேட்டி, மணம்விசிதமலர் பொழியு-மதிரவியின்-மாமதுராபூபதிகொணடேமயங்காமல் தந். ௬௯

கொண்டபதிமண்டபம்விட்டுக் கருவிகளின் கூடியதிருமுகப் பூஞ்சோலையிலே, அண்டர்க ளருள்போற்றுங் கணபதியின் அடியினருள் துதித்து அடியில்வந்தேன், குண்டலிகமலமலர் மேணமேலவர் தன் கோபுரசித்திரமதிலின்வாசல்விட்டு, மண்டலஞ் சூழுங்கதிர் வலமிடைபின் மலரடிதொழுதயான் வணங்கிவந்தேன்-தந். ௭௰

வந்துதிருமூலத்திலும் பானுவிருக்கும் வச்சிரவளர்சதுஷ் கோணவாசலிலுஞ், சுந்தரவிந்ததிலும்வந்து சினேகமது சோதித்துக் கலந்துறவாடிக்கொண்டே, விந்திரபதவிக ளெனவே என்றுண்டையே கேள் இங்கிதநாதசங்கித மங்களமதாய், சந் திரப்புட்கரணிவரும்-நந்திப்பிரகாசந் தாரையதுவேமுழங்குஞ்சாரையைக்கண்டேன்-தந்,

தூண்டியநாதபரி பரிபூரணத்தின் சுகந்தமலர்க்கமலந் துதித்துக் கொண்டேன், பூண்டுபொற்பதம்பணிந்தேனெனுண்டையேகேள்பூரகத்தினிலும்வந்துபோற்றிசெய்தேன் வேண்டியமதிமலர் கொண்டாராதனைகள் மிகுத்தவம்பிகாயோமம்விதரணையாய்-காண்டிபமென்றுலறியவாசியைக்கொண்டுகருத்திலிருந்திக்கண்டதாலாரயூதினேனே தந். ௭௨

வந்துதசநாதவிந்து-சுழுமுனையின் வாசலின்கருத்துக்குழிதன் வீட்டுக்குள்ளே, தந்திரமாக்வேதான கருலதனில் சங்கற்பமில்லாமல் கலந்துறைந்ததுகாண் விந்தையெனுநாதவிந்து சையோகந்தனில் விற்பனம்போலவுமெய்தமுற்பனமதாய் சுந்தரசுக்கலசுரோணிதமிரண்டுங்கூடிசொற்பனமபோலுமுதித்தகுக்ஷமிதுகாண் தந் ௭௩

வெண்பா.

உள்ளொளியாஞ்செந்தனலி லுற்பனமாஞ்சொற்பனத்தில்
வள்ளலெனுநாத, விந்துகாண் தெள்ளியதோர்

கத்திரிக்கோல்மாறல் கனகசபைவீட்டில்
வித்தாய்முளைத்ததுகாண விந்து. எச

நகாரமகாரமுட னுடுஞ்சிகாரமதாய்
வகாரமிருகாலாய் வளர்ந்ததுகாண யகாரமது
அஞ்சறிவாய்நின்ற பஞ்சப்பெரும்பூத
பஞ்சும்வளர்ந்ததுகாணுணடே. எரு

## கொச்சகம்.

ஓராறுமேலாறு முற்றபெருந்துறைதாண்டி
சீரார்புகழுவாநுந் தெய்வப்பதிகாண்டி
காரார்மதகளிறு கணிதிருவீட்டில்
போராய்கருவுதித்துப் பேசியிருந்தனதாண். எசு

ஆதிக்கரிவூரி லங்கேகுடியிருந்து
நீதிபக்கநாட்டில்வந்து நெஞ்சறிந்துநேசமதாய்
சாதிகுலந்தவிர்ந்து தலமுஞ்சுழிவீடுவிட்டு
சோதிமதிநின்றிலங்குஞ்சுடர்வீட்டில்வந்திருந்தே. எள

## விருத்தம்.

விந்தெனவுநாதம்வந்தவாறுஞ் சொன்னேன் வெளிகடந்து வந்த வகைவிபரஞ்சொன்னேன் அங்கனடை பினகலேபில்மாறல் சொன்னே னதுகடந்துசுழி முனையையறியச்சொன்னென் விந்தைமபலாசை யதுமொழியச்சொனனேன் விட்டகுறை தொட்டகுறை விபரஞ்சொன்னேன், அந்ததின்சயதிசயமுமகற்றச்சொன்னே னருள்சொன்னேன்பொருள்சொனனேனறிவுள்ளோர்க்கே. எஅ

ஓங்காரசத்திமுதித்துணர்ந்துநிற்குமுன்னியதோர்நகாரமதும்வளர்ந்துநிற்கும் நீங்காதவகாரமது முயர்ந்துநிற்கு நிலேயானசிகாரமது மேலேநிற்கும் பாங்கான அகாரமதைக்காத்துநிற்கும பதிவானவுகாரமது மேலேநிற்கும. ஆங்காரமானவஞ்சுபஞ்சபூத மப்படியே யருசுருவாயாச்சுதாண்டே. எகூ

சத்தமதுபிருதிவுமேலேநிற்குந் தாங்கிநின்றபரிசமது வப்புமேலாம் பத்திரூம்ரூபமதுசிகாரமேலாம் பாங்கானரசமதுவும் வகாரமேலாம் சித்தமகிழ்ந்ததுவுமொருயகாரமேலாஞ் சீரபெறவே காயமெனுந்திரண்டேயாச்சு வெற்றிதருங்கவியொருதொண்ணூற்ரூறு விரைந்துறைந்தேயுதிரமதில்பிறந்துதாணடே, அய

நட்டுவைத்தவெலும்புகால்துண்டுநாலு நலமானகையெலும்பு துண்டுநாலு, ஒட்டிவைத்தபழுவெலும்பு முப்பத்திரண்டு வுனதமார்

தண்டுபதினாறுகாண்டம். மட்டுவைத்தவெலும்பு மூச்சாணதற்குமேலே வளமானநூறுக்கெலும்புவாயிரந்தான், சுட்டலைந்தபாணடமீ தெடுத்தநேர்மைதொகையெல்லாஞ்சபைதனிலேசொல்வேனாண்டே.

வீறானபையெலும்புபிருதிவின்கூறும் விதமானவுண்ணீரு பிரமன்கூராம் பேறான்சடாடிவாய்வுபத்தும் பிலமானநரம் பெல்லா மாலின்கூறும் கூறானவுதிரமெல்லாஞ்சத்திகூறுங் கூடிநிறைவெலும் பெல்லாம்ருத்திரன் கூறும், சீரானநிணதேதாமேச்சைசவ்வுஞ் சிறந்கருணமயேஸ்பரத்தின்கூறுமாணடே. ௮௨

ஆகாரமானபரநாதவிந்து வாதிசதாசிவன் கூறுமாண்டேகேளீர்' பாதாரமுடியளவுங்கணக்காகப் பாலித்து விபரமதாய்ப் பகரயானும், வேதாகமத்தில்நின் றநடனஞ்செய்யும் விந்துநாதத்தின்செயல் விபரமாக நாதாக்கள்கமலபதந்துதித்துபானு நவிலவுமேபாண்கண்ட நடத்தையாண்டே. ௮௩

முக்திகருமூலத்திலக்ஷரமேநாலு முதலானசுவாதிஸ்டான மெழுந்தாறுகும் பக்திகரும்பூரகத்திலெழுத்தும்பத்து பாங்கான வனகத்திலெழுத்தீராறும், சித்திரமாம்விசுத்திதனிலெழுத்தீரெட்டாஞ் சிறந்தவாக்கினையிலெழுத்திரண்டுமாகும் சத்தியெனுமம்பரத்திலெழுத்தொன்றுச்சு சார்வாகுமைம்பத்தோரக்ஷரங்காணாண்டே. ௮௪

மும்மலமுந் தரித்ததொருவாசலொன்று முடிகாணவிங்க மொருவாசலொன்று நம்மையறுசுவையறிந்த வாசலொன்று நலமானகேள்வி கொண்டவாசலொன்று வண்மையுள்ளவாச மறிவாசல்ரெண்டு வளமானரூபமறிவாசல்ரெண்டு, அன்னமெனுமம்பிகைப்பெண்ணருளினாலே யறிவாலேயெடுத்ததிந்தக்காயமாண்டே. ௮௫

கொச்சகம்

வட்டமதிளேறிவளர் மாமதியைத்தாண்டியொரு
திட்டவிளைபோட்டுநவ சிதரமணிவாசலிலே
முட்டிநிறைகம்பமுனை முதற்சுழிவீட்டினிலே
ஓட்டியதுவளர்ந்து வொருமலராய்ப்பூத்ததுகாண். ௮௬

பூவிருக்கப்பிஞ்சாகி பூவிலரும்பாகியுமே
மாவிருக்கத்தேனாகி வந்தசுருவீட்டில்
மேவிருக்கவம்பரத்தே வேரோடிதாராகி
யாவருக்குமிங்கிதமா யரும்பாகின்றதுகாண். ௮௭

### வெண்பா.

வடிவுகொண்டவள்ளையுமாய் மந்திரஞ்சேர்நாதமுமாய்
முடிவுகண்டமூல முளைத்ததுகாண்-வடிவதுவாய்
கால்வாங்கிவட்டமிட்டு கனகதிருவீட்டில்
மேல்வாங்கிநின்றதுகாண் விந்து ௮௮

### விருத்தம்.

மாலயனும் பிரகாசமதியதாகும் வாழும்வளருத்திரனுமுருவதாகும், சேலான மயேஸ்பரனுமுணர்வதாகுஞ் செப்பரியசதாசிவனுங்குருவதாகும், காலனநாடியொருகைகாலாகுங் கதிர்மதியால்வளர்ந்தசத்திக்கருவதாகும், வேலானவிழிமடவாளுந்திக்குள்ளே விளைகின்றகருவியெலலாம்விதிப்பேனண்டே. ௮௯

எட்டுத்தூணட்டியொருவிட்டம்போட்டு வெழுந்ததின்மேலருகுவளையொன்றாய்க்கூட்டி, மற்றற்றமோட்டின்வளையொன றாநாட்டிவளமானதுண்டுமவளைரெண்டும் போட்டு,காட்டாகக்கையகத்தில்வளைத்துக்கொணடு கனமானவரிச்சல்விலாக்கொடியுமாக்கி,முட்டமுட்டநின்றகம்பத்துமேலாய் முகப்புடனேசிங்காரவீடுமாச்சே ௯௰

பத்தியுடன்விரலுமிருபதுவேயாச்சு பதிந்தநகமதுவுமப்படியேயாச்சு, வெற்றியுள்ளரோமமதுமனேகமாச்சு விதமானவீடுமெண்சாணதுவேயாச்சு, அத்திபுரமதுவாச்சுவெளியுமாச்சு வங்குலமுந்தொண்ணூற்றாறதிலேயாச்சு, சத்திவாலாம்பிகைப்பெண்ணாலேயாச்சு சார்வானகருவியெல்லாமமைந்ததாண்டே. ௯௧

### வெண்பா.

அங்குலமுந்தத்துவமு மதிலேவளர்ந்தவகை
இங்கிதமாயானுரைப்பே னீசனே-எங்கள்குலம்
வந்துதந்தமூலம் வளர்ந்தவுயிர்போம்பொழுது
வெந்துதந்தமூல வெளி. ௯௨

### கலித்துறை

கதிரேசிறந்தது கார்கொண்டவட்டக்கனகிரிமேல்
மதுரம்பொழிந்து வழியேநடந்துயர் வாசலிலே
உதிரந்திரணடுவுடலாகியேவந்த வுண்மையெல்லாம்
சதிரம்பிறந்த விபரஞ்சபைநின்று சாற்றுவனே. ௯௩

நாடித்திரிந்துயர் நாதாந்தவிந்துள நாட்டத்திலே
கூடிக்கலைந்து விருகாலைவாங்கிக் கொடிமுடிமேல்

ஆடித்திரிந்து வளவற்றுநின்ற வறையதுக்க
மேளாடிக்கலந்து வொருமலராகி யுதிக்கதுவே. ௬௪

## விருத்தம்.

நாற்சதிரமேலும்வளர்கணேசனுக்கு நல்லருளைத்தந்தருளும்பிர்மா
வுக்கும், பாற்கடலிற்பள்ளிகொண்டதிருமாலுக்கும் பன்னிரண்டின்மே
லுநின்றருத்திரற்கும், மேற்சதிரமானமயேஸ்பரனுருக்கும் விந்துவதி
னிலைறிலங்குஞ்சதாசிவற்கும், தீர்க்கமுடனலரவற்குக்குக்கட்டும்வீடுசெ
ப்புகிறேன்ஜெகச்சோதிசெயல்தானுண்டே. ௬௫

நாதமொனறுஞ்செகமெல்லாநின்றநாதா நல்வினையுந்தீவினையுமா
ண்டமூர்த்தி, வேதமென்றகடலுக்குமெட்டாநின்ற வெளிகடந்து ஆ
றுதலந்தான்டியப்பால், பாதமடிமுடியாகிநின்றசோதி பதினாலுலோ
கமதுக்கொருவனான, சூக்ஷமதுவான்திருமூலந்தனனில சுரூபமாய்நின்ற
வகைசொல்வேனுண்டே. ௬௬

## தரு,

வீடுகட்டிக்கொண்டேனானொரு-வீடுகட்டிக்கொண்டேன்.

வீடுகட்டினேன்விண்ணொடுமண்ணையுங் கூறதாச்சுக்குறியிதுரெ
ண்டினால்,பாடுபட்டுச்சலத்தைத்தெளித்துடன் பற்றிநெருப்பையுங் காற்
றையுஞ்சேர்ந்துமே, கூடுண்டானகுறிமண்ணுந்தண்ணீருங் கூட்டிப்பி
சைந்துறவாட்டியந்தமுடன், நீடுலகும்புகழாவியதுக்குள்நிலைக்கவெண்
ணாணுடல்நேத்திரையைப்பார்த்திரும். வீடு

தச்சுருட்டிழுங் கொண்டிருகாலைநாட்டிச் சதிராகவட்டப்பலகையுஞ்
சேர்த்து, உச்சிதமாகவொருமரநாட்டியே உள்ளேபழுவரிச்சல்களுங்
கோர்த்துடன், முச்சுடர்வன்னிக்குழைபொன்றுநாட்டியே முட்டுத்தூ
ண்டுபூனையதுவாகிப்பின், மச்சுநிகட்டவகையறியாதாண்டே மகிழ்ந்து
டனுதாரவாசியைக்கொணடுமே வீடு

ஒட்டுப்பலகையு மு டுப்பலகையும் ஓங்கியசிங்காரமோட்டுவளை
யுடன், வட்டத்திருகாணிவிட்டத்தில்மேல் நின்றுமாயாமல்கைமரஞ்
சாயாமல்நாட்டியே. முட்டுக்கால்வட்டமுக்காணியைப்பூட்டி முறியாம
ல்தச்சுமுயற்சியதாகவும்; கட்டுக்காலாணிகள்முட்டியேதாங்கிடாதவி
ந்தாலும்வேதாந்தவீடாச்சுது. வீடு

கைமரநாலுக்கணக்காகச்சேர்த்துக் காலாணி கொண்டுமேலாணி
யும் பூட்டியே, மெய்புறவாகவும்போதிக்கைரெண்டுட்டி வேடிக்கைநா
லுகோடியுந்திருப்பியே. துட்டம்பிமூலக் கட்டமதாகிய சூக்ஷக்கால்நா

ட்டிச்சுகாதிதமாகவும், மையத்திலேசுருள்மேருவைக்கூட்டிப்பின்வச்சிரப்பலகைரெண்டச்சுழல்மூட்டியே. வீடு

நகாரமகாரமிரண்டையுஞ்சேர்த்து நடுவேசதுஷ்கோண வீட்டையுங்கட்டிச், சிகாரவகாரயகாரமதுகொண்டுச் சித்திரச்சாவடிவிஸ்தாரமாகவும், அகாரமதுக்குள்ளே யையுமென்றட்சரம் அவ்வெழுத்தாலேயகண்டசராசரம், உகாரமதுக்குளுயர்ந்தகிலியெனும் உவ்வெழுத்தாலுமுதித்தசவ்வாணதும். வீடு

வஞ்சகமானதோரஞ்சுபெரும்பூதம் பஞ்சறிவாகவுங் குஞ்சரவீட்டினில், அஞ்செழுத்துள்வளரைம் பத்தோகக்ஷரம் ஆனந்தமாகவலங்காரமாளிகை, கொஞ்சிவிளையாடும்ரஞ்சிதவீட்டினில் நெஞ்சறியுங்கமலாலயமைம்பொறி, செஞ்சொல்மொழிசிஙசிங்காதனத்தினில் கஞசமலாயிரத்தெட்டிதழினால். வீடு

நாலுமூழத்திலுங்காலேவளர்த்தியே நாட்டிபேசக்கரம் பூட்டியேவைத்துடன், மேலுமீரைந்துடன்தாதுவினுடியால் வீட்டுக்கு ஆக்கையைப்பூட்டிவருந்தியே, மாலுநடுவணைகாலுமடியனும் பாலுமதிவளர்மேலுஞ்சுடரினால், மூலவனனிச்சுழிமூவரிருப்பிடம் வாலேகுண்டலிதனமாளிகையாச்சுது. வீடு

நாடித்தசவாய்வுவீரைந்துஞ்சேர்த்துமே நாடியஷ்டதிசையுநலமாகப்பூட்டியே, வீட்டுக்குவாசலொன்பதுவுமுண்டாகியே வேடிக்கையாகவுநாடிநரம்பாலே, காட்டியசுக்குலசுரோணிதத்தாலே கருவியெனுங்கரணாதிகள்சூழ்ந்திடில், ஆட்டியமுட்டுமுடக்குக்கணுவுகளாக்கைப்பலப்படநாக்குவுண்ணாக்குடன். வீடு

சிங்காரமானவரமனையஞ்சையுஞ் சிற்றம்பலத்துடன்பேரம்பலங்களும், கங்கைநதிகளுந்தொணணூற்றறுவர் களங்கேயிருக்குங்கனகசபையெனும், அங்கக்குறைவுபடாமலரமனை அச்சூடுகட்டியேமச்சூடுஆலயம், எங்கும்பிரகாசிக்குமிந்திரியவீடு இடைபிங்கலேசுழியேகாக்ஷரத்தினால். (வீடு)

ஐந்துபுலனையறிவாகக்கூட்டியே ஆதாரமாறும்வளைதனை நாட்டியே, கைந்துமதசுழுகற்பத்தையூட்டியே கால்கொண்டுநின்றுருமேல்கொண்டுவாங்கியே, பைந்தமிழ்சூஸ்திரநாடித்திசைக்கவிறு பாங்குடனகப்பிக்கயிறுமூன்றும்பூட்டி, ஐந்துபூதத்தைக்கொண்டாக்கைபிலப்படஆறாருண்டாக்கியனேகவிசித்மாய். வீடு

சுற்றிமதில் களுமாரற்சுவருடன் துண்டுகளாகிய தண்டிகைக்கம் புகள், பத்தியாய்நின்ற தோர்சித்திரச்சாவடி பார்க்கிறபேர்க்கெலாஞ் சிர்க்கலங்காரமாய், முத்திதருஞ்சிவசித்திரமண்டப மோட்டுவளையுநர ம்பாலிறுக்கியே, சத்தியெனுநவரத்நக்கதவுடன் சந்நிதிவாசலிலுன்ன தமாகவே. வீடு

நவ்வையுமவ்வையும்ரெண்டையுஞ்சேர்த்து நலமான அவ்வையும் வவ்வையுங்கூட்டியே, சிவ்வையுஞ்சேர்த்துடனுசாரிகையில்திடமாயெ ண்சாணுடல்தேகமதாகவே, அவ்வதுக்குள்ளே யாதாரமுண்டாச்சுது அம்பிகைப்பெண்ணளவாலேவீடாச்சுது, உவ்வதுக்குள்ளேயுடலு முண் டாச்சுது ஓங்காரத்துள்ளேயுயிர்வந்துலாவுது. வீடு

திங்களொன்றானபின் மூங்கின்முளைபோல்திரண்டுநண்டேகனி யாகுங்கருவுரு, சிங்காரமான தோர்திங்களிரண்டினில் சேர்ந்துகலங்க துபாலாடைபோலவும், இங்கிதசுக்லசுரோணிதமாகிய இந்திரியவச்சி ரவின்பவிடாமதில், தங்கியநாதவிந்தாலே சமைந்துச் சடமதின்வாறி னைச்சாற்றுவனுண்டேகேள். வீடுகட் ௬௨

விருத்தம்,

மூலமதில்வீடொன்றுமுடிந்த தாண்டே மூச்சந்திவீதியதும்புற ம்பாய்வைத்து, சிலமுள்ளபிரமனுக்கும்வீடொன்றாச்சு சிறந்தருளுந் திருமால்தன்வீ டொன்றாச்சு, ஞாலமதில்ருத்திரன் வீடொன்றேபாச் சு நலமானமயேஸ்பரன்தன்வீ டொன்றாச்சு, ஆலவிடமுண்டசதாசி வனுருக்கும் அரமனையுமொன்றாச்சு ஆண்டேகேளே. ௬௪

மருவுயர்ந்தவதனத்தி நாதசத்திவடிவானமரகதப் பெண்மாதவா லே, திரிபுரத்துக்கொருபுரமாயிலகுஞ்சோதி சிற்பரச்சிதம்பரத்திசிறு பெண்ணுத்தாள், சுரிமுகததினகதனத்திதுடியிடைச்சி துலங்கும்ரத் னமானதொருசோதிமாது, அருமறைச்சிபம்பரத்தியம்பிகைக்கு அர மனையுமண்டபமுஞ்சமைந்ததாண்டே. ௬௬

குருவுடனேசிஷனுந்தான் வாழ்ந்தவீடு கூறுணவிந்திரியந்தரித்த வீடு, மருபியெனுநாதாக்கள்துதிக்கும்வீடு அளவற்றவைம்பூதம்வாழ் ந்தவீடு, டருவமெனும்ஞானசிவசத்திவீடு பண்ணுமறைக்கெட்டாத நாதவீடு, கருவிருந்தஞானவிந்திரியவீடுகட்டிவைததான்திருமால்தன் கயிற்றாலாண்டே. ௱

அடிநடுவுமுடியுமொருவெண்சாணீளம் அங்குலமுந்தொண்ணூ ற்றாறுண்டேகேளீர், கொடியமகாமேருவெனும் வளர்ந்தவீட்டில் குடி

லமங்குலத்துக் கோர்கருவியாகும், படியானபதினெட்டாங் கோட்டின் மேலும பலபலவாய்க்கருவிகளுமமைத்ததாகில், முடிசிறந்தஜெகநாதரருளினாலே முடிந்ததுகாண்பெரும்பாத்திவீடுமாண்டே. ௰௧

சரிதையுடன் கிரியை சிவயோகஞானங் கன்னியினிசெய்திருக்குமாத்தாள்வீடு, வரிசைதந்துவிளையாடுமாதிவீடு வளமானகருவி யெல்லாமவளர்ந்தவீடு, பெரியநரம்பெழுபத்தீராயிரத்தில் பெருநாடிபெலத்தநரம்பானதாலே, பரிபூர்ணவம்பிகைப்பெண்ணிருந்தவீடு பாகமதாயமைத்துமுடிந்தாச்சுதாண்டே. ௰௨

ஒன்றிரண்டுதிங்களினில்கருவூறி யொருமூன்றுதிங்களினால் ரூபமாகி, கனறுசதுரஞ்சுவிருமூனறிலதானுங் கருத்துடனே யிடை நாசிமார்புமாகி, என்றுரைத்தவே ழதிங்க ளெட்டுக்குள்ளே யெண்ணரியநாதவிந்துவுருவேயாச்சு, அண்டபிண்ட மகண்டமதாயமைத்துமேலு மலங்காரவீடாகச்சமைந்ததாண்டே. ௰௩

ஆக்கையெனுஞ்சநாடிகரம்பினாலே யடிநடுவு முடியுமாதாரமாகி, தீர்க்கமுள்ளயோனிசித்திரமதிலும்வீடுஞ் சிலம்பத்தினருளாலே யமைத்தவாறு, மேற்கயினியுளுக்கதொருவுப்புப்பாண்ட மிப்படியே சடமதுவாய்வீடுமாச்சு, பார்ககவொரு சிங்காரவிசிதமாகும் பன்னிரண்டாங்கோட்டில்வந்து பதிந்ததாண்டே. ௰௪

நாலாச்சுஆறாச்சுவிரைஞ்சாச்சு நலமானவீராறுமீரெட்டாச்சு, மேலானவிரண்டாச்சு யிதுக்கப்பாலும் வெளிகடந்து வொன்றாச்சு வுருவுமாச்சு, காலாச்சுகையாச்சுவயிறுமாச்சு கட்டிபொருவீடாகச் சமைந்தவாறு, சீலமுள்ளசிங்காரவிசித வீட்டில் சித்திரத்தின் பதுமையைப்போற்செனித்ததாண்டே. ௰௫

ஆறுகாரவகை இந்திரியவிவரம் தரு

அடையாளஞ்சொல்லுகிறேன் ஆண்டையேகேளீர்
அடையாளஞ்சொல்லுகிறேன்.

பிருதிவியப்புவுந்தேய்வுடன்வாயுவும் போனவாகாசமைந்தையுங்கூட்டிக், கருத்தில்வளருஞ்சுழிமுனைவீட்டினில் கண்டுபுறமாகநின்றது ஆண்டையே, நிருவிகமலத்திரமூாயிரத்தெட்டுநிற்குண நிர்மலநேர்மையிதாகையால், மருமலர்சூழ்திருமாலின்பதிவளர்மாமதுரக்கனிவாழ்க்கையுமிப்படி. அடை

தோத்திரமாவது வாக்குடன் சட்சுவுருசிக்குவையாக் கிராணமைந்தையுங்கூட்டி பத்திரமானசெவியுமுடம்பு சண் பாங்கான நாக்குது

மூக்குமேயாச்சுது, சத்தபரிசமும் ரூபரசகெந்தஞ் சார்வாகுமீதொரு வைந்துமேயாச்சுது, சித்தமுங்கேள்விசுகதுக்கரூயங்கள் சேர்ந்த வறுசுவைநாவதுமேருசி. அடை

சந்தனக்கெந்தஞ் சவ்வாதுபனிநீர் சாந்துபுழுகு களபகஸ்தூரியும், சிங்கைமகிழவேகண்டுகளிகருஞ் செழிந்திருநாசிசுகதுக்க நித்திரை, பைந்தமிழ்வாக்குடன் பாணியும்பாயுரு பாய்காயு பஸ்தமைந்தாச்சுது பாகமாய், அந்தமுங்கால்கரபானமுந்தாரணை யைம்புலனுவதும விங்கமிதான்டையே. அடை

வசனங்கமனந்தானவிசற்கம் வாழுமே யானந்தமைந்திதுங் கூடியே, நேசமும் வார்த்தைநடக்கைக்கொடுக்கலும் நீருமலமுமாதாரமீதாச்சுது. நேசமனம்புத்தியாங்காரசித்தமு நோவிதுநாலுநின்று நடக்கையால், ஓசைநினைத்திடும் புத்திவிசாரிக்கு மோங்காரக்கோபமுஞ் சித்தம்பொருந்திடும். அடை

உருவமுங்கொண்டு வுலகெங்குஞ்சுற்றி யுமூன்றுவுமூன்று வுணர்ந்துகவிப்பதும, அறிவொன்றுமூன்றுமே யாகதத்துவமு மையாறுமுப்பதுமெய்யாகக்காட்டியே, கருவிலமைத்தநின் காரணசற்குரு காட்டியதத்துவக்கட்டளையின்படி, திருவுருஞானசிவசத்தியம்பிகை சின்மய சுரூபசிரோமயம்மது. அடை ௱௬

விருத்தம்.

கங்கையெனுங்கதிர்மதியுந் தரித்தசோதி கனகரத்னமானுடனேமழுவுமேந்தி, பங்கையமாமறுகுதும்பைகொன்றைசூடி பதினுறு கலையணிந்தமூலந்தன்னில், திங்களெனும்புவனமெல்லா நிறைந்த சோதி திரிபுரத்தைக்கனவாக வெரித்தவீசன், செங்கநதியென்றதிரு மூலந்தன்னில் செனித்தெழுந்தகருவியெல்லாஞ்செப்புவேனே. ௱௭

பூதாதியைந்துநின்ற புகழுஞ்சொன்னேன் புலனைந்தும்விபரமதால்பொறியுஞ் சொன்னேன், சூகானகர்மவிந் திரியஞ்சொன்னேன் சுகஞானவிந்திரியமைந்துஞ்சொன்னேன், தீதான அதக்கரணநாலுஞ் சொன்னேன் தெளிவானஜெகநாதரருளினுலே, ஆகாரவாய்நின்ற தசவாய்வுஞ்சொன்னே னதுகடந்துவறிவதற்குவருஞ்செய்வேனே.

உணவறிந்துநினைவறிந்து வுணர்ச்சிகண்டு உள்ளறிந்துபுறமறிந்துவரிசைகண்டு, மணமறிந்துமதியினின்று மகிழ்ச்சிபெற்று வசனமெனுங்கேள்வியதினவாய்மைகேட்டுக், குணமறியாதாசையினுலழிந்து நின்றகூர்ந்துமனமெழுந்துவொருகருமஞ்செய்து, நினை வுதவறும லொன்

ருய்ப்படைத்துநின்றேன் நிகருடையதத்துவமுப்பதுஞ் சொன்னே னே, ௱௯

சொன்னவகைதொகையறிந்து சொல்பேதங்கள் சொல்ல வில்லை தசநாடி தசவாய்வுந்தான, இன்னமொருவகையறுபத்தாறுஞ் சொல்ல விவர்கள்நின்றநிலைசொல்ல வீடுஞ்சொல்ல, வின்னம்வராதிவர்கள் செ யயுந்தொழிலுஞ்சொல்ல, வேதாந்தமறியாத முடிவுஞ்சொல்ல, அன் னைபெனு மம்பிகைப்பெண்ணருளினாலே யவதரித்து நின்றநிலை டருள் செய்வோமே, ௱௰

கொச்சகம்,

மருவுதிருவுபொற்கமலம் வல்லபைதன்வீட்டிலொரு
கருவுருவாயைம்பூசங் கலந்தேயொருபுறமாய்
அருவுருவாய்நாதவிந்து அறுகுநுனிமேற்பனிபோல்
மருவியைம்பத்தோரெழுத்தில் வந்தவகைசொல்வேனே, ௱௰௧

தாங்கிநின்றமூலமதில் தானுமொருவீடுகட்டி
வாங்கிநின்றுவட்டமிட்டு மாறியிருகாலாக
ஓங்கிமுளைத்ததுகா ணொன்றேகொழுந்தாகி
நீங்காமல்நின்றதுகா நெல்லிக்கனியாச்சே,

சத்தியுதித்திருச் சன்னிதியின்முன்பாக
முத்திதருமெய்ஞ்ஞான மூவரனுக்கிரகமதால்
சுததியொருபங்கலிட்டுச் சூழ்ந்தசவாய்வுகம்பாய்
பத்திபடர்ந்ததுகாண் பதினாலுலோகமதாய், ௱௰௩

கலித்துறை,

மாறிக்கலைகொண்டு வம்பரவீதியின் வட்டமதில்
தேறித்தெளிந்து வளைத்துக்கொண்டேன் தசவாயுவைத்தான்
ஊறிநடக்கின்ற பானத்தின்யாசி நுனிபிறழா
ஊறிக்கருவி லுறவாகிநின்று வுதிக்கின்றதே. ௱௰௪

சாதியுங்கண்டு குலமேவகுத்திந்தத் தாரணியில்
வாதிகள்தள்ளி வழக்குரைப்பார்மனு நீதிகண்டு
நீதியும்வேத நிலைகண்டுரைத்தநேர் வீட்டுக்குள்ளே
சோதியைக்கண்டு வுறவாகிநின்று துலங்கினனே. ௱௰௫

வெண்பா.

அத்திபுரத்தி லருகிருந்தாக்கையது
சத்திசிவநாதவிந்து தான்கூலி - வித்ததுமே

மூலக்கருக்குழியில் மூச்சந்திவீதிவளர்
பாலகனையுற்பவிக்கும் பார் ௱௰௬

குருலிங்கசங்கமது கூறுமறுகோணவரை
இருமென்றழைத்து விருந்தக்குருவாகி
நின்றறுபத்தாறு நிறைந்தகருவியெல்லாம்
கொண்டமைத்தவாறதனைக் கூறு. ௱௰௭

ஈசனுறவாகி யெங்குஞ்செனித்திருந்த
நேசமதுசாதிலிங்க நேர்மையே கோசமது
நாதவிந்துற்பவமே நானறிந்துஞானவெட்டி
பேதமில்லைசாதிகுலம் பேசு ௱௰௮

## ஆறாதாரவகை இந்திரியவிவரம். தரு.

விபரஞ்சொல்லுகிறேன் தசநாடி விபரஞ்சொல்லுகிறேன்.

விபரஞ்சொல்லுது மிடைபிங்கலை சுழிமேவுமந்திச்சுங்கு புருஷன் காந்தாரியும், அபலம் புருடன்குகுகன்சங்குனியு மாகத்தசநாடியையி ரண்டாண்டையே, இபாம்பெருவிரல்மேலுமிடைகலை யின்பம் வலது பெருவிரல்பிங்கலை, சுபரஞ்சுடரொளிமேலு மோங்காரமாய் சுற்றியே நிற்குஞ்சுழிமுனையாண்டையே. விபரஞ்

மூலச்சுழிதனிலே மூளைத்தாக்கையு மீறியேபெரு நாடியுயர்ந்துடன், மேலேச்சிரமகமேருமுடிவளர் விற்பனமுங்கருவுற்பனஞ் சொல்வேனுன், கால்கொண்டு நாழிகலை கொண்டு வாய்வதுங் காரணமாகவேக ண்டமதாய்வளர், வேல்கொண்டுமே குழல் கொண்டுடன்மூலமே வித் தாய்மூளைத்தொருபத்திதுநாடிகாண். விபரஞ்

கண்டமது நரம்பானகுழைதனில் காந்தாரிநின்றுகலந்து நேர்பாய் ந்திடில், அண்டமதிலத்தி சிங்குவைத்தானு மவற்றை காலுமறிவிப்ப தாகுமே, நின்றிடுஞ்சிங்குவையபதுவின்மயம் நின்ற நிறமது வுப்பது வேசலம், விண்டலம் புருடனிருகணணளவு மேவுங்காந்தாரியுங் காதளவாண்டையே. விபரஞ்

அத்தியு நின்றததுவலபாரிச மானதளவாயமைத்தளவாய் பிர்ம வித்தையு மாருயிரைம்புலனுதிகள் வேதங்களோதுமேலுந்தாள் வாயினி, சுத்திநிற்குஞ் சுகாதீதசங்குனி சுந்தரலிங்கஞ் சுகந்ததாள் பாரிசம் நித்தமேவுங் குகுதனுமானந்தம் நேருந்தாள்வாயுமே நின்றிடு மாண்டையே. விபரம்

நாடியீரஞ்சுநரம்புகள்கூடியே நல்கிடப்பது நட்புகள் கண்டிடில், நீடியுலாவுமசையுந்தடுக்கும் நிரந்தரதாதுசதந்தரநாடியே, நாடியசையுமடக்குமடக்கு நடந்துமேயோடி நகர்ந்துபிரண்டு, மோடிகூடியிழுக்குநரம்புநீண் டேறிமாறிபடுக்கும்பாராண்டையே. (விபரஞ்)

வாய்வுதசபத்தின் வாறுமறிந்திடில் வளமையாம் பிராணனபானன், வியானனும்சேயுமுதானன்சமானன் கூர்மகனுகனதிரி காநுகியசித்திரநாடிகான், ஆயுநாடிநரம்பதுவுந்தனஞ்செய னருள்தருந்தேவதத்துவனீரைஞ்சு, பாயுந்தசவாய்வுபத்துடனுணிதும் பாரக்கப்பார்க்கப்பரிடைசைகளாயிடும். (விபரஞ்

பிராணன்மூலந்தனில்மேல்தொடர்நதோங்கியேபின்னும்பனிரெண்டுவிங்குலமோடிடில், அறிவதுநான்குபெண்டடங்கிநாலோடும் அபானன்மலசல மறிந்துபோக்கிடும், பிரியும்வியானனு முண்டசாரந்தனைப் பிரித்தெழுந்தெழுபத்தீராயிரநாடிக்கும், தரியுமுதானன்செரிப்பித்தேப்பமிடச் சமானன்சரியாகத்தானிருக்கும்வாறு, விபரஞ்

நாகன்களைவிக்கல்சோம்பலுண்டாக்கிடில் நற்கண்ணிமைலநின்று கூர்மனிமைத்திடில், தேகத்திரிகரஞ்சோபமுண்டாக்கிடில் தேவதத்தனுங்கொட்டாவிநகைத்திடில், வாகச்சிரித்திடில் தனஞ்செயனுச்சிவாழ்வதுமேலெலனுந் தொடங்கியாத்துமம், ஆகமடங்கியப்போதினிலண்ட மதுபிளந்தாக்கினையப்பாலோடிடுங்காண, விபரஞ்

இந்தவிதமறிந்தெவ்வுயிர்க்குமீச னெறும்புமேகடையானைமுதற்கொண்டு, சிந்தைசெய்யாமல் வெவ்வேறதின்கூறதாய் செந்துக்கழும்பணவிந்தையிதாண்டைபே, சுந்தரலிங்கஞ்சுகாதீதமந்திரஞ் சுக்குலவிந்துசிரசண்டமாயிடில், அந்தரகங்கைச்சடைமுடியீச னமர்ந்திடுங்கோசமரனகொலுவாரண்டையே. விபரஞ் ௱௰௬

விருத்தம்,

இடைகலையும்பிங்கலையு மிரண்டுங்கூடி யிருகாலில்பெருவிரலில்மேலேநின்று, நடுவிலொருகத்தரிக்கோலமாறலாயி நாசிமுனைமுட்டிநிற்குநயந்துபார்க்க, இடமுடையசுழிபின்முனைமூலநோக்கிச் சிரசணவுமாதார மாகிநிற்கும், அடைவானசிங்குவைத்தானுவுக்குள்ளே யன்னமுடன் தண்ணீருமமைத்தாண்டே. ௱௰௭

வட்டமிட்ட புவியதனில்குகுதனிற்கும் வலதுதாள்காந்தாரிவாக்கில்நிற்கும், இஷ்டவலம் புருடனிடதாள்வாய்நிற்கு மிருந்திடுஞ்சங்குனியும்லிங்கததாள்வாய் நிற்கும், சட்டமுடனகுகுதனிற்குமபானன்

தாள்வாய் சார்வாகுந் தசநாடிசமைந்தசேர்மை, அஷ்டதிசைபுகழு முடலுயிருமாக ஆதாரவாயாவிநின்றதருள்செய்வேனே. ௱௨௧

பேரானபிராணன்பெருமூலந்தன்னில் பிலந்தவீராறங்குலத்தில் மீளவாங்கி, நேரானகண்டமதி லெட்டெட்டாகி நிலைபிசகாநாலுமது வெளியிலோடும், சிரானவபான னுந்திக்கமலத்தின்கீழ் திறமாகமலசலத்தைக்கழித்துநிற்கும், ஈருனவியானனுண்டவன்னந்தன்னீ ரெழுபத்திராயிரநாடியிலுஞ்சென்றே, ௱௨௨

நின்றிலங்குநாடியது பிறித்தவைக்கும் நிகழ்த்திடுமுதானன் செரிப்பித்தேகிக்கும், ஒன்றிலங்குஞ்சமானனுண்டவன்னந்தண்ணீ ரொருவருக்குமேற வொட்டாதிருக்குமாகில், தன்றிலங்குநாகனுமே விக்கல்கக்கல் தனையிருத்தல்கூர்மனிருவிழிநீர்பாசசல், அனறிவிழிசிமிட்டிவைக்குந்திரிகரனரு ணுயாசம்சோமபல்தும்பலசதியாமே ௱௨௩

வசதிநகைத்திடுவ னெனும்வழுணுயாவன் வதைத்திடுவன்தனைஞ் செயனுமுச்சியேறி, நிசதிநின்றுமேலாகத்துடிக்கச்செய்வன் நிரந்தரமாயாதாரமேலாய்நிற்பன், நிசதியினால்சரீரத்தில்வாய்வுக் கெல்லாம் நிஷ்களமாயதிகாயநிலைத்ததாண்டே, இசைத்ததிருமூலனுருரைத்தவண்ண மினியதொருஞானவெட்டியியம்பினேனே. ௱௨௪

நிரந்தரமாய் மூலமென்றபாண்டந்தன்னை நீடுலகிடத்திவைத்து மோசஞ்செய்தல், கரந்தரமாய் கருவியெல்லாமாண்ட பினபு தனஞ்செயனுமகண்ட வெளிசார்ந்துயேகி, அறுந்துதசநாடி யெலலாமசை வெல்லாம்போ யாகாசமாறுமகன்றசைவுமற்று, சிறந்தவுடலுயிர்க்கூறுசெயலுஞ் சொன்னேன்தெரிசனமுங் கண்டுதிருவுருசொன்னேனே.

திருவுருதன்மலர்தரித்தபரனைப்போற்றிச் செப்புகிறேன குறைக்கருவிதெளிந்துதானும், மருவுமதிமலர்க்கமலவிதழினமேவும் மதுராசர்வாணியருள்மகிழ்ந்துவெண்ணே, அருவுருவாய்கருவிகரணுதியெல்லாமடிபிசகாதிவணையுமுடியுஞ் சொனனாள், குருவருளாலமயிலைகப் பெண்கமலம்போற்றி கூறுகிறேனுடலெடுத்தவரலாறுண்டே. ௱௨௬

விருத்தம்.

வாரானகொங்கைமட மாதுகருக்குழியில்
பாராமல்வந்துதித்து பரதவித்துநின்றேன்காண்
ஊராங்கரூவூரையுற்றதுணையென்றுநம்பி
மாராட்டத்துள்ளேயானே வந்துசமைந்தேனே. ௱௨௭

பாராமலேயெழுந்து பத்தியருள்சித்திபெற
நீயேற்குயிறிப்பயனு நினைவிழந்தியாடல்

ஓமேலெழுங்கசிவ நாதவிந்துகண்ணருளால்
ஊர்மேல்வளர்ந்துமன துள்ளமதிகெட்டேனே. ௱௨௮

காயாபுரிநகரிற் கனககிரிமேவிவளர்
மாயாப்பிறவியென மகிழ்ந்திருப்பதெக்காலம்
தாயாய்முலைகொடுத்துச் சார்ந்தென்னையீன்றகுரு
தேயாமணிவிளக்கே செம்பொனருளம்பிகையே. ௱௨௯

அம்பிகைப்பெண்செம்பொன்மணி யமிர்தரசபானமருள்
நம்பிதிருவம்பரமே நாடிநடனம்புரிவாய்
உம்பரருள்நாதவிந்து வோர்கருவியொன்றறிவால்
கும்பமுனியாலுறைந்த கொஞ்சும்ரத்னமாமதியே. ௱௩௰

ஆதிபந்தநிற்குணமே யண்டபிண்டமேவதிருச்
சோதிநடனமபுரியுஞ் சுழிவீட்டுவாசலிலே
நீதிக்கருவூர் நிலைபாய்க்குடியிருந்து
சாதிகுலமெல்லாந் தவிர்ந்துசதுர்மேல்வளர்ந்தே. ௱௩௧

வெண்பா.

தூராதகும்பிசனில் துலையாதபாண்டமதில்
வீராகவிற்றிருந்தேன மேல்வீட்டில்-நேராக
சண்டனணுகாமல் சதுஷ்கமலசந்நிதியில்
அன்றுதித்துவந்தேன்காணுண்டே. ௱௩௨

டசுபாசயோனிதனில் பாராமலேயழுந்தி
விசுவாசபாதகராய் விரகழிந்து-நிசுவாச
நதியிற்கரையோர நவசித்திரமண்டபத்தில்
விதியேகெதியெனவே விந்து. ௱௩௩

விந்துவழிபரிய மேதினியில்பானுதித்து
வந்தவழிகண்டறியா மையல்கொண்டு-தையலுடன்
விரகம்துசுகமே யின்பமதுவேகடலில்
அரவமதுவாய்வினையென் றறி. ௱௩௪

கலித்துறை.

சுருதிமுடிந்த திரிகோணவட்டச் சுழிமுனையில்
ரூந்துவளர்ந்து கருவுருவாகி யினிதசையான்
சுருதிவிளங்கு மதிமலர்வாசங் கனகிரிமேல்
சதுஷ்கோணவீட்டி லிருந்துமெஞ்ஞானத் தலமறிந்தே. ௱௩௫

மடலோலைகொண்டு வெழுதாதசோதி வடிவதனைச
சடமேவுகின்ற வகையுரைத்தேன்சர்வ காலமெல்லாம
உடல்மேவுகின்ற கருவூரதுதனி லுள்ளதெல்லாம்
திடமாகயானுஞ் சபைமேவினின்று தெளிவிப்பனே. ௱௩௬

(வசையமுறை-தரு.)

வசையஞ்சொல்லுகிறேன் ஆண்டைகேளீர்
வசையஞ்சொல்லுகிறேன்.

வசையமினி ஐந்தும்வசனிப்பதாகவும் வருக்க அமாவவசயம்பரு
வசையமும்ரெண்டு, சுசையமலவசையஞ்சலவசையமுரெண்டு சுக்குல
வசையமுடனைந்துக்காணுண்டையே, அசைதலைந்துகுணமுமரியவசை
யமதி னுக்கையாட்சித்தருளுமாண்டேயுனதுபாதம், நிசைதலம்பிகை
மாது நிலைத்தபடியுரைக்கும் நெரியைத்திருவள்ளுவன் நிசழ்த்தஞான
வெட்டியான். (வசை)

அன்னந்தண்ணீரிருமிடமும்மாவசைய மதனையினிபிறக்குமிடமு
ம்பருவசைய முனனுமலமுஞ்சேருமிடமுமலவசைய மூரியைநீரதுசே
ருமிடமும்சலவசையம், சொன்னபதிக்கெட்டாத சிவமூலநாதவிந்து
சுக்குலவசையமென்று சொல்வேனுகமப்படிதன்னைத்தனையறியல் தல
மும்மறிதலுமேசங்கையாவதுஞானதத்துவக்கட்டளையாண்டே. (வசை)

கோசமயமுமைந்தும் குறியறிதலும்பேத குணமாமன்னமயத்தா
ல் பிராணமயமிரண்டும்,வாசமுமன்னந்தனிலும்பிராணமயமுந்தோன்
றுமன்னமயத்தில்பிராண மனோமயங்களுந்தோன்றும்நிசமாமனோமயத்
தில்விக்கியானமயமுந்தோன்றும் நிருவிக்கியானமயத்திலானந்தமயமு
ந்தோன்றும், இசைவாமெண்சாணுடலிலெழுபததிராயிரமுமிருந்துகா
த்துரட்சித்து இருவினைகளுஞ்சூழ. (வசை)

மூலாதாரத்தில்சுவா திஷ்டானமுமரிதல் மூலமுமணிபூரகமனாக
தம்விசுத்திகாணு, மேலாமாக்கினையுமா தாரமுமாருவிதமாய்விசிதமி
துவறியவிதியைவெல்லலாமோசொல்மூலமெனுங்குய்யத்தருடுமேவசுவா
திஷ்டான முதலானதுவேவிலங்குஞ்சிவமேஞானப்பிரகாசம், ஞாலமு
மணிபூரகம் நாபிக்கமலமதுநாடியவனாகதமு மிருதயமென்றிதுகாணு
ம். [வசை)

நின்றதிதுவிசுத்திக்கண்டந்தனில்நினைக்கும் நேராவாக்கினையின்
மேல்மதிமயங்கண்டறியலாம், மண்டலமூன்றுமறிதல்வன்னியெனுமக்

இனிமகிழுமண்டலமிதுவகையறிவதுநல்லோர் அண்டர்கள்முனிவர்போ
ற்றுமாதிற்றமண்டலமெய்தல் அதிலுதித்திஞ்சந்திர வகண்டமண்ட
லஞ்சூழும், கண்டமெப்படியண்டமண்டலமறிந்தெந்தன் கருத்தில் நினை
த்தபடிகருவிதொண்ணூற்றாறும் (வசை)

அக்கினிமூலநதொடங்கி நாபிக்கமலவித மூளவாகியேயுதித்து ஆ
தித்தமண்டலமீறி திக்கில்திக்கினிப நாபிக்கமலமெய்தல் திசைகளெ
ட்டகற்குந்தொட் டளவிற்றெளிந்திலகும், தக்கபுகழுஞ் சந்திரமண்ட
லமிருதபத்தில்சார்ந்துசார்வாய்தொடங்கி சண்டமுடியடிநடு, விக்கிரமக
திர்மதிசூ மக்கினிமணடலமூன்றும்விளங்குமதுரத்தமிழமிர்தசிந்துரந
தினம். (வசை)

மும்மலமூன்றுமுதிக்கு மூன்ன்மேமூறைறமையறி முளையுமாணவ
மாய்கை மோகமதாகியகாமியம், நிர்மலசொருபநிலை நினைவுமுக்குணம்
சொன்னேன் நெறியைச் சொல்லவுஞான நேசமே யறியலார்காண்
அம்மெனுநானென்றுநாவை ஆணவக்காத்திடிலுமே யபசபமேதனக்கு
யாவறறியாக்கோபம். தம்முயிர்போந்தனைக்கொன்று தன்னையறியாமல்நி
ற்குந் தன்புத்திதானறிந்தாலும் தானொருவரைக்கேட்கும். (வசை)

நம்பினதுவேறாய் காமியந்தனைக்கொன்று நாணிலக்கண்டதுக்கெ
ல்லாநானென்றுமாசைப்படுதல் வம்புமிகவுஞ்செய்சல் மாதர்மங்கையர்
மேலுமயல்கொண்டுவிரகத்தால்வாதுபோராடல்பேசல், தும்பமூன்றுதி
த்திடும்வகையையாவர்கள்காண துடியாய்வா மும்பிதஞ்சுகந்தசேத்
துமமூன்றும், கம்பனமுள்ள வாய்வதுமோடிக்கலக்கமதாய் தாடமுஞ்
செய்தேயக்கினி சார்ந்துமத்திபஞ்செய்தல் (வசை)

வாசமுள்ளபிராணத்தின் வாய்வுகெட்டிட்டுமோடி வாருமக்கினி
யதைமடக்கிமக்திபஞ்செய்தல், நேசமுடனேபித்தம வன்னியோடணு
மித்து நிரைந்துமத்திக்துசலம நெடிவினையுண்டாக்கு ம்சேசமிகவு
ண்டாகும் சேத்துமரோமத்துவாரஞ் சிறந்துவோடியிடைபின்பிறியாய்
சினைகஞ்செய்தால், மாதராசையிலிந்த நாடிபின்னிட்டடங்கிமரிக்கறி
யாமல்தாது மடங்குமென்றுரைகையாலும். (வசை)

இச்சைமூன்றனவித மினியுரைக்கும்வகைகா ணிதுவேபுத்திர
விச்சைலோகவிச்சையுமாகும், பட்சமாமர்த்தவிச்சையு மிதன்கூறறி
யவேந்தன்பரிபூரண ம்பலகபாதம பணிந்தேன, அஷ்டதிக்கும்பு
கழு மகத்தீசருள்போற்றி யடிபன்றிருவள்ளுவனவனிமீதிலின்னூல்,

நிஷ்டையோகத்தின்ஞான நிகழ்த்தமூன்றுவகை நிகழுமிச்சையதின்சு
கத்தைத்தக்கண்டவனுண்டே. வகை

புத்திரன்விச்சையின்குணம் பொருள்மேலாசைப்படுதல் புவியில்
மண்ணின்மெண்ணாசை புவனமாளவுஞ்செய்தல், அர்த்தத்தின்மேலு
மதிக வாசைப்படுதலென்ச மகிதலோகவிச்சையின் விதியின்பயனு
ரைத்தல், வெற்றிபாரிலுயர்ந்த காணியாட்சிவிளம்பல் வெகுநாளுர
விளைமுறை தகுந்தகாதுவிளம்பல் உற்றகாரியமுணர்ந் திச்சையத்தின
மேலாதலுசிதப்பணிகள்செய்து விசிதம்பார்த்திடுமாதல், வகை

அர்த்தவிச்சையின்குண மதிககாமியக்தேடி யன்பதிகமுமாசையி
ன்பமதிலுண்டாதல், எத்திசையிலனந்த சாதியிலுமங்கய ரின்னரிவர்
களெனு மெண்ணமலுமிச்சித்தல், சத்திவிரததாப சங்கையிலுமனதா
ய் சார்ந்துவிகாரமெய்தல் தனைப்புகழ்ந்துணர்வாதல், வித்தையென்னு
மிச்சைவர லாறுமூறின்விபரமெடுத்துரைத்தேனுண்டையேதொடுத்
தேனுதவிந்தாலே, வகை

குணவிசித்லட்சண மதிலுதித்தபடி குறித்துமூன்றுவிதமாய் வி
ரித்துச்சொல்வேன் காணும், மனமதாகிய குணராசததாமசம்ரெண்டுமே
கிழுஞ் சாத்திகத்தோடு புகழுமூன்றுவிதமாய்; துணமாம்ராசதகுணம்
வெகுளிபலபேசாமல் துதித்திடுவோர்தமக்குக் கொடுத்திடுதலுமேன்
மைபணம்விசி வேண்டிய பாக்கியங்களளித்தல்பண்புபாராட்டலாதல்
பலவுபகாரஞ்செய்தல். வகை

தனைச்சார்ந்தோர்கள் தமக்குதககமைகாத்திடும்பேசல் தனதுதம்மு
யிர்போலுஞ் சார்ந்தூரட்சத்திடுதல், இளம்வேண்டிடுதல்பகையிகத்த
ல்பலகலைக ளிசைந்துலகிலகங்கொண்டிருந்துவாழ்தலுமுண்மை, கன
மூமினமூலைய் புகழும்வாஞ்சையொடுக்குக் கருதுந்தாடாண்மையின்ப
க்கருவில்மைத்தபடி; மூனையுமராசதகுணந் தனையே யுரிவிப்பதுமெ
னையேபுகழ்வதில்லை துணையேயாதவிந்தருள். வகை

மிருளுந்காமசகுண விசித்மேன்மேல்விளம்பல் மிகுகியாதொரு
பழிவிகடம்வஞ்சனைசெய்தல், அலரும்பழிப்பாடாகவொழித்தல்வணக்
கமாக லரண்டுவருமவெகுளியதனை விரும்பவெனல், பிரளல்செய்சகன்
றியைப்பிறிததலுமதிமாரல் பெறிதாய்விந்தைமிகவும் பேசல்கரேம்
வாஞ்சை, பூரணமுகத்திடறு பகையுடனேயும்வாழ்த்தல் முன்புரை
த்தபழிபே மூனைதல்கூறலுமாண்டே. வகை

கொலைகல்காமியமும்பொய் குறித்தல்கோள்கள்பொல்லாங்கு
குசிதம்பாவையும்புகழ் குரோதங்கரேமெய்தல்; அலைதல்காமத்தினி

வைகுரோதமதிதசங்கை யசத்தியாள்தோறு மெய்தலறிதலாண்டை-
யேகேளீர், பலபலவுங்கடிசிலதுதொழில்விகற்பம் பகர்தல்பாவியெனவு
ஞ்ஜெஜதலமுமதியா, கலகப்பிரியனெனுமுலகமாத்திபஞ்சொல்லுங் க
ருவில்தாமசகுணகாட்சியிதாண்டையே வசை

அதிசாத்திப குணமறிதலனேகவித மனைத்தும்படைத்தகர்த்த
ன்மனதுளிருப்பதெனில், விதித்தமகங்கடிவுவாய்மைதயவெடுக்கமிகு
த்தசாந்தகமைதன்னினைவுதகைந்திடுதல், உதித்தவன்புபெருமைபுகழ்
தல்குணவிசித முரிமைமறையினிறைதருமமானமிபக்கல், கதிதருநல்
லோர்க்கீதல்வறிஞரைவாழ்வித்தல கருதுமிறைவனடிபணிதல்நல
மறிதல். வசை

மகத்துக்களின்மனதுமகிழ்ச்சிதருவதெனில் மலர்க்கமலபதத்தில்
வணக்கஞ்செய்திடுதலாதல், அகற்றும்பழிபகற்றல் விளையும் பிணி
யொழித்தலதிதநல்லோர்பெரியோ ரலர்களுக்குப்பொருளுமீதல், இக
த்திலறமுங்கேட லுறவின்முறைபதீத மினமுஞ்சுற்றத்தாரையுங் கன
முங்காத்துரக்ஷித்தல், மிகுத்தலபசியகற்றலகுதிபரதேசிகள்விரும்பும
ன்னபலாதி விளங்குமேவமீதாணடே. வசை

ஆத்திரைவாசங்கள்செய்த வருமறையோரைக்காண லருள்தேவ
தைகளுக்குமாகுபலிகொடுத்தல், தேத்திபஞானப்பிரகாசத்தெளிக்க
வர்கள்தமக்கு சிந்தைதயையகற்றிபுப சாரஞ்செய்திடுதலால், யோற்றிடு
ம்புண்ணியஞ்செய்தவினபசுக்கமலர் பூசுரர்தமக்குநலம்புகழுட்பூசை
யளித்தல், வீற்றிருஞ்சாத்தியகுண விசிதலட்சணங்கண்டு விளங்குமூ
ன்றின்விபரம் விசித்தவாறது ஆண்டே. வசை

நாதவிந்ததினாலே நரகசொர்க்கமிரண்டும் நவிலுநல்வினையுந்தீவி
னையு நாடியவாறில, வேதங்களுமுகித்தசாரம் விண்ணுமண்ணுகில் வி
ளங்குநல்வினையும்வந்துதித்தல புண்ணியஞ்செய்தல், ஓதுந்தீவினையு
ஞ்செய்திடும் பாவங்களுமெய்த லுலகமாதிதமிவ்வா றுடலெடுத்துவ
மையால், மாதுவம்பிகையெந்தன் மனதுக்குளுணர்வித்த வரலாறதிந்
தின்னூல் வசனித்தேனண்டையே. வசை

ராகமிதுவெட்டான நடத்தையிவ்வாறறிதல் நலத்திகாமக்குரோத
லோபமோகமதங்கி, அகந்தனிலுதிதமத மாச்சரியத்தோடு மனமத்தி
டலுமிடும்பையறிதல் வேட்கையிதுகாண், பாகமதாகியதேகஞரீரங்க
ளிலுதிக்கும் பலனேயிவைதனிதும பகர்ந்துசொல்லுமேவனகாணும்,
தேகக்கட்டளையின்வாறு செய்கைசெந்துகட்கெல்லாந் தெளிந்துசிர்பிச
காமல் திருத்தம ஆண்டையேகேளீர் வசை

மாதரைக்கண்டாசைகொண்டிடுங்காமவிரகதாப மயல்கொண்ட
திககாமம் வருதல்மன்மதபாணம், பேதபேதமில்லாமல் பிதற்றும்வண
க்கமில்லா பிணக்குமதி நகுரோதந் தனக்குந்தன்னைத்தெரியா, ஓதுமனதி
லொன்றை நினைத்தபடிமுடித்த லொருபிடியாய்ப்பிடித்த லுறுதிவிடா
துலோபம், எதுவாகிலும்பெருமை யின்பசுகாதிசுகமெய்துமனமகிழ்ச்
சியிதுவேமோகாதிமோகம்.
வசை

சூதுமனதிலெண்ணல் துடியாய்க்கோபமுரைத்தல் தொடுத்திடு
தலும்பழி துணபமெய்திடுமதம, யாதொருகாரியங்களி லதுவிச்சைமன
தெய்தலானந்தம்பெருகியின்ப மடையுமாச்சரியங்காண், வாதுபோரா
ட்லொரு சொல்லாயிரம்விரிவாய் வனல்கொண்டாங்காரமெய்தல் வரு
மிடும்ப யுமாதல், வேதுவித்வேஷணம் பலவுமபலவுமெண்ணல் மெய்
பொய்யாங்காரங்கொள்ளல வேறுசெய்தலும்வேட்கை.
வசை

ஆகமத்திலுதித்த ராகமத்தின்பயிட்சை யதிதகுணலட்சணம்வி
தித்வருமலெட்டும், பாகமதாயுரைத்தேன் பகவான்சொற்படிபாரில்
பலகலையுந்தெளிந்து பழம்பொருள்களைக்கண்டு, ஏகவஸ்துவொன்று
லே பெடுத்தேன் தத்துவநெறி யெறும்புகடையாயானை யென்பத்துநா
ன் தழுதல், தோகைமாதுவம்பிகை சொல்லுஞ்சூட்சமறிந்தேன் சுரு
திமுடிவைக்கண்டு தொடுத்தேஞானவெட்டியான்.
வசை

அவத்தையைந்து மொவ்வொன்றாய் விரித்துச்சொல்வேன் காணு
மாக்கிரசாக்கிரசொற்பனஞ் சுழுத்தியோடுதுரியம், பவத்தைப்பவனு
தீதந் துரியாதீதத்தோடைந்தும் படைத்தாரெண்சாணுடலி லெடுத்
தார் ஜெகத்துள்ளோர்க்கும், இவத்தையெனுஞ்செனன மிதிலுதித்த
துகாணு மெவரெவர்க்குமிதுவே யேகவஸ்துவிதாகும், தவத்தில்மிகு
த்த தவமேமெஞ்ஞானநெறி தத்துவமறிந்துதன்னைத்தானறிந்திடுமே
சொர்க்கம்.
வசை

ஆக்கிரமுஞ்சாக்கிரம்நிற்கு மதுவும் லலாடஸ்தானத்தி லறிதல்நெ
ற்றிநேர்மையமசைதல் காயத்தோடென்னில், வாக்கிற்சொற்பனத்திற்
கும் வாழ்தல் கண்டஸ்தானத்தில் மருவியகருவிகளமைத்தவாறுண்
டையே, விக்கிரமச்சுழியின்முனை யிருதயகமலந்தனில் விளங்குந்தா
னமறிதல், வின்பமிதுவாறுகாணும், நிக்கிரகதுரியஸ்தான நேருமே
நாபிககமலம் நிரந்தரமாயிருததல் நிலைக்குஞ்சரீரமென்னில்.
வசை

உத்தமதுரியாதீத மூலாதாரஸ்தானத்தி லுறுதிபெற்றிலகுமிவ்
விதத்திலுதித்தவாறு, தத்துவந்தொண்ணூற்றாறுஞ் சரீரந்தனிலுதிக்

குந் தகமைபறிந்து வெங்கன் தாய்சொல்ல யானறிந்து, வித்திலுதித்த வாறும் விளங்குங்கருவின்வாறு மிகுத்ததத்துவந்தொண் ணூற் றுரை விதிக்கும்வாறும், கர்த்தனருளாலுடல் கருகரித்த நேர்மையுங் கருவி கரணாதிகள்கண்டு ஆய்ந்தவனுண்டே. வகை

சித்தாதிகள்மகிழும் பெரியோர்களும் புகழுஞ் ஜெயம் பெறவேயு லகில் சென்துக்களெல்லாந்தழைக்க, உத்தமயோகிகளெந்த னுறுதிமிக வுங்கண்டு யோகவானதிருவள்ளுவ னுலகிலவனேஞானி, வித்துவானெ னமகிழ்ந்து வேதவேதாந்தசாரம் விளங்கினர்களமிர்த விசிதரத்னபீடம் உத்தமரெனுமுனிவர் சிவசிங்காதனமீந்து வுரையறிந்து மொழிந்த வு கமையீதெனுமாண்டே. வகை

நவரத்தினம்விளையும் திவ்விய நாகரிகசெந்துநாடுகளும், எவ்வர்ணமாய்விளங்கும் சந்திர இந்திரபக்ஷிபன்னபக்ஷிகளும், புவனங்களில் மிகுந்த அண்ட பூச்சக்கிரவாளகிரிசூழிடமுங், கவனாதி ராக்ஷதர்கள் பிறவி கந்தருவதேவகந்தருவர் பவனமுளாயிடுவர் பகி ரண்டமளாவிய கவனாதிகள், தவத்தில்மிகுந்ததலம் ஏழு சாகரஞ்சூழ்நடுரோமபுரி, சிவஞானசித்திபெற்ற குளிகை சித்தர்கள்வாழுந்தீபாதரமும், புவனவபகிரியுங் கெந்தி மாபலிராக்ஷதரூபகமே தன. (௫௰௪)

பொதிகைநகரெனுமே இந்தப் புவனஞ்சூழ்சாகர மத்திபத்தில் அதிநயமென்றுரைருள மெத்த அதிசயரோமபுரிநகரில், நதிகூதக்கேணியொன்று அது நட்சத்திரம்நூறுகாதவழி, மதிகோடிப்பையொளி ரவியாமதிக்குக்கதிரெட்டியதாம், விதியாலமைப்பதென்ன அண்ட மேருவுஞ்சுற்றிமதில்சூழ்ந்திடும், பதியாயுதித்திடுங்காண் பஞ்ச சர்த்தாரிருப்பிடமஞ்சுசபை, கெதிவால்கயிலாசகிரி சுற்றிச் சேணியொன்றுகூதவாலைரசங், கொதிதான்கொதித்திடுமோ சித்திரைக் கோடைதனில்சித்தர்கொண்டுபோவார் தன. (௫௰௫)

எண்ணுஞ்சிரஞ்சீவிதான் அந்த ஈசனருள்காய சித்திபெற்றோர் மண்ணும்விண்ணுமுள்ளளவுந் தேகம் மரணமவர்க்கொருகாலமில்லை, உண்ணுமறுசுவையில் அப்பு உப்பொன்றுமாகா திருப்பவர்காண், தின்னும்பதார்த்தங்களில ஜீவ செந்துவகைகளுயிர்வகைகள், உண்ணும்படியகற்றி யோக சாதனையில்நித்திரையொன்றறியார், அண்ணலருள்பதமே நித்திய மர்ச்சித்துமூல அமிர்தமுண்பார், கண்ணைமூடியறியார் மவுனக் கண்ணாடிமீதில்கருத்துணர்வார், சென்னாட்டமாயிருந்து தெச தீக்ஷைபெற்றுக்கவனம்பாய்ந்திடுவார் தன. (௫௰௬)

சதாசிவசாம்புவனால் ஜெகந் தானேபடைத்துயிருண்டாச்சு, இதானவாறறிந்திடிலோர் புவி யெழுவகைதோற்றநால்யோனியுமே, சு

தாகமத்தினுற்பத்தியால்-பரா-சோதி-யொளிவில்சுயம்பதுவாய்,நிதானமாவதெறும்புகடை-பானை-பாவநூலேமுன்பின்னேகமுயிர், விதாவிதங்களானபல-விந்து-நாதமதுவிளைவானதுகாண், குமாவெனுப்பரைசாம்புவனுல்-அண்ட-கோளகைவடவாக்கினிமுதலாய், மதாவினேதபேதமதால்-வரும்வந்தவழியறிந்திந்தவிதம் இதார்த்தமாகஇனியுரைக்கும்-எங்கள்-தெய்வம்வேறோஉங்கள்-தெய்வம்வேறோ-தன. ()

உலகம்பிறந்தவிதம்-பரா-யுந்திதனில்பிர்மயேந்திரங்காண்,கலகப்பிரியர்கூடி-புராண-கட்டளை-வெவ்வேறுபிரித்துணர்வார், அலங்காயினளவா-லான-அச்சதுவேயறிந்துச்சிதமாய், சிலபேர்மதபேதங்கள்-மனு-செய்கையினுல்விதிநூல்களுமே, பலபலபேர்கள்கூடி-பரி-பாஷைபறிந்துபகர்ந்திடிலோர், நிலவுபொழிமதுரஞ்செக-நீடுலகாதிதமேதனைக்கு, மூலகாதிதம்புகழும்-திரு-வள்ளுவசாம்பவனுற்பவத்தை, புலைபனென்றேயுரைத்த மவுனப் பொக்கிஷமேஞானக்கிஷங்காண் தன. (௫௰௮)

அம்பிகையின்பொற்கமலம்பணிந்தர்ச்சனைசெய்து அடியனுமேநம்பிதிரவியத்தை மூல நாதவிந்தையுண்டுநான்வெளியாம், தும்பிமுகனருளில் துரியந் துரியாதீதங்கடந்தேதுதித்து, கம்பித்திடைகலைபின்மூலஞ் சாதித்துவாசிகொண்டேயெழுத்து, கும்பிதனிலிருந்த ரத்தினங்கோடானகோடிதிரவியத்தைத், செம்பொனருள்பொருளும் இனி சித்திக்கவாசிகொண்டேதிறந்தேன், பம்பகமாயிருந்த கொல்லர் பத்துந்தசவாய்வுநித்திரைசெய்து, தெம்பாயிருகைகையிலே திவ்யசெங்கதிய கழிதாண்டிவிட்டேன் தன. (௫௰௯)

மூலாதாரங்கடந்து முனை முச்சுடர்வட்டமதில்கடந்து, பாலமதுகடந்து வாசி பாய்ந்துவிட்டேன் சதுஷ்கோணம்விட்டேன், ஞாலத்திலேயறிதல் பிர்ம ஞானசுவாதிஷ்டானங்கடந்து, சீலம்பொழியும் ரத்னந் திருமால்மணிபூரகமீதருகே, சந்திரபுஷ்கரணி திவ்வியசாவடி சித்திரமண்டபத்தில் இந்திரசுரூபசித்தி பெற்றஎமனுட்டுச்சித்தரிருபதுபேர், வந்துமறித்தார்கள் போட்டேன்வாசிக்குதிரைபேலங்கு-டி. அந்தரமாயெழும்பி சவாரியனுகதக்கோட்டைமுககோணவட்டந்-தன

ஈராறுசுற்றமதில் வன்னி யெய்துஞ் சலாதியான் கடந்தேனாய் வாசிக்குதிரை அது நிர்ப்பந்தமாய்ப்பாய்ந்தஒடையிலே, ஆராய்ந்து முப்பதுபேர் கயிலை அதிதசித்தர்வந் தடக்கையில்தான், மாரடியே மறித்தார் வாசி வல்லமையாலேவிசுத்திவந்தேன், அறுகோணஞ்சுற

திமதில்-அது-ஆறுபத்துநெருப்பாறருகே, துருக்கல்மண்டபமும்-கண்க-சொர்ணத்தினல்ரத்தினச்சாவடியில், திரிமூர்த்திமூவருமே - தேவ-சித்தர்களும்வீற்றிருக்கையிலே, கருணைமலர்பொழிந்து-மூவர் - கண்டுமகிழ்ந்துகளிகூர்ந்தனர்-தன. (௫௨௧)

திருவள்ளுவனெனவே - ஞான - திஷ்டியினற்கண்டு தேவர்களும், அருவுருவாய்மதுர-மலர் - வாசம்பொருந்திய ஆசிரமத்தில், இருமெனமவர்களுமே-கமல - இங்கிதஞானசுகாதிதத்தில், உருவாய்சொர்க்கப்பதமே-உப-தேசமுர்கந்துமுகதியளித்தார், கருணகடாக்ஷம்பெற்று-வாசிக்-காரிக்குதிரைமேல்சீனிவைத்து, எறிகனவேகமதாய்-அந்த-ஈரெட்டுமாமதில்தாண்டியபின், குறிப்பாய்வருகையிலே-பின்-குவட்டுசித்தர்முப்பத்தாறுபேர்கள், மறிப்பாய்மறித்திடவும்-வாய்வு - வாசியென்றபொடிதூவிவிட்டேன்-தன. (௫௨௨)

விசுத்தியுங்கோணங்-காலி-வேகத்திறல்நடுமையத்திலே,உசத்தியதாயநிம்தேன்-வாசி-ஓகோகமலபீடமருகே, விசுத்தம்வராமனுமே கொண்டு நேசமதாகமயேஸ்பரனுர், வசுத்தசித்தாதிகளும் திரு வள்ளுவனே ஆசிர்மந்தனிலே, கனகாத்தினபீடங் கருணை கமலமலர்பொழிந்தேயருள, நினைவாய்மயேஸ்பரனும் ஞான நிஷ்டைதந்துயோகதீட்சைவைத்தார், இன்பமாயுபதேச முத்தி யின்பத்துடன்தந்து அனபனெனும், மனதுகளிகூர்ந்து - சொற்க மாமதிமோட்சவளையளித்தார்-தன. (௫௨௩)

தத்துவத்தொண்ணூற்றாறும் அதில் தசவாய்விலகப்பட்டபேர்களைபான், சுற்றத்தாரென்றெண்ணமல் இவர் தூரத்தாரென்றகற்றிவிட்டேன், சக்கமதிலிருந்து மூன்று சாக்கிரவீதிமத்திபமதில், கர்த்தரிருப்பிடங்காண் தெய்வ கமலமலராயிரத்தெட்டினில், சித்திரச்சாவடியும் ரத்தின திவ்வியமாமணிகோபுரமும், ரத்தினமதில்பதினறு ஜீவ ரத்தினக்கோட்டைசுற்றிமதிலும், பத்தியுடன்வரவும் வாசி பதினறுகாலேசூழ்நதியருகே, தெத்துகாத்திடும்பேர்கள் திரு வள்ளுவனென்றறியாமலுமே-தன. (௫௨௪)

எழுபத்திராயிரம்பெருமூன் தோடிவரும்போதினியதுகாண், வழுவாமலேயினிதான் கவன வாசிகொண்டுசீனிவைத்ததன்மேல், இழுத்துஅங்குபடி யானதி லேறியேசவாரிதூறிடவும், தொழுதேனசத்தியனை துதி செய்துஆக்கினையிலேயினனே, அருள்பெற்றிலகுசுழி - சத்த மாக்கினைவந்து அடிபணிந்தேன், இருள்போய்நிலவுபொழிந் திணியேக்கமெல்லாம் வீட்டுதூக்கமற்று, சருவாய்விளங்குநாத விந்து

கர்த்தவ்வியத்தைக்கண்டேமகிழ்ந்தேன், பொருளாஞ்சதாசிவமும் சத்திப் பொற்கமலபாதப்போற்றிசெய்தேன்-தன (ருஉரு)

கதிர்மதிவான்புவியும் நின்று காத்திருந்துபணியேவல்செய்யும், விதிமதிநின்றிலகும் விண்ணு மண்ணுமுதல்வன்னிவாய்வதுவும், நதிபதிகர்ரதுவும் நவ கோடிசித்தர்விந்துநாதமதும், துதிநிதியுமெழுதோற்ற மதுந் தொழுதுதோத்திரஞ்செய்துபணிந்திடுங்காண், முப்பத்துமுக்கோடி முனி தேவர்முதல்செந்துமிருகங்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷி நாரதர்கின்னரர் கிம்புருடர், இப்படியாயிருக்கும் இந்த வேளைதனிற்கண்டுயான்பணிந்தேன், ஒப்பனையாயெனக்கு சொற்கயோகதீட்டையுபதேசஞ்செய்தார்-தன. (ருஉசு)

கலித்துறை.

நமசிவவென்று யான்வாசியூதிநல் லாக்கினையில்
தினம்வைத்துகண்டத் தமர்வாசல்கீழ்வரை திசைபிசகா
மனம்வைத்துகும்பித்துச் சுழிமூலநாடி வாசிகொண்டு
தினந்துதித்தைவரை யண்டத்தில்புக்கித் தெரிசித்தேனே. ()

வயநமசிவவென்று வாசிகொண்டாக்கினை மதிரவிபாய்
தயிரியமாய்கண்ட தாரையில்நேசங் தனித்துகந்து
மயமாகுமூல வாசியினாலந்த வட்டத்திலே
செயமாய்மேல்நோக்கி ஆக்கினைபுக்கி தெரிசித்தனே. (ருஉஅ)

சிவயநமாவென்று வாசிகொண்டவரை சேவித்துமுன்
தவநெறியாய்கண்ட தாரைகீழ்நோக்கித் தவறுவரா
முவனைச்சுழிமுனை திரிகோணவட்ட மூலத்திலே
தீவரமாயெழுந் தாக்கினைபுக்கித் தெரிசித்தனே. (ருஉகூ)

மசிவயநவென்று மூலங்குடிகொண்டு வாசியினால்
வசிபொக்கிஷங்கொண்டு வாவென்றுவாசி மதிரவியில்
ராஜராஜயோகங் கும்பித்துவூதி சுழன்றெழுந்து
தேசவாய்வெழுப்பி ஆக்கினைபுக்கித் தெரிசித்தனே. (ருஙய)

நயசிவயவென்று ஐவராநாடி நலம்பெறவும்
தமதுலகாதீதம் பரப்பிர்மமூல சந்நிதியில்
எமலபிகாண மதிரவிகூடி யிசைவுபட
திமிர்தச்சுழியில்நின் றாக்கினைபுக்கித் தெரிசித்தனே. (ருஙக)

ஐவர்தெரிசினஞ் சத்திசதாசிவ மஞ்சுருவும்
பைபவினை நீக்கி மதிரவிகற்பம் பழுத்துவரா

தைபிறைகொண்டு தசதீக்ஷைபத்துஞ் சார்ந்திடிலோர்
வையகம்வானம் புவிமுதற்கொண்டு வசியமதே. (௫௰௨)

கொச்சகம்.

பராபரையென்றாலெடுத்த பஞ்சகர்த்தாளைவரையும்
தராதலமீரேழுமுயிர் ஜாதியொன்றாண்பெண்ணல்லவோ
நிராதரத்துள்ளேயிலகும நீர்மேல்நெருப்பென்றறியார்
துராகதமாய்வெவ்வேறு சொன்னார்சுலோகமதே; (௫௰௩)

அல்லாகுதாவெனவு மைந்துகரம்வைத்துபணிந்
தில்லில்லாவெனத்துதித்து யினிமுடிசாய்ந்தேதொழுவார்
சொல்வாருபதேசம் சூதர்களுஞ்சூலைவைத்து
வெல்வார்ஞானப்பிரசங்கம் வெகுகிறிஸ்தவர்மணமே. (௫௰௪)

ஆத்துமம்பிறிந்ததின்பின் னதிலிருப்பதென்னவயம்
பூத்தானமாய்ப்புதைத்துப் போட்டுரவைசல்லாவே
சாற்றுமலர்பொழிந்து சாய்ந்துமுடிதானசைய
காத்துசலாஞ்செய்தெங்கள் கர்த்தனேயெனத்துதிப்பார். ()

உங்கள்தெய்வமெங்கள்தெய்வ முண்டெனவும்வேறுசெய்து
அங்கங்கள்வேறுளதா யாகமங்களுற்பவித்தார்
பங்கமதாய்வேறுசெய்யும் பாதகரேயங்குமிங்கும்
எங்கெங்குமாய்நிறைந்த ஈசனென்றறிகிலிரே. (௫௰௬)

மதபேதகண்டனம்-தரு.

உங்களுக்கும்எங்களுக்கும்பேதமாமோ-ஆண்டே
உள்ளுணர்ந்துபார்க்கவொருஎள்ளளவில்லை.

அங்கமந்தரங்கமனுபோகஞ்செயி லாண்டே அவரவர்க்கும் ரதி கேளிவேறேயுண்டோ விந்து, திங்களுஞ்செய்ரதிகேளியுங்களுக்காண் டே அது செகப்பாமோஎங்கள்விந்துகறுப்பாமோ பின்னு, மங்கள ஞ்சேசுரம்புவியிலமைத்தவிந்து புவியில் மாதர்கருக்குழிதனி லமைத்த விந்து பிர்ம, இங்கிதமுளையெழும்பஅங்கமாச்சு இரண்டும் எந்தன்வி ந்துதந்தைவிந்து மொன்றாய்ப்போச்சே—உங்க. (௫௰௭)

ஊற்றுக்கால்மாறாதகங்கை ஓடக்கரையில் நல்ல!உன்னரியநாதவி ந்துதங்குகையிலும் மறு, வேற்றுமையாயுங்கள் விந்துபெருத்ததென் ன பேதம் விளங்கவுமெங்கள்விந்துசிறுத்ததென்ன சொல்லும், மாற் றதீதமுண்டோஇந்தஊத்தைக்குழியில் வேறுமனிதர்களோ பிறப்பா

துஞ்சுபுகழ்பூசைசெய்யுஞ் சுந்தரரேயென்குலத்தில்
வஞ்சிமையீர்சேர்ந்ததனால மைந்தன்தரியாதோ. (௫௰)

அம்புவியின்மானதனை யரியவராசம்புணர
கும்பிலுருவாகியதுங் குட்டியளிக்குமோதான்
நம்பிறவிபங்கனரே ஞாயமுள்ளசூக்திரரே
வம்புனாத்திரென்குலத்தை மருவவுருவாகாதே. (௫௧)

கலித்துறை.

குட்டிக்கிடாவும் பசுமேல்மருவக் குறியென்னகாண்
முட்டியெருது முதிர்ப்பதுண்டோ ஜெகமூடர்களே
மட்டிக்கிடாவுக்கு மாவின்பிறவிக்கும் வாறறிந்தால்
எட்டிக்கனியக் தெலுமிச்சையாகுமோ ஈனர்களே. (௫௨)

வெண்பா.

மச்சமதைக்கூர்மம் மருவிக்கலவசெய்தால்
உச்சிதமாய்தாதுவிர்துவுருவாமோ-நிச்சமாய்
எந்தன்குலத்தி லிபல்வானவேதியரே
வந்தணைந்தாலவிந்துவுரு வாறு. (௫௩)

முல்லைமலர்கம்பகட்டு முக்காலுபநீர்தெளித்தால்
மல்லிகைப்பூவாசம் வருமோதான்-தொல்லுலகில்
சோதிவிந்துநாதக் கூளியிலுபிராமவர்க்கு
ஜாதிகுலபேதமில்லைத் தான். (௫௪)

கலித்துறை.

ஈரேழுலோகம் பதினாலுயர்ந்திரு காலுயர்ந்த
கோரானஜாதி ஆண்பெண்ணிரண்டும நிரந்தரமாய்
போரானசெங்கதிர் சந்திரனுண்டண்ட பிண்டமுண்டு
சீரான அன்னமுந் தண்ணீருமுண்டு தெய்வமின்றே. (௫௫)

புத்தியில்லாமல் வெகுகோடிமந்திரம் புலப்பியுமே
சத்தியில்வாழ்ந்து தியங்குவர்காண் சர்வலோகமெல்லாஞ்
சுத்திதசாதியின் பேதகந்தன்னைச் சொல்லுமவர்
எத்திப்பணத்தைப் பறிக்குந்திருட ரியம்புவனே. (௫௬)

விருத்தம்

மண்டலத்தில்குருக்களென் றுபேரும்பெற்று மகத்தான தூளிதம ணிந்துகொண்டு, குண்டலங்கள்செவியிலிட்டுக்குல்லாசாத்தி கோகர ணங்கெசகரணமிரண்டுங்கற்று, வெண்டிரையிற்பலவிதமாய்ப் பொய்

கல்சொல்லிசீஷருக்குமுதலே ந்தெளிபச்சொல்வார், ஒன்றுமில்லையவர்கள்கையில்வித்தையாச்சு உள்ளவர்த்தமானமிதை யுரைசெய்வேனே. (௫௫௭)

நேத்திரத்தில்துகில்வாங்கியுடுத்திச்சொல்வார் நின்றனைநாவவ்வியென்றுந்தூரத்திக்கொள்வார், கோத்திரங்கள்விளங்கமுத்தி தருவோமென்று கூறுசொல்லிநீரதனைக்குழைத்துச்சாற்றி,சவுந்திரத்தைச்செவிதனிலுமாங்டேகேளீர் தவமாகுமஞ்செழுத்தைச் சாற்றுவார்கள், சூத்திரத்தையின்னதென்றறிந்துபார்க்கச் சொல்லரியவைம்பூதமாச்சுதாண்டே. (௫௫௮)

உற்றுநின்றசாஸ்திரத்தைப்பார்த்துப்பார்த்து ஊணுகிடையாமலுந்தான்பிரட்டிப்பேசி, பத்தரென்றுங்குருக்களென்றும் வகுத்துச்சொல்வார் பாதகியுந்தருவமென்றுபணம்பறிப்பார், சித்துநின்றவிடங்காணார்வேருங்காணார் விளங்குபரந்தலங்குகின்றவிடங்காணார், எத்தவமுங்கருவமென்றுலகஞ்சுற்றி யெளியோர்கள்பாவமில்லாமினிக்கொள்வாரே. (௫௫௯)

உடலெடுத்தகேண்மைகண்டால்குருக்களாகும் உள்ளுணர்ந்துபாராதார்மருக்களாகும், செடமெடுத்தவுயிர்கள்கண்டால்தீக்ஷையாகுஞ் செயலறியார்குருபூசைதெளிந்துகூடார், குடலெடுத்தபசியறிந்தாலாசானுகுங் குறிப்பறிந்துக்கொள்ளாதார்போசானுகும், சுடலடுக்குங்கணக்கதுவுமானதாலுஞ் சொல்லுகிறேன்மந்திரமும்மில்லாதாண்டே.

அடியானபாதமதுவளர்ந்ததெங்கே ஆதிநடனம்புரிந்ததந்தையெங்கே, வடிவானமூங்கிலெங்கேவட்டமெங்கே வளர்ந்தெழுந்தஆயிரத்தெட்டிதழுமெங்கே, கொடியானமகமேருவளர்ந்ததெங்கே குருவென்றும்சீஷனென்றும்பிறந்ததெங்கே, முடிவானசிரமெங்கேசடலமெங்கே முதலிருந்தகுருவெங்கேஅமைத்ததேதோ. (௫௬௧)

ஓதுகின்றவேதமதுபிறந்ததெங்கே உன்னியநீரிறைக்குமிடமுயிருமெங்கே, வாதுகள்செய்மந்திரமும்பிறந்ததெங்கே மறைவேதசைவர்களும்பிறந்ததெங்கே, சூதுகள்கடிவையறிந்தால் குருக்களாகுந் தொல்லுலகிலறியாதார்கபமிலொன்று, ஏதுமில்லாப்பொய்களவுசொல்லார்தானும் இவைராஜயோகியென்றுமியம்பலாமே. (௫௬௨)

விட்டகுறைவருமளவுமுபதேசங்காண் மெய்யுடலுந்தளர்ந்துபுவிமேலுநோக்கித், தட்டழிந்துவிழும்போதுழுகினவத்த சாஸ்திரத்தில்க்ஷணப்போதுமறிக்கப்போமோ, எட்டுபரனுமெய்யாதார்குருக்களாமோ என்னையினிப்பறையனென்றுந்தள்ளலாமோ, மட்டமருப்பூங்குழல்வாலாம்பிகைப்பெண் வங்கிசத்திலுதித்தசாம்புவனுநானே. ()

நரகமதைத் தவிர்த்துசொர்க்கந்தருவோமென்பார் நாட்டிலுள்ள
காரியமாங்குருக்கள்வந்து, நரகமதுநின்றதற்குமிறந்தானென்ன நம
னுனையெமனைவெல்லாரனேயென்பார், இரப்பிறப்புமறிந்துணர்ந்துணா
த்தாருகில் எப்பிரர்மென்றவனாப்பணிமேவன்காணும், மறுபிறவியு
ண்டென்பாருலகத்தாசான் மதியெனதுகருத்தினிலுங் காணேனுண்
டே. (௫௯௪)

இருவினையுந்தனையுரைத்துயுலகத்தாசான் இறந்தவுடல்விழுந்தா
விபிதிந்தபின்பு, மறுசென்னமாகிவந்துடலெடுத்து வாழ்புவியில்வரு
வமென்றுவகுத்துச்சொல்வார், குருவறிந்துபுவியில்வந்துவயதுநூறு
குமிப்பாகப்பிறந்திருந்தால்குழந்தைபாமோ, அறிவதிகநற்பிறவிபிறப்
பரென்று மதிதவெகுபொருள்களெல்லாம்பறிப்பாரானடே. (௫௯௫)

வித்திருந்தால்விளைவுமுண்டுமாந்தானுண்டு வேரற்றால்மரமதுவு
ந்தளுக்குமோசொல், சத்தியமாமொழியவுங்காணேண்டேகேளீர் சா
ஸ்திரத்தைமெய்யெனவுமபொண்ணாது, செத்தசவமுயிரொடுங்கி
ன்றபோது சிறுபதலையாய்ப்புவிபிற்பிறப்பதேது, இத்தையினியறியா
தஉலகத்தாசான் இறந்தவுடல்பிறக்குமென்றியம்புவாரே. (௫௯௬)

பாதமதுமாயிரந்தானுள்ளஅட்டை பதறியதுகாதவழி நடக்கு
மோசொல், பேதமில்லாசாஸ்திரங்கள்நமக்குச்சொல்லும் பிரபலம்
போல்தூக்கம்வருமறிந்திடாது, வேதமறைநமக்குரைப்பா ரவர்கள்த
ங்கள் விதிப்பயனையினையென்றுவிளங்கமாட்டார், நாதவிந்துவற்ப
வமேயெவருங்காணார் நாட்டிலுள்ளகுருக்களறியார்கள்தானே. ()

பாரானவுலகத்துமான்பக்காகப்பயிர்த்தாைத்தேனறிவுள்ளோ
ரறிந்துகொள்வீர், கூரானகோழியுடன்போத்துமாயில் கொடிதானவ
லியனுடன்காடைகேளீர், பேரானகுகொனாகோட்டான்கிள்ளை பெரி
தானகெருடனுடன்குட்டிநாரை, சீரானசகுனமதுநமக்குக்காட்டுந்தி
ங்கதுக்குவருவதுதான்தெரியாதானடே. (௫௯௮)

இலக்கணநூலறிந்துகவியினமாய்ப்பாடும் இவர்களுரைப்பதுவா
ஞ்சையினுத்துக்கொக்குஞ், சிலர்கள்கல்லுமனிதர்கள்மேல்சீர்தான்கோ
ரு செம்பொன்பொருள்பறித்துமிகசெகத்தில்வாழ்வார், துலக்கமி
ல்லாக்கவிமிகவுந்தொடுப்பார்புஷ்பந்தொடுப்பதுபோல் வயிறுவளர்த்
திடுஞ்சூதாகும், கலக்கம்வருமவரவர்க்கேயெழுத்தெல்லாம்போய் க
ர்மவினைபாலொழியவருந்துவாரே. (௫௯௯)

ராசிலக்கணமிருபத்தேழுங்கற்று நாடதிலும்பிரங்கையமுண்டே
செல்வார், வாசியிருந்துலவுமவர்வாசிகாணார் வயதுகுறைந்திடுநாளில்

சுவாசங்காணார், கோசபீசத்தொழிலுங்குறியுங்காணார் குறிப்பறிந்து மூலத்தின்குறியுங்காணார், ஆகமதூரக்கவிதைபாடும்பேர்க்கு அவர்க்கிரட்டியிவர்களனுபோகந்தானே. (ருஎய)

தனக்குவரும்வழிபறிந்துவிதிக்கமாட்டார் தரணிதனிலெவருக்குஞ்சாஸ்திரஞ்சொல்வார், செனிக்குப்வினைநல்வினையுந்தீவினையுங்காணார் தேய்பிறையுமவளர்பிறையுஞ்செப்பார்காணார், சுணங்கனதுபோல்திரிந்து ஜோஸியஞ்சொல்வார் சூதர்களைப்போலொருபொய் சொல்வாரில்லை, எனக்குமுனக்காதியிலும்விதித்ததந்தை இந்திரியக்கூறறிந்துயியம்பாராண்டே. (ருஎக)

அந்தணரும்வேதியருஞ்சாஸ்திரிமாரு மகிலமெல்லாமிரட்டுகின்றஆசான்மாரும், சந்தமதாய்சொல்லிமெங்கைப் பொருளும்வாங்கி சாஸ்திரத்தால்முகூர்த்தமெனுஞ்சாந்திசெய்வார், எந்தன்விதிவந்ததென்றுலநானும்போறேன் எனக்குசற்றுங்குறைந்ததென்றுலினியங்கேது, சொந்தமுடனுங்கள்மனைவேதமோதுந் தொல்லுலகிலுள்ளமட்டும்வாழொண்ணுதே. (ருஎஉ)

தனக்கவஸ்தைவருகிறதையறியாமற்றான் சாஸ்திரங்கள்சொலிவயிறுதனைவளர்ப்பார், கணக்காகவகுத்துமிவைபார்க்கும்போது கருத்திலுந்தான்மறுபிரவிகளைவிற்காணேன், எனக்குமுத்திதருவமென்றுரவருமாண்டார் எளிதானதீக்ஷைபெற்றுமிவருமாண்டார், உனக்கெனக்கென்றறிந்து வுரையுணர்ந்துகொள்வார் உகமையறிந்தவருரைத்துப்பறையெனறுமே. (ருஎங)

உகமையறியாமனிதர் கோடாகோடி உரையறியாமாந்தரொருகோடிகோடி, வகையறியாசாஸ்திரிமார்கோடாகோடி வண்மையில்லாதெளிவுடையோர்கோடாகோடி, திகைபாமலெனைப்பறையனென்றுசொல்லுந் தீங்கானமாந்தரெணத்தள்ளினார்கள், நகைபுரிந்துபரமெரித்தசோதிநாதன் நளினபுவிபடைத்தவகைநாம்சொல்வோமே. ()

ஈஸ்வரசிருஷ்டி-தரு.

ஆதியானசோதியிந்தப்புவிபடைத்த முன்னோ
அருமையைச்சொல்லுகிறேனண்டைகேளீர்.

ஆதியில்லை அந்தமில்லைரூபமுமில்லை காலம்- அண்டாண்டபேரண்டமும்பிண்டமுமில்லை, ஜாதியில்லைநாதியில்லை ஆண்பெண்ணில்லாக் காலந் தானுவாய்நாதவிந்து வூனுதலாக, ஓதியதோர்வேதமில்லைம

யிச

றைபோரில்லை சாஸ்திரம் ஒன்றுமில்லைபன்றுமின்றுமொன்றதாச்சு இந்த, சேதிவர்லாறறியசிலநாள்செல்லுஞ் ஜெகம் ஜெனனமெடுத்தா லிந்ததேகங்காணுண்டே ஆதி, (௫௭௫)

மின்னலிடிக்காற்றுமழைக்கொண்டதுமில்லை நல்ல விண்ணுமில்லைமண்ணுமில்லைவேதமுமில்லை மேலுஞ், சொன்னவிலையன்னமில்லைதண்ணீருமில்லை இந்த ஜெகதலப்படைத்தவகை செப்புவேன்காணும் ஆதி, பின்னுமில்லை முன்னுமில்லை பேருலகில்லை வளம் பெருமையைச்சொல்லவும்யானும் போதானிலை முன்பு, தன்னையறிந்தென்னைவளர்த் தன்னையினாலும் இந்த சர்வலோகமானவகைசாற்றுவேனுண்டே ஆதி (௫௭௬)

ஈரேழுபதினாலுலகு மெங்கெங்குமில்லை நல்ல இமையோர்களின் திராதியில்லாதநாளில் - ஆதி, பேரிருபத்தேழுநக்ஷத்திரங்களில்லாக் காலம் பேருலகம்வந்தவகை பேசுவேன்காணும் ஆந்தம், வாரேழு வாரிதி வானமவந்தவகைதான் இந்த மண்ணும்விண்ணுமுற்பவித்த மார்க்கமிதாசும புவி, காருலகுமேபடைகசகர்த்தனருளால் இந்தக் கருத்தைபுநூல்விதியாய்க்கண்டேன்காணுண்டே ஆதி, (௫௭௭)

தாபரசங்கமுமில்லைசெந்துகளில்லை நல்ல தனுவாய்விளங்கும் சதிரதணைமதியில்லை, பாரதனிலாதித்தனநக்ஷத்திரமில்லாக் காலம் பார்படைத்தலூர்முறையைப் பாடுவேன்காணும் ஆதி, ஆரபாரமாயுலகிலிருதான்முடிமேலும் ஆதிபென்றஜெகத்திருள் முனைதானடி-விந்து, வாராதெழுபாருக்குள்ளே விளங்கியிருந்த நன்றாய் வழுவாமலுமெழுந்தவாறுசொல்வேனுண்டே-ஆதி. (௫௭௮)

பாராவட்டம்பத் தனந்தங்கோடி நல்லவரிவாசலதுரெட்டிப் பகருவேன்காணும் கனல், நேரானவன்னியதுமிரட்டியதாகும் நிலை நெறிபானவாசிவெளி ரெட்டியதாகும் பின்பு, வாறதொருநாதத்திலும்விந்துந்தோன்றி மதி வலுவானவிந்தில்சதாசிவனுந்தோன்றி செயல், சீராணசதாசிவத்தில் மயேஸ்பரன்தோன்றி பின்பு சிறந்தமயேஸ்பரத்தில் ருத்திரன்தோன்றி ஆதி. (௫௭௯)

உதித்தொருருத்திரனில் விஷ்ணுவுந்தோன்றி மேலும் ஊன்றியும்விஷ்ணுவுக்குள பிர்மாவுந்தோன்றியுடல், கதித்ததொருபிரமாவிலாத்துமந்தோன்றி கரு கனமானஆத்துமாவிலாகாசந்தோன்றி ஆண்டே, சேதித்தஆகாசந்தனில்வாயுவுந்தோன்றி சித்தி சிறந்தருளும் வாய்வதுக்குள் தேயுவுந்தோன்றி மூலங், ததித்ததேய்வுதனிலுமப்புவுந்தோன்றி மிகவுஞ் சதிரான அப்பதுக்குள்பிருதிவியாண்டே-ஆதி.

## விருத்தம்.

வளர்ந்தருளும்புவிதனிலு மாண்டேகேளீர் வளமாகும்வித்தில்லாவிளைவுண்டாகி, தளர்ந்தசித அஞ்சுநவாயாணியாகி சர்வலோகங்களுக்குத்தானுவாகி, தெளிந்தெழுந்தஅண்டபிண்டமகண்டமாகிஜெகத்திலுள்ள ஜீவசெந்துசெழிக்கத்தானுங், குளிர்ந்தருளுமாதாரக்கமலமாகிக் கொண்டுநின்றசுழிமுனையாமகமேராண்டே, (௫௮௧)

ஓங்காரமாவதுவுமகமேராகும் உதித்துநின்றபர்வதத்தைச்சுற்றிமேவும், நீங்கரிதுஅசைபாதகிரிதானுண்டு நினைவானுமேதெனவேயாண்டேகேளீர், வாங்காரஅகாரமுடன்உகாரம்ரெண்டு மருவிநின்றநகாரமுடன்மகாரத்தோடு, பாங்கானசிகாரமுடன வகாரம்ரெண்டும் பரிவானயகாரமதாலக்ஷரமுண்டாச்சே. (௫௮௨)

கூறுகின்றஅக்ஷரமுமஷ்டவெற்பாய் கொள்கியதோர் சுழிமுனைதான்மகமேராகும், மேருவெனுமெழுந்ததுசிமுனையிலேதன விரிவதிலுஞ்சிவசிங்காதனத்தின்மீதில், சீர்கொண்டபார்வதியுஞ்சிவனுமங்கே ஜெகந்தழைக்கவெழுந்தருளி யிருப்பார்ஏகக, பேர்கொண்டயிருவருந்தானிருந்தவீட்டில் பேசுகிறேனென்மூன்றுமொன்றுச்சாண்டே

மூன்றுபதியேயென்றுலுணரக்கேளீர் முதல்மேலுமடியினிலும் நடுவில்தானும், வென்றுமகாமேருவுந்தான முடியிலாதவிதமாகவெழுந்துநிற்குமென்மேலாக, கோணறிநிற்குங்கயிலாசமிதுதானென்றுதுங்குநிற்பாரீஸ்பர னீஸ்பரியுந்தானும், தாண்டிமுடியாதவொளிபிரகாசத்தைச் சொலலுகிறேனுலகெங்குஞ்சுபஸ்தமாண்டே. (௫௮௪)

அக்கினியுமேருவுக் கடிதானுகும் ஆதித்தனதினைடுவில்பிரகாசிக்குர், திக்கினியசந்திரனுமுடியதாகுஞ் செப்புகிறேனதறகப்பாலளவற்றேபாழ், சக்கினி முப்பாழதுக்குமூன்றுபேருஞ் சாற்றுகிறேன்சிவம்பாழாஞ்சத்திபாழாம், கைக்கினிபோல்பரமதுக்குப் பரையினுட்டங்கருத்துபோலளவற்ற பெரும்பாழாண்டே. (௫௮௫)

அளவற்றபெரும்பாழின்வெளியிலேதான் ஆதியுமனாதியுமாயருபமாகி, அளவற்றபேரொளியாயனேகங்கோடி ஆணுமல்லபெண்ணுமல்ல அலியுமல்ல, விளைவற்றுநின்றதலை விளையாதலவித்தாகிநாகாங்கஞானரூபக், களைபெற்றுஇலங்கும்பிரகாசமான கதிர்மதியிலொருபுறமாய்மலராப்பூத்தே. (௫௮௬)

கண்ணுருவாய்க்கண்டதல்லகாணுதல்ல கருத்தாலுமதித்ததல்ல
கருதாதல்ல, எண்ணுருவாய்நின்றதல்ல இல்லாதல்லஎழுதிமுடிந்தறி
ந்ததல்லஅறியாதல்ல, விண்ணுருவுமானதல்லஆகாதல்ல வேதமறை
மொழிவதல்லஒழியாதல்ல, நண்ணுதலில்நின்றதல்லநில்லாதல்ல நய
ம்பெறவுஞ்சுயம்பெனும்பிரகாசமாண்டே. (௫௮௭)

மந்திரத்தால்கற்பத்தால்கற்காதல்ல வாசித்து அறிந்ததல்லஅறி
யாதல்ல, தந்திரத்தாலெடுத்ததல்லஎடுக்காதல்ல க்ஷணத்துக்குளிருப்
பதல்லதனதேயல்ல, சுந்தரமாம்ரூபமல்லஅரூபமல்ல சொல்லாதவடிவ
ல்லசோதிரூபம், அந்தரமாய்நிராதாரவெளியிலேதான் அடியிலொரு
கொடிமுடியாய்தழைத்ததாண்டே. (௫௮௮)

தழைத்தெழுந்தகயிலாசந்தள்ளிடாமல் தாங்கினதுமேதென்றால்
நிராதாரந்தான, வழைந்தநிராதாரத்தைஆதாரந்தாங்கும்வளமான ஆ
தாரந்தன்னைத்தானும், மூலைதகெழுந்தமூலாதிபாதந்தாங்கும் முதல்
மூலமக்கினிதானசூக்ஷமாகி, செழித்தெழுந்தமூலாதி பாதமாண்டே
செப்புகிறேனகீழ்மேலாய்சிறந்துநின்றே. (௫௮௯)

ஆதாரமாவதுமண்டந்தானாய் அழகானபொன்னிறக்காண் மக
மேருதும், நிராதாரமாவதுவுமஷ்டவெற்பு நெறியதுநிதானமெனுஞ்
சிவரூபங்காண், சூதானகயிலாசமீசானத்தில் தோன்றிய நிராதாரசூ
க்ஷங்கண்டாய், தாதுநிராதாரமதிலாதாரந்தோன்றி தழைத்தவாதார
மதிலபிருதிவியாண்டே. (௫௯௰)

வந்ததிக்குப்பிருதிவியிலன்னந்தோன்றி வகையான அன்னமதி
ல்மச்சைதோன்றி, சிந்தையுள்ளமச்சைதனி லுதிரந்தோன்றி திறமா
னவுதிரமதிலூனீர்தோன்றி, முந்திநின்றவூனீரில்நிணமுந்தோன்றிமு
தலானநிணமதில்சுக்குலந்தான்தோன்றி, விந்துநித்தநாதமதுமிரண்டு
ங்கூடி விரிந்துலகந்தழைத்தவகைவிளம்பினனே. (௫௯௧)

சென்னல்முதலானதவவிந்துங்கூடி செழித்துலகந்தழைத்துபுவி
வளர்ந்ததோமவி, அன்னமயந்தனனிலொரு அவ்வியந்தோன்றி அவ்வி
யத்தில்சப்ததீவுகளுந்தோன்றி, புன்னைவருந்தாதுவினில்நாற்சாற்செ
ந்து மேலானபகுதிசராசரங்கள், சொன்னவித்திலமைத்தஜீவ ராசி
போந்தொல்லுலகிலுள்ளவகைவுந்தோன்றமாண்டே. (௫௯௨)

ஜெனித்தவகையிவ்வாறு விளம்பக்கேளீர் ஜெகந்தழைக்கஎழு
ந்தபராசிந்தைகூர்ந்து, மனித்தசதாசிவனையருள்புரிந்து மேவும் மகத்
வ்சதாசிவனுமகேஸ்பரற்குச்சொல்ல, தனித்துமகேஸ்பரனுமருத்திர

ற்குச்சொல்ல சாதகமாய்ருத்திரன்மாலுக்குச்சொல்ல, இனித்திருந்த
திருமாலையமைத்துரைக்க எழுந்தருளநாலுலகந்தழைத்ததாண்டே.()

மண்டலமுந்தழைக்கஅயன் நினைத்தபோது மருவுமுமையாளு
டையாளன்னையாளுள், நின்றஅயனந்தவட்டப்பீடமானார் நேராகுமோ
ரெழுந்துநாதமாச்சு; அண்டமதில்நின்றசதாசிவன்தான்காணும் ஆதி
பராநாதமதில்விந்துவானார்; என்றிருவர்மனமகிழ்ந்து லிங்கத்துள்ளா
யிருந்துலகஞ்ஜீவசெந்துதழைத்ததாண்டே. (௫௯௪)

திருமாலுமூலமதாய் நின்றுமேவி செழித்துஅயன்லிங்கமதாய்வ
ளர்ந்திலங்கி, கருவானசத்தியதுநாதமாச்சு கருதும்பராபரமெனவும்வி
ந்துமாச்சு மருவானசிவனுமையும்நாதவிந்து மணணிலெழுதாபரமும்
வளரலாச்சு, உருவாகுமுகில்நாதந்துளியேவிந்து உகந்துலகந்தழைத்
துயிருமெழுந்ததாண்டே. (௫௯௫)

என்றுமுள்ளபடிபுவிகள்தழைத்தவாறும எண்ணரியஜீவசெந்து
வளர்ந்தவாறும், கண்டறியும்ஜெகம்படைத்த கருத்தின்வாறும் கருவி
காணுதிமுதல்செனித்தவாறும், ஒன்றுபொருளொன்றறிந்துவளர்ந்த
வாறும் உள்ளுணர்ந்துபாராதாரறிந்தவாறும், தெண்டிரையில்விளங்கு
கின்றபரத்தின்வாறுந் திருவுளந்தால்நினைக்கஇந்தப் படிதானுண்டே.

படர்ந்தெழுந்தபுவிதனிலுமாண்டேகேளீர் பலநூலுஞ்சாஸ்திர
ங்கள்விதிக்கவேண்டி. சடைமுடிமேல்தரித்தருளும் பரத்தைநோக்கி
தாளிணையில்விழுந்துபிர்மா சரணஞ்செய்து, திடத்துடனேஜெகந்த
ழைக்கத்திருக்திமேலாம் திதிவாரம்நாள்கள்திங்கள் சீரும்வேணும்,வி
டுத்துயினியதில்விதிப்போமியல்பய்த்தானும் பெல்லடியில்விழுந்து
வாய்புதைத்துநின்றான். (௫௯௭)

அடியில்விழுந்தெழுந்து பராபரனைநோக்க ஆதிபராபரனுமவரே
துசொல்வார், கொடியமகாமேருவெனும்வரைதானுள்ளே குடியிருந்
தமுப்பாமுக்கப்பாலேதான், படியுமொருஆறுவரைஅதிகந்தோன்றும்
பகர்ந்தவரைகடந்தவட்டத்துள்ளே, முடிவிலொருவரைதோன்று
ஞ்சூக்ஷத்துள்ளே முதல்வேதபரையதுக்குள்முடிந்ததாண்டே. ()

ஆரண்மொழியைக்கேட்டுஅயனுண்டேகேளீர் அடுக்கானஅகண்
டவெளியதனிலேதான், வாயளித்துவாணிமேலமூலிங்கத்துன்ளே வகு
த்துரைத்தசாஸ்பதியின்கருவிலேதான், திருவிருந்துவிளையாடும்விரிவு
க்குள்ளே செழித்தசுழியொடுங்கிநின்றபரையைவிட்டு, அறிவறிந்தப

லநூல்கள்புவியிலேதான் அறிந்தமட்டும்வகுத்துரைத்துப்பிறந்தேனு ண்டே. (௯௯)

பரையைவிட்டுநானுதித்துவந்தமாத்திரம் பகர்ந்தெழுந்து அய்ய ரென்னையுகந்துமேவி, கரையடங்காலிங்கமதைப் படைத்துவைத்தோ ங் கருதுகின்றசரிதையுடன் கிரியையோகம், துறையறிந்தஞானமிது நாலுவேதஞ் சொல்லிவைக்கவேண்டுமென்றவேண்டினார்கள், நிறை யறிந்து அவரவர்க்கு லபித்தாரீசன் நீள்புவியிலிறப்பிறப்பு மிரண்டும் போச்சே. (௱)

இந்தமொழிஐயரென்னைப் பார்த்துமேவி எடுத்துரைக்கப்பார்த் தடிமையியம்புங்காலை, யெந்தைபிரானீயாச்சுநீநானுச்சு எனவகுத்த பரைக்குள்ளே யிருந்திட்டேனுன், சந்தேகஞ்சொல்லஇனிவேண்டா மென்று தாள்பணிந்தெழுந்துநின்றுகரங்குவித்து, வித்துதனிலேபிறந் தஜெனனமாச்சு மேலானபலவிதமாய்விதித்தோபாண்டே. (௱௧)

வேதமெனும்புராணநூல்விதிக்கச்சொல்லி விளம்புகின்றஐயரடி விழுந்துபோற்றி, சாதகமாயொருவிபரம் புகல்வேன்காணுந் தரணித னில்செந்துவெல்லாந் தழைக்கவேண்டி, போதகமாயுங்களையரனபுக ழ்வேணுகில்புவிதனிலுமதுகண்டுதுதிக்கவேணும், ஆதாரவாய்மண்டல த்தில்நீரேபோமென்றும் அருள்புரியவேணுமென்றுமர்ச்சித்தேனே. ()

திருவடிபொற்பதம்போற்றித் துதித்தேன்பானுந் தேவசிவசாம் புவனுர்பட்டந்தந்தார, பொருளாகுந்திருமாலகார் முகிலுமானார்புகழ் ந்துருத்திரன் அக்கினியுமின்னலானார், சிறப்பானபதினாறும்வீட்டுக் குள்ளே சிறந்தமயேஸ்பரரிடியுங்காற்றுமானார், மறப்பாகநின்றசத்திநா தமானாள் மருவுபரவெளியுமதுமேகமாண்டே. (௱௩)

துய்யவெளிபருந்ததியின்தலந்தானுதஞ் சொல்லுகிறேனவளைவ ரவழைத்துபானும், வையகத்தோர்புகழ்ந்தேற்ற வூனுக்குள்ளே வகு த்திருப்பதேழு நக்ஷத்திரமுமாகும், ஐயமறும்வானிலநக்ஷத்திரங்க ளெல்லாம் ஆதிசதாசிவனருளாலன்வாறும், செய்யபுகழன்னமதில் நின்றவில்லுஞ்சிறந்தருளுஞ்சிறுபரையால்வளர்ந்ததாண்டே. (௱௪)

அவைபதுக்குள்ளேபேழுவாரமாச்சு அவள்குலமென்றென்குல த்திலமைத்தவாறும், இவையடக்கத்தாலுஞ்செழுந்திதிகளாச்சு எனை வகுத்தப்பரைக்குலத்தியம்பலாச்சு, இவையடக்கத்தள்ளிருந்தபிரம த்துள்ளே செடலானசராசரமும்பிறக்கலாச்சு, தனமிகுந்தவப்பிரமப்பி ரபையுள்ளே தனித்தவொருசுக்கிரனுருதித்தாண்டே. (௱௫)

திங்களுடன் திதிவாரம்வகுத்தபின்பு திருவுளத்தின்கமல மலர்பணியயானும், சங்கரனாரெனை மகிழ்ந்தேதோவென்றார் ததியினுடனறிந்துலகங்கழைக்கவேணும், இங்கிதமாயிதுக்கெவனைவைப்போமென்று எழுந்துகரங்குவித்தடியேன்பணிந்துபோற்றி, கங்கையணிகடவுளவர்மதியுமானார் கருத்திலறிந்துகமைமெனமகிழ்ந்திட்டேனே. ()

செங்கதிராய்ப்புவிதனிலுஞ்சூழ்ந்துமேவுந் திருவுருவாய்நின்று பரஞ்செப்பினார்காண், அங்கெனவேயானறிந்துஅறிவினாலும் அருளறிந்துஅருபநிலையானும்பெற்றேன், பொங்கமுடன்புகழ்ந்திருந்தேன் பொருளுங்கண்டேன் பூரணத்தையொருநாளும்போக்காவண்ணம், எங்கள்மதியிருந்ததினாலெல்லாமாச்சு பெம்பிரானியம்புநிலையான்கண்டேனே. (சூ௱௭)

சொன்னமொழிகேட்டெழுந்து சிறுபெண்ணாத்தாள் திருவடிதன்கமலமலர்துதித்துமேவி, என்னமொழிநீருரைத்தீரென்பிராணேசா எனக்கடிமையுனையன்றியினியொன்றில்லை, இன்னிலத்திலிருளகற்றி வெளியைத்தாண்டி யெழுந்தொருகடிகைமுப்பதிலுமாகும், அன்னவெளிதனையறக்கத்தோணுவீர்காண் அடியாளுந்தனித்திருக்கமாட்டிலேனே, (சூ௱௮)

தனித்திருக்கதரமென்றுவுமைதானோக்கி சச்சிதானந்தபரமேது சொல்வார், செனித்தபுவிவிளங்குங்கலைபதினாறுகில் சேர்ந்திருப்போமுன்னிடத்திலகலாமற்றான்; கனித்தகலையொன்றாகநாளொன்றாகக்கருநிடுமூவஞ்சானாளாகும்போது, செனித்தவுயிர்யாதுக்குங்குளிரவெண்ணில் தெரிந்தொருநாள்பிறிந்திருப்போமறிவிராண்டே. (சூ௱௯)

துய்யபரமானசிவம்விளங்கமேவி தொழுதுமையாள் வணங்கிசெங்கதிருமானாள், வையகத்திலிருள்தனையறுத்துச்சுட்டு மதியதனால்வெளிபர்கியொளியாய்நின்றாள். ஐயமறஇருவருந்தானாகாசத்தில்அகிலபுவனந்தழைக்கப்புட்பப்போலாய், வெய்யவனும்வெண்மதியுமுலகந்தன்னில் வீற்றிருந்துபுவனமெல்லாம்விளங்கினாரே.

சத்தியுடன்சிவனுங்கதிர்மதியுமாகி தனித்தபிர்மாவெழுந்துகரங்குவித்துமேன்மேல், முத்திதருமுதலெழுத்தேதேவதேவா மூன்றுலகும்நிரந்தரமாய்ப்படைக்கச்சொன்னீர், எத்திசையுஞ்சரிசமனாய்விதித்துவைத்தால் எங்கள்சொல்லுமேலாகவேணுந்தானாய், இத்தலத்திலுள்ளோர்களெனைத்தான்போற்ற லெழுபரத்திலொருபுதுமையருள்தானென்றே. (சூ௰௧)

அந்தணருமடியிணையைத்தொழுதுமேவ அம்பரவிலாசருமேயருளுநேர்மை, விந்துபரநாதமதுமொன்றதாகி விளைந்ததுகாணெண்பத்துநாலுலக்ஷம், செந்ததுக்குள்செனித்துயிராய்பிறைந்துமேவி செகதலத்தினமதுயிர்க்குஞ்சேர்க்கையில்லா, எந்தவிதயாகவுந்தான் புதுமையுங்கள் இடத்திலுந்தான்தருவமென்றியம்பினரே, (௬௰௨)

தாவரிதஎன்றபரந்தன்னைநோக்கித் தாள்பணிந்துகாங்குவித்துசதுர்பிர்மாவும், வரைதனிலும்நின்றபரமனமகிழ்ந்து வள்ளலெனுந்திருபரைக்குள்வகுக்கச்சொன்னர், திருமரைக்குளிருந்தவரைவெளியதானேந்திருவுளந்தான்கருத்துகந்தேனை தானேக்கி,அரைபுகுந்து அந்தணர்கள்புதுமைகண்டு அந்தரத்திலறிந்துகொள்ள அருளென்றுரே

அந்தரத்திலொருபுதுமையருளுஞ்சொல்லி அரனடியைப்போற்றிநின்றுராண்டேகேளீர், சுந்தரமாந்தும்பிசுக்கிரவாரநாள்தான் சொல்லிமங்கவாரமெனுஞ்சூட்சமானுர், தந்திரமாஞ்செங்கதிரோனுதிவாரம் சர்வவுயிர்நாதனருள்சோமவாரம், மந்திரமங்களவாரம்ருத்திரனுக்கும் வளர்ந்தபுதன்மயேஸ்பரன்தான்வகுத்தேனுணடே, (௬௰௪)

அந்திரத்தில்நின்றகுருவாரந்தன்னில் ஆதிசதாசிவனருளாலகமேமூருகும், விக்தையதாமலரவர்க்குவாரநாள்தான் விளங்கினேம்விபரமதாய்விளங்கக்கேளீர், பைந்தமிழாலருளியதோர்பஞ்சவாக்கியம்பரமானஅகத்திசர்பகர்ந்தவண்ணம், இந்தவிதநூல்வகையைவிதித்தேன்காணும் இனியுரைக்குஞ்செய்தியெல்லாமியபலாமே, (௬௰௫)

வாரமினிமேபழதனைவகுத்தபின்பு வள்ளல்பரந்திருமாலை யருகேவைத்து, ராகுடனேகேதுஅணிபாகுமென்னில் நளினமலரடியதனைப்போற்றிசெய்வார், தாரகமாம்பிர்மதிதீர்த்தந்தன்னைத் தனித்தொருநாள்திரிகடுகைமறிப்போமென்றூர், ஆரணிம்தோர்சம்மதித்து அருளமேன்மேல் அந்தணர்கள்கண்டுகொள்ள அருள்செய்தாரே,

பூரமுடனுத்திரமுமஸ்தஞ்சித்திரை புகழ்சோதிவிசாகமதுஅனுஷங்கேட்டை, சீரானமூலரோகணியுமென்னில் செயசதையமுத்திரட்டாதியென்னில், ஈராறுங்கூடிநட்சத்திரமதாச்சு எழுந்துவளர்ந்திருக்குமுனியம்புங்காலே, சார்வடியுமாகிநின்றபிர்மாவுக்கு கருத்துலகம்பிறித்துரைக்கக்கருகினரே. (௬௰௭)

அசுவனிடும்பரணிகார்த்திகைபிேருடு அருள்மிருகசீரிஷந்திருவாதிரையுமாகில், திசைபுசமூம்புனர்பூசமாயிலியத்தோடு சிறந்தமகம்பூராடமுத்திராடம்,நிசமானத்திரிவோணமவிட்டம் பூரட்டாதி ரேவ

தியுமூலஞ்சுநேர்ந்ததாகில், விசுவதிசெங்கதிரவனில்வளர்ந்துமேவும் விரித்துலகமந்தணர்க்குப்பிறித்துணர்வதாமே. (௯௧௮)

கண்டுகொள்ளுமந்தணர்கள்புவியிற்குள்ளாய் கருத்தாலும்வகுத்துரைத்துக்காலம்போக்கும், என்றிரானுஞ்சொல்லியருவ புரிந்தமாதிரம் இணையடியிற்போற்றிசெய்துஎழுந்துபின்னும், கனமறனவுங்காங் குவித்துபிர்மாவுக்கு நாயனுநாக்கபொருளித்தாலகணடீர், வண்டர்கள்தான் புவிபதுக்குள்பிறந்தபின்பு மனதாலு வகுத்துரைத்தார் வேதந்தானே. (௯௧௯)

வேதமறையாகயங்கள்பிறந்ததெங்கே வேள்விகளனுதித்தவிதம் பரையிற்குள்ளே, கதிர்முளையுமுளைத்ததெங்கேரவிதானெங்கே கமல ரவியுதித்ததுவுமபரையிற்குள்ளே, போதகதிகிரியுபலவனங்கள்தானும் புகழுனைந்தம்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே, நீதில்லாசங்கரனாரயன்மால்ருத்திரன தேவர்களும்பிறந்ததெந்தன்பரைக்குளாண்டே. ()

அந்தணருப்வேதியருமுதித்ததெங்கே ஆசாரம்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே, விந்துதித்துப்பிறந்ததெங்கேநாதமெங்கே வெகுவிசித வுயிர்களெந்தன்பரையிற்குள்ளே, செந்தணலுமபிறந்ததெங்கேஜெகந்தானெங்கே செகத்லமும்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே, மந்திரமும்பிறந்ததெங்கே மனுக்களெங்கே மனுநீதிபிறந்ததெந்தன்பரைக்குளாண்டே. (௯௨௧)

பெந்திரமாம்பிறவிபெங்கேபெமனுமெங்கே யிருவினைதான்சூழ்ந்திடலுமபரையிற்குள்ளே, கேந்திரமாநடனசங்கீதமெங்கே கொர்வம் பிறந்துதித்ததெந்தன்பரையிற்குள்ளே, வந்தனமும்பெநதனமுமபிறந்ததெங்கே மகாமந்திரஞ்செனித்ததெந்தன்பரையிற்குள்ளே, அந்தரவாகாசமிதுபிறந்ததெங்கே அண்டபிண்டமெந்தனுட பரைக்குளாண்டே. (௯௨௨)

தேவாரம்பிறந்ததெங்கேதிருவாமங்கேதிருமந்திரப்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே, தாவாரமபிறந்ததெங்கேசைவமெங்கே சாத்திரங்கள்பிறந்ததெந்தன்பறையிற்குள்ளே, திவ்வமேழுவாரம்வந்துபிறந்ததெங்கே திதிவாரம்பிறந்ததெந்தன் பரையிற்குள்ளே, சேவல்மாதெய்வமறைபிறந்ததெங்கே ஜெகமுழுதுமபிறந்ததெந்தன் பரைக்குளாண்டே. (௯௨௩)

கங்கையுமவந்துதித்ததெங்கேகிரியையெங்கே கருத்துலகந்தழைத்ததெந்தன்பறையிற்குள்ளே. துங்கமணிமேடைசெனித்திருந்ததெங்கே சோதிசுழிமுனையதுவுமபரையிற்குள்ளே, அங்கமெல்லாமமைத்ததெங்கே ஆத்மமெங்கே அகண்டபரிபூரணமும பரையிற்குள்ளே,

சங்கையில்லாசந்தனங்குங்குமம்பூநூலுந் தாணிமுதலெல்லாம்பறையில்த ழைத்ததாண்டே, (௲௨௪)

கொண்டலிடிகாருமெங்கேகுறிநாமெனங்கே கோடிரவிபிறந்ததெ ந்தன்பறையிற்குள்ளே, அண்டபிண்டப்பிறந்ததெங்கே யாகாசமெங் கே அக்கினியுமின்னலெந்தன்பறையிற்குள்ளே, பிண்டமெனுமெண் டிசையும்பிறந்ததெங்கே பேருலகம்பிறந்ததெந்தன்பறையிற்குள்ளே, மண்டலமூன்றுதித்ததெங்கேவானமெங்கே வஸ்துவெனுஞ்செனித்த தெல்லாம்பறைக்குளாண்டே. (௲௨௫)

வீதிருந்துவக்கபமாவீட்டுக்குள்ளே விதவிதமாய்புவியதுக்கு ள்விளங்கும்வாறு, சித்தினால்ஜெகம்படைத்த வாறுஞ்சொன்னேன் தெளிவுடையமகாத்துகள்தானறிந்துமேவும், மற்றவர்கள்வாய்மதத்தா லதூஷியார்கள் பதமேப்பெழுநரகில்வீழுவாரமேலும், எத்திசையு ந்தழைத்துவுயிர்சாங்கும் பாதமெழுவகையுமென்பறைக்குளமைத்த தாண்டே. (௲௨௬)

ஜெகமமுதபடைத்தவிதமின்னஞ்சொல்வோம் ஜெகத்திலுள்ள அநேகம்பேர்பொய்சொல்வார்கள், அகமகிழ்ந்துவுணர்ந்தறிந்தோரறிந் துகொள்வார் அறிவில்லாமூடரெனுரல்விரிவுசொல்வார், மகிதலத்தி ல்முத்திபெற்றுவாழ்வார்வாழ்வார்மகத்துகளை தூஷணித்தோர்நரகில் வீழ்வார், ஏகவிபடைத்தவகையியல்பாய்ச்சொன்னேன் இன்னிலத் திலுள்ளவர்களினிகாணீரே (௲௨௭)

ஒன்றானவித்துக்குள்சமைந்தசீவன் உதித்தவகைகசனை தனிலுமு ளைத்திடமேரம்நாம, நன்றானசாதிபலவிதமதாகி நானிலத்தில்நானே தானுந்தான்காணும, அண்டாதபுரமெரித்தபரனுஞ்சொல்ல அருள் கொடுத்தசாபபுவனதாமூர்த்தியென்று, குன்றாதவுடலபறையனெ ன்றுமப்பர் கூறுதற்குசாஸ்திரமெள்ளுவனைகண்டே. (௲௨௮)

திக்கிலுள்ளசாஸ்திரங்கள்விளங்கும்போது திருமார்பில்பூணூ லணிந்துமேவி, தர்க்கமிந்மேவதியர்க்குள்திருமுன்பாக தளபபெரிய வெண்களிறின்மீதிலேறி, எக்கியத்தில்விளைகின்றஅமிர்தமுண்டு ஏகச க்கிராத்துயபவெள்ளைக்குடையும்பெற்று, அக்கினியாதித்தன்மதிமூன் றுக்குள்ளே அருள்பெற்றுசாஸ்திரங்கற்றமைந்தேனுண்டே. (௲௨௯)

வித்ததனில்நாதமதுமிரண்டுங்கூடி விளைகின்றகருவிலுக்தானுரு வதாகி, இத்தவுலகந்தனிலும்பிறந்துயானும் இவ்வாழ்க்கைசெலுத்தி வாவிசன்பாதம், எந்தைபிரானடிதொழுதுநூல்களாய்ந்து இருவினை

என்பயனறிந்திருந்தேன்யானும், வந்தவகையனைத்தும் பரைமகத்துக்குள்ளே வாழ்க்கையெல்லாமுதித்தவகைவசனித்தோமே. ௬௰

பிறந்தபுவிதனில்வளர்ந்தபெருமைசொன்னேன் பின்புலகந்தழைத்தவகை பிறித்துச்சொன்னேன், சிறந்தெழுந்தஜாதிகுலவிளக்கஞ்சொன்னேன் செகத்திலுள்ளோர்தங்களுடலொடுக்கஞ்சொன்னேன், அருந்தமிழைத்தெரிந்தவர்களறிந்துகொள்வார் அறியாதமாண்பர்களுமிகழவேண்டாம், இறந்தவுபிரொடுங்கியுடல்போமபோகாத இடுகாடுமேயகும்வகையியம்புவேனே. (௬௰௧)

கொச்சகம்.

அன்னையெனுங்கொப்பமதிலந்தயதிலேயிருந்து
நன்னயமாய்ப்பத்துதிங்கள் நானகத்திலேயிருந்தேன்
என்னென்ன அதிசயங்காணிவ்வுலகிலேயமைத்து
உன்னிதமெல்லாமமைத்தே னுண்மையிதுகாணகிலரே. (௬௰௨)

அம்புவிபிலேயுதித்து ஆய்ந்துபரிபாஷைசன்னை
வம்புலகத்தார்வசிய மாய்கையடித்தேபிறிந்து
கும்பிதனிலேயுமூன்று குண்டலிதனைபொற்கமலம்
நம்பியிருந்தேசிலநாள் ரகசியத்தைகாண்கிலனே. (௬௰௩)

அண்டரண்டவான்புவியு மாகமத்தினுட்பொருளும்
கண்டிதமாயான்விளங்கும் காயமதிலேயறியும்
வண்டரெனைநீசனென்ற வாறுதனையேயொழித்தேன்
விண்டரகசியமதனை விளக்கமதுகாண்கிலரே. (௬௰௪)

வையமதிலேயுதிக்கு மாண்பர்களேயுஞ்சளுயிர்
மெய்யென்றிருந்தசைவு வெளிப்படுமதென்னவிதம்
ஐயமிலாவாழ்ந்துலகி லாண்மையகம்பூண்டமதி
பொய்யெனுமிவ்வாழ்க்கையது போகுஞ்சுடுகாடுளதே. (௬௰௫)

கலித்துறை.

வீடானமூலச் சுழிநாதவீட்டில் விளங்கும்விந்து
நீடாழிலோகந் தழைத்துப்பெருகி நின்றிலங்கும்
தேடாதழித்த பொருளானபொக்கிஷந் தேடியென்ன
காடானநாடு சுடுகாடுசேர்வதுங் கண்டிலரே. (௬௰௬)

எழுவகைத்தோற்றமும் நல்வகையோனியி லெய்திடினும்
பொழியச்சுரோணிதம் நாதவிந்துட்பொருள் போதகததால்

சுழியைக்கழிய கட்டுயிர்தேய்பிறை கண்டுமிருந்
தழியபெருந்துறை யென்னுளிருந்துமனித்தியமே. (சூ௩௭)

என்னுளிருந்தென்ன முன்னுள்ளனுப்படி யிந்தவுடல்
தன்னுலழிவதுந் தானறியாதென்ன தந்தைவிதி
உன்னுளழிவது முட்டுயிர்காய மொழிவதங்கண்
டன்னுள்ளனுப்படி கண்டுமிருந்தறியாதவரே. (சூ௩௮)

யோனிக்குளாசை யொழியார்தனித்திய மூங்களுயிர்
தேனுக்குளின்பஞ் சுகாதீதமோவருஞ் சிற்றின்பத்தில்
ஊனைற்றுக்காய முடலறறுப்போம்பொழுதொன்றறியா
ஈனர்க்குச்சொற்கஞ் சுடுகாட்டொழிய இனியில்லையே. (சூ௩௯)

வெண்பா

இந்தவுடல்காய மிறந்துவிடுமிவ்வுலகில்
வந்தவழி தானறியா வாழ்க்கையோ-இந்தவுடல்
அற்பக்குழியதனி லரவமிருப்பதெனுங்
கற்பகத்தைநியாண்டிருமே கூகூஷி. (சூ௪௰)

ஞானமறிந்தோர்க்கு நமனில்லைநாள்தோறும்
பானமதையுண்டுருசி யாறினால்-ஞானமது
கண்டானுடலுயிருங் காயமவனுவாகும்
உண்டாலமிர்தரச முண் (சூ௪௧)

சுழியறியார்க்கென்ன சுகமறியார்க்கென்னகுரு
வழிசெறியார்க்கென்னவெய்தும் வாறுகாண்-சுழியறியா
மூலமறிந்தவ்வழியில் முத்தியடையார்க்குநமன்
காலன்வர்க்கேமரணங் காண். (சூ௪௨)

வேதமறைஞானமெய்யுணர்வதாமாகில்
நாதனருளால்பதவி நாடுமே-வேதமறை
நாலுமிபாருஞ்ஞ்ணதை நற்பொருளின்வாறறிய
பாலுமதுசெய்யெனவும் பார். (சூ௪௩)

மேற்படி-தரு.

அரகரசிவசம்புவே யருள்புரியும
பரமானந்தசின்மய குருவருள் ஞானச்சுழிமதிமலர்பொழியும்.

திருப்பெருந்துறையருள் திமலர்பொழியுங் கருவூர்தனில்மேவி
மசெழுத்தின்ஞ்சுழிமே னருப்பாடந்த வழியும், மருகருசயம்புகழ்மூல
ச்சுழியிலருவ் கரிபுரிதுசரித்சதிரகொண்டபுரமெரித்த சிவசங்கர

னே-யருள், திரிபுரமெரிதணல்கொண்டுவீசும் பானேயெனையாள்கொள்ளவருஞ் - சிவசிவ - உடலாவிவிட்டெழும்புமாகில், சுருள்பம்பரமாடியசூக்ஷவிட்டேகுதே காயம் நீர்மேற்குமிழி சுழிமுனையைவிட்டுச் சோபித்துச்சொக்குதே-ஆவி-அரகர. (சுசச)

ஊதுந்துருத்தியில்காற்றையுமே பிடித்தடைத்து பொய் யுடலெடுத்துமேயுந்துவழுபான் மகிழ்ந்திருந்தேனேயாண்டே - மனம், பேதமில்லாமலெண்சாணுடல்மாளிகையில பிரியாமலெலன்னுயிர் பிராணனுக்குமொரு பிசகில்லாதிருந்தேன் இனி, வேதஞ்சொல்லும்படி மாதாகருக்குழியில் தசதிங்களிருந்துடன் விளங்கிவாழ்ந்திருந் தலங்கிர்தமாசவே கரு, நாதவிந்துண்மையை நானறியாமலுமே மிகமகிழ்ந்து பூநவம் நாயகியாள்சருக்குழியில்வாழ்ந்தேனே-அரகர. (சுசரு)

விண்ணுள்ளகாலமிவ் வாழ்க்கையையெண்ணியே-நான் - இருந்தென்னுடலமெலிந்து- னுயிரலைந்துத்தேடியே — ஞானம், நண்ணுதலேசிவாநாதபரசுருபமிருதாளிணையி லடி நம்பினேன் அன்புஅருள்தருமம்பரமே விழி, கண்ணுள்ளபோதருள்காக்ஷியளித்தருளுநு - சிவசாம்பசதாசிவகாரணமான கடாட்சமெனக்கருள்வீர்-கெதி, உன்னுடலநம்பியுடலெடுத்தாவியதுமெய்ஞ்ஞான சிரோமயமுதித்திடுந்தாணயிலேலாடிபொளிந்தசைவே-அரகர. (சுசசு)

செங்கையிலெழுந்தபங்கயமீதுபோலும் உடலதுக்குயிரினிகீர்த்திபரப்வாழ்ந்துடல்காற்ற ரையிலுறங்குஞ் சந்திரன், திங்கள்கதிர்மதியெந்தந்தழைத்தருளுஞ் சிவஞானப்பிரகாசமே தெண்டனிட்டேஉயிரொண்டியாய்ப்போகுதே-சிவ, செங்கதிர்சந்திரன்போலுமிருந்துறவாடி ஆக்கைதனிலுயிர்சேட்த்தையும்விட்டுப் பிறிந்துடனெழுந்தோடி-மனனி, வெங்கனலோடிய விந்துநாதம்பிறிந்தேதான் பிராணவாயவதுவுமிகவுந் தேய்ப்பிறைபாகியமேதினிவாழ்க்கை-அரகர (சுசஎ)

சூஸ்திரபொம்மைப்போலபாத்திரமாகவுமெண்ணிஆண்மைகொண்டசமைந் தொல்லுலகிலெந்தன் வாழ்க்கைசெலுத்தியே-திரு, பாத்திரையோடிருந் துழனுமம்பிகைபாகா மாசிலாமணியேவள்ளலெனுமுயிருள்ளடக்கமாகுதே-சிவசிவ, போற்றியசின்மயபூரண ஞானப்பிரகாசம் சிவஞானசவுந்தரபுவியின வாழ்க்கையைவிட்டெலாத்துயப்பிறிந்தே-யுடல், சாத்தியமதே-மிவ்வாழ்க்கை யபிந்தர்ஞானி-புவிதனில்-மிக்கதத்துவந்தொலை ஞானமுறுமறிந்தவாகியான்-அரகர. (சுசஅ)

மாடுமக்கள்பெண்டிர் சுற்றமுமத்தமென்றுனை-வெகு - காலமிருக்கபாசவாழ்க்கையைமெண்ணியும் வாழ்புவியிற்பிரியாமல் - இக்தக்

கூடும்பிறந்துயரம்பரகாட்டினிலிலகுங் குறியறிந்துடன் கோமளவல்லிவாலாம்பிகைசீர்பதமபணிந்தேன் திரு, ஆடுஞ்சக்கரததினம்பிகைபாக்னே யருளேயிருந்த ஆவியென்னைவிட்டு அப்புறம்போய்விடுமாகில் பின்னுக், தேடும்பொருளதுவீடுங்காணிகளுமெய்யா இந்த ஜெகதலந்தனில்வாழ்வுமிகுத்திடுமென்னே-அரகர. (௬௪௯)

ஆதியனாதியுன்பாதங்கெதியென்றிருந்தேன் அதிபிரியத்துடனே அற்பப்புழுக்குரம்பையிதென்றறியாம லென்னுண்டையே, நீதியாய்மெய்யென்றுஆணுவங்கொண்டுலகநேராய்-பிர - நேசமேலுணுதலாயிருந்திப்படியானேன் சுழி, சோதிநீதியறிந்தோதிடுஞ்சாம்புவன்காணும் உடலுயிர்களுஞ்சொக்கித் தேய்பிறையாய்மாயாவுடலுங்கணட ம, ஊதிடுமூலத்தினைதானாயினுலு முடலுயிர்களுமூனெடுத்தே வெகுநாள்களிருந்தறவாடி-அரகர. (௬௫௰)

பாரில்பேராசைகொண்டுழன்று வெகுபொருள்தேடி பரதவித்துவிருதாவாச்சுதேயறியாமல்-கர்த்தன், சீறுமரவமுப்புரத்தையெரித்தசிவன்தாள் இணையடி - தெண்டனிட்டவுயிர் ஒண்டியாய்ப்போகுதே-ஆத்துமாவிசிதம், பேரிகைக்கொட்டிமுழங்க சகீதங்களாலும் - பிராணன் பிரபல்லியத்தொடுவாழ்ந்ததும் பொய்யதாய்ப்போச்சே - முன்பு, காரியர்கையில்யானைசிக்கியிருந்ததுபபோதும் மாய்கை நாட்டத்திலும்வெகுநாள்கழிந்தி -லாச்சே-அரகர. (௬௫௧)

மடலுக்குள்வாசமுமாறியேயே டுதீதபிறிந்து உயிர் வளர்ந்தகாயஞ்சுடலைக்கனாதேடுதறிந்து பின்னும் உடலுக்குளாவியொடுங்கிதே போகுதேபாண்டே-ஞான-உத்தமர்கள்சித்தமுறுதி பெற்றிடலாச்சு-வித்தை, கெடமதுக்குயிர்கீர்த்திபெற் றுலகினைவாழ்ந்தேன் மனு-கேள்வியுதாரணபஞானப்பிரசங்கமாய்த்தெளிந்தேன் வஸ்து, செடமதுக்குளிருந்துழுலாவியதேச-முடல் - சித்திரப்பணிகளாபரணம்பூண்டிடும்வாசம்-அரகர. (௬௫௨)

எண்ணினவெல்லணமெனக் குதவாதென்னமாயம்-செயல் - இந்திரியநாதசுக்குசோணிதகாயம்-லபி, வெணணிடுஞானச்சுழிமுனைகுக்ஷவுபாயம்-வாசி மேலுங்கிழுங்கண்டதாரையிலூதிடுஞாயம - கடல், தண்ணீரினுலுப்புகாரசாரமுனடயாயம் ஞானதற்பராசோதிசுகாதீதமார்க்கசகாயம் -குரு, புண்ணியநாதால்செய்பூசா லன்முனைனேர்வாசய-யோக-புத்திரனுகப்பிறப்பதுங்கன்னதவிசேஷம்- அரகர ( )

ஆணவமாய்கைகாமக் குரோதத்தில்மோகம்- அழிந்-தானபின்புத்திரபாக்கியத்தாலின்பமோகம் - தனம, வேணுமாபரணபூஷணமாவி

னகதாபம் -பின்னு-மேதினியானசவபோகத்தினுல்சுகமேசகம் - மனங்,
காணும்பலகர்மத்தினுல் செய்கைகோபம் - புரவி - கலியாணியேறிச
வாரிபுகழுவுமவேகம்-பொருள், தோணுர்துருப்பதுவாகும் பசிபதியா
கம்-ஞானசொற்கம்வந்தெய்தலுங்கற்பத்தினுல்சொல்வதாண்டே. ()

விருத்தம்.

நம்பூசலாய்வாழ்ந்துவெகுநாள்கள்தானும் நன்றுமனந்தன்னிலு
ங்தானெண்ணியானும், அம்புவியில்மாடுமக்கள்பெண்டிர்சுற்றம் அயி
ஸ்வரியமிப்புவியிலறிந்தேன்காணும், இன்பமுடன்சுகித்திருக்க இனி
தானென்று இருந்ததெல்லாமேளிதமாயிழந்தேன்காணும்,எம்பிரான்
விட்டகுறையிருந்ததாலும் என்னூரில்தடம்நோக்கியம்பலாச்சே. ()

ஊழியுள்ளகாலமெல்லாமொழிந்துபோச்சே ஊனோடேயுயிரொ
டுஞ்சியூரிற்சென்று, ஆழிதிரையான்வீட்டுக்கடுத்தவீட்டில் அருளுட
னேபொருளாச்சு அடக்கலாச்சு, ஏளிதமாயிருந்தயாழியுடன்மக்கள்சு
ற்றமடவார்தானுந் துணையாகவுருத்தரவர்க்காண்கிலேனே. (சுடுசு)

கருவிதனிலுதித்தசிறுகாலிருக்க கணுக்காலும் பாதம்விரலைந்துங்
காண, மருவுநகத்தொடுகெண்டைக்கால்முழங்கால் வளர்ந்தபெருந்து
டையுடனேயிடையிருக்க, திருவோடுவயிறிருக்க அரையிருக்கத் தேடி
யறியாதலிங்கஞ்சுயம்பாய்காண, உருவான அறிவுபத்தி மனமிருக்கவு
ருத்தனுமாதனிவழியேயுடன்செல்வேனே. (சுடுஎ)

ஆதாரவாய்விசர்க்குந்தானருகேகாண அடுத்தவுள்ளங்கைவிரலீ
ரைஞ்சுங்காண, பேதமில்லாப்புறங்கைமுழங்கையிருக்கப்பெரும்பிட
ரிமுதுகுவிலாக்கொடியிருக்க, சாதகமாய்கண்ட மண்டலங்கள்மேவி
தனித்துதவியாகவெண்ணைச்சுமந்திருக்க,ஓதியாவேதாந்தமந்திரமிருக்
கவுடுங்கிபோயொருத்தனுமாய்தனிச்சென்றேனே. (சுடுஅ)

நல்லோர்கள்பெரியோர்கள்வாசகந்தன்னை நயம்பெறவுங்கேட்ட
செவிதானிருக்க, சொல்லாதமுழுவசனமுடையநாவும் சுகமானவாய்
கள்தந்தமிதழிருக்க நில்லாதஆங்காரமுனையிருக்க நீலம்போலொளி
விழியுமிருக்கத்தானும், எல்லாருமெனையெடுத்துவாழ்ந்திருக்கஇடுகா
டுயேகிப்போயொருவனுனேன். (சுடுகூ)

தாழ்வாயுமேல்வாயுந்தானிருக்கத் தனித்துவளர்ந்தெழுந்தவுண்
ணுவிருக்க, வாளானமேல்புருவங் கீழ்புருவம்வாசமெனுமூக்கிருக்க
வழிதான்காண, நீள்வாசியோடுகலைநாலிருக்க நிலைகாயாபுரியெனுமா
விசழ்ந்திருக்க, கோளானகருவிவிட்டுக்கலையுநாலுங் கொண்டோடுங்
இப்போம்பொழுதொருவனுனேன். (சுகூய)

அசவுபிறந்திவ்விடத்தி லவ்வுந்தோன்றி, அக்ஷரமாமவ்வெழுத்தி லகாடிதோன்றி, இசவதுவாய்கருவிகொண்ணூற்றுறுந்தோன்றி யெலும்புதசைபுடைநாம்புஇதுவுந்தோன்றி,நிசவுபழுவெலும்புவீரெட்டுந் தோன்றி நேரானகொடுக்கைகளிரண்டுந்தோன்றி, முசுவுமுட்டுக்காலெட்டுவளையுந்தோன்றி, முதிர்ந்துசெனித்துருவாகியொருவனானேன்.

இடையினெருபின்கலையுமிரண்டுஞ்சேர்த்து இயல்பானசுழிமுனையென்றுருவமாகி, செடமதுக்குள்வழியதுவாய்வாசலாகி தேகமதிலுடனுண்டசெய்கைதன்னால், மடமதுவாயிடுகாடுகோர்தலாகி வருமெண்சாணுடலதுவாய்மடியப்பாய்ந்து, சுடுஞ்சுழியாய்சூளையாய்துர்க்குழியுமாகி துர்ப்பாவையினம்பதியலைநுவனானேன் (௬௬௨)

கருமீரல்செழுமீரல்பொலிவாய்நின்ற களிதமாய்நாறலுமாபித்துந்தானாய், வரும்பொருமல்செழுமலுமாய்கிருமிசூழ்ந்து,வகைதோறும் வழியுடையமலமுமாகி, மிருவுமுன்னூற்றறுபதுமுழக்குடலுமாகி முப்பத்திரண்டுமுழப்பெருங்குடலதாகி, உருவெனுமாய்நவத்துவாரவாசலாகி யுதிரசுக்குலமதுவாய்ஒருவனானேன். (௬௬௩)

மலஜலயிந்திரியமெனுமதுமூன்றுகிவச்சிரக்தோல்போர்த்துவழி பலவாய்த்தோன்றி, நலமெனுமூணைக்கோடி ரோமத்துவாரம் நாலெட்டுஉறுப்பதுவாய்விரலிருபதாகி, விலகுயிர்நான்குயிர்க்குயிராவென்சாணீளம விரும்புநால்சாண்பெருமன்வாய்கண்மூக்கு, செவியுஞ்சடம்பிருதிவியதின்கூறாகி திருத்தமதாய்காலிரண்டுமொருவனானேன்.

காமிரண்டுப்பதினாறுகயிறாய்நின்று கருதுவினைக்கண்டுதெரவுமாறாய், இலமேவுமெட்டுச்சூளைமுப்பதுவுஞ்சர்ந்து எழுபதுபேரிலும்புமுச்சாணெலும்புகாணாய், முதிர்முச்சாணெலும்போடுசதையுமே விழுக்கியமாபெண்பலமீரலுமாய்த்தோன்றி, உதிரமதுநாணுழியுறுப்புந்தானாயுடலதுநாற்பதுவாசலொருவனானேன். (௬௬௫)

இனமறிதலுதிரமாங்கிஷமுமேதை யெப்துமந்திதசையோடுசத்ததாது, வினவுபலமுப்பத்திரண்டுமாகும் விளங்கும்பழுபதினாறமிகவுஞ்சேர்ந்து, மூளைமூதுகுதண்டுபனிரெண்டுகோர்வை மிக்கஎளஞ்சசைவதுமேயஞ்சதாகி, செனனநரம்பேழ்சவவுமெலும்புங்கூடி செட்டலமதாய்சதைதமேவிலைநுவனானேன். (௬௬௬)

நலமிக்குப்பிடரியினில்நாடிதோன்றி நரம்புபின்னலெழுபத்திராயிரமதாகி, அலமிந்தஅசவுடல்தான்றுவைக்கல்தோன்றி ஆறுயிரும்

நாற்பத்துஆறுந்தானாய், துலக்கமெனுந்தொழுகையிரண் டாயிரத்து
ள் துடர்ந்துவளர்ந்தேயிலகுமாயிரமாமென்னில், பலபலவாய்பதினா
றுகோணமாகி பதியுகுண்டலியுமனமொருவனானேன். (௬௬௭)

நாடிநரம்பெழுத்தீராயிரத்தில் நலந்தநரம்பதனில்புறநாடிதோ
ன்றி, கூடிநின்றவிஷ்ணுருத்திரநாடியாகி கூரானயிடைகலைபின்கலையு
மோடி, மூடிமுதுசெலும்பு முழுபதினாறாகி முடுசெழுபத்தொருதுவா
ரக்குழியுமாகி, ஆடியதோளையுழக்குதிரமாகி அசலெடுத்தவுடலதுவா
யொருவனானேன். (௬௬௮)

ஆகாரமதில்நாழிவாதந்தோன்றி அடுத்தமுன்னாழிபித்தநாழி
சேத்மம், பேதமில்லாமுணைக்கோடி ரோமத்துவாரம் பிரியமெனு
மெண்கோடிமலத்துவாரம், சேதமில்லாவைம்பலமாமுதிரமாகி திருத்
தமாங்கிஷநூறுபலமூன்றாகி, வேதமாங்கெந்தமெண்பலனுமாகி விள
ங்குமிந்தவுடலெடுத்தொருவனானேன். (௬௬௯)

விளங்குமுடல்ரோமநூற்றெட்டுகோடி மேதைபிருநூறுபலமே
லதாகி, களங்கமிலலாபெலத்ததோல் முன்னூற்றாறு கருதுபலமாமச
றுநிணம்பலந்தான், அளங்கமுன்னூற்றேழுபலங்குடலுமாகும் அதி
தமாமலம்வழுக்கை நாற்பலமுமாகும், இளஞ்சுஞ்சீவுரிதானுங்கண்க
ள்நாலுஞ் சிறக்கநாற்களஞ்சதுவாயொருவனானேன். (௬௭௰)

நாவுநாற்களஞ்சதுவாபுதித்தவாறும் நற்கெந்தமூக்குமுக்காளஞ்
சதாகில், மேவுபிருகன்னநாற்களஞ்சதாகி யெலும்பெல்லாநூற்றொரு
பலமாமென்க, ஏவவுமேயிறைச்சிபலநூற்றறுபத்தஞ்சு யியல்பாகுமூ
ப்பமுந்தான்மூளையாகும், நாவுந்தாமரைமொட்டுஐங்களஞ்சு சலப்பை
யுமுழுநிகளமொருவனானேன். (௬௭௧)

எண்சாணுதேகமதாய்படைத்தவாறும் இயல்பானகருவிதொண்
ணூற்றாறின்வாறும், கண்பார்க்கவுடலெடுத்தகாயக்கூறும் கணக்காக
தத்துவத்தின்சருத்தின்வாறும், நண்பாகவெடுத்த வரலாறெல்லாம்
நலத்தவசைவதினுடையநாட்டத்தாலும், பண்பாகஇந்நூலாயிரத்தன்
னூறில் பாடுபட்டசெய்தியெல்லாப்பகர்வேனுண்டே, (௬௭௨)

மதிரவியாப்பிரகாச வொளியாய்மேவும் வாறிதினையெடுத்தவர
லாறுதன்னை, விதிபறிந்தஞானவெட்டிவிளங்குநன்னூல் விட்டகுறை
தொட்டகுறையெய்துமாகில், துதித்துமகிழ்ந்தகத்தீசர் பாதம்போற்
றி சூக்ஷமெல்லாம்வெளியாகச்சொல்வேனானும், பதித்துகர்ப்பசாக
ஊன்னையப்பகர்வேனுண்டே பதினெண்பேர்பதாபணிந்தர்ச்சித்தேனே.

திருவுருவாய்விளக்குசிவ ஞானசத்தி ஜெகதலமெலாம்படைத்த சிறுபெண்ணாகுதாள், அருவுருவாமம்பிகைப்பெண் ணருள் தன்னாலே அகண்டபரிபூரணமாயளவில்லாத, மருவுமலர்க்கமலவிதழ்மூலாதாரம் மகிதலத்திலிலகுவடிவானசோதி, கருவிருந்துநடனமிடுங்கருணை ஞான கதிரமுதியையின்னதென்றுகருதுவேனே. (சூஎச)

கற்பசாதனை-தரு.

அதிவிதகாயகற்பமருளுவேனுண்டே சரஸ்பதி
அமிர்தசந்திரபுஷ்கரணிதீர்த்தமுண்டே,

மதிபொழிந்தனுக்கிரக பேரின்பத்தேன்மதுரம் வஸ்து வாருதி பானமவாலாம்பிகையினருளமிர்தம் - சுழி, துதிபெருமூலாதாரத்திலுங்கருவின்பம் நாத-சுக்குலவிந்துசுரோணிதமும்பேரின்பம்-மதி, விதியிதுகோசபீசமுமவிந்துநாதமசூத விந்ததுவுங்கெந்திநாத மீதால்ரசவாதம் புகழ், பேதிப்பதமறுபத்து நாலுபேனாக்கட்டும்-வாசி பேரண்டஞ்சுற்றியுமெட்டுமதிபதியாட்டம்-அதி. (சூஎரு)

நாற்பதுக்குள்கற்பமுண்டிடுவோர்க்கென்னபோதம் - வெகுநாள்கள்கழிந்துகளைத்ததினாலசொல்லும்பேதம்-ஆனால், கற்பத்தினருளமிர்தமேபுண்டுமறந்தால் செட அற்பமதாகியழிந்திடுமுற்பகக்குறைந்தால் இன்பர், சொற்பமென்றெண்ணிடுங் கற்பங்கொண்டழிந்தோர் கோடி ஞாக்ஷ, சுழிமுனையறியாதென்ன மாந்தர்கள்பேடியுடல் - உற்பக மாசிபடாமலிருந்தவர்க்கெப்தும்-தேக, மூத்தைக்குழிபிலடிபட்டபேர்க்கென்னமுழுதம்-அதி. (சூஎசா)

விந்ததிசாரமுவப்புநதி கங்கைசாரா மதி - யேவியசந்திரபுஷ்கரணியூசிநீரா ரூ, இந்திரியமிதவாரிபபுரிகார்மேகம் எழு கடலுவரறுசுவையினில்வருமவேகம்-அருள், தங்கைவிதிகருநீர்பதினாறுடன் கூடி-சல சாகரமாவதெண்சாணுட லுற்பவங்கேடிக் கியாண, மந்திர பஞ்சாக்ஷரமெனுமக்ஷரமுமாகும கற்ப மாமதுரவின்பததேனெனுமா மலர்சூழுப-அதி. (சூஎஎ)

அகாரத்தினலன்பத்தோரக்ஷர மிதுபானம்-உடல்-ஆத்துமாநீர் மேற்குமிழியிடுமிதுவானம் ஆசை, மாகரத்தினல்செகமாதிதமுமயல் மோகம்-மத மாச்சரியகாமக்குரோகத்தினல்சுகபோகம்-வினை, யகாரத்தினலெமனிப்படி பாசக்கயிறுகொண்-டுயிர் எழுந்தெண்சாணுடலழிந்துப்போய்விடுமாகில்-சனி, விகாரத்தினுமழிந்தேதகபுவனமும்வாடி மயல் வின்பத்தினல்சுடுகாடுமரணமுந்தேடி-அதி. (சூஎஅ)

அண்டசராசரபுவனமேயருள்படைத்தேன் புகழ் ஆதியனாதிய ரூபத்தினால்தீக்ஷைவிதித்தேன் கரு, கண்டேனமுரியேகாக்ஷரமென்ற தினாலும்-காயஞ் சித்தியதாங்கற்பதேகவஜீகரக்காலுமதுதினமு, ஒராண்டுகொண்டற்புதமாய்சரமாறி யானும் - நிற்பந்தமாய்வயிராக்கிய மாகவுந்தேறி-வாரி, யுண்டேயமிர்தத்தைசகாலேபுமாலேவிடாமல-மிக மோடிடுஞ்சாரையதுநடுமையங்கோடாமல்-அதி. (௬௭௯)

துய்யவெண்சாரைமுன்பின்னைகற்றிடுமையம-ததி செய்துசிவ யநமலுங்கிலியெனும்பையம் கற்ப, மையமில்லாமலடிக்கடிமாறியில்ல த்தில்-எந்தன்-ஆத்தும வீறிவிளங்கமென்மேலுமகத்தில் - தொழில் வையகத்தோரிணங்காமல்தரிநெய்துமாறி உடல் - வயிறுகும்பிகடத் தேறும்படிசெய்துமீறி யானும், செய்விதத்தால்பசியாறியொருபோது மன்னன்-எந்தன்-ஸ்திரீயுடனேசிஷனுமயிருவருமின்ன-அதி. ()

அகமில்லாமலவனி சஞ்சாரஞ்செய்யாமல்-தினம்-அமுரியேநடு வனை அகாரம்பொய்யாமல் கற்பம, சுகஜீசுரயின்பமதாகபேரின்பம்-மேலுஞ்-சுத்தஜெலம்செலவானதுபோகவுமமிர்தம் கதி, பாகமாயோ டுஞ்சமுத்திரமீரொருபாண்டம், அது - பானமதைவெகுபதிரமாகப் பிர்மாண்டம்-இது, ஏகவஸ்துவெனும்வன்னியிடடெரித்துப்பார் - அ ன்னம்-மிகவுண்ணும்பதமேலுங்கறிவகைக்கூட்டுப-அதி. (௬௮௧)

இனைமதாய்வருஞ்சுத்தசலப்பனிநீர்தான் இடர் எங்கும் விடாம ல்வெகுபதனமறவகைமைய - கற்பங், கனமபொருந்தியசாயகற்பமுப வாசம் செடங் காந்திசுயம்புச்சுகாதீதசோதிப்பிரகாசம் பாஷம், தின ந்தினமறவாமல்சரமாரியுணடேன் - உடல்-செங்கனலால்செலங்கெழு ந்தசூரியன்கண்டேன் - தேச, மனம்புத்திசித்தமாண்மையும்வெந்துநீ ருச்சேகோல-மாமதுரபதிசாரையறுபதால்போச்சே-அதி. (௬௮௨)

கொச்சகம்.

வாரிபுகழ்மாமதுர வஸ்துவெனும்பானமதால்
வீரியமென்றேயிருந்த வீந்துபாழாச்சுதுகாண்
நாரியர்தன்மாய்கைவிட்டு நான்பிறிந்தேனேதளவால்
மாரிபொழிந்தேயமிர்த வாலேரசமுண்டேனே. (௬௮௩)

மண்டலமெலாம்புகழு மந்திரபஞ்சாக்ஷரத்தை
அண்டமெல்லாஞ்சோதனைசெய் தாகிலுமேயாரறிவார்
நினறனுலகாதிதமு நிராமயத்தைக்காணுமல்
கண்டேன்குருமுனியால் காயகற்பங்கொண்டேனே. (௬௮௪)

உப்பதுவும்ப்புமய் மோகோ திருமாலின்மயம
அப்புவினுல்முப்பா மூன்மதததுகாண் சுன்னமதால்
செப்பிடிலுங்காயகற்பஞ் சென்றதுமோராண்டுவளா
இப்பொருளைபத்திரமாயிச்சையுடனுண்டேனே. (௬௮௫)

கற்பமிது அற்பமல்ல காயகற்பங்காலைரவி
உற்பகமூனருகுமுக்கா லுடன்கடிகைசென்றதின்பின்
விற்பனை கொண்டன்னைமிக வேதனைவாராதிடிலும்
நிற்பவயிராக்கியத்தில் நின்றுகடையேறினனே. (௬௮௬)

கலித்துறை.

வேதாகமத்தில் மறைசூழ்ந்திலகும் விந்துவழி
ஆதாரமாறுஞ் சுழிமூலசூட்சும மாரறிவார்
சூதானவிந்து ரசசூதகற்பச் சுகாதிகங்காண்
நாதாக்கள்போற்று மறுகோமூரி நதியறிந்தே. (௬௮௭)

தினங்கொண்டமூரி திங்களொன்றுகில் திகழுமிர்தம்
புனல்வாரிசூழு மதுபானமாறு புகழ்கடிகை
மனங்கொண்டிடுபன்ன போசனமுண்டு மதிமையுண்டு
கனங்கொண்டிடுங்கற்பஞ் சரமாரியேத்திக்கருதினனே. (௬௮௮)

மறுதிங்கள்மூன்று அதிகாலையுண்டு மதியமிர்சம்
அறுமூன்றுந்தள்ளி கடிகைசென்றுன் அளவதின்பின்
நிறுவாசரத்தி லுணாவானதன்னை நிமிஷமிராள்
திருபாகரமறு பானத்திலேறிபான் கீர்த்திபெற்றேனே. (௬௮௯)

வருந்திங்கள்நாலு கடிகையீராறு மதுரரசம்
பெருகுப்புஷ்கரணி கடற்சூழ்ந்தவாரி பேரின்பங்காண்
அரும்பொருளான அமுரியுண்டேனந்த வேளைதள்ளி
குருவானபோசனங் களிகூர்ந்தமேனிக் கூறுவனே. (௬௯௰)

வெண்பா.

பூத்தமலர்வாசம் பொருந்துபரிபூரணத்தில்
விற்றிருப்பதஞ்சு திங்கள் வெண்மதிகாண்—பூத்தமலர்
கடிகைபதினைந்துக் கடிகமாயுண்டமூரி
படியமலரன்னமது நேர். (௬௯௧)

இந்தப்படியதுமூன் றியல்பால்கடிகைதினம்
அந்தந்தநாள்பசகா தாறுதிங்கள்-இந்தபடி

முன்னாழிபின்குறையா மூன்றுகடிகைக்குமேல்
அன்னாளோராண்டுமெது வுண், (௬௰௨)

வாலைப்பருவம்வரதம் வருமூப்பத்துக்குள்
காலைரவிகொண்டுஇது காண்கிலுமே-வாலை
நாற்பதுக்குள்மேலதிக நற்பொருளையுண்பவர்கள்
சிலமருள்காலையன்னஞ் செப்பு. (௬௰௩)

பத்துமொருவஞ்சும் பதினைந்துமொருபத்துங்
கற்றுணர்வதிவ்வயது காண்கிலார்-பத்தியுடன்
உச்சியொருவேளை யுணர்வீராயன்னமது
இச்சையுடன்கொண்டுணர்வ தின்பம். (௬௰௪)

விருத்தம்.

அரிவிந்துமதியமிர்தமதாவாரி அவ்வெழுத்தில்பிரணவமாயரவம்பூண்டு, கரியுரியுந்தரிசித்துசிவரூபமாகி கருக்குருவாய்நாதவிந்தின்கருத்தினாலும், விரிந்துபலபலவிதமாய்விளங்குஞான வெட்டியருளாயிரத்தைந்நூறுக்குள், துரியபொருள்சூக்ஷமெல்லா மாய்ந்துகற்பஞ்சொல்வன்னிபாண்டையின்நூல்சூக்ஷந்தானே. (௬௰௫)

நாதசத்திபிருதிவியாய்மூலந்தோன்றி நாதாந்தப்பேரொளியாயுகாரந்தோன்றி, பாதமடிசுழிமுனைக்குளளவில்லாத பரப்பிர்மசுரூபமதாய்சுகாதீதத்தில, மாநாந்தந்தோன்றிவேநாதத்துள்ளாய் மண்ணுள்ளதாய்ப்பிரபஞ்சவாழ்க்கைபோலும, ஆகாரங்கீழ்மூலச்சத்திக்கூறின் அளவெல்லாம்டானுகாப்பேனுண்டேசேளீர். (௬௰௬)

ஓராண்டு அமுரியுண்ணக்காலைமாலை உச்சியொடுமெகுஉபமாயுட்கொண்டேபின, மாருதசனல்வேகமதிசமாச்சு வன்னியினாலெரியுமிகவளர்ந்துபோச்சு, வீருமலென்னுடலும்வெந்துபோச்சு வேட்கையினால்தேகமெக்கும்வெடித்துப்போச்சு, மீருதுவென்றுமனமிகவும்விம்மி வேதனைகொண்டேயிருந்தவிதிகாணுண்டே. (௬௰௭)

இத்விதமாயிருந்துகவனங்கொண்டு இருக்குமந்தவேளைகுறுமுனிநாடிவந்து, மைந்தனேயென்றழைத்துமகிழ்ந்துமுத்தம் மனதாரகளிகூர்ந்தவராய்பிள்ளாய், சிந்தையுனக்கென்னசிவஞானதேசி ஜெகந்தனிலும்வெகுகோடிகாலம்வாழ்வாய்,முத்தியுனக்குபதேசந்தந்தேன்தந்தேன் மூவுலகில்சித்துவிளையாடுவாயே. (௬௰௮)

கருக்குருவையரிசிபசும்பயறுமாவின் கருதிடில்வெண்ணாவின்பசும்பாலுங்கூட்டி, ஒருபோதுமன்னஞ்சமைத்துண்ணும்போது உட

னைகூட்டுமெழுரியுப்புஉண்டால்மோக்ஷம், குருவருளை மனதிலெண்ணி ரவியிலன்னங்கொள்ளுமதிராத்திரியி லாவின்பால்கொள், அருட்பொருளைமறவாதேயோராண்டாகில் அதிகாலையமுரியுண்டுமதியிலாண்டே.

அருளெனும்ரவியிருபத்தஞ்சுநாழி யானபின்புமூலமென்றபுளியினேர்மை, கருவுருவென்றெடுத்து அந்திருணைமேவி காரமதிலமுரி விட்டுகெண்டமாததிரம், திருவுருவாயுண்ணையிலுங்காரசாரம் செய் விதமாயுபமாகதீக்ஷையொன்றும், மருவுகந்தவாசமலரன்னந்தண்ணீர் வசனமதுபோலமுரிகாரமுண்ணே. (௭௰)

யோகசாதனை-தரு.

ஆனந்தபூர்ணதிவ்யபரிமளகெந்தப்-சுழிமுனை
ஆகாசமூலச்சுகந்தசுரோணிதஅந்தம்.

ஞான்சுகாதீதசூக்ஷசடாதாரபீடம்-செக-நாதப்பிரகாசப்பிராணலயமேவியமாடப்-கதிர், வானஞ்சூழ்சாகரமேருதீவாந்தரநாடு-புவி-மகிதலஞ்சருவூர்வளர்நாட்டினில்வீடு-பலே, சோணையருவிசூழ்பாணமளாவியசிலம-மதிவளர்-சோதிமணிச்சிததிரக்கூடமளாவிமூலப்-புனல், கானலுலாவியசிவசிங்காதனமேரு-சக்தி-சாரத்திஞலளவிலலாச்சரக்கெல்லாநீறு-ஆனந்த. (௭௰௧)

அந்தத்திலுமூலஆக்கினைமேவும்பிர்மாண்டம்-அனல்-அக்கினிசூழமரவிகதிர்வன்னிபைகணடோம்-இவை, சுந்தரநாதசுரோணிதசூரியகாந்தி-எங்குஞ்சுடரொளிவெளியிர்மகபாலமுமேந்தி-நாபி, உந்தியின்கீழ்வளைகந்தமூலவர்க்ககனிதான்-உப்பு-உவரென்றாச்மூலப்புளி,வநீதமினிதான்-வர்னஞ், செந்தூரஞ்சோதிஅமுதவிளங்கியதங்கம் திரு-மாலுடன்தங்கை சரஸ்பதிமேவியஅங்கம்-ஆனந்த. (௭௰௨)

அம்பிகைவாலையபிராமியென்றம்பிரசங்கம்-பர அண்டரண்டபகிரண்டபளாவியசிங்கம்-திரு, நம்பியிருந்தலகாதீதம்புகழ்நாதம்-பிறிதீவி-நாட்டத்திலுங்காயகற்பமுண்டோரசவாதப்-இன்பங், கும்பிதனிலிருந்தேநடனம்புரிவாசி-ஏமன்-கோரக்கர்மூலிசடையென்றுமேபரதேசி-பழம், வெம்புங்கனிபென்றுஎங்கும்பிரகாசமாய்வீசும்-இந்தவீந்தனில்செண்டுவெளிதனிலொன்றுநேசம்-ஆனந்த. (௭௰௩)

சங்கப்பிரசங்கசிங்காரமாயெங்கும்பிரசங்கம்-புவி-தனித்துப்பார்க்கசவுக்காரமாயபொங்குமேலங்கம்-சோசம், லிங்கத்தின்கீழடிவாரத்திலும்பின்னுக்கீசம்-உண்ட-நிர்மலநிற்குணபாளையென்றம்நிருவாசம்-அருள், அங்கத்திலுமெஞ்சாண்கும்பிதனில்மலசுகூடு-அதை-ஆ

ராய்ந்துபார்க்க அனேகங்கண்காக்ஷிதான்காடு பரி, தங்கமெனும்வடி வானவாலாம்பிகைசுரூபம் - இதை-சார்ந்துக்கொண்டுபரிசோதிக்கும் எங்கும்ரூபம்-ஆனந்த (௭௱௪)

மானுமழுவுமதி மலர்சூடியவாசம்-சத்தி - வாறுயென்னுல்சொல் லவெட்டலேயிப்படிநேசம்-மூலம், நானுமென்னுண்டையுன்பாதங்கெ திபெனறுநம்பி வாசி நானறிந்திப்படிஞானயோகந்தனில்கும்பி-ரசந், தேனெனுமேமதுபானமதுமோராண்டு கற்பஞ் சென்றுஈராண்டினி லநேகக்கசடுபோம்கண்டு-செடம், ஊனெனுமையத்துறக்கமற்றுச்சி வயோகம்-வாசி-உற்பகமூலசிவராசஅபபிகாயோகம்-ஆனந்த. (௭௱௫)

காயந்தனில்கசாடனரீர்களெல்லா மொழிந்தேன்-கற்பச் - சாத னையாலெமனமனென்றவினைபொழிந்தேன்-வாசி, தேய்பிறையென்ற சுவாசந்திருல்வெகுகாலம்-சிவ-யோகஞ்செய்துமுத்தி மோக்ஷமடை யவுஞ்சீலம்-இனி, மாபசத்திகிரியாசத்தியினுல்வளர்பிறைதான் - மூல வாசிவசமாகநாதசத்திகற்பத்துறைதான்-கக்கும், நாயிலுங்கடையாகி யவள்ருவனுண்டே-ஞான-சித்திதனில்முத்திமோக்ஷமடையவுங்கண் டேன்-ஆனந்த. (௭௱௬)

வேதத்திலும்பொருள் மாதுவாலாம்பிகைநாதம் சத்தி யோகத் திலுஞ்சிவஞானசுகாதீதபோதம்-பஞ்ச, பூதத்திலுமூலகுண்டலியாதி யருதி - ஞான - பேதத்திலும்பேரானந்த மகாராஜயோகம் - கியான போதத்திலுஞ்சத்திபொக்கிஷசூத்திரங்காணும் இந்தப் புதைப்பொ ருள்திறவாதென்னவாசிக்கவேணும்-இது, காதற்றவூசியறியுமகத்துக ள்பேதம்லைக காட்டத்தொடுகுப்கண்டப்புளிநாதம்-ஆன. (௭௱௭)

சாயென்றமதுபானசமூரியில்தானும் ரவி சத்தியெனுமூலப்புளி யதிலூட்டியானும்-கற்பம், துறையெனப்படிகடிகையிரண்டுபத்தஞ்சி ல்-அந்த-சுகந்தமாமலர்மூலப்புளிகற்பமென்சொல் பனர், உனாயென ப்படிஅந்திவருநிகழ்காலம் உப பூணர்ந்துஇவ்வித வாண்டுவருமதி காலம் இருள், திவாவிலக்கிரியாபமாயுண்டிடுங்கர்ப்பம் தினந் தெசதி ங்கள்வரும்பருவத்தில்கற்பமுவர்ப்பே-ஆனந்த, (௭௱௮)

கொச்சகம்.

அருணனுதயத்திலதி காலேமுதல்கொண்டமுரி
வருணசலபுஷ்கரணி வாருதியையான்மறவா
கருணமிருபத்துமஞ்சுக் தான்கடிகைமேலதிதங்
கருணையுடனுண்டுமிகக் காரமதைக்கண்டேனே. (௭௱௯)

காரமுடன்சாரமதுங் காலைதள்ளிமாலைதனில்
பூரமென்றமூலமிந்த பூரணத்தைக்கூட்டியேநான்
நேரவுருவாக்கிபதம் நேர்மைதவறாமலுமே
சீரதுவாயுண்டுவர தேகமொளிவானதுவே. (௭௱௰)

சூரியன்போல்காந்தியொளி சோதிமின்னல்போலுமுடல்
வீரியமாயானுணர வேகமொருதிங்களிலும்
ஏறிவிடுஞ்சுன்னமய மிந்திரியநீர்வருப்போல்
மீதறிமன்னீரதுவாய் தேகமிந்தக்கூறுமே. (௭௱௰௧)

பச்சைப்பசைந்ததுமண் பாருஞ்சலநீர்ப்பசுமை
உச்சிதமென்னுலுரைக்க வொன்றுவிட்டுரெண்டுதிங்கள்
வைச்சபொருளெய்தும்பசு மஞ்சள்நிறமாய்வருதல்
மச்சமிதையானறிந்து மார்க்கமினிசொல்வேனே. (௭௱௰௨)

கலித்துறை.

திங்களுமூன்றில் மதுவாரிநாதஞ் செழுங்கனல்போல்
பொங்குநீர்பாய்ந்து வரும்போதுவண்டு பொன்னுருவாய்
தங்கநிறந்திங்கள் நாலுக்குள்ளேவருஞ் சாரையது
மங்கைப்பருவ மஞ்சாகிடுந்திங்கள் வளர்பிறையே. (௭௱௰௩)

வளர்பிறையஞ்சில் புளியதும்வாங்கி வாலைரவி
குழையப்பிசைந்து நீர்விட்டுக்கூட்டி கொடுரவியில்
இழையவும்வைத்திரு சாமஞ்சென்றுகு மினியதுபின்
பழையப்படியுவர் மேலும்படித்து பகருவதே. (௭௱௰௪)

பார்க்கயிப்பாசம் வரும்பதம்பார்த்து பசைந்தமண்ணை
தீர்க்கமதாயுண்டு செய்விதமாறு திங்கள்தனில்
ஏர்க்கயிவ்வாறு யிரவிசெம்மானிடு யிவ்விதக்கான்
ஆக்கறியாமல் பசிபாறியுண்டு யறிந்திலரே. (௭௱௰௫)

உதிரம்பெருகி பசுமைய தாய்சரம் போடிருக்கும்
மதுரம்புளகித்து சத்தேழுதிங்கள் வாருதியும்
விதுரம்பிறந்து தேகாதிதேக மினுமினுப்பாய்
மதுரமெல்லாஞ்செழுஞ் சூரியன்போல்வரும்பாரிதுவே (௭௱௰௬)

எட்டினில்திங்க ளுருவாகிப்பிண்ட மெண்சாணுடல்போல்
மூட்டிவிளாவு மிருபக்கஞ்சூழ்ந்து முடிகியுதைத்
திட்டுகளோடி வயிறுதொந்துள்விம்மி தேகமெல்லாங்
கட்டியிழுக்கு மடமாதுக்கேயது காரணமே. (௭௱௰௭)

வெண்பா.

சேர்ந்துமனம்வாடி சூழ்ந்துவருநித்திரையும்
கூர்ந்துமிகாளிருந்த கொள்கைபார்-சேர்ந்துமிக
மாய்கைமசக்காகி வாந்திமிகஉண்டஅன்னம்
பாய்ந்துவிடும்வாய்வதுவும் பார். (எசஅ)

எட்டியடிவைக்க பெண்மசக்கையென் னுடம்பு
கட்டியிழுத்தேமறித்த காரணம்போல்வெட்டி
மண்டையிடிசூழ்ந்து வலிவயிறுகுத்தலுடன்
கண்டகண்டநோய்கள்வருங் காண். (எசகூ)

அஷ்டதிங்கள்நாதமடிக் கடிநீர்பாய்ந்துடலில்
கஷ்டமதுவாய்செழுமை காணுங்காண-அஷ்ட திங்கள்
வாருதியாம்விந்து மலப்புளியுமுடனும்போய்
சேருமுப்புஉப்பதுகாண் சேர்ந்து. (எஉய)

சுன்னங்கடுங்காரஞ் சூலதுகாண் பிண்டம்
அன்னமபமானவர லாறும்போல்-சொன்னேன்
விரியமாய்நாதவிந்து விந்தேநவாச்சாரங்
காரந்திங்களொன்பதனில் காண. (எஉக)

விருத்தம்.

கதிர்மதியுங்கூடிகடுஞ்சூலதாகி கருவுருவாய்திரண்டு ஒருருபமாகி, மதிபெருங்கதிரொளியிலுருகிப்பாய்ந்து மகிதலத்தில்வச்சிரப்பையதன்மேல்சூழ்ந்து, உதிரசுக்குலங்கூடிதிங்கள்பத்தில் உருவதுவாய் தேகமதாயுதித்தவாறும், அதிகஜெகமமைத்ததுபோலாண்டேகேளீர் அரிவிந்துநாதமுஞ்சேர்ந்தான்வாறே. (எஉஉ)

இந்தவுடல்நாதவிந்துகாரசாரம் இரண்டதுவுங்கூடியொரு ரூபமாகி, விந்தையைநானுரைப்பதினியாண்டேமேன்மேல், மேதினியில் மாதுகெர்ப்பந்தரிக்கும்போதில், அந்தவித பரிட்சையைப்போலான வாறின அடைவெல்லாய்யானறிந்துஅருளப்பின்னே, தந்திரமாயுடலெடுத்தகூறின்வாய்வால் தசவாய்வினுற்பவத்தைச்சாற்றுவேனே. ()

வேறு-கவி.

நாதவிந்திரு வானவிதங்களை
யாதலால்யா னுரைத்திடமேதினி
பூதமைந்திரு காரசாரத்தினுல்
ஊனுறைந்திரு வானதுவாயுவே. (எஉச)

வாயுவின்தச பத்தும்விளங்கிட
மாதுகெர்ப்ப மதினுறுவாறுபோல்
தேய்வுவன்னி செனித்திடுமுப்பினல்
காரசாரங் கடுஞ்சுன்னமாண்டையே. (௭௨௫)

சயிலமாமிர தங்களுதகமுந்
தயிலலேகியந் தானுருவஞ்சதும்
மயிலமாமதி சூரியகாந்தியால்
அகிலமேவிடும் மாவுபட்டருமே. (௭௨௬)

அஞ்சுருவாய்தச திங்களிலேங்கோலம்
பஞ்சபூதம் பனிக்கும்நீரது
நெஞ்சயேநீக் குமிழிக்குள்ளேசலம்
வஞ்சிமாது மாதாங்தமிறங்குமே (௭௨௭)

இடியிடிமின்ன விடித்துவபிறுவலி
துடியதாய்நாதச் சுரோணிதநீரது
படிபடுபெடி லென்றுகும்பஸ்தலம்
முடிகண்டுபாலன்முந்பத்தியாண்டையே. (௭௨௮)

ஆகுமிந்தப்படி யானதுகற்பமுங்
தோகையர்க்குமிப் படிதொந்தித்திடும்
பாகமூலப் புளியெனுநீரது
ஆகமப்படி யானகொண்டேனண்டையே. (௭௨௯)

வாசிதாரணை-தரு.

பாலன்பிறந்ததுகாண்-என்னண்டையே
பாலன்பிறந்ததுகாண்.

பாலன்பிறந்துல காதிதமுன்செங்கோல், ஆளபிப்பிரபஞ்சமூவுலகுமேபுகழ், காலனில்லேகற்ப கோடியுகாந்திரம், ஞானப்பிரகாசமெய்ஞ் ஞானசிரோமயம்-பாலன். (௭௩௰)

அண்டபகிரண்ட மும்மண்டலம்புகழ், நின்றபிர்மாண்ட பளாவியமேருஞ்சூழ், தெண்டிரைப்பதினலுலகுமஷ்ட, தீவுதீபாந்தரதேவர்களுமகிழ்-பாலன், (௭௩௧)

விந்துநாதங் காரசாரமுங்கூடி, மேலானகருவி காணுதிகள்சூழவும், அநேகதசதிக்க ளுற்பத்தியாயிந்த, அவனிமீதி லகம்விட்டுப்பாரினில்-பாலன். (௭௩௨)

மாலைப்புளிமதியமிர்தங்காலையில், வாலைப்பருவமோ ராண்டுவ ரும்பதஞ், சிலத்துடனொரு காலைபோசனங்கொண, டாவினமிர்த மதிவிதமாண்டையே-பாலன. (௭௩௩)

பூருவக்கியானம் புகழ்வேதசாத்திரம், ஆறுமேலுமாறு தாரமீ ராறுமே, சீருடன்ஞானச் சிவயோகசித்திபெற்றுத், தேறுங்கற்பந்தச திங்களோராண்டினில்-பாலன். (௭௩௪)

உப்பும்புளியுற வாகுமைங்காயமாய், செப்பஞண்ணுது சிவரூப மாதலால், இப்படியாய்முதல் தீட்சையிதாச்சுது, கைப்புமுறிந்தகன கமீதாண்டையே-பாலன். (௭௩௫)

மாதுவாலாம்பிகை மார்க்கத்தினாலே, மதியமிர்தங்கொண்டுமல ப்புளின்சுன்னமாய், வேதசாரம் விவேகத்தினாலுடல், வேறுகூருச்சு துபாருமீதாண்டையே-பாலன் (௭௩௬)

உதகமிதாகு முவருப்புசுன்னமும், பதமீராண்டுடன் பாகமுஞ் சென்றது, நிதங்கொண்டிப்பொருள் நிர்மலத்தாய்பதம், விதமறிந்து யான் வேதைமூவாண்டினில்-பாலன். (௭௩௭)

பானச்சுழிமுனைவாமைம்புவிகளை,பாயவும்ரேசகப்பூரகந்தன்னிலு ம், ஞானகற்பமுண்டு வாசிக்கும்பித்துடன், கியானசூக்ஷக்கிரியை மோனமதாகவும்-பாலன். (௭௩௮)

சித்தியருள்முத்தி மோக்ஷசுகாதீதம், நித்தங்கண்டதாரை சித்த த்துடனேயும், புத்திரயோகவித்துவாமிசனாகவுங், சத்துவந்தொண் ணூற்றாறுமறிந்துடன்-பாலன். (௭௩௯)

அதிகத்துடன்மதிசந்திரர்சூரியர், பதியறிந்துபகி ரண்டம்பாய வுங், கெதியடையு மகாராஜயோகத்தில், பதம்பெற்றருச்சனை விதியறி ந்துடன்-பாலன். (௭௪௰)

தினந்தினமதி யமிர்தம்பொழிய, தனகனகசத் துஞ்சித்துமாட வும், புனல்சொரியும் புஷ்கரணிதீர்த்தத்தில், இனமிப்படிகர்ணேகாந் தமாகவும்-பாலன். (௭௪௧)

காயசித்திகரு கற்பத்தினாலுடல், மாய்வதேது மாறுமில்லைகா ண், தாயுமம்பிகை தான்வசமானதால், நாயிலுங்கடை யாவது முண் மையே-பாலன். (௭௪௨)

கொச்சகம்.

தந்தைமதிபாலுதித்து தாரணியிலுஞ்சிலநாள்
வந்துபிறந்துபுவி பாய்கைதனிலேயுழன்று

அந்தமாதியாலெனது ஆகமக்குருக்களினல்
விந்தைசிலநாள்கிரிகை மெய்யென்றிருந்தேனே. (எசங)

பொய்க்கருவினுலெனது பொக்கிஷமெலாஞ்சிறந்து
கைப்பொருளெல்லாமிழந்தேன் காரியகுருக்களினல்
இப்படியாய்மேதினியில் யான்சிலநாள்போனபின்பு
மெய்க்குருமுனியருளால் மெஞ்ஞானம்பெற்றேனே. (எசச)

எண்சாணுடலதனி லெய்துந்தொண்ணூற்ருறுவிதங்
கண்ணாரத்தத்துவத்தின் காசுபியெல்லாங்கண்டுணர்ந்து
மண்ணாசைபெண்ணாசை மாய்கைபொருளாசைவிட்டு
விண்ணாசைகொண்டுநெறி மெய்ஞ்ஞானம்பெற்றேனே. (எசரு)

கற்பமென்ருலற்பமல்ல காயசித்தியாவதற்கு
உற்பனமேயானதிக்து வுண்டேன்மதியமிர்தம்
கற்பரத்தாலெண்சாண் சரீரமதைச்சுத்திசெய்து
முற்பவமோராண்டுசென்று முதல்தீக்ஷைபெற்றேனே. (எசசு)

வெண்பா.

முதலிருந்தவூழ்வினையை முப்பாழைச்சுட்டுமனம்
பதராமலுமதியால் பாடுபட்டேன்-முதலிருந்த
நல்வினையுந்தீவினையு நாடாமலும்பறந்து
வல்வினையைப்போக்கிவிட்டேன் வாறு, (எசஎ)

காயசித்தியாலெனது கர்மவினைபோக்கிபின்
மாயசித்திமூலசுழி வாய்க்குமே-காயசித்தி
மூலப்புளியதனல் முதல் தீக்ஷைபாச்சுதினி
காலமென்னரெண்டாண்டில் காண். (எசஅ)

கலித்துறை.

பானத்தைக்கொண்டு மூலத்தையூட்டிப் பழுதுவர
தேனத்தையுங்கிளி யாகவுஞ்செய்து பிதுபாமாய்
மோனத்தையுண்டு யதிகாலைவாசி யோகத்திலும்
ஞானத்திலின்று மவுனம்வைத்தேன்சுழி நாமறிந்தே. (எசக)

சுழிமுனையோகஞ் சதுர்நாலுசாமந் தொடுசோமாம்
வழியும்பேரின்ப மதுவாரியுண்டு வளமதுவாய்
சுழியாமல்காலையு மாலையுமுச்சி கண்டத்திலும்
அழியாப்பசுவியில் வாசிகொண்டுதி யருள்பெற்றேனே. (எருய)

தினமொருவேளை யதிகாலைமூலப் புளிதெளிவாய்
மனமிக்கவுண்டு வருங்காலமிரண்டு வருஷமதும்
கனமிப்படியினக் காலையிலுண்டு மாலைவிட்டேன்
இனமிர்ததிங்கள் தசபத்துமிவ்வித நெஞ்சகமே. (௭௰௧)

ஆண்டிதுமூன்று தீக்ஷைரெண்டாகு மளவறிந்தேன்
வேண்டியமாது ரதியெனக்காக விரும்பிநின்றுள்
தூண்டிப்பூநாகம் பூட்டியிழுத்திடுஞ் சொற்பதமாய்
ஊன்றிச்சுழிமுனை வாசியைக்கொண்டு ஊதினனே. (௭௰௨)

மூன்னாளமுரி தசபத்துத்திங்கள் முதற்கொண்டியான்
அன்னாள்மூன்னூறு மமுரியுண்டேனது பென்னவிதம்
சொன்னாள்சடச்சுத்தி முன்னாளிருந்த சுகவினையை
என்னால்மதிகொண்டு சுட்டுநீராக்கி யினம்பிறித்தே. (௭௰௩)

இருவினையாகிய கர்மதுற்பாதக மெய்திடினும்
கருகிநீறாக்கி பாணத்தினாற்சுட்டு கணைதொடுத்தேன்
உருகிபெண்சாணுடல் பிர்மாதிகற்ப முண்டிடவும்
சுருக்கிக்கறியுப் பமுரியுப்பானதின் சூதறிந்தே. (௭௰௪)

விருத்தம்.

கர்த்தனருள்சிவதீக்ஷைப் பதினொன்றுந்தான் காயசித்தியோகசித்திவாதஞ்சித்தி, வர்த்திகமாய்சித்திசெய்துமாவின்பாலு மன்னமதுமிரண்டளவால்பற்றேறுயில்லை, வெற்றிபெய்தாக் கறிவகைகள் மூலஞ்சேர்ந்தால் வெறும்பாழுகல்மசத்தால்வேகமில்லைப், புத்தியில்லாப்பமூப்பேறுமவெண்மையில்லைபுளியில்பமூதுண்டாக்கிபுழுக்களாண்டே.

புழுக்கள்செனித்துயிர்களதும் புளியைக்கொல்லும்புளிப்பமூஉவர்ப்பாழுதுவர்ப்பும்பாழு, களிப்பாமூகருவிகற்பங்காயம்பாழு காரமதுஞ்சாரமதுஞ்சயிலம்பாழு, அளியாதுபுளியருந்தஆண்டேசொலும் ஆவின்பாலன்னமதுமிரண்டும்போதும், வெளிப்பாழர்ய்போகாமல்புளிதானுண்டேன் வேகமென்னஅதிவேகம்விரும்பினேனே. ()

கற்பமுண்ணுமுறையும் பத்தியமும்-தரு.

கற்பமுண்டேன்காண்-மூலப்புளி-கற்பமுண்டேன்காண்.

கற்பமென்றமதி சாரைரைபக்கொண்டுடன், சத்திராதமூலப்புளி பதுக்கூட்டி, உற்பவமாகமூன்றுண்டிற்காலைமாலை, உண்டுமகாராஜ யோகந்தனில்நின்று-கற்ப. (௭௰௭)

அன்னமாவின்பாலும் வின்னம்வராமலும், ஆக்கைதனில்வேகஞ் சேர்க்கையில்லாமலும், முன்னேமுன்றேமுக்கால் கற்பஞ்சாதித்துப்பின், அன்னமுண்டேன்வாசி அப்பிரயாசஞ்செய்துயான்-கற்ப,

கதிரவன்முகங் கண்டதிகாலேயில், மதிதனில்மலப்புளியதுமூட்டி, விதியிதுவட்ட குறையிந்தப்படி, துதிசெய்துமூலச் சுழியில்நின்றுநான்-கற்ப. (௭௫௯)

பானத்திஞல்வெகுபழக்கஞ்செய்திட, ஞானசித்திக்கொருகளிப்புண்டாச்சுது, ஊனிருந்தாலுயிர் யோகம்கிலேத்திடும், நானிருக்கிவ்வித நாட்டத்திலுஞ்சுழி-கற்ப. (௭௬௰)

காலேதனில்புன்னேக் காயளவுரெண்டு, மாலேதனில்பத மாகுமதிலொன்று, சீலப்பொழிந்திடுந் தேனருவிபாயும், ஞாலத்திலும்வாசி நாட்டம்புரிந்துயான்-கற்ப. (௭௬௧)

அண்டத்தில்வாசி யகண்டத்தில்பாய்ந்திட, கண்டத்தில்தாரைகடகத்திலூதியே, மண்டலமூன்றும் வலமாகசுற்றியே, தெண்டனிட்டுசிவ சத்தியைப்பூசித்து-கற்ப. (௭௬௨)

சண்டப்பிரசண்ட சராசரந்தாண்டியர்ன், குண்டலிவாசியைக்கும்பித்துஸ்தம்பனம், நின்றுகண்டதாரை நிற்பந்தமாகவும், உண்டுமூலச்சுழி ஊதிமேல்நோக்கியே-கற்ப. (௭௬௩)

தந்தைவிதிதலே சுற்றிச்சிமிட்டவும்; இந்தவிதமிரு இரண்டுவினுடிகாண, அந்தராசயோகமாண்டு நாளுக்குநாள், எந்தனெருதிங்களிவ்விதமாண்டையே-கற்ப. (௭௬௪)

வாசிபென்றால்பிராண வாய்வுமெழுந்துடன், வீசியெழுந்துமேல் மூலஆக்கினேயினல், பூசிதமாயண்ட ரண்டமளாவியும், நாசிதனில்பனிரெண்டங்குலம்-பாய்ந்து-கற்ப (௭௬௫)

ராஜயோகந்தச திங்கள்வாலாம்பிகை, நேசத்துடனின்று நிர்மலசுரூபமாய், வாசிநிலேத்திட மூலாதாரத்தினில், பாசமேன்மேல்வைத்துப் பூசிதமாகவுட-கற்ப. (௭௬௬)

உண்டபின்கற்ப முள்விந்துவிசாரணே, கண்டத்திலூதி கலேபிராமலும், இன்றுமூலத்தின் விஞடிகள்ரெண்டுமே, ஒனறுசைவாய்நவத் துவாரமோடலும்-கற்ப. (௭௬௭)

மனபுத்திசித்த மாண்மையொன்ருகவும், இனமிந்தவாசியேறியண்டத்தினில், தினமூன்றுவேளேசாதனேசெய்துயான், முனேசுழிமூல மூதண்டம்பாயவும்-கற்ப. (௭௬௮)

வங்கென் றவூதி வாலாம்பிகைமூலத்தில், வாசிவாவாவென்று மார்பிலிருத்தியுஞ், சிங்கென் றவூதி சிவரூபத்தினால், மங்கென் றமே ம்பிடியும் வாசிசுடரினில்-கற்ப. (எசு௬)

இவ்விதமாக இருக்திமேல்நோக்கிட, கல்விச்சுழியில கதவுந்திற ந்திடும், பல்விப்படர்ந்த பஞ்சுடர்காணவும், அவ்விதமாக ரகசியமா ண்டையே-கற்ப. (எஎ௰)

மூலச்சுழிமுனை முடிவிலிருந்து, பாதத்திலேயும் பானுவினல் வாசி, சாலத்தினாலிந்திரஜாலமதாகவும், தூலத்தில்வெகு சூக்ஷத்தை க்கண்டுயான் கற்ப. (எஎக)

நித்திரைசோம்பல் நிகழ்த்தமதிதனில், சுத்தவயிராக்கியஞ்சூக்ஷ சுகாதிதம், சத் நாதமூல சைதன்னியத்தில், கர்த்தனருள்ப்தங் கண் டுமகிழ்ந்துமே-கற்ப. (எஎஉ)

தேகமெனுமெண்சாண் சித்திரருஞ்சுழி, யாகமதுதனி லமுரியு ங்கொண்டதால், வேகமதமீறி மிக்கனலால்சடம், யோகசித்தி யோ ராண்டினிலாண்டையே-கற்ப. (எஎ௩)

அமுரிமூலப்புளி ஐந்தோராண்டினில், அமிர்தரூதவிந் தாலும்வ லுவதாய், குமிழிடுபலே சாகரீரெல்லாம், அமுரிமாறி அதுசுத்தநீற தாம்-கற்ப. (எஎச)

காயாதிசற்பக் காரணத்தாலுமே, ஞாயாதிஞாய ஞானப்வங்தெ ய்திடில், வாய்த்திடாசல மலமுமாறினல், காயாதிகற்பங் காணுவோ ர்ஞானியே-கற்ப. (எஎரு)

பாழ்வினைபோக்கி முப்பாழ்கடந்தானந்தம், சூழுஞ்சுடர்மணி சோதிப்பிரகாசத்தில், ஆழிதிரைகடந்தணடத்திலேறியான், வாழிமே ன்மேலும் மணிவிளக்கேற்றியே-கற்ப. (எஎ௬)

சூழுப்வாலைச் சுரூபமெடுப்பதும், வீழுமுப்பு மயத்தையறுப்ப தும், வேள்விதொண்ணூற் றருவரும்நீறினல், பாழும்பாழு முப்பாழு ம்போயகீதிடே-கற்ப. (எஎஎ)

யானைசென்னு யதுக்குள்மரணமும், பூனைவாலி புலிக்குள்மரண மும், தேனைபானந்திசையுண்டவர்க்கொரு, ஞானபோதமெய்ஞ்ஞானி களாவரே-கற்ப. (எஎஅ)

ஈனருக்காமெடுத்ததுஞானமோ, ஏனேயேனேயியம்புநீர்மானு கால், ஆனதாலு மறிந்துபாரங்கனே, ஞானமுஞ்சுழி நாட்டமறிவ ரே. (எஎ௯)

அன்னைதந்தை யருளாலறிவதோ, உன்னும்பாதிலுற்பத்தியமைப்பதால், வின்னம்வாராவிதியிருந்தால்மதி, சொன்னேன்கற்பச்சுகாதிசுகமதே—கற்ப. (௭௮௰)

விருத்தம்.

பழகமுவாண்டிலுதகமும்பாயும் பரிசைக்ஷப்பார்த்தருளியவழக்கம், அழகதுமுடையஅம்பிகைக்கமல மனுதினமர்ச்சித்துப்பணிந்தேன், மழைகனநடையும்ரவியெனுங்காற்று மனிதர்சஞ்சாரமுமாய்கை, பிழைபகற்றிடவுஞ்சோய்பலுந்தூக்கம் பிதற்றலுங்கோபமாகாதே, ()

தள்ளுவதபிஃனிகஞ்சா வெனுமதுவுக்தகர்ந்துமேற்கரிவகைசுவையும், விள்ளுவதினைதான்பசும்பயறுபோல் மிகவும்பச்சரிசியுஞ்சமைத்து, எள்ளதோர்கரியவேம்புடனமுரி உப்பதுமுளகுடன்தூளாய், சள்ளையில்லாமலொருபோதுண்டமுது சாம்புவனுட்கொண்டதிதுவே.

அன்புடன்மூன்றுண்டதுவளமுதற்கொண் டருளினேன்மகாராசயோசம், இன்பதேனுற்றமிதுபுளிசுன்ன மிருவகைகற்பங்கொண்டடைவாய், பின்பதுசெலுத்திச்சென்றதுபோகப் புளிதனைப்பதனஞ்செய்திடவும், தென்பெனுஞ்சேதஞ்செய்கையுமில்லைபார் திருக்தமாய்பாண்டத்திலடைத்தே, (௭௮௩)

உதகமென்றபுரியுனதிள்நின்றிலகு முவரசமுசிநீரிதுதான், பதமெனும்புளியென்ற முரியாலுளதால் பாகமாய்பாண்டங்கொண்டடக்கி, விதமிதுபாகஞ்சமாதிவைத்திருந்த மிகுத்தமுப்பதுவயதண்டம், சுதனருளாலும் பற்பஞ்செய்துணரச் சூக்ஷமேசொல்லுவேனுண்டே: (௭௮௪)

மதுரத்தேனின்பமலப்புளியிரண்டு மார்க்கமாய்கலைத்துநாள்மூன்றும், பதனமாயிலலமேல்மூடிசெய்து படமாய்நீர்தெளிந்ததுநீர், விதமெல்லாங்குப்பிதனிலடக்கதுபின் மேருவின்றெனுமண்டமதனைச், சுத்தமதாய்ச்சுற்றிந்தயமதின்கடபால் தூளதாயிடித்துமாவதுவே. ()

இடித்துமாக்கருவைவடித்தசூரணமா யினியொருசீலையில்கிழியாய், முடித்தொருபடிநீர்தோண்டிகொண்டேட்டி முக்கியமாயண்டசூரணத்தைத், தடிக்கதிற்பாச்சிவன்னியிட்டெரித்து சலமெலாந்தொக்கிச்சுண்டிடுமோல், படித்தெருகல்வப்பாச்சியேபின்பு பழம்புளிமுரிநீர்விட்டே. (௭௮௬)

வரையிருசாமம்வற்றவற்றதுநீர் வார்த்ததில்பெழுகதுபதமாய், புரையில்லாமழித்துச்சதுர்பில்லைக்கட்டி புகழ்கதிர்முகந்தனில்காய்ந்

தால், நிணாயடியோடுஉள்ளதாய்வைத்து நின்றமேலோடதுமூடி, து றைபதாய்சீலைகவசுமெணணேழு சூட்டியேபுடமுழுமாமே. (௭௮௭)

ஆந்தவோர்புடமிட்டக்கினிமூட்டி யதுதணலாறியபின்பு, இந்த வோரண்டமெடுத்துடன்பார்க்க இந்திரனொளிவதுக்கதிதம், சந்திரபு ஷ்கரணிசாரணையினுட்டஞ் சாரணைசததகோடிதேர்ந்த, மந்திரசரூபம வுனமந்திரங்காண் மகத்துள்மறைந்ததுமிதுவே. (௭௮௮)

கொச்சகம்.

சுன்னங்கடுங்காரமிது சுக்குலசுரோணிதத்தால்
வின்னமில்லாதண்டபற்பம வெகுபதனமாய்க்கருதி
தன்னையறிந்தேமதியால் தானறிந்துகாப்பமதில்
சொன்னேன்குருபஸ்பமதைத் தொடுத்தேனபணவிடையே. ()

காரமதில்சாரம்விட்டு கற்பமிதைலேகியமாய்
சீருடனேபஸ்பமிட்டு செய்விதமாயுண்டேன்காண்
மாறஅதிகாலேயிலு மாலேயிலுமிவ்விதமாய்
தேறவுங்காணுண்டுதேச திங்கள்நிறைவேரினதே. (௭௯௰)

கலித்துறை.

சூதானமாய்கை டராமல்வாசியைத்தூக்கிவிட்டு
ஊதாமலூதிப் பிராணுபமூல முள்ளடங்க
வேதாகமத்தின் விதியையறிந்து கற்பவகமதாய்
ஆதாரங்காண விராஜாங்கயோக மறிந்திட்டனே. (௭௯௧)

மூன்றுண்டுமாச்சுது மூலப்புளிபிந்த மூக்கியத்தால்
ஆண்டாண்டுமாண்டு மருள்நாலுமாண்டி லறியும்விதம்
காண்டாபுரமெரித் தானந்தமூலக் கதிர்மதியில்
தூண்டாமணிவிளக் கேற்றிவிட்டேன்திரு வள்ளுவனே. ()

திருவானசோதி கருவூருநாட்டில் தேன்பொழியும் (ய்தேன்
பொருளாம்வாலாம்பிகை மலர்ப்பொற்பதந்தனில போற்றிசெ
அருளாமதிமலர் சிவராஜயோக மறிவித்தனள்
குருவாயகத்தி னுபதேசத்தாலுங் குறைவில்லையே. (௭௯௩)

தனமேவியகரு சாரகாரத்தினில் தான்மருவி
திமைமுமைம்பாச மவுனங்கொண்டேன் திருவள்ளுவனும்
மனமேவியகுரு வாக்கியத்தால்மூல வாசிகொண்டு
புனலாவதுங்கண சரமாரியேற்றிப் பொழிந்திட்டனே. ()

### வெண்பா.

கல்லுப்பின்வாறு கருத்தறியா துண்டமெனு
வல்வினைக்குள்ளாகிமனம் வாடினார்-கல்லுப்பு
வெள்ளைக்கல்லுப்பு வெகுவிதமாயாய்ந்தாலும்
உள்ளமதுலுண்டென்று உண். (௭௬௫)

என்றுமிந்துப்பு எண்சாணுடலிருக்க
கண்டுமறியாதென்ன காரணமோ—என்றுமதி
வாரிபமுரிபதை வன்னியிட்டுக்காய்ச்சியபின்
வீரியமாயானுணரு மெய் (௭௬௬)

உப்பின்கசட துபோய் ஊறலதுமாரினதால்
முப்புசுன்னமாமதற்கு மூன்றுபேர்-உப்பதனால்
கற்பாந்தரங்கோடி காயமிதுலவுத்து
செற்றாயும்வாசியினால் தேகம். (௭௬௭)

### வாசிவசப்படுதல் வண்ணச்சிந்து தரு.

தனனந்தனனந்-தனனத்தனன-தந்த-தனன தன தன தனன தன தன
தனன தன தன தன தனன தன தன தான தான தான தன -தந்தந்தனனந்.

ஜெகமேவியவாருலகுந்தனிலிலகும்பரி யகவாரிதவானகிலம்புக
ழ் நதிசந்திரசுகவானுள - பூரணவம்பதிகதிர்சூழ்வட - மகமேரதில்வா
ழ் கிருவம்பல-சுடர்மாமணி கனகம்பல - இடைபிங்கலைசுழியின்முனை-
துரியாதிதலமேவியநாள-கலையொத்திருவலஞ்சுற்றினி - யிடபாரிச
மாய்நடனம்புரி-அருள்சாதனைக்குருவூர்வளநா - டுடன்பாடுள நிருபங்க
ளில-அதிவானகர்வந்ததியெற்சிறுரு-மலர்பொற்பதம் விதிதன்செய
லென-தந்தைகூறதிதங்களையுதித்தவங்-தனனந் ()

மதுபாரபுரியுவரிந்தது-சரீரந்தனிலரிவிந்துகூர் - களிவின்பதரச
கெந்தியின் -தசதிங்களுபுண்டமுபதேசு - மகிரகங்களும்விதபோசன
மாய்-விரும்புங்கலைமதிசாரணை - அகங்கொண்டபகிரண்டமுந்திருவம்
பரயுகமண்டல நதிசூழ்கமலம்வளைசுற்றிதழ் - மணிபூரகமுனைவாசியு
மே-கலாகண்டுளனருள்தாவென - துணைகண்டுகையாய்தசவாய்வது-
பொருமித்துடன் -அரியாசனமே --எவர்க்குமுயிரெனக்கும்பொருள்-
அறுநீர்சுவை-செய்நீர்கதிர்-வருமேமதிமனோவேகமாய்-தனனந். ()

இகம்பரமேவெளியிற்கனி- மதுரத்துடனிடராகியசஞ்—சலதத்து
கள்துடராமலங்—கருவாகியபஞ்சுருபத்தினி - லுறவக்கணைகதிர்மேவி
யபா-லமிர்தம்பொழிபமுதுண்டபின் - கருணைல்யஞ்சுழிவேல்சுடர் - க
வியத்தசைகலைகொண்டந்தி-காலையிலுமபுளிநீருகை - அருநீர்கடருசி

ஞூலுளது-கெதியென்றுடன் பசிபத்தனைபெரிகுட்பியினில்-குடியேறி யழுனைவாசிபும்-பிறியாததுநங்கினவென்றுடன் - முதலட்சரந்துடியா கவுமொருமித்துடன்-முடிசுற்றிவிஞடித்தறி-தனஞர். ()

வழிகண்டினிபாராதிதப்பெருங்-துறையாகியமதவாகியதோ - ரு சிகண்டதின்முனைதாரையில்-கழியாமலும் யான்விழிமாதனுக்கி-ரசம் பரி-கனைவேதகமாய் ஓருநாளிலுப்-பிரியாமலுமபிரமியின் — மலர்ப் பொற்பதம்விதிபாய்பணிந்து-தொழுதேயருள் அருநீர்புளியுமுறவாய் ரவிமூலந்தனி-ஓருவேகமதா யரியுமான்பிரமாதிகள்-இமையோர்களு மெவராலறி-புவனந்தனிலுருவாய்வெருசெங்-தனைவோரின் முடலிப் படி கருநெல்லியிலைகனியுண்டுவெண்ணதிமா மதியருள்கண்டனர் - த.

அனைவோர்களுமேஅறியாரநிந் தவராகிலுமனவுற்பனமாய் - ம துரர்தனையமுதென்றுள-தெவராகிலுமிந்தெனமிக்கரு சுழியென்றது தெவருமலுநூல- வழிகணடுனாமவுனந்தனை-கெவஞதிகள்வெகுநாள் யுகஞ்சிவயோகஞ்செய் தறியாமலுஞ்சவமாகினர்கள் தவஞ்செய்யகம வர்பெற்றுடன்-உவர்கணடறியாருதசங்களி-மதபேதமாயிவர்ஞானிக ளா-யிலகும்புவியுலகங்களில் - பரதேசிபதாய்சுகபோகிகள் குகைசாத னைவயிறுசீவனகவனத்துடன்-உடலபேய்சுடுகாடேகினர்-தனஞ. ()

தசவாய்வதுவும்வசமாய்கலை சுவாசங்களையசையாமலுமே - அடி யாகியமூலந்தனில் - விசுவாசியதும்விசமாய்-வயிராசகியத்துடனிசவா க்கினைகொண்—டினசிங்கெனமவுனந்தனி-லருள்பெற்றுடன் யோகத்தி ரு-அருள்பெற்றனுக்கிரகத்துடன் கெதியாகியதோர் இருளத்துடன் வாமுத்தியில்-இருவாய்மது ரம்பதமேவிய-மோட்சத்துறைகறை கண் டெனுமே-மதியும்ரவிசிவரூபமும்-குருமந்திரமாய்புகழ்யக்கென-சுழி யின்முனைமுதலட்சரமிதுபின்னிடு-கடையட்சரமறிவித்தனர்—தன. ()

சுகசீவனமாய் ஓருபோதமு-தமிர்தங் ளில் பெரியோர்களுமே எ ரிகும்பிதன்வார்பாடொழிக்-தலகங்களிலும் கருவாளிசள் - அவர்மே விய-தலவாசமதாய்மருவிப்புனல் - மதுரங்களையவுனம்புரி துரியாதீத மிடைபின்கலை-சுழிபின்முனைகிரிசூழகமாய் - தசதீட்சையிலதிதத்தவ ஞ்-ஜெகரூஸ்திரமாய்நடனந்திரு மடைவாயினிலுயிராகியதோர் - பற வைப்பட்சிபடவைப்போலு மிவர்தன்னெறி பார்மதிரன்னிட ரவியி ன்செயல்களைகொண்டுடன் தசவான்டினில்புலனைப்புலன் முனையாந் தனர் தனஞந் ()

வாய்வோடனலசேரசையாமலும் வசமாவதுதேய்போம்பிறை தான் நிறையாமலுமதிபூரண பிறைநாவதுமே மதிலன்னியில் உரு

வாகியபின்னிறவாவுடல் சேர்வம்பதிகெதியாகிபின் சிவஞானிகளவர்பெற்றபேர் - துறவறமேரிசமென்றிரு-பிறவாரிதுமூன றுடலட்சரம்-மீக்காற்றுணர்பழுதென்றிலையார் பதமப்பதங்கருணைப்பெறு-மறவாதொருநாள்மவுனந்தனில்-கவனப்விடா ரருள்பெற்றடைவா-ரமிர்தச்சிவயோகததினில் - திருவள்ளுவனுரை தன்மொழி தமிழ்வண்ணமுமருள்பெற்றெழும்-தனனுர். (க)

கொச்சகம்.

நற்பிறவியாயிருந்து நாள்தோறுஞானமொழி
கற்பனையால்கண்டறிந்து காலமதுபோக்காமல்
உற்பகமாய்கற்பமதி னுட்கருவினைலுமறி
தற்பரசிகாமணிபாய் தாரணியில்வாழ்வாரே. (எகூஅ)

அண்டபற்பமுண்டுவர ஆக்கைதனிலுள்ளவினை
உண்டகற்பநாலாண்டி லூழ்வினைவந்தெப்திடிலும்
கண்டனனுபோகமதாய் கன்மவினைசூழ்ந்திடிலும்
சண்டனதுவாய்லபிக்குஞ் சார்வதுமறிந்திலரே. (எகூகூ)

கலித்துறை.

வித்தால்விளையு மெய்வாழ்க்கையென்று மிகமகிழ்ந்தேன்
சத்தாகிலுஞ்சுளை யாமலுங்கற்பஞ் சாதித்துயான்
எத்தாகவுண்டு இருந்தாலுநோலு மினிகடந்து
குற்றமதாக வூழ்வினைவந்து குடிகொண்டதே. (அ00)

என்னுக்குளம்பிகை பாதாரவிந்த மிணிபணிய
வினனம்வாராம லூழ்வினையோடி வெளிப்படுங்காண்
அன்னைவாலாம்பிகை அமிழ்க்ததினல்பிணி யற்றுவிடச்
சொன்னுர்வயித்திய சூட்சச்சூடாமணி சூதில்லையே. (அ0க)

வெண்பா.

இந்தஜெனன மிருவினைக்கீடாக
வந்துதித்தமார்க்க வல்வினைகாண்-யிந்த
அமிழ்தத்தினலறுமே ஆக்கையதுக்குமொரு
தவமதுநாள்முன்செய்த சாந்தி. (அ0உ)

கற்பகத்தினலுதித்த கர்மவினையதுவுஞ்
சொற்பகத்தினலொழிப சொல்லுவேன்-உற்பத்தி
மதிபிசகாதுண்டக்கால் வலபிணியுரோயகலும்
அதிவிதமாங்கற்பக்கா லறி. (அ0௩)

## விருத்தம்.

ஆதியாய்விளங்குஞான வெட்டியாயிரத்தைஞ்ஞூறும்
நீதியாய்நிகழ்த்தவாலை நிர்மலத்தாளைப்போற்றி
சோதியானந்தரூபன் சுயகுருமுனியின்பாதம்
வேதியன்மொழியஞான மெய்க்குருவிளங்கத்தானே. (௮௱௪)

மானமும்புவியுமேரும் வாருதியனுக்கிரகத்தால்
தேனெனுமொழியினாளே திங்களுமருக்கனாலும்
ஞானம்வந்தமைந்தபோது நாதவிந்தருளாலெய்தும்
கானனுஞ்சூதவித்தைக் கைவசமாச்சுதாண்டே. (௮௱௫)

வேதியர்குலத்தில்யானும் விந்துதித்தளவையெல்லாம்
சாதியென்பறைக்குள்வந்த சங்கடமெல்லாஞ்சொன்னேன்
சோதியானந்தனாரைச் சுழிமுனைநடனங்கண்டு
நாதவிந்துதித்தசூக்ஷ ரகசியமறிந்தேனாண்டே. (௮௱௬)

அனாதியாய்வெளியாய்நின்ற அரூபத்தையறிந்தவாறும்
வினாடியான்பிரியாவின்பம் விந்துவின்றுணர்ந்தவாறும்
பனாமுடிமயிர்ப்பாலத்தில் பழம்பொருள்தெளிந்தவாறும்
கனவுபோல்கண்டகாக்ஷி கற்பத்தாலறிந்தேனாண்டே. (௮௱௭)

அன்னைதந்தைகருவிதனிலுதித்தவாறும் அகிலமதில்யான்பிறந்து வளர்ந்தவாறும், சின்னவயதளவில்கல்விகற்றவாறும் தெளிந்துலகத்தோர்களுடனசேர்ந்தவாறும், நன்னயமாய்சற்குருவையடுத்தவாறும் நம்பிசிவபூசைதனில்நயந்தவாறும், இந்நூல்மொழியாயிரத்தைந்நூறுக்குள் நேர்மையெல்லாமொவ்வொன்றாய் நிகழ்த்துவேனே. (௮௱௮)

அண்டபிண்டப்பிறந்தவரலாறுஞ்சொன்னேன் அகண்டசத்ததீவுகளுமேழுஞ்சொன்னேன், மண்டலஞ்சூழ்வாரிமதி ரவியுஞ்சொன்னேன் வாரமுதல்கிரகஉச்சமாறல்சொன்னேன், கண்டநக்ஷத்திரமதுவுங்கருவூர்நாடுகரு தொண்ணூற்றாருஞ்சுட்டகருத்துஞ்சொன்னேன், எண்டிசையுமஷ்டகுலவெற்புஞ்சொன்னேன் எம்பிரான்வளமெல்லாமியம்பினனே. (௮௱௯)

நால்வகைக்குளெழுவகையுநவின்றவாறும் நாதவிந்தால்டுஜகம் படைத்தநாதனவாறும், தூலவுடல்சூக்ஷமதால்தொகுத்தவாறுடதொல்லுலகில்சாதிகுலந்தோன்றும்வாறும், சீலமுடன்பறைக்குள் வந்துசெனித்தவாறும் சிவகுருகடாக்ஷமதால்தெளிந்தவாறும், பாலமதில்விழிபடைத்தஅண்ணலார்தம் பார்வையினால்யானறிந்து சொல்வேனாண்டே. (௮௱௰)

செனித்திடுகெற்பக்கூறுதீட்சைசொன்னேன் சிவசத்தியதுகூறுஞ்செயலுஞ்சொன்னேன், வனிதையெனும்வழக்கூறுசெயசீர்சொன்னேன் வடிவானமுப்பூவின்மார்க்கஞ்சொன்னேன், புனிதமெனுந்திராவகமுங்கற்பஞ்சொன்னேன் பூபதியுஞ்செந்தூரப்போக்குஞ்சொன்னேன். வினிதமெனுங்காயசித்திவேதைசொன்னேன் விதரணையாயிந்நூலின்விளங்கினேனே. (௮௧௧)

அண்டரெனுமுனிவர்களுமகிழ்ந்துபோற்றும் அணிஞானவெட்டியாயிரத்தைந்நூறும், எண்டிசையும்வானமுதலிடங்கொள்ளாத இயல்பெல்லாம்பாடுகிறேனினிதானகாணும், விண்டபொருள்பிராணபவாசியோகம்வெளிகடந்துமுப்பாழுந்தாண்டிமேலால், கணடிதமாயாளருளபதினெண்பேரும் கருணைமகிழ்ந்தனுக்கிரகங்கருதினரே, ()

சிரஞ்சீவிபதம்பெறவுந்தெளிந்தேன்காணும் செனகாதிமுனிவர்களின்செய்கையாலும், மறைத்துவைத்தபுதைப்பொருளை மறைவில்லாமல் வசனிக்கஅம்பிகைப்பெண்வாழ்த்தியென்னை, யிறப்பிறப்புமினிகடந்துயிருளுந்தாண்டி இகபரத்தைக்காணயிடைகலையின்மாறி, துரைப்பெண்ணுமமிர்தவடிவானசோதி சூக்ஷசுகாதீதமெனக்குறைத்தாளாண்டே. (௮௧௩)

மாயாமலிருப்பதுவுஞானவாழ்க்கை மகத்துகளாய்செனிப்பதுவும்யோகவாழ்க்கை, தாயானஅம்பிகையின்கமலம்போற்றி தற்பரைக்குள்நின்றிலங்குஞ்சாரகாரம்; காயாதிகற்பமுண்டுகருணைஞானக் கடல்வாரியமுரியுண்டுகருத்தும்பெற்றால், நாயினுங்கடைகெட்டுநமனுமாண்டான் நரகமென்னசொற்கமென்னநாதவிந்தே. (௮௧௪)

கொச்சகம்,

நாதவிந்துபானறிந்து நாடியுடலாவியொன்றாய்
காதல்கொண்டுஞானகற்பக் காயசித்தியால்தெளிந்தேன்
சூதமென்னசுக்குலங்காண் சுரோணிதமிரண்டளவால்
வாதவித்தையெய்தும்வகையாறுதன்னைக்கண்டேனே, (௮௧௫)

வேதரசபானமுண்டு மேவியொருநாள்பிசகா
சாதனைமால்தேவியெனுந் தற்பரையைநான்பணிந்தேன்
தாதுவிந்துநாதமுடல் தன்னையறிந்தேகனித்தேன்
பேதமில்லாவாசிகொண்டு பின்புகலிதீர்ந்தேனே. (௮௧௬)

கலித்துறை.

சோதிப்பிரகாச மலர்சூடிஞானந் துலங்குரத்னம்
போதித்தகத்தியன் பொற்பதமேவி புகழ்பெறயான்

ஓகத்தலைகடல் மதுரசஞ்சீவியுண்டபலன்
சாதித்ததுஞான பிரணயவாசி தனையறிந்தே. (௮௧௭)
பூசித்துஞான பரிபூரணானந்த பொற்கமலம்
ரேசித்துப்பூரகங் கும்பத்தில்வாசி நிலைபெறவும்
நாசிக்குநேரிரு வாசிப்பிரகாச நாட்டத்திலும்
தேசிகனசேவடி பாதாரவிந்தந் தெரிசித்தனே. (௮௧௮)

வெண்பா.

அஞ்சுபஞ்சபூத மறிந்தாலனித்தியம்போம
அஞ்சும்வசப்படுவ தாண்டதனில்-அஞ்சும்
கண்டறிவோர்ஞானக் கடாக்ஷமதில்நினைவு
விண்டறியலாமோ விதி. (௮௧௯)
எண்சாணுதேக மெடுத்தாலென்னுண்டையே
பெண்சாயல்நீக்கிப் பேரின்பம்-எண்சாண்
தேகமழியாமல் சித்திபெறஞானம்
யோகசித்திபூசைவிதி யுண்மை. (௮௨௰)

யோகசித்தி-தரு.

பூசித்தேன்பிராணயவாசியோகம்-ரேசித்துஆண்டே
பூரித்துக்கும்பகங்கண்டேன்பாகம்.
வாசித்துவாயையூதிலங் கென்றந்தம்பித்துலாவி, தூசித்துக்கரு விகளைத்தொடர்ந்துசுட்டறுத்துயான். (பூசித்)

கும்பித்துப்பூரகம்நாடிதம்பித்துக்கும்பகந்தேடி, நம்பித்துமூன் றுண்டுசென்று அம்பிகாயோகத்தில்நின்று, கெம்பிரமாகவுங்கண்டதா ரையில்வாசியையூதி, யெம்பிரான்கமலபகந்துய் பிமுகனைத்தொழுது.

நங்கென்றுய்விஞடியூதிமங்கென்றுஞ்சாதித்துப்பேதி, சிங்கென் று மூலத்துக்கேற்றிவங்கென்றும் பரத்தைப்போற்றி, அங்கென்றும் வாசிமேலேகவெங்கெங்கும்பிரகாசமாக, கங்குல்பகல்நன்றாகத்திங்க ளுங்கதிரோனுகப். (பூசித்)

ஓவ்வெனுமூலத்திலோடி யொன்பதுவாசலுங்கட்டி, அவ்வெனு உவ்வெனுங்கூட்டி அப்புவையுப்புவிலூட்டி நாசியில் வாசியோடாமல் வீசியுஞாலம்பாயாமல், தேசிகன்பொற்பதமேவிஊசியின் முனைவாரா மல். (பூசித்)

ஆகாரமப்புவுமூல மதின்கீழோங்காரமூலம், பிதாவைத்தொழு துமுத்திபிராணபதீபத்தையேற்றி, கங்கைமதியலர்தன்கமலபாதாரவி ந்தம், கெங்காஸ்நானங்கள்செய்துகெவனம்பாயவும்வாசி. (பூசித்)

ஆசான்சற்குரு நாதரருளாலாண்டையேகேளீர், பாசாபாசமறுத்துப்பரிபூரணசந்திரனை, தேசியெனுங்கெவுனம்வாசிக் குதிரைமீதில் நாசிப்புருவநடுவிசிரேசித்துப்பாய்ந்து. (பூசித்)

வினாடிகடிகைக்கொன்றுவிதமாய்ச்சுழியில்நின்று, தினநாள்முப்பதும்வாசியினைமிந்தப்படியேசி, கோசமெனுமக்ஷரங்குறித்து ஓராண்டமுரி, நாசமதாகுமுப்பாழ்நசித்துவெண்ணீறதாக. (பூசித்)

பதினெண்பேர்களுஞ்சொன்ன பரிபாஷையுந்தோணாமல், விதியின்வசமதென்றுவெறுத்துமெய்க்குருகாணார். (பூசித்)

விந்துநாதமேலுமேகங்கருவேலம், அந்தமாரியுஞ்சூட்சமமுரிப்புளியும்வாசம், சிவமுஞ்சத்தியுஞ்சேர்ந்துசெயநீர்திராவகமாச்சு, நவபாஷாணங்கள்நீறும்நவலோகங்கள்மாற்றேறும். (பூசித்)

தேவியெனுமம்பிகைசீர்பொற்கமலநாடி, ஆவியெனுஞ்சுவாசமண்டம்பாபவுந்தேடி, ஊதுந்துருத்திவாசிஓசைமூலத்தில்பாய்ந்தால், வாதமுன்னுக்குளெய்துமதியாலரவியுந்தோற்றும். (பூசித்)

இருவினைகளுஞ்சுட்டு, பிறப்புமபிறப்பொழிந்து, கருவிதொண்ணூற்றாறுங்கனலல்லவெந்துநீறாக, வாசியெனறபிராணபம்வாய்வைக்கும்பித்துமூலம், நாசிவழிவாராமல்ராசயோகஞ்செய்தேன்காண. (பூ)

பஞ்சாக்ஷரமமுரிதஞ்சானதுங்கொண்டாடு, அஞ்சாமலும்வயிராக்கியமெண்சாண்தேகத்தைச்சுட்டு, முக்கோணகேசரிவாலை முனையமிடைபின்சாலை, அக்கோணச்சுழிப்பிரகாசமாலையக்கனிலுநின்று. (பூசி)

வஸ்துவென்றபானத்தைமருவிமாறவுந்தேகம், அஸ்திகள் தங்கங்கள்போலுமமிர்தசஞ்சீவியுண்டு, தன்னைத்தானுமறிந்துசடத்தைச்சுத்திகள்செய்து, அன்னைபம்பிகைபாதம் அவ்வும்உவ்வாலறிந்து. (பூசி)

பூருவக்கிபாணகற்பத்தின்புகழைபாரறிவார்காண், பேறுபெறவும்பெற்றபிரபல்லியமீதாலும், தீக்ஷைபென்றுவீரஞ்சுதெசதீக்ஷைகளுங்காட்டி, நீச்சனென்றபேர்போக்கிநிலைத்தேன்கருவூர்நாட்டில் (பூசி)

அஷ்டாக்ஷரமாவது அமுரிபுளியெனும்பேர், இஷ்டத்தடனுமுண்டெட்டெட்டுவித்தைகளாட, வங்குசிங்கென்றெழுத்தைவாவென்றமூத்திவாசி, யெங்கும்பிரகாசமாகஇருத்திக்கடிகைவரலாம். (பூசித்)

ஆனைமும்மதங் கொண்டாலடக்கலாமோஅடக்க, வானஞ்சுருங்கிவிடாதானேதானுஞ்சுருங்கும், பொங்குங்கடல்சூழ்வர்ரிபொழியப்பொழியபுனம், எங்கும்பிரகாசமாகுமெண்சாண்தேகமுந்தங்கம். (பூசி)

அங்கரைமீனைப்பிடித்துச்சக்கரையாகவடித்துச்,சொக்கநாதரை த்துதித்துநக்கவுந்தேனைமத்தித்து, அஞ்சுமூன்றுமிரண்டுமறியலாச்சு துகற்பஞ், செஞ்சடாதரர்கமலஞ்சேவித்துச்சுழிமுனையை, (பூசித்)

விதியைவெல்லுமதியால்மதியைவெல்லுஞ்சுழியால், பதியைய றியஞானவழியிதாண்டையே, மதியுன்னுக்குள்ளிருக்குவாரி சவாரி மேலாய், விதியும்வாசிக்கப்போமோவிந்துநாதத்தின்கூறுல். (பூசித்)

மாய்கையகற்றுமூலமலமுஞ்சலங்கழிய, பயமதுவுங்கிலேசம்பா மூரமிந்திரியமாண்டே, இந்தமதியைக்கண்டு வந்தவிதியைப்போக்கி, சொந்தமனையில்நின்றசுந்தரர்க்குமுறைத்தேன். (பூசித்)

விருத்தம்.

பூதலத்தில்மகத்துகள்தான் பொறிபுலனும்வெளியில்விடாப் பூ சித்தார்காண், வாதசித்திவரும்வரலால் மதிரவியைப்பணிக்துமிக மகி ழ்ந்ததாலும், வேதமெனுஞ்சாரமுண்டு விரும்பியுமா தருமேவிந்ததனை ப்போற்றி, பாதம ் மூலமெனும் பச்சையுவரசுற்றிமிகப்பாலித்தாரே.

கொச்சகம்.

காரமெனும்பூநீரு காயமதிலும்மிருக்க
சாரமதைக்கொண்டு சவுக்காரமதைக்கட்டறியார்
பூரமென்றால்காரமிது பூனிரதுவும்புளிகாண்
வீரமென்றவிந்தமுரி வெளியில்வடியப்பதிந்தே. (அ௨௨)

பிருதிவிநகாரமதாம் பிராணனுமகாரமப்பு
இருதயத்திலுமிருந்த இந்திரியமாமமுரி
அறியப்போமோவெளிகாணப்புவியிலெங்குமுண்டு
சுருதிமுடிவானசுடர் சூக்ஷமறிந்தேமுப்பார், (அ௨௩)

கலித்துறை.

கலிகாலந்தன்னில் மாய்கைப்பெருங்குழி கடந்துமென்மேல்
நலியாதுதேகம் வலுவாகும்விந்து நாதமதாய்ச்
சலியாதுகாய மழியாதுதேகஞ் சாவில்லைகாண்
மெலியாதுஉள்ளம் வாசியைவாவென்று விரும்பினனே. ()

அம்புகொண்டாண்டு ஐபஞ்சுதிங்க ளானபின்பு
சுப்பிரமதாகுஞ் சுயம்பாகுதேகஞ் சுத்திசெய்தால்
இப்புவிதாம்பா மிருபத்தொருதிற மிருபலங்கொண்
டுப்பறக்க ச்சி யுருக்கிய பூநீ னுடன்விடுமே. (அ௨௫)

### வெண்பா.

இப்பரிட்சைகாண எளிதலலதேகம
அப்பதுநீர்சுத்தி யானதால்-இப்புவியில்
சுத்தசலமான சுயபதுசெம்பாகும்
உற்றவிதிசுத்தியறிந் தாட்டே. (௮௨௬)

அம்புவியில்செம்புகளிம பற்றுவிடும்மூறலறும்
நம்புவதாரப்புவியினுல் யானறிந்து-அம்புவியில்
தன்தேகமூறல்விட தாம்பரமுமூறலறும்
தென்பொதிகைநாயனருள் சீர். (௮௨௭)

### ஆநந்தக்களிப்பு.

தனனத்தனனதந்தனுனு-தான-தனனத்தனனதந்தனுதந்தனுனு.

மூலாதாரச்சுழிமுனையில்-வாலை - மும்மதவாரிமுச்சுடரின்றிலகும், ஆலகாலவிடமுண்ட—அரன்-பாதத்தைநம்பினேன் அம்பிகைபாதம், பாலன்கணபதிகந்தன-கமல-பாதபங்கபத்தையானபணிந்துமே தொழுதேன், தூலவுடல்சூக்ஷதேகம் - செடஞ்-சுத்தியோராண்டினில் சுகாதீதமாண்டே. (தனன)

கட்டுப்படாதுசெம்பதுகாண் - மூல - காரத்தினுல்கருசேர்ந்தல் லோகட்டுள், வட்டுபோலிறுகியுர்வனுவாஞ் - சோதி - வஸ்துவென்ன வாசிமயமதஞ்சேர்ந்தால்,எடிரணக்ம்பர்துமயதாம்-அது - இங்கித நாதச்சுரோணிதத்தானும், பட்டுவிடுஞ்சாக்கதீதம் - நவபாஷாணமுதற்கொண்டுபரிசவேதிபதாம். (தனன)

நமசிவாயமென்றதஞ்சு-விந்து-நாதமூன்றெழுத்தையுங்கிலியும் ஓம்சவ்வு, அமிர்தங்கொண்டுவாசி - ஆதி-அடங்காதுஅப் உம்மென்று அக்ஷரம்ரெண்டு, சமரசமாகுமம்பத்தெழுத்துங்-குரு-சாமிகடாட்சத்தால்சாதித்தேன்சானும், எமலபிபகற்றுமிவ்வெழுத்து-எந்தன் - ஆசான்சொல்லவுமினியான்கண்டேனுண்டே. (தனன)

பத்தெழுத்தும்பரிமேமம்-சித்தர்—பதினெண்பேர்பாதபொற்கமலமும்போற்றி, வித்தில்லாப்பூமியுமுண்டோ-விந்து-நாதமில்லாவிடில் வாசியுமுண்டோ, சித்தில்லாச்செந்துகளுண்டோ-சிவ-னில்லாவிடில் தேவர்களுமுண்டோ, கர்த்தனிவராச்சுதாண்டே — கதிர்மதியுமிவர்க் கேவல்காணலாச்சுதுகாண். (தனன)

முப்புவுமூன்றலோகானும் மூல-வாசிசேரவுநாலுமுடிவல்லோதோனும், அப்பும்உப்புப்வெடியுப்புப்-அச-வானதும்வாய்மறிந்தவர்

செப்பார், இப்பொருள்கண்டுணர்ந்தேன்காண்-எவரும்-இந்நூல்போலொருநூலுமியம்புவாரெவர்காண், செப்பார்கள்சிவஞானமூலங்-திரு-வள்ளுவனுய்ந்துதெளிந்தயிமூலங். (தனன)

மதியைக்கொண்டுதேகஞ்சுத்தி-மூன்னாள்-வரும்வழலைகளெல்லாமணவெணன்றுங்கொற்றி, நதியைவிட்டுச்சேடையாக்கி-வழலை-நாளுக்குநாள்வரும்நரகத்தைதப்போக்கி, விதியிந்தமலக்கூடு-மூன்னாள்-வினையிருந்தால்சலநீரகொண்டுசரடு, சதியனந்தகாயவிடு ஆண்டுசாரத்தையுண்டுசாதித்துயேதேடு. (தனன)

அலைகடலாவதுசமுத்திரம்-அலை-கடலையுண்டுகெலங்கிபகற்றிநமுபத்திரம, மலசலப்பெருமையைப்போக்கும்-அந்த-வாருதிசலத்தினல்வழலையைவிலக்கும், பலபலகஸ்திகள்தோன்றும்-பாண்டம்-பழமலம்போக்கினல்பரிட்சைபார்கண்டுப், உலைவாயின்மெழுகதுபோலாம்-மனமஒருமித்துஜ சுத்திநிலைகொள்ளாமேலாம். (தனன)

சர்மசாகரமலக்கூட்டை-தந்தை-கட்டினன்மாய்கைப்பெண்கருவிபால்விட்டை, வர்மமில்லாக்கருநாடு-திரு-வள்ளுவன்செய்கையால்வச்சிரவீடு, பிர்மாதிகற்பத்தையுண்டு அமிர்த பேரின்பநதிசுத்தப்பிராணனைபங்கண்டு, நிர்மித்தேனகத்தியன்வரத்தால்-நெறி-தவறாதெஞானவெட்டியின்கருத்தால். (தனன)

விருத்தம்.

இந்திரனதியுண்டுரவிமலத்தைதப்போக்கி யிருந்தக மக்கசடதனை எல்லாநீக்கி, தொந்தமெனும்தேகசித்திசுபமாய்ச்செய்து சுகதுக்கமிருவினையைத்துலைத்துமேவி, அந்தஓராண்டுசென்று டுத்துக்காலை அமிர்தநதிசுத்தசலமறிந்துசாரம், தந்தைவிதிமுந்திமுன்னு ளமைத்தகூறைத் தானவனுயகற்றியருள்சமைந்தவாறே. (அஉஅ)

கொச்சகம்.

சுத்திமுறையானவிதஞ் சொன்னேன்பெருநூலிதனில
அத்திமுதலெறும்புகடை அமைத்தவராறுசளே
சித்தியிந்தநூலதனில் சென்றுஓராண்டுபின்பு
வெத்தியெனுமாண்டதுபோல் வெண்மதியால்கண்டேனே. ()

காலைமுதலுண்டமுரி கற்பகதிருச்சமும்போய்
மாலைரவிசாய்ந்துகனல் மாறினதால்காலையினில்
சூலதுகாணவதென்ன சுரோணிதமலப்புளியில்
ஆலவிட முட்டியபின் னருணனுதபத்தில்வைத்தே. (அஙய)

கதிருதையமுன்புவரும் காலைதனிலிவ்விதஞ்செய்
மதியுணர்ந்துபின்புவரு மாலைப்புளியுண்பீராய்
விதிமெழுகுபோலவருகல் வேளைபுன்னைக்காயளவு
அதிவிதமாய்நாளுக்குநா ளதனஞ்சுண்டைக்காயளவே. ()

## கலித்துறை.

மூவாண்டில்மூலப் புளிவிந்துஞ்சேர்ந்து முடிக்கும்விதம்
தூவாதசாந்த வெளியறியாமல் சொக்கினர்காண்
சாவேதுஞான மெய்ஞ்ஞானவெட்டிச் சார்வறிங்கால்
தாவேதுசார மாயிரத்தைந்நூறின் சத்தியமே. (அ௰௨)

சத்திக்குள்விந்து சாரமுள்பாய்ந்து சத்தியும்விந்
துத்தமனுச்செனித் திடும்பிள்ளை யுவரதுபோய்
பத்தியசுன்னம் பசைந்தமண தண்ணீர் பாய்ந்திடுநாள்
உத்தியசெம்பு உருக்கியன்னீரினி லூட்டிடுமே. (அ௰௩)

## வெண்பா.

உருக்கியிமீரமுவிசை யூனீரில்சாய்த்திடவும்
சுருக்கிமணியதுவாஞ் சொன்னேப-உருக்கிவிட
கழிம்பதவுமூறலில: க்காரமெனுஞ்சாரமதால்
அழும்புவருகாதிடி லு மாண்டே. (அ௰௪)

அயமுதலுநாக மதிதகருவங்கம்
சுயமதுகாண்வேணவங்கஞ் சுத்தி அயமதுகேள்
வங்கமிருநாகம் வருதல்பதினைந்திறங்
குங்குமணியாகுமதின் கூறு. (அ௰௫)

மலைப்புளியும்வாரி வருமுத்தநாளில
உலையதனில்விந்து அய மூதினல்-மலப்புளிநீர்
காச்சிபயநூறு காரமெனுஞ்சாரமதில்
தோச்சுவிடுவிரைச் சொல். (அ௰௬)

மூச்சையதிலிட்டு மூடிமண்சீலைகனம்
ஓசையிடுங்காண் தருச்தி யூதினல்-மூசையினில
உருகிமணியாடு முலாசத்தினலும்
சுருகியயச்செம்பதுவாஞ் சொல். (அ௰௭)

இருவங்கமாக மிருப்பதுவுஞ்செப்பு
மருவுபணவிடைவகைக்கு வாங்கு-முருகவுமே

குகையிலிட்டூதக் குங்குமப்பூவர்ணம்
மெழுகதுவாமூதிடுமாற் றேழு. (உ௫அ)

### வேறு விருத்தம்.

குறுமுனிபால்மாற்றேழுவருதலதுங் குணங்குறியாய்குறித்துப் பார்த்தேன். கருவுருவாயருளியதோராயிரத்துஐந்நூறின்கருவையாய்ந்து, அருவுருவாய்குருவினுட அனுக்கிரகமெனக்களித்த அருளினாலும், சுரூபநிலைசூக்ஷமெல்லாஞ் சோதித்துப்பார்த்தவர்கள் சொற்கஞ் சேர்வாம். (அ௫கூ)

### வேறு-கவி.

விந்துநாதம் விதித்தஅவ்வாறினல், அந்தகாரமதுவெளியாச்சுது, சுந்தரக்குரு சொன்னார்பேதாபேதம், வந்துதாண்டே வழலைப்பிரகாசமே. (அசய)

காரசாரங் கதிர்மதிவாழ்க்கையால், வாருதிவர மாறவெளிப்படும், சாரங்கொண்டு சரமாரியேற்றினல், தேறலாந்தச தீட்சையிதாச்சுதே. (அசக)

பூகலம்புகழ் பூரணசற்குரு, நாதவிந்துநடத்தையையோதினல், வாதஞான வழலைப்பெருமையை, மாதுவாலை வசனமிதாகுமே. ()

அந்தவானமளாவியமாமலை, யெந்தனுசாணிபம்பினராதலால், வந்துகாக்ஷிமகிழ்ந்து அகத்தியன், விந்துநாதம் விளங்கினான்டையே,

பூரசுன்ன பூனீர்புளிநாதமாம், வீரம்வந்து வெள்ளைக்கல்லுப்பதாம், காரசாரங் கதிர்மதிரெண்டினல், தேறுஞானச் சிவபண்டிதர்களே. (அசச)

அப்புவுப்பும அமுரிமூலப்புளி, உப்புமப்பு முன்னுக்குளறிந்தபின், காரசாரங் கதிர்மதிரெண்டினல், தேறுஞானச் சிவபண்டிதர்களே. (அசடு)

சிவமுஞ்சத்தி சிவத்திலிருப்பதாம், கவனம்வேணுங் கனகமுன்னுக்குள்தான், மவுனவாலை மதிகொண்டுவூட்டினல், கவனமேது சாரத்தினல்கட்டுமே. (அசகூ)

சாரமாண்டு சரமாரியேற்றினல், காரஞ்சத்தியுங் கைவசமாகிடில், தேறினன்திரு வள்ளுவனிவ்விதம், ஏறலாகு மிருவினையில்லையே.

விந்துநீரு விளங்கியபானமும், அந்தநீரு அமுரியுண்டாண்டுகொண், இந்தப்பாதை யிரவிதினந்தினம், வந்தவாழ்க்கை மருவிசாதித்தனே. (அசஅ)

மாயாசத்தி மலப்புளிவந்தவா, ஞயநூல்களனேகம்விதித்தனர், ஓயுநாய்போ லுழலறலைவார்கள்தாம், மாய்வதில்லை மகத்துகளாண்டையே. (௮௪௯)

மானமுமபி மானிகள்வாறுசாண், சோனைபாயுஞ் சுகாதீதசுக்குலம், வீணுனாத்து விடுகிறீர்பானநீர், தேனையுண்டு தெளிந்தனராண்டையே. (௮௫௰)

உண்டநீரு உன்னுக்குள்ளேபாய்ந்திடில், சண்டனில்லை சாக்காடெய்வதில்லைகாண், அண்டர்கோனைத் தீசர்தெரிசனங், கண்டபோது கலிவராதாண்டையே. (௮௫௧)

கார்மதிகதிர்சோதிவிளங்கிய, சீர்புகழ்திருவள்ளுவனேதினுன், பார்விளங்கிய பாடல்மூவைந்துநூறு, யோ்வளபெறி யோரறிவார்களே. (௮௫௨)

ஞானவெட்டிநன் னூல்பதினைந்துநூறு, தேனெனுமொழி செப்பிபவாறினுல், வானஞ்சூழ்கடல் வாரிப்பொழியவும், மோனஞான மொழியைக்கேளாண்டையே. (௮௫௩)

வேதஞான விளங்குமகத்துகள், பாதபங்கயன்பன்மலர்சூடயான், வாதபண்டித மாமுனிவாறினுல், சூதவாலைச் சுழிமுனைகாணுமே.

பஞ்சரத்தினம் பணமலர்சூடியான், நெஞ்சறிந்து நிகழ்த்தவெள்ளேட்டினில், செஞ்சடாதர தெய்வசிகாமணி, கஞ்சமாமலர்க் கண்டபேர்சொல்வாரோ. (௮௫௫)

பதினெண்பேர்கள் பரிபாஷையாய்ந்துயான், விதியறிந்து விளங்கும்ரகசிபம், மதிரவிமலர் வாரிச்சொறியவும், கெதியறிந்து கிருபைக்கடல்மூழ்கினோர். (௮௫௬)

தத்துவந்தொண் ணூற் ருருஞ்சுடர்விடில், சற்குருஞானக் கருவறியார்கள்காண், பெற்றும்பேரும்பிறப்பொழியாமலும், சித்துமாய்கையில் தேகமழிவதே. (௮௫௭)

சுத்தஞான சுகாதீதமென்பது, வித்துபானம் விளைவதிலுப்பதாம், பத்தர்சுத்தர்பண் போர்பதினெட்டுபேர், கர்த்தனுங்கரு வாய்செனித்தார்களே. (௮௫௮)

## கொச்சகம்.

கருணையானந்தசிவ காமியருள்பாதமலர்
திருவடிபுயபோற்றிசெய்து செங்கமலமேவிவளர்
குறுமுனியால்தீட்சைபத்துங் கோணமல்கூர்ந்துமிக
அருள்புரிந்துகாயசித்தி யனுக்கிரகம்பெற்றேனே. (௮௫௯)

கண்டுகளிகூர்ந்துகுரு காரணத்தால்சித்திபெற
அண்டக்கல்லுப்பதனை யானறிந்தேனாதியுப்பை
விண்டுவிடும்ஞானவெட்டி மெய்ப்பொருளையானுரைக்க
எண்டிசையினல்லோர்க ளிப்பொருளைக்காண்கிலரே. (௮௱௰)

வெண்பா.

ஆனைக்கல்லாரறிவ ரம்புவியிலும்மனிதர்
சோனகரால்வந்தவித சொர்ணஉப்பை-யானைக்கல்
பானமென்றநீரமுரி பாண்ட மதிலும்படினால்
தானதைகொண்டேகடலைத் தாக்கு. (௮௱௧)

கொச்சகம்.

இவ்விதப்பிராணமதுவேயிடித்துஇப்படிதான்
அவ்விதநால்நீர்ப்படிகக ஆனதுக்கல்லோர்படிதான்
கவ்வியபூனீரதுகேள் கானகத்திலும்விளையும்
எவ்விதமென்றேயறிய இன்னீரில்தாக்கிடுமே. (௮௱௨)

கலித்துறை.

அருள்மேவிக்கல்லு ஆனைக்கல்லுப்பு ஆதியுப்ப
திருமேவியவன்னி செங்கனலூட்டித்திருத்தமதாய்
உருவேறச்சுத்தி யுடன்சுண்டக்காச்சி யுற்பவமாய்
பருவப்பதங்கொண்டு பானீர்விட்டு பகர்ந்தலம்பே. (௮௱௩)

அனலுக்குநீறுக்கு மசையாதுகல்லுப் பதையெடுத்து
முனைமேவியகுளி கல்வத்திலிட்டு முகுளிதமாய்
வினையேகுமண்ட வெண்கருவிட்டு வெகுண்டொருநாள்
இணையாடடிமைப்பதம்மெழுபோல்வருஞ்செய்கையியம்புவனே.

அலைமோதியமேரு வுறையாகச்சேர்ந்து அருணன்பட
மலைமேவியப்பு நிலவிந்துவீசி வாருதியால்
கலையாமீரெட்டு சலநீருங்கட்டிக் கல்லுப்பதாய்
விலைமேவிசோனகர் பெரியோர்கள்வாங்கும்விற்பனையே. ()

இந்திரனுப்பு இதுமெழுகாட்டி யிரவிதனில்
சந்திரனுப்பைச் சதுர்பில்லைதட்டிடை தானதுகொண்
டந்திரனுப்பு அதுசரக்காக அருணனதில்
பஞ்சனஞ்செய்து பரிவாகவட்டிப் பகர்ந்திடுமே. (௮௱௬)

கதிர்முகநாடி மேல்வட்ட மூடி கருணைபெற
மதிசிலையேழு மண்செய்துவாலை வன்னிமுகம்
அதிவிதமாக முபன்றெத்துஊதி அதையெடுத்து
நதிமேவுஞ்சந்திர பனிசுத்தநீரில் நாடிடுமே. (௮௬௭)

## வெண்பா

பனிவீசுமாசி தனிபங்குனியிலும்மிறங்கும்
தனியாகச்சுத்த சலந்தான்பிடித்து-பனியதுநீர்
வெண்ணிறமாய்நின் றதொரு மேதினிபீங்கானதிலும்
நணபெறவுஞ்சுக்கசல நாட்டு. (௮௬௮)

இந்திரன் தன்விந்தி லிட்டுறங்கற்சுண்ணமது
வெந்தசுன்னக்கல்லிணைந்து வேகுமே-இந்திரநீர்
பட்டுவிடுமேகரைந்து பாரையுப்புமூன்றதனுல்
இட்டிடுமஞ்சுன்னத்தி லெய்தும். (௮௬௯)

நீரதுமேலும்படியும் நேர்மைநிலப்பதுவாய்
பாரதின்மேல்கத்திகொண்டு பாச்சினுல்-நீரதின்மேல்
கண்டதனைக்கீறிவிட கல்லுப்புமேல்படியும்
மண்டலத்தில்பாறையுப்பா மறி, (௮௭௰)

## விருத்தம்.

மண்டலந்தான்கழிந்தபின்எடுத்துப்பீங்கான் வாருதியென்றதி தசுனனகல்லுப்பாகும், கண்டஉப்புஇவ்வளவும்பாறையுப்பாம் கல்லுப்புஇதையறியார்கண்கெட்டுதி, சென்ருட்டமாய்சிலபேர்நாய்போல் சுற்றிச்செகமெலாமலைந்தலைந்துத் தியங்கிஞர்கள்,குண்டலிபின் கமல மலர்தொழுதுபோற்றி குறுமுனியினருள் தெளிந்துகூறுவேனே. ()

ஆங்கபரிபூரணமாய்விளங்குஞ்சோதி அகண்டபரிபூரணத்திஞருளைப்போற்றி, சுந்தரமாயெனைபீனறமாதுவாலைச் சுகாதீதமென்ஞருமடிதொழுதுபோற்றி, யிந்தவிதிவிட்டகுறையெய்துமாகில் விந்துவிட்டோனவர்பதத்தில்மிகவும்போற்றி, சிங்கையெனுமனம்புத்திசித்தமூன்றும் சிறந்ததிகஆங்காரனாலும்போச்சே. (௮௭௨)

தத்துவமென்றுதித்ததொண்ணூற்ருருஞ்சுட்டு தசவாய்வுமொருமித்துத்தஞென்ருகி, பெற்றபிறவிக்கடலைக்கரணடியேறபெரியோர்கள்வெகுகாலபிராணுபத்தால், குற்றமொன்றும்வாராமல்குறுக்கல்சுன்னம் கொணடுஅனுடானமெனுமமுரிதன்னில். வித்தெனவும்விளங்கும்பாரை வெள்ளைக்கலுப்பதுவும விதித்துதாண்டே, (௮௭௩)

பூருவத்திலுதித்தகூல் கல்லுப்பாகும் பூனீரினுப்பதுவுமழுரியு பபும், வாறறிந்துமுப்பொருளுமூன்றுப்பாகும் வகைவகைக்குப்பல மதுவாய்வகுத்துப்பின்பு, சருகாமல்பறங்கிவைப்புப்பலந்தான்கூடன் தனையெடுத்துகுளிக்கல்லில்சமையத்தானும், கருதாமல்வெண்கருவா லிரண்டுசாமம் கணக்காகமையதுபோல்கருதிடீரே. (௮௭௪)

கட்டளைக்கலிப்பா.

கருதியும்வழித்தேயெடுபில்லைகாண் கதிரவன்தனில்காய்ந்தெடுவெ ட்டியில், சுருதிமேல்மூடிபொன்றபுடமதில் துரிதமாய்கனலாறியெடு த்திடும், குறுமுனியருள்திருவள்ளுவனுரை கூறிடும்பெரியோர்கள்ம கத்துகள், தொழுதுவாலைப்பதம்பணிந்தர்ச்சனை தொழுததால்பணிந் தாண்டேயுணருவார். (௮௭௫)

வேறு.

பூநீருவதும் பூதலந்தன்னிலும் வானிலுமாசி பங்குனிமூன்றினி ல், காணிரோகநீர் சந்திரன்விந்தினால் சோனைபாய்ந்து சுகாதீதநீற தாம், பாணியோடி பருதிமுகப்பட தானினிவெண்மை தாரணிதன் னிலும், கோனினிபூமி நாதமெழும்பிடும் வேனினிவிந்து நாதமீதாண் டையே. (௮௭௬)

பூமிநாதப்பூ நீறெனும்பேரதாம் ஏாமியோகிகள் வந்துஅன்று ளினில், நேமமாக நெறியதுவாகவும் பூமிசுற்றிப் புனலடியாமலும், தாமேவேலி தனித்துச்சோடித்துடன் ஆமோசாரொரு அந்தமண்வெ ட்டியும், நாமேசொன்னோம் நாளுக்குநாள்மூன்றதும் சோமன்வந்து நீர் சொல்லியெரித்திடே. (௮௭௭)

மூன்றுநாளு முனைதெரியாமலும் மூன்றுமுச்சாண்பூ நீர்விட்டெ ரித்திடும், வேன்றங்கம்பி யிதுநீலவர்ணமும தோன்றுநாலு தினத்தி லெரித்திடு, ஆண்டுபத்து மடுத்துகற்பங்கொளுப தாண்டிடும்புளி சு ன்னம்பூநீறதும், மீன்றிடும்மிது பூநீர்க்கெதிரிலா என்றிடுங்கா வித் தையிதாண்டையே. (௮௭௮)

விருக்தம்.

சாணுபரமணகளைந்துஎறிந்துமேலும் தனித்துஅன்னாள்மறுநா ள்கொண்டருணன்தன்னில், காணுமொரு படியொருசாண வெட்டி மேலும் கண்டுமறுநாளதிகன்காலைதன்னில், வேணுமந்தப்படிமூன்று நாளுஞ்செயது விளங்கவுமேநாலாநாளிதனைப்பார்க்க, மூன்றுநாள் சென்றதின்பின்கம்பியோடும் முன்னுளில்மெரியவிட்டுப் பின்னுளா ண்டே. (௮௭௯)

பின்முன்னுள்கடைநாலு மெரியல்வேகம் பேதித்திருகால்கொ ண்டுஉதைத்துமேலாய், உன்னிதமாம்மெரியவிட்டப்பூநாசப்பூர்க்கும் ஓ

ரக்குலப்பிரமாணமுயரமென்னில், இன்னமினிநாலாநாள் கிளிஞ்சலாலூடளடுத்துவெகுபதனமாய்க்குப்பிக்கேற்றி, சொன்னகுருநாலுமெழுபதமாயாட்டி சூக்ஷமதாயைமபதெருப்புடத்தில்நீற்றே. (௮௮௰)

நீற்றிடவுஞ்சுண்ணமதாங்கொடியவேகம் நிறமென்னசந்திரனுக்கொளிபோதாது, வீற்றிடவுங்கல்லுப்புசுன்னந்தன்னை விளங்கவெகுபெரியோர்கள்விரித்துச்சொன்னார், நாற்றிசையில்நவகோடிமுனிகள்சித்தர் நடனசூஸ்திரஞானவெட்டிமேலாம, மாறிற்றியேபிறந்திடவும்வாசியோகம் மாதுகலைபதினாலுமவகுத்தாராண்டே. (௮௮௧)

இப்படியாய்நவகோடிகோடாகோடி யிலகுபதினெண்பேர்களமகிழந்தானும், கற்பகமேதிருவருளேகருணைஞான கமலவிதழாயிரந்தெண்மலரின்மேலும், உற்பவமேமுன்னோர்கள்மோட்சம்பெற்ற மூலசுழிமுனைநடுவிலேநடனஞ்செய்யும், தற்பொருளேசடாதாரத்திலகுஞ்சோதி சாபபுவனென்றேஜெகமும்புகழ்ந்தாராண்டே. (௮௮௨)

திரிமூர்த்திவம்மிசத்தில்தோன்றுஞான திருவள்ளுவனையனெனுஞ்ஜெகமும்போற்ற, கருவூருவிளங்கநகர்கமலபீடம் கருணையானந்தவற்கத்தமிழால்ஞானம், தருமேசிவக்கியானவெட்டிபதவினாலும் தரணிதனிலறிவுள்ளோர்சாகாக்கல்வி, வருமிசைபெரியோர்கள்தீக்ஷையாலும் வள்ளுவனருணைத்தமொழிவாறு ஆண்டே. (௮௮௩)

ஜெகமாய்கைபண்டபிண்டமமைத்தவாறும் ஜெகதலமீரேழுபதினாலுங்கூடி, அகமாய்கைஆண்பெண்ணையுதித்தவாறும் அவனியிலெண்பத்துநான்குயிராய்நின்ற, பகவனருளாலுதித்துப்பாரில்சென்று பலபலவாயுயிரதுவாய்ப்படைத்தவாறும், சுகவசியவஜிகரமாயெங்குந்தானாய் சுகாதீதமெனவிளங்குஞ்சூக்ஷந்தானே. (௮௮௪)

முப்பொருளாய்நின்றிலங்குமதியேவிந்து முறையானநிலவுப்புகடல்நீருப்பு, இப்பொருளாய்சமைத்தவிதம்சுன்னம்வாங்கி யிலைசந்தகுளிகல்லதனில்நன்றாயாட்டி, கைப்பொருளென்றிதையறிந்துவீரம்பூரம் கருவினிலும்புழுகுகுருவண்டுநாபி, செப்பதிதவகைவகைக்கு ஒருகளஞ்சிக்கூட்டி சிதையசம்பழத்தினிடரசத்தால்மாய்த்தே. (௮௮௫)

வேறு-கவி.

மாயமாயமயனமதாகிடும், வாய்வுவன்னி வருணனுங்கூடினால், தேயதேபசெம்பொன்னிறமாயிடும், பாயபாயபகிரண்ட மளாவியே. (௮௮௬)

நின்றுநாடி நிகழ்த்தமயனமாய், அன்றுநாளுமன் னுள்முழுதாட்டினால், கண்டுசாடி கணக்கொருவீதமாய், பண்டுளங்களி பார்க்கப் பழுமதே. (௮௮௭)

கடலுப்பாவது கடல்நுரைகட்டினால், கல்லுப்பாவதுங் காணுமகத்துகள், செடலவுப்பு சிவகங்கைகூடினால், அவனிமீதினிலஷ்டசித்தாடுமே. (அஅஅ)

மாதுவாலை வாலாம்பிகைதன்பதம், ஏதுநாதமு மேகத்தின்வாறுகாண்; ஊதுந்தாரை யுயிர்காணமுரியால், வாதமுன்னெதிர் வந்தெதிர்நிற்குமே. (அஅ;கூ)

வேறு-கவி.

வெண்மதிநிலவுப்பையறிந்திடும் வேகமென்னவிதுவீரசுண்ணமாம், நண்பெறுமெழுசேவழித்தங்கனை நாடியில்லைரவியினில்காய்ந்ததால், அண்ணலதன்பத மர்ச்சித்துவட்டியில், அடியிருக்கமேலோடுதன்மூடியும், மண்ணதீதமண்சீலைமண்ணேழுமேவன்னியாங்கதிர்வாலையில்வைத்திடே. (அகூய)

வைத்துச்சாவல்புடம்போட்டெடுத்துடன் வானில்குப்பிவருந்தியதுக்குள்தான், சித்துவாதச்செகவசியமதாஞ் சினச்சாக்கறுபத்துடனலதும், பற்றுமில்லாப் பளிங்கதுபோல்நிறம், பாரும்பாரும்பரிகைகூதகன்வேதைகாண், கற்றுமுப்பொருள்காட்டினார்நூல்வகை காணுசொன்றுங்கருதினேனாண்டையே. (அகூக)

ஆண்டுநூறுமடுத்தென்னபாக்கியம் ஆயிரத்தைந்நூறினில்வாறுகாண், கண்டுநூல்கள்கல்லுப்பறியாமலும் காணுங்காணுகருத்தழியார்கள்காண், மண்டலம்வலிமேவாடிகிரிந்ததால் வண்டாகாணும்வகையறிந்தாரில்லை, ஒன்றுமொன்றுஉருவறிந்தாலல்லோ ஓகோபாருமுனதருளாண்டையே. (அகூஉ)

வான்புவிகடல் மண்ணும்விண்ணும்மது ஏனதுக்கிதுக்கேவல்செய்யும்மதாம், நானருள்ஞானவெட்டிக்கதிரொரு நாடிநாடியநான்மறைநூல்களும், பானுமாலி பனையென்றறிந்திடார் ஞானமோதுவர்கிபானசுகாதீகம்; மானுபாவரெனுஞ்சிவமுத்தர்கள் ஆனதால்நற்பொருளறிந்தோதினார், (அகூங)

முப்புமுப்புவென் றோதிய நூல்கள்தான் அப்புமப்புவென்றாறிவார்களோ, செப்பினார்பதினெண்பேர்மகத்துகள் தப்புமோசுத்தசாகாரீரெலாம், அப்புவினருளான துவ்வாறினால் கைப்புமேவிப்பற்றுக்கசடறும், இப்புவிஜெகவிணைசைகொண்டவர் கைப்பையுண்டுங்கருத்தறியார்களோ. (அகூச)

வாரிவாரிமகாராசமாவதால் நீறிடும்நவலோகமும்ரத்தினம், தேறுந்தேறும்வெண் வங்கமொருபலம் சீரதாய்முப்பு சின்னங்களஞ்சி

டை, சாரிசாரிசாரித்துநீறதால் ஆரபாரமதின்கீழ்மேல்பூசியின், நீறி நீறியுநீற்றினமாகிடும் ஆறியுங்கதிர்வாலேரவியதே. (அகூடு)

அந்தரத்கருள்தாமரைமூலிதான் அங்கனேஅரைத்தங்கியும்பூட் டியேல், இந்திரக்கவசங்களுஞ்சிலேமண்ணேழுஞ்செய்துஇரவியில்வை த்தெடுத், தந்திரம்புடக்குக்குடமாமதில் அந்தவங்கமதிநிறவெண்மை தான், சந்திரனொளிபோலும்பிரகாசமாய் விந்தையாமிதுவெள்வங்க ம்நீறுமே. (அகூசு)

நீற்றினல்நவலோகமுநீற்றிடும் நேர்மைநேர்மைநிகரிதுக்கொக்கு மோ, சாற்றினர்குருவெள்வங்கச்சுன்னமாம் தாம்பிரபற்பஞ்சாஸ்தி ரவேதைகாண், சூஸ்திரமிதுசொனனுரகத்தியன் தொட்டதெல்லாந் தொடுகுறியாமிது, பார்த்துப்பார்த்துப்பலபோமயங்கினர் டாடுபட் டால்பலனுண்டு ஆண்டையே. (அகூஎ)

இந்தசுன்னமெடுத்துக்களஞ்சிடை யெங்கெர்தசரக்கெல்லாமி சைந்திட, தொந்தங்கோடிதொடுத்துமிழ்நீரதால் அந்தந்தசரக்காலது மோர்பலம், அந்தமாய்குழைத்தர்தசரககின்மேல் இந்தப்பாகமிதுகவ சஞ்செவியில், கந்தப்பூமலரம்பிகைபொற்பதபங்கைவைத்துத்தெரிசி த்துப்போற்றிடே. (அகூஅ)

பூரணச்சந்திரன்போலொளிவீசிய தாரணைத்தசதீட்சைதவறிடி ல், காரணக்குருகண்டுமகிழ்ந்திடும வீரியத்தாதுவும்விந்துங்கட்டிடுப், காரியமாஞ்செந்தூரத்திற்காயமும் தேரிடுமொருதிங்களுணர்ந்ததால், மாறமாறமதியமிர்தம்மது சேரச்சேரச்செந்தூரமொழிவதே. (அகூகூ)

வேறு-விருத்தம்.

முத்துடன்பவளம் பச்சையும்வயிர முழுவயிடூரியங்கெம்பு, மூ ற்பகப்புஷ்ப ராகமுமிவைகள் முதிர்ந்திடாமரகதத்தோடு, சத்தெனு மஷ்ட ரத்தினமிதுகாண் தனிவகையொவ்வொன்றுடலந்தான், தரணி யில்வேதை சத்துகளிலகுஞ் சந்திரனுப்புவாலதிதம், வித்தெனுங்கு ளிகைகல் தனிலுமொவ்வொன்றாய் விளங்கிடுமுப்புவின்சுன்னப், இது பணவிடைகொண் டருள்பெறஅபுரி விந்துநீர்தனிலிருசாமம், கற்ற வர்கமல பொற்பதமடியேன் கருத்தில்வைத்தர்ச்சனைசெய்து, காரண குருவின் கடாட்சமும்புரிய கனகவேதையுமருள்கூர்வாம். (கூ௱)

கனகவேதையுமா மெழுகதின்பதத்தில் கண்டிடை வழித்துபில் லேயதாட. கருணைகூர்ந்திலகுங் கதிர்முகம்படவும் காய்ந்ததைவட்டி யில்தாக்கி, வினவிதைத்தனை மேல்முடிச்செய்கை விசிதமாய்சீலேமண்

ணேழு. விக்கிரமாய்ரவிதன் சுவாலையில்வைத்து மிகுபுடமைம்பது எருவில், தனமிதுவெனுமே புடமெனுமாறித் தணியெடுத்தனுக்கிரகம் புரிய, சத்துமுத்ததனில் தந்திரனொளிவாய் சங்கற்பவிகற்பமில்லாமல், இனமதாயிலகு மிதயுவரசமா மெடுத்துடனுருக்கினாலுருகும், எவர்செயலிதுகா ணமைப்பிருந்ததனை லெய்திடுமினியுரைப்பதுவே. ()

செழுங்கனலொளிவா மழகுமன்விசிதஞ்செழித்திடும்பவளமோர்பலமாய், தெளிந்தகற்கலுவ மதனிலிவ்வகையை திருத்தமாயூட்டிமென்குருவில், அழுந்தமுன்னிடைகொண் டமுரிவிட்டாட்டி யருளிருசாமமவ்விதமாய், அதைவழித்திலது மெழுகுபோல்வருத லருமுகம்படவருளி, தெளிந்ததோர்வட்டி யதினதையூட்டி சிரமுடிமேலதாய்மேவி, செய்கைமண்ணேழு சீலையுங்கிரமாய் செப்பிடில்சந்ததுமிசைவாய், விடமெலுமருணன் கனலினில்தாக்கி விளங்கிடுமொருவுமன்பதனில், மேலதாய்ப்புடம்போட் டியல்புசத்திறங்கும் வெண்ணிறமதியொளியிதுவே. (௱௨)

ஜெகமெலாநிறைந்த வடிவழகுடைய திருவலர்க்கமலபொற்பதத்தில், சிஷனென்றடியேன் சாம்புவனெனும்பேர் தெக்ஷணாமூர்த்தியின்செயலாய், புகழ்விளங்கதிதம்ராஜரத்தினமாம் பூலர்பச்சையோர்பலமாய், புரையில்லாக்கலுவ மதனிலிட்டுபமாய் பொற்குருபணவிடையூட்டி, அகமலர்வீசு மதியொளிவிளங்கு மமுரிவிட்டாட்டிருசாமம், அதிதமாமெழுகுபதமெனும்வருத லதனைவேவழித்துபில்லையதாய், உகையதாய்க்கதிர்தன் முகப்படஅனலி லுணாந்தெடுத்துடன்வட்டியதனில், உபமதாயடக்கி மேல்மூடிச்சீலை யுருத்தமணேழுசெய்விதமே. (௱௩)

வேறு-விருத்தம்.

அதிவிகக்கதிர்தன் னொளிவதுப்வீச அருணனில்முகம்படஅருளி, அனுக்கிரகப்புரியஐந்துபத்தெருவி லக்கினியலைதுமூட்டி, துதியகத்தீசர் மலரடிபணிந்து தொழுதுடன்தோத்திரஞ்செய்து, தெய்வத்தனலாற்றி பசைந்தசத்தளவின் சுகாதிகமெனுஞ்சொல்லளவிதோ, உதித்தசத்தொளிதாணுவரசமிதுபேருலகினில்நிலவதுக்கதிதம், யோகியாய்ஜெனித்து யோனிதன்வழியி லுற்பவித்தமைத்தவனொருவன், விதித்தவிந்ததனால் தந்தையுந்தாயும் விரும்பிசையோகத்திலமிசை, விளக்குவார்பெரியோ ரவரிருப்பிடமே விடுவந்துரைப்பதுமேலோ. ()

சுகாதிதஞ்சொலவும்ராஜரத்தினமாஞ் சுடரொளியிலகிபவயிரம், சுழிமுனையிலகு மதியெனுமதின்பேர் துகையுளதிதவடியுளதாய், செ

காதிதனைமனைத்து மடிபணிந்தொழுது திருவுளனுபன்றருளால், தேவராயுதிப்ப தரிதரிதுலகில் சித்தராய்ஜெனிபபதுமரிது, தகாதுலகதிதமனிதராகப்பிறந்து தரித்திரஅமிசையிலழுந்தி, தந்தைதாய்செய்கைபூசாபலயோகஞ் சற்குருபபணிவைதவத்தில், யுகாயுகமளவு மனித்தியந்தினந்தின மொழிவதுமுலகினில்வாழ்க்கை, உடலுயிர்வளத்தி நாதவிந்துளதா யொருவனேயுலகெலாம்படைத்தே. (௱௫)

விருத்தம்.

வயிரமொருபணவிடைகாண்கலுவத்திட்டு மகத்தானகுருவில்பணவிடைதானூட்டி, சயிலமெனுமுதகமாஞ்செய்நீருகும் தனைவிளங்கமதியமிர்தசலத்தாலாட்டி, அயிலவிது அறிவாரோஆண்டேகேளீர் அதமெழுகுபோல்மபனமதுகாணெய்தல், குயில்மொழிமாதம்பிகைப்பெண்குறித்துச்சொன்ன கூறதனாலிருசாமங்கூர்வதாமே. (௱௬)

கூறினதோர்மெழுகெடுத்து சதிரப்பில்லை குறிப்பாகசெய்துரவிமுகத்திலூட்டி, வீரியமாயிரவிசுடவட்டிக்கேற்றி மேலொருதன்வட்டியதுமிகவுமூடி, தெரியசந்துவாய்புதைந்துசீலையேழு செய்துகதிர்முகம்படவுஞ்செலுக்கிமேவி, நெறியுடையவைம்பதெருப் புடத்திற்சந்து நிகரில்லாவச்சிரத்திசேர்மையாண்டே. (௱௭)

நிகரில்லாசந்ததுவினொளிவோகோடிநிலைவதித துய்யநிறமதியோகோடி, சுகவதிதவஜிகரவைடூரியச்சத்து தொட்டகுறையிருந்ததனால் சொல்வேன்காணும், திகம்பரவைடூரியத்தில் பலமொன்றிட்டு சிவகுருவில்பணவிடைதானேக்கத்தாக்கி, அகமானஅமுரிவிட்டிருசாமத்தில் ஆடையிலுமெழுகுபதமாச்சுதாண்டே. (௱௮)

கண்டுமெழுகெடுத்துசதுர் சீராய்வாலைக் கதிர்முகவன்சுவாலைபடக்கடிசதானல், நன்றுதனிவட்டியிலுமடக்கிவட்டி நடுமூடிசந்ததுமண்சீலையேழு, அன்றிரவிமுகம்படவும் ரவியில்வாலை யைம்பதெருப்புடந்தனிலுமடக்கிவன்னி, வென்றுபுடமாற்றியெடுத்துடைத்துப்பார்க்கமிகவும்வைடூரியத்தின்சத்ததாண்டே. (௱௯)

தரணிதனிலிதையரிய பெரியோர்சொல்ல சாற்றினேனிதையெடுத்துப்பதனமபண்ணி, குறைவதுவந்தெய்தாமல் குருவைப்போற்றிக் கும்பமுனிதிருவடியைப்பணிந்தயானும், மறைவுகளில்லாமலிந்நூல்ஞானவெட்டி வசனிதேனுயிரத்தைந்நூறுக்குள், துறைகோடிமுறைகோடிதொந்தங்கோடி தொட்டதெல்லாம்பலிதமெனுஞ்சொன்னூராணடே. (௱௰)

பூரணச்சந்திரன்மதியைவிதிக்கப்போமோ புஷ்பராகத்தினுடசத்துநேர்மை, காரணத்தைமனதிலுன்னிக்கவலைநீக்கிக் காசினியோர்செய்தொழிலில்கருதார்மேலோர், வாரணமாமுனிவரெனுங்கெட்சஞயன் வரத்தாலுந்திருவள்ளுவன்வசனகாவியம், ஞானெனுமதிவீரஞானசிங்கம் துரைசாமிபிரமசிஷ்டிசூக்ஷமாண்டே. (௯௧௧)

சூக்ஷாதிசூக்ஷமெனும்புஷ்பராகம் தூக்குமொருபலமாகக்கலுவத்திட்டு, பட்சமெனக்களித்தகுருபாகமபோற்றி பரிகுருவில்பணவிடைகொண்டமுரிபாலும், தட்சண பூமிருசாமமிடைவிடாமல் சாதித்துஆட்டிவழித்துண்டையாக்கி, யிட்சணமுஞ்சதுரடைபோல்பதமாய்வாலே யிரவிமுகம்படவுலரவெடுத்தாலாண்டே. (௯௧௨)

வலுவானவட்டிதனிலடக்கிமேலும் வட்டியதுமேல்மூடிமண்ணுஞ்சீலே, விலுவாகசந்துமண்மேலுமூடி வெகுவாலோவியதனில்விளங்கமேவி, செலவாகாகெருவதுகேளஞ்சுபத்து செவந்தவன்னிமூட்டிகனலாறிச்சென்று, பெலமானசத்ததுதானபெரியோராலும் புவியிலமைத்தவர்களுக்குப்புதுமையாண்டே. (௯௧௩)

சத்ருகளின்சித்து அறுபத்துநாலும் தமிழ்முத்துக்கொப்பானவெள்ளேடில்லே, கற்றவர்கள்பழிப்பவரோசவிக்கொவ்வாதால் காரணத்தையறிபார்காண்மற்றபேரும், முத்தர்நவசித்தர்மற்றுள்ளோரெல்லாம் முனிவனெனப்புகழ்ந்தேத்துமுதல்வரான, வித்துவானுயுதித்தாற்கிடைத்ததேது விந்துதித்தோனவர்செயல்வாழ்விதித்ததாண்டே.

கொச்சகம்.

ராஜாத்தினரதிதான் ரத்தினத்தில்கோமேதகமாம்
பேசுவரிதோபெரிதோ பேருலகிலாரறிவார்
தேசமதிலும்மனந்தஞ் சென்னிதனிலும்பலங்கொண்
டாசைவைத்துபாடுபட்டா லாண்டையமைபபதுவே. ()

பாரிலிருந்தேயுதித்த பண்டிதரேயுங்கள்புத்தி
தாரிதனிலேமயங்கி தாபந்திரியப்படவோ
நாரியர்தன்கையிலகப் பட்டபுலிப்பூனையைப்போல்
ஊரிலிருக்கும்நரி யுபாயமதாய்வாழ்ந்திடுமே. (௯௧௬)

விருத்தம்.

கலைபரவுமம்பிகையோவாலைதேவி கருணையெனக்கருள்புரிந்தகாக்ஷியாலும். வலுத்தன்னிக்கலுவமதில்மருவுமுப்பு வகையதனிலொருபலங்கொண்டமுரியூட்டி, கிலேத்துவிடுமயனமெழுகதுபாகத்தில் நிக

மூ'மல்சதுரடையாய் நிகழ்த்திவாலே, கலையதுவுமுருகிபனி ரெண்டு மோடில் காந்தியொளிபடவும் ரவிகடிசதாண்டே. (௫௧எ)

கலித்துறை.

கெடியானவட்டி தனிலூட்டியேவி மேல்மூடியதும்
அடியானசீலே வலுவேமூசெய்து அருணன்முகம்
படவும்படமெரு அஞ்சுபத்தோர்புட மாறிபபின்
தொடவுமதித கோமேதகச்சத்து சோதிப்பதே. (௫௧அ)

மரகதவாலே பரிபூரணத்தின் மலரடியில்
வரமேயளித்த குருமுனிபாத மடிதொழுது
நிறமேமரகதம் பலமொன்றுபார்வை நிதகதருவிர்
சரமேவியபகங் கலுவத்தினிலிட்டுத் தாபியுமே. (௫௧௯)

சற்குருவிந்து நாதமுங்கூடி சருவினதால
வற்கமுப்பொருளின் பணவிடை கூட்டிமதியமிர்தம்
முற்கமதாக பிருசாமமாட்டி முன்பமதால்
உக்கந்தவிர்ந்து சதுரடைசெய்து உலர்த்திடுமே. (௫௨௰)

கதிர்கோடிவாலே ரவிசூடுபட்டு கடிசதுவாம்
பதிமேவிவட்டி மேல்மூடிசெய்து பாகமதாய்
மதியேமுசீலே மணபூசிபின்பு வைத்துபதம
மிதமேவுவைப்ப தெருச்சூடியேவன்னி வீசவுமே. (௫௨௧)

வெண்பா.

மரகதமாஞ்சற்று வானிலெழுமில்லே
திரமிதுகாண்பதமைது செப்பினோம்-மரகதத்தில்
ஊரினிலுண்டாய்ந்து உத்தசெய்திபாடுபட
சாரிவரலாங்கடல்சூழ் தான். (௫௨௨)

மாலின்திருவாலிலகு மாதவத்தோர்கண்டறிந்த
ஆலிலேமேல்பள்ளிகொள்ளு மாயன்-மாலின்திரு
அவ்வெழுத்தும்பேசு மறிவாலறிவறியும்
உவ்வெழுந்தாலவாய்மூடு வோம். (௫௨௩)

நீலமாணிக்கமது நின்பலமொன்றுயிடை
வாலேதுருபிடைபணமாய் வாக்கி-நீலமணி
புரையில்லாக்கலுவமது பூட்டிவிந்துநீரூட்டி
உரையமெழுகிருசமமுணர். (௫௨௪)

மபனமெழுகு மதியமிதநீரூட்டி
வயதிருகுறையாதிடைக்கு வன்னி-மயனமெழு

சதிரிடைபோலிலகுந் தனுகதிரோன்தள்முகத்தில்
பயமதுகாண்வாராது பார். (௬௨௫)

மண்வயிரவட்டி வைத்துமேல்வட்டியதும்
நண்பதிதண்சிலை நாட்டி-மண்வயிர
ரவியில்முகம்படவு நன்னயமாயைம்பதெரு
திரவியம்மாவன்னியயதுஞ் சேர். (௬௨௬)

மாறிகனலாற்றி மாறிசத்துநீலமணி
கூறுமாணிக்கமதுக் கொவ்வாது-மாறுகனல்
வித்துநவசத்து மிகவுமொருசுரூபம்
வைத்துகுருபணவிடைகா ணுண்டே. (௬௨௭)

அமுரியுடன்றேங்கு அதுபத்துக்கொன்றுயிடை
கமுரியுடனூட்டிக் கருங்குகையில்-அமுரியுடன்
கதவானசத்ததற்குக் கருதிமயம்ரேகித்து
பதனங்குகைமுக்கால் பார். (௬௨௮)

வேறு - கவி.

ஓடுகுகைசிலைவயல் காடுகளின்தோறும், நீடுமிருவஞ்சுகர கால்களதின்வாறும், தேடுநிலமண்வளைகள் தோறுமெடுமூடி, கூடுகுகைசந்துபிசைந் தாடும்ரவிசூடே. (௬௨௯)

கொல்லனுலையில்லற மடக்கமிகவூது, வெல்லலாமிதற்குவித மூன்றுவிசையேற்று, வல்லமையிதற்குவடி வானநவரத்னம், சொல்லயெளிதோவதனின் சூக்ஷமறிவாரோ. (௬௩௦)

வெண்பா.

சூக்ஷமிதுக்கின்னஞ் சுகாதீதமாய்போசனங்கொள்
வாசமலர்வீசும் வச்சிரதேகம்-சூக்ஷமிது
பச்சைமாணிக்கம் பருமணிபோலுண்டையதாய்
வைச்சபொருளாண்டே வயசு. (௬௩௧)

பச்சையிதுரத்தினம் பட்டவெளிப்பிரகாசம்
சத்துளவரசமிதுகா ணுண்டே-சத்ததுவும்
ஆற்றதுகாண்களிம்பு அறுபத்துநாலுமது
செத்ததுகாணமுரிடினுல் சீர். (௬௩௨)

வேறு - கவி.

சத்துகவரத்னமிது ;எத்ததுமுடைத்து, வித்துகுருசன்னமதுவீரமணிகூட்டி, யெத்ததுமதிப்பிறையின் விந்துநீரிலாட்டி, ஒத்தொருவிநாடியினி லெத்துகுகையாண்டே. (௯௫௩)

ஊதியெலிகாரமிட வூதவுருகுங்காண், வீதமொருகிண்ணிகுகையேவுமெழுகூட்டி, வாதிகருமூடிகரு பண்ணதுவினாலும், தாதுவடிகட்டிவருஞ் சத்துமிதுவாண்டே. (௯௫௪)

கிண்ணமதில்சூதமொரு சேருவதிலூட்டி, வண்ணதிருமேனிரசம் வாங்கியதில்சேர்த்து, கொண்ணைசரக்காமதுவினாலுங்கடையச்சேர், வெண்ணிறமதாகிரச வெண்ணையதுவாமே. (௯௫௫)

வெண்ணையில்வெங்காரமிட விராகனிடையூட்டி, கன்னின்மணிபோலவுங் கருங்குகையிலிட்டு, கிண்ணியதுவேகம்பட ரத்னமிதுதங்கம், மண்ணினுடகாவலரை வாள்பகர்வளாண்டே. (௯௫௬)

மூச்சையிலடக்கிபுமி மேலுங்கரிதாக்கி, மூசையிடவூதியிடு உண்மையிதுகண்டாய், வாசமலரம்பிகைவாலாம்பிகையைப்போற்றி, வாதரசசூதமணி வாலையருளாண்டே. (௯௫௭)

இம்மணியும்பாலிலிட எண்விதநீர்வாங்கும், அம்பலர்கடாக்ஷமதுளாயிரத்தெண்மாற்று, சம்புதிருவள்ளுசதாசாம்பவனுமாகில், அம்புவியில்வாதிகளறிந்துவழிகாணேன். (௯௫௮)

காரியெனும்வங்கங் கருவங்கமதுசேர்தான், வாரியபச்சட்டியிடுவட்டியதுமூடி, நாரியர்சுரோணிதம தாகுமுருவீயின், சீரியரசத்தையிடு சேருக்கொருபலமே. (௯௫௯)

வேறு.

வங்கசலநீருவி யூதிவிடவுருகும் வாங்குமரசசூதமணி வாலைரசமாகும், ஓங்குமுனைகுப்பியி லுருத்திரசவாதி ஒகோபுவனங்கள் மயலோகமயமாண்டே, யெங்குமதிதீபவொளி சூழுமுனைமீதில் ஐங்கரன் பதக்கமல செங்கதிர்விலாச, மங்களமிவைதொழி லுரைத்தபரிவேதை தங்கரசவங்கமிது சாக்ஷியறியாண்டே. (௯௬௦)

வெண்மதிவெண்வங்கரச மேவுமயத்தாடி வித்துஒரு சேருருக வெண்சாரணைமூலி, உண்ணுமரசமோர்பலமதாகவிடுவீர்காண் ஒடுருக ஆடிசலமோடியதுபாயும், கண்ணுமரசவாலையது சூதமணிபட்டமெ

ண் ணுவிடுஞ்சத்தசல வெள்வங்கநீறுலும், கொண்ணுவிடுமேகுளிகை கோடிபரிவேதை குற்பியிலடக்கிரசங் கொண்டிடவுஞ்செய்யே. ()

இந்தரசமாமதுவு மேமரசமாகும், அந்தரசதேய்வுஇடை ஐயமதிருபத்தும், இந்தகுகைதன்னிலது நீரதுபோலாகில், அந்தமதிவங்கமோ வராகனிடையூட்டே. (கூசஉ)

ஊட்டியுமியூதியெடு பத்தரையுமாகும் ஓடுமிரசிதமெனுமோண்ணரையுமாகும், காட்டியவெண்வங்கரச முப்பதொருவஞ்சும் காட்டையில்வராகனிடை கனகமதுவாண்டே, ஏட்டினில்விதிப்பதனுபோயெருளாலும் எட்டியிதுபத்தரையு மேருமயமாகும், நீட்டிடுங்காரியசல சூதரசவேதை நாட்டினிலுமுண்டுரச நன்பரிசுப்புகையே. ()

புகைக்குஉமிசூதரச வங்கமிதுகோடி பொன்மயம்வராகனிடை போடுங்கருநீரு, துகைக்குப்பதினுயிர மணங்குஇடைதேய்வு சூக்ஷமிதுசூதமிது சூதுமிதுசொன்னேன், நகைக்கரசவாதமிதுக் கேவலது செய்யும் ராஜர்களுமாடுமகிழ் ராமிவர்க்கமைத்த, வகைக்குகவலோக பரி தங்கமயமாகும் புகைக்குலிகருண்டோசெய பூபதிகாணுண்டே.()

வேறு.

கிண்ணமதிலன்னமொடு ஆவினமிர்தங்கள், அன்னமருசுவையுமொடு அதிதவகையெல்லாம், இன்னவகையுள்ளசட மென்னநிறையாகும், வர்ணபரிதங்கவொளிசொன்னேன் தொழிலாண்டே. (கூசரு)

அமுரியிதிலுண்ணசட மாக்கையழியாது, அமிர்தவொளிமதியுங்கதிர் வழலையதினுலும், அமிர்தரசபானமுறு காயம்பெலமாகும், அமுரிரவிமதிதரச வேதையொடுவாமே. (கூசசு)

கற்பமதிலுண்ணசட சொற்பமதுவல்ல, விற்பகவினோதரசபானமதினுலும், உற்பகநரம்புதற நாடிவலுவாகும், இப்பொருளறிந்தவர்கள் கற்பனைசெய்வாரே. (கூசஎ)

அக்கினிமிகுந்துவள ரந்தமதுகோடி, திக்கினில்சித்தாதிகளுஞ் செய்கையுணர்வாரோ, கைக்கணியிதற்குமணி மந்திரமறிந்தால், அக்கரையுந் தாண்டியனுக் கிரகம்பெறுவாரே. (கூசஅ)

முப்புவுமறிந்துவுரை தப்புமோகைபாகம், இப்படியுடற்குறியுஞ் செப்பிடுஞ்சகஸ்திரம், சொற்படியுரைத்ததிரு வள்ளுவனுணர்ந்த, இப்புவியிலும்மறிவ ரெந்தனுரையாண்டே. (கூசகு)

வேறு - கவி.

ஆடலாங்கட லுப்புவினுல்ரசம், காடெலாமுடல் காந்தமலரி னுல், ஓடெலாம்ரச வாதிகள்தேடினும், வீடெலாம்வெளி வேதைக்கு ருவதே. (கூ0)

உப்பென்றுலுரு வானஉப்பேதுகாண், செப்பினுர்தெட்சணுய னருளினுல், கைப்புமாறிக் கடல்நுரைகட்டியும், வைப்புகாண்கடல் வாரிக்கல்லுப்பதே. (கூக)

காந்தமாமலர் காட்டினிலுப்புகாண், ஆய்ந்துபார்க்க அடிமூல சுன்னமாம், மாய்ந்துமாய்ந்து வரும்புளிமாறினுல், தோய்ந்துஅப்புவு ந்தோய்ந்ததுசொக்குமே. (கூஉ)

அமுரியுப்புமப் பூவுங்கடல்சலம், அமுரியுப்பு மடிமூலம்புக்கினு ல், அமுரியுப்புமம் மண்ணதில்பூர்க்குமாய், அமுரிமூல மதிதசுன்னங் களே. (கூங)

காந்தமாமலர் கதிரெனுஞ்சூரியன், ஆய்ந்துபாரு மதுபுளிமண் ணுதான், சேர்ந்துதாள்கட லுப்புவுங்கூடினுல், ஈந்துதானு மிதுநிக ரில்லையே. (கூச)

காடுகாடுகொடென்றுலறிவரோ, காடுதான்கருகண்டமகத்துகள், வீடுவீடுவீடென்றுலுன்னுக்குள்ளே, நாடுநாடெலாம்நாடித்திரிவதே.

வறுமையேன்வரும் வகதிகாளுங்களுக், கருமையில்லைகாண் கல் லுப்பறிந்ததால், உருமையாய்உரு வானகல்லுப்புதான், சிறுமையே ன்வருஞ் சித்தர்சொள்ளுர்களே. (கூடு)

வேறு-கவி.

இடைபின்மேவுகளை சுழியிலங்குமதி யிரவிசூழுமணி முடியிணி ல், விடபரங்கிரியி லமிர்தஞானசுக வெளிகடந்துஒளி மேவியான், ச டைமுடிமகுட மலர்பொழிந்தருளில் தற்பரத்தினடி தொழுதுயான், நிடதராஜயோக வாலைகுண்டலியி னிருவிதாளடிமை பணிகுவாம். ()

மகிதலங்கருவூ ரிலகுராடியல்புகழ்வாரிசூழ்மதுரவேணியில், அ கிலமேவுந்தி சந்திரபுஷ்கரணி அமிர்தமாமதிதன்ரவிபதம், பகிரதிகள் திரு நடனபொற்கமல பாதபங்கயமு னாடியான், கெவுனசூக்ஷ சடா தரமேவி வளர்கெதியில் நின்றுதொழு தேற்றுவாம். (கூஅ)

மருவுஞானவொளி மதிவிளங்குமணி மலர்முடிக்கமல மீதினில், கருவூர்நாடுதிரு நடனகாயபுரி கருணைஞானதமிழ் பொழியவும், திரு

வருளமிர்த ஞானவெட்டிதெளிந் தோதியானுமிவை கூறுவாம், இருள் விளங்குமனுக் கிரகசோதியரு ளென்னூலின்மொழியை யோதுவாம் (௯௫௯)

பொதிகைமேவுமகத் தீசராலெனது போதஞானதமிழ் வாக்கியம், மதிவிளங்கும்ரவி சுடர்பதம்ரவி மலர்பொழிந்துதொழு தோதினன், விதியிருந்துமதி பாலுணர்ந்துவிழி சுழியறிந்துதமிழ் பொழியவும், பதியஞானபரி பூரனத்தினடி பாதபொற்கமலம் பணிகுவாம். ( )

சண்டமாருதக் குழம்பையானருள சனகனாதிபல முனிவரும், அண்டர்கோனருள பதினெண்பேர்கள்மகி மாயிரத்தைந்து நூறதும், தெண்டிரையுங்கடல் மேறுதோறுஞ்சிவ ஞானசித்தர்கள் புகழ்ந்திட, கண்டிரோசெகதி மானுகாளுடலில்காய சித்திகுழம்பாண்டையே.

தன்னைத்தானறிய சண்டமாருதமுஞ் சாம்புவனருளுஞ்சார்புவி, மன்னர்மண்டலிக ராஜபூபதிகள் மகிதலத்தினிலும்வாழ்பவர், உண்ணுங்கற்பமதுக் கொன்றுகோடிபல ஊழ்வினைக்குமிது அவிழ்தமாம்,வென்றிடும்வினையை வேதையாமிதனில் வெகுவிதப்பிணிநோய் விடுவதே. (௯௬௨)

மூலசுத்திபிதில் மும்மலங்களறு முன்னோர்சொல்லுங் கரிசாலைதான், வாலையாகும்ரச வாதமும்வருதல் வானோர்சொல்வதும் வல்லரையேன், காலைமாலையதுங் காரசாரமுணர் காயசித்தியாங்கற்பமாம், சோலைமாமலர் விலாசுவாசமெனு சூக்ஷசூக்ஷசடாதாரமே. (௯௬௩)

சண்டமாருதக்குழம்பு-தரு.

சண்டமாருதக்குழம்பிதுகாணுமென்னாண்டேபிர
சண்டதேகமொழிந்தேவச்சிரதேகமானன்றே.

அண்டாண்டம் வானத்தளாவியமாமலைசூழும்-வேணி - அற்புதசந்திரபுஷ்கரணிதீர்த்தம்வாழும்- கதிர், மண்டலமண்டரண்டங்களுலாவியவாசி- மதி- மண்டலஞ்சூடியமாமலர்ஞானோபதேசி- சுழி,நின்றிலகுந்தென்பொதிகை வளர்தெக்ஷணையன் - செகம் - நீடுலகும்புகழர்ச்சித்துபூசிக்குநேயன் - அருள், கண்டுபொற்கமலபாதபங்கயத்தைநாடி - பிர - சண்டமாருதக்குழம்பையருளுவேன்தேடி, (சண்)

பரமண்டலமண்டரண்டங் களும்பேதித்துப்போடும் - ராம - பானத்துக்கும்பின்னிளைத்துப் போகாமலுஞ்சாடும் - சர, மண்டலங்கட்டியறுத்திடலாந்திவ்விய அஸ்திரம் - சார - காரத்தினாலறுபத்துநால்

வருமெம்மாத்திரம் - சுர, பாணத்தினல்மேகந் தீவுதீபாந்திரமேகும்- சேத்துமந்தொண்ணூற்றுதுபொருபக்ஷத்தில் நீறிப்போகும் - கரை. காணப்பிரசண்டத்தைச் சொல்லஎன்னுல்வெள் ளொடில்லை - கர்மநோய்கள்நூலைந்து வச்சிரதேகமாங்கல்லே. (சண்ட)

வெள்ளிங்காண்விண்ணவழிப் பறந்திடுந்தங்கம் - மேகம் - இருபத்தொன்றுந்தூசிப்போல்பறந்திடுஞ்சிங்கம் - வருங், கண்டமாலைக்ஷயகாசமரோசிகங்குன்மம் - குத்தல் - மண்டையிடிமதுமேகமகோதரந்தூண்பம்வாய்வு, அண்டவாதமரையாப்புகர்ணிகமூம்வயிறுநோய் - நெஞ்சு - தொண்டைவலிதொடை வாழைபவுத்திரஞ் சுரநோய் - புகை, கொண்டுபுண்புரைகளண்டப்புற்றும் யோனிப்புற்றும் - குடல் - வாதஞ்சந்துவாதங்கன்னப்புற்றும். (சண்ட)

சூதங்கெந்தியரிதாரமனேசிலைபூரம் - கெவுரி-சூஸ்திரநாபியிருவிஷவிஷம்லிங்கம் - பத்தும், சோதிமீரைஞ்சுவராகனிடை கொண்டு சிலைகபிறு - தொங்கவிட்டுப்பாண்டந் தோளாந்திரமெனும்வாலை - அமூரி, விதநாலுக்கொன்றுமலைப்புளியெனுங்காரஞ் - சினம், வெங்காரம்பூநீர்வெடியுப்புதேனுப்புச்சாரம் - பானம் - வேதையுப்பு அப்புவிந்துடன் மேனியுருவி - வளையல், மேவுமீரஞ்சு விசிதமறிந்தருள் போற்றே. (சண்)

லவணமீரஞ்சுமிடைசரக்கவ்விடைதூக்கி - சாரங் - கவனத்துடன்காரநீர்தெளித்தேயன்னீர்தாக்கி - இன, மவுனத்துடன்காரசாரத்தில்நீறதில்பூட்டி - உப்பு - லவணத்தைப்பொடி செய்துநாதவிந்திலூட்டி - பாகங், கெவுனத்திலும்பாண்டங் கேசரமாகவுஞ்சாற்றி - வாலைபுவனையெனும்பதம்போற்றித் தோளாந்திரமேற்றிசு - கனல், கவனமதாகநீர்தொக்கிடவன்னியைத்தாழ்த்தி - சோதி - கமலப்பிரகாசஒலிவுவரும்பதமாற்றி. (சண்ட)

பார்த்துவரும்பதம்பாச்சிப் பீங்கானதிலகாரம் - பின்னுங்-கார்த்துக்கதிரவன்வேகம்படஒருவசரம் - இதை, சேர்த்துவைத்திடுஞ்சர்க்கரையைப்போல்வரும்பாகம் - மருந் - தேத்துந்தோளாந்திரமெடுத்துமேவிடும்வேகம்-ரசம், வேற்றுமையில்லாமிகவுமேன் மேல்சுற்றிப்பாரும் - மெழு - சேத்துஞ்சரக் கதிதங்களனைத்துமேதேறும் - அருள், சாற்றிமதிமலர்சற்குருமாமுனிபாதம் - வகை - நீற்றுஞ்சரக்குவிகரிதுக்குத்தொந்தபேதம் - புகழ். (சண்ட)

வாதமடக்கியுந்திப்பிலிசுக்குடனேமம் - வளர் - சீரகம்ரெண்டு அரத்தைப்பறங்கிக்குரோசானி - கடுகு, வீரம்வராகனிடை பொன்னிறம

தாய்மேவும் - கனல் - நீதமதாய்பதமாக்கசரக்கிதைவெதுப்பும் பின்பு,
பேதம்வராமல்பொடியிலக்குமாட்டியிடித்து- ஆண்டே, சேதம்வராதெ
ந்தன் டுசய்பதங்கள்வரமுடித்து-மேலும், நாதவிந்துகருவூர்வளநாட்டி
னிலிலகும் - வேத - ஞானமொழிநன்னூ லாயிரத்தைத்நானுமாய்ந்
தோ - ரிது, (சண்ட)

அதிமதுரங்கோஷ்டங் கடுகுரோகணிகடுக்காய் - சிங்கி - அக்கா
காரமாவாரையுங்காக்கலஞ்சிவதை - பிதுர், துதியிரஞ்சுமெடுத்துப்
பொன்வறுப்பாய்தொடுத்துப் - பொடி - விதித்துவடித்துகஸ்தூரிகுங்
குமமங்கரயம் - பச்சை, மதித்திடுங்குரோசனைவகையிதுவஞ்சு-மகிழ் -
வதிதமொன்று வராகனிடைவகைக்கொன்றுவளங்,கதித்திடுமுன்பே
லபொடியதுஞ்செய்துபாகம் - பதங் - கச்சூருந்திராட்சிபனைவட்டுத்தே
ங்காயின்கரியும் - இவை. (சண்ட)

பொருந்துமம்பிகைப்பொற்கமலபதம்பணிந்து - வாளம் - மருந்
தைச்சுத்திவசப்படுத்தி அவ்வகையில்-பதம், இருந்தமருந்துமிவ்விடை
யைம்பதுவராகன் - நெடுந் - துருந்தமாகத்தொடுத்துசற்குருவைத்தொ
ழுது - சுகம், விருந்தமுன்மருந்தருந்திடு நாறுமாச்சுபற்பம் - விராகனி
டைசெம்புவெண்ணிறமாகவும்பாச்க - குரு - புருவத்தினடுசுழிமுனை
மலர்சொரிந்து - புகழ், புனிதமாமெனுங்குளிக்கல்லதனில்பரித்துசெ
ய்கை. (சண்ட)

கோமட்டிமாதளம்பழத்தின்ரசம்விடுத்து - இனை- குழுக்கிடா
மனுமூன்றுநாளாட்டிமயனம் - பெரி, யாமணக்கின்வித்தில்தயிலமாம
துமிறக்கி - அருள் - அத்தயிலம்விடும்பதமாயாட்டிடுமுன்போல் - இ
வை, பூமணக்குங்கருநொச்சிவெள்ளறுகுதுளசி - புனல் - கண்டுபொ
ற்கையான்வல்லாரைகரிசாலைபிரமி - சங்கு -ஏமரசமறிந்தெலுமிச்சம்
பழரசந்தான் -இதை,பிணைவிடாமல்வகைக்குமூன்றுதினமருவி,(சண்)

வகைக்கொன்றுவிதமூன்றுநாளிராதுமூலி- செய்கை - வகையதா
புணர்மூப்பத்தைந்துநாளாட்டியும்வழித்து - இவை, நகைகணக்கறிந்
தொருமனதொன்றுசுகமாய் - பின்னுந் - துன்பம்வராமலுமின்பசை
யோகவைராக்கியம் - மயல், நகைநகைத்துமினுக்கிக்குலுக்கள்வாசம்-
மேலும் - நாடிநாடிடாமலும்ராசயோகர்தனில்நேசம்குரு உகையித்
த்குவாலாம்பிகைபாதமென்னுண்டே - தொழு, துள்ளங்களிந்துடன்
வள்ளலெனும்பதம்போற்றி. (சண்ட)

சண்டமாருதக்குழம்பைவழித்துச்சிமிளில் - ஏனஞ் - சார்வாய்
வெருபந்தனங்களடைவாய் நெற்பாண்டம் - மறை, மண்டலம்வைத்

துவாலாம்பிகைபொற்பதம்பணிந்து - வரும், வல்வினையூழிமகாசுரஞ் சன்னிகள்மாந்தம் - பாலை - தண்டிடுமுக்கல்பிரளியுமள்ளுடனிசுவும் - மிக, கக்கல்கனுத்தகிரகதோஷடிங்கவ்சி - வலி-நின்றிடுமூர்ச்சையும்விக்கலுமேப்பமுமிரைச்சல் - ஊஷ்ணம் - வெதுப்புமதுப்புங்காக்கவலிய துங்கொறுக்கை. (சண்ட)

குமரகண்டவலி யக்கினிமந்தமுங்கொலைநோய் - குடி - கெடுக்கும்வாய்வினால்முடிக்குக்கடிப்புப்பிடிப்பும் - இவை - திமிருடன்தசவாய்வுமெழும்பிடுங்குழம்பு - கிண்டி, திப்பிலிசுக்குடன்மிளகுந்தேனைவிட்டரைத்து - அதில் - சமரசமெனுங்கூட்டிக்கழஞ்சிப்பிரமாணம் - உண்டை, தனையதுக்குள்குழம்பிட்டுத்தாக்கிடுநோய்க்கு - ரவி - அவுழ்தமிதுவெனுங்காலையில்நோயதற்கருது - மிந்த, அவிழ்தமூட்டிமுன்னமும்வேம்புடன்பத்திரி. (சண்ட)

அகாரஉகார ஓங்காரமூன்றெழுத்தினாலும் - மத - மாகும்பிணிநோயகன்றுவிடும்படிஅதமாய், சிகாரவகாரநகாரமவ்வெழுத்தும்- செபிதெளிந்துடநூற்றியெட்டுஓதிடுமுபமாய், விகாரமதாகியநோய்கள்பறந்திடுஞ்சுகமாய் - விதி - மேவிஅவிழ்தம்விளங்கிடுமஞ்சுநாளகமாய்- காலைசுகாதிதசுகமொருவேளைகணக்காய்சொன்னோம் -தொழி - லாளியானால்மணிமந்திரமெனுமவுழ்தம். (சண்ட)

பிரசண்டமாருதபேதாபேதம்பிறித்தாண்டே - சொல்லும் - பெரியோர்வரப்பிரசாதகத்தாலிதுகண்டே-பிணி- குறைவாராதுகாண்பதிரியமிச்சாபத்தியம் - குலை-குலைந்துநோய்கள்போங் குணவல்லியமிந்தகுழம்பு - பின்புதிரையில்லாமலுஞ்சுக்குடன் திப்பிலிமிளகும் - வென்னீர், தினுசதைக்கொண்டுசுரசமாமதில்தேனுங்கிண்டி - பரவசமிதுஅவுழ்தமுங்கொண்டுபாச்சி - பரி - பூரணமாகவுங்காலையிளஞ்சுநாள் முன்போலருள். (சண்ட)

வாலப்பருவம்வருமளவில்வந்தகுன்மம் - மதி - மயங்கியுங்கடல்புக்கிடும்பாரிதுபரிக்ஷை - பின்னும், மாலைப்பருவமதுநாலும்பத்துடன்சென்றால் - வஸ்து - பானத்திலுங்குழம்பெடுத்துக்கிண்டிபிட்டேட்டி - இன்பச், சோலைமறப்புடைகொசுவுத்தேனதில்பாச்சி - சூலைபதினெட்டுக்குன்மமெட்டும்பறந்தோடும் - சொல்லும், வேளைவிழிமடமாதுசூதகத்தினோய்க்கு - மிது - விடுமந்தப்பாகமேதினியோர்களுக்காமே

கொச்சகம்.

வேல்பொழியுமாது வின்பரசவாலையருள்
பாலுமெனக்கூட்டிமதிபான மிர்தமேபொழிய

ஞாலமெனுஞானவெட்டி நன்னூல்விதியாய்விளங்கும்
ஓலமிடுமெம்பிரகையை யுள்ளுணர்ந்துகண்டேனே. (௧௬௪)

தேனருவிபாய்ந்துசலந் தேங்குமடையோங்கிவளர்
வான்பொழியுநாதவிந்து மார்க்கமிந்தவாறசனால்
நான்மகிழ்ந்துநோய்தனக்கு நாட்டிவிலைவோர்க்குமிது
ஞானபண்டிதர்க்குவிள்ளும் ஞாயமிதைக்காண்கிலரே. (௧௬௫)

கலித்துறை.

பதினறுகண்ணி மதிரவிசூழும் பாடலையான்
விதிவாயின்மூல விவேகததினலறி விட்டகுறை
அதிவீரஞான திருவள்ளுவன்மொழி யவனிதனில்
நிதிமேவியதன மளித்தாலுமிந்நூல் நிகழ்விலரே. (௧௬௬)

கற்றுலுஞானக் கருத்தறிந்தோர்கள் கமலபதம்
பெற்றலுஞசித்திப் பேரின்பக்கல்வி பிறவாமுத்தி
வைத்தாலும்வெற்றி மருவியவர்பதம் வணங்கவும்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர்தந்த திரவியமே. (௧௬௭)

வெண்பா.

கண்டீரோபண்டிதரே காலைதனில்கிண்டியது
சண்டமாருதக்குழம்பைச் சாற்றினல்-எண்டிசையில்
சிரகமாங்கஷாயத்தில் தேனும்பஞ்சதாரையிட்டு
நீரதுவுநாள்மூன்று நேர். (௧௬௮)

நீர்ச்சுருக்குநீர்க்கடும்பு நீரடைப்புநீர்சுரப்பு
பாரதிதமேகமதும் பட்டுப்போம்-நீரதனல்
நிம்பப்பழத்தினுட னீரதுவிட்டூட்டியபின்
கம்பிதர்திமேகம்போங் காண். (௧௬௯)

வாதமுதல்வாய்வும் வரும்பித்தசேத்துமங்கள்
மாதவிடாசூதகமு மாண்டுபோம்-கோதையே
அவரைதொவரை அரக்கீரைத்தூதுளங்காய்
விரையில்லாக்கத்திரிப்பிஞ் சாம். (௧௭௦)

இருவினையால்தாக மெடுப்பதனலென்றறிந்து
கருத்தறியாதென்னவிதங் காரணமோ-இருவினைநோய்
விகாரமதுசன்னிவிடு மூன்றுநாளதனி
அகாரமதிநீரதனு லாய். (௧௭௧)

சாரமதில்கிண்டி சண்மமாருதக்குழம்பு
தேறவுங்காணிஞ்சிரசந் தேனுய்-சாரமதில்
அதிகாலையுண்ண அகலுஞ்சுரதோஷம்
சதிசெய்யுஞ்சன்னியும்போம் போம். (கஎஉ)

## விருத்தம்.

அரத்தையாமலக்கெண்ணெ யாடாதோடை அதின்ரசத்தில்குழம்பதுவுங்குன்றிதாக்கி, சுரசமிது அவிழ்தமதையுதையகாலைச் சூரியனைத்துதித்துபணிந்துடனுமுண்ண, பரிசைக்ஷயனுபோகமென்ன சத்தபேதி பலாபலத்தைக்கண்டுபெருந்தூட்டுவீராய், வரட்சியொடுவாய்வுதசவாதம்பித்தம் மருவிவெகுநாளிருந்தமந்தப்போமே. (கஎஙு)

அன்றுவிட்டுப்புன்புதைபகாலந்தன்னில் அறிந்துகுழம்பதனில்குன்றிநாலுக்கொன்று, கண்டீரோபண்டிதரேபாலமாந்தம் கருதமுன்புசெய்கைவிதங்கருதிடீர்காண், தெண்டிரையில்குழந்தைகளுக் கிசுவுமூர்ச்சைத் தெளிந்திடுங்காணுப்பசமுபள்ளுந்தீரும், தண்டுமொன்றுப்பிரளிசத்திவிக்கல்மூர்ச்சை சாந்தமாஞ்சாந்தமில்லா மறுநாளுட்டே. (கஎச)

நாவரட்சிதோஷமொடுசுரமுஞ்சன்னி நாள்தோறுங்கனசுரமுநாடுங்காலை, நாவுகரித்திடவரிதுகுழம்பிற்குன்றி தனையெடுத்துநாலிரண்டுபோகம்வாங்கி, பூவையர்க்குமுன்பதுகாணுவில்தேய்த்துப் புகல்விராய்சுடுவென்னீரரையாழாக்கு, பாவையெனுமைந்தருக்குப் பின்புஆண்டே பாச்சிவிடுகுழம்புகுன்றி கால்பங்கூட்டே. (கஎரு)

ஊட்டுநிலத்துளசிஅவித்துடன்சாற்றைக்கொண் டுரைத்துமருந்துடனேயுக்கொள்வீராகில், சாட்டியமாங்கிருமிபழ மலமும்போக்குந்தசையுள்ளவாய்வுமூதல் ரெணமுந்தீரும், பாட்டிலிந்தப்படிசொன்னேம்பாரில்மாண்பர் பண்டிதரேயுங்களுக்குப்பலிதமாகும், நாட்டினில்நாலாயிரத்துநானூற்றெட்டு நல்வினையுந்தீவினையு நாடாதாண்டே.()

பரத்தையர்க்குப்பழம்புளியுமுளநீர்கூட்டு பாலருக்குமருந்தூட்டிப்பால்தானூட்டு, சுரஞ்சன்னிதோஷமதுக்கிச்சாபத்தியம் சுண்டைக்காய்வற்றலரைக்கீரையாகும், உரிசையென்றஉப்புவறுத் துள்ளுக்கூட்டு ஒருபோதுமன்னமதுமுண்பீராகில், அறிவீராய்தசவாய்வு நோய்கட்கெல்லாம் ஆகாதுமாங்கிஷமுமாகாதாண்டே. (கஎஎ)

பாசியுடன்பருப்புமொச்சைக்கடலைபச்சம் பாக்குவெற்றிலைபுகலைசுண்ணும்போடும், காசியெனுங்கட்டியொடு கனிகள்தெங்காய்கன்

னலோடுநெல்லெண்ணெய் காற்றுநீத்திரை, பொசிப்பெடுத்தபின்புரவி
யுறக்கமாகா பொழுதுகதிர்போனபின்பு புகல்விராகில் தூசிபோல்ப
றந்துவிடுந் துன்பம்போகுந் துரைராஜபண்டிதற்குச்சொல்வீராண்டே.

மாதர்கருக்குழியில்சனிந் திடுநோய்சிலை வகையாறுவிதமதுவு
மணுகுங்காலை, பதராகுங்கருக்குழியில்சதைதான்மூடிப் பாயாதுவிந்
ததுவும்பாழாய்ப்போகும், வீதுரமாங்கருக்குழியில் கிருமிசூழ்ந்தால்
விந்ததனையுண்டுவெறும் பாழாம்பூமி, போதரவாய்சருக்குழியில்பூநீர்
காரம் பூர்க்குமந்தப்பூமியைப்போல் பூத்தாலாண்டே. (கூஎக)

பூர்க்குமந்தப்பூநீருஉவருண்டானால் புளிப்பாழுவிந்ததனைப் பூநீ
ருண்ணும், ஏர்க்காதுஇடம்விட்டு இடந்தான்விந்து இருப்பிடம்விட்
டிடம்பாய்ந்தா வினிசெல்லாது, கார்க்காதுகருக்குழியில் வாய்வுஞ்
சேரக் கட்டிடுமோதவிந்து கனல்போய்சேருல், பார்க்கபனிக்குடமு
டையுப்பனிநீர்போனால் பாழாகும்விந்துவும் பாழ்தானுண்டே. ()

ரதிபுருஷரிருவருந்தான் புணரும்போது நாயகிதன்கருக்குழியி
ல்நாதவிந்து, விதியுமதியிரண்டதுவுநீருய்ப்போகு குஞ்சிஇடியீடிக்கு
மிந்தவேகம்போலாய், பதியைவிட்டுப்பதியிழ்ந்து பாயும்விந்து பரத்
தையரெண்சாணுடலும் பஞ்சுபோலாம், அதிவிதமாய்ப்புணர்ந்ததனு
லண்டபிண்டம் அண்டஇடியிடித்ததுபோ லாகுமாண்டே. (கூஅக)

இந்தவிதய்யானதிந்து அனுபோகத்தை யினியுரைத்தேன்பாவர்
களுமினமாய்க்காண, அந்தமுடனறுவகைதன்சூலையாலும் அணுகாது
புத்திரேட்சையமைக்கும்வாறு, சந்ததமாய்சதைமூடில் சதையைத்தி
ன்ன சண்டமாருதக்குழம்பில் பணந்தானென்று, விந்தையுடன்சிலைத
னில்விரவிப்பூசி மிகுந்தாவிழுகந்தனிலும் விளங்குவீரே. (கூஅஉ)

வற்றிடனீர்த்திரியிலன்னீர்சண்ட மருவியப்தனமதாய்வைத்துப்
போற்றி, சத்தியெனும்பரத்தையர்க்குஅவிழ்தங்குன்றி சண்டமாருத
க்குழம்புசாற்றுவீராய், பத்தியந்தான்சங்கன்பழச்சாறுவாங்கி பலம
ஞ்சில்மருந்திழைத்துப் பாச்சுங்காலை, சித்தியதாஞ்சதைகரைந்துசூலை
தீருந் தீயதனையாவிதனில் செலுத்திடீரே. (கூஅங)

இருள்சூழுமதிதனிலுமிருக்குப்வீட்டில் இத்திரியைக்கொளுத்தி
புவி தனிலுமாட்டி, கருக்குழிக்குடையநடு நேராய்வற்றி கருதிடவும்
யோனிவழி புகைதான்பாய, சுருக்கமுடன்மாதுமண வாளற்கிந்தசூ
க்ஷமிதையறிக்கையிட்டுச் சொல்லிச்செய்யும், சருக்கமுடன்பகையோ
னிவழியேபாய்ந்து சதையெல்லாஞ்சுருங்கிவழி சாந்தமாமே. (கூஅச)

சாதுரியமங்கையர்க்குத் திரிநாளித்த சண்டமாருதக்குழம்பைத் தாக்கும்போது, வாதுசெய்யுஞ்சூலையினால் மலடுமென்று மாமுனிவரெனக்குரைக்க யானுஞ்சொன்னேன், தீதுவாராதொருவேளையன்னந் தீங்கானபுளிகையுஞ்சேர்க்கலாகா, பூதலத்திற்பெண்மலடுபுகலப்போகா புருடன்மலடெனுமிகவும் புகழ்வதாண்டே. (௩௮௫)

கேவலமாங்கிருமியினாற்சூலையொன்று கிரிகிக்குப்விந்ததனைக்கெடுத்துண்டால், மேகவுமடபங்கையர்க்கு மலடென்றென்னில்மேதினியோர்புகழ்வதுகாண் மெய்யென்றெண்ணி, பூவுலகில்செபதபங்கள்பூசைநேமம் பிரார்த்தனைகள்செய்துபின்னும் புத்திரன்காணார், ஆவதினாலதற்கவுழ்தமாண்டேகேளீர் அதிதசண்டமாருதத்தைபருள்வதாமே. (௩௮௬)

அவுழ்தமேன்றக்குழம்பதனிற் குன்றிவாங்க ஆகாசகெருடனந்தக் கிழங்குச்சாற்றில், கவனமதாய்க்குழைத்துஅதில் கற்கண்டிட்டு காலைதனில்மூன்றுநாள் கருகுப்போது, புவனையருள்பதயபோற்றிப் புகட்டும்போது பொல்லாதகிருமியிருந் திடத்திற்சென்று, மூவனமதாய்குழம்பதுவின் வேகத்தாலும் மூடுபனிபோற்சூழ்ந்து மூடுக்குந்தானே. (௩௮௭)

மூடுக்குமிருபணவிடைதான்சீலைக்கூட்டி முன்திரிபோல்திரித்து மூலரவிதான்வீச, படுக்குமந்தப்பாவனைபோல்கவிழ்ந்துமூடி பாவையர்தன்யோனிநடுவையக்தாக்கக், கொடுத்திடச்சொல் புகையதுகாண் கொடுக்கும்போது கொலைசெய்யுங்கிருமியெல்லாங் கொடியாய்வீழும், தடுக்கவொண்ணாநமனாலுந் தடுக்கப்போகா காந்தனுணமாமூன்றுநாளிலாண்டே. (௩௮௮)

க்ஷாரத்தாற்கடுங்காரமுடனுண்டாகி உப்பதனால்விந்துப்பாயுருவமாறி, வேழ்வினையாங்கருக்குழியும் வெந்துப்புண்ணாகும் வெகுவிதஞ்செய்காலும் விந்துசரியாதென்க, பூஷணமாய்போசனமுண்டுணர்ந்ததாலும் பொல்லாதஉட்காரச்சூலையாலும், ஏஷணையாயெரிந்துசயிலங்கள்மாறி யிரத்தமெல்லாங்கருகியிளைத் திடுவாராண்டே. (௩௮௯)

இவ்விதங்களறியாம லுலகமாண்பர் எடுத்துரைப்பாரிதுமலடு என்னபாவம், செவ்வையினிமலடுகளைச் சிவனாலுந்தான் ஜெயிக்கமுடியாதுஜென்மக் கூறென்பார்காண், அவ்விதமாயுரைத்திடுவா ரவனிமீதில் அமைத்துவிதமறியார்க ளாண்டேகேளீர், கவ்விடவுங்குழம்பதனிற்குன்றிவாங்கி கர்ப்பூரவெற்றிலைச்சா றதனிற்காணே. (௩௯௦)

ஊட்டிடவுமூன்றுநாள் மூன்றுவேளை உள்ளிருந்தவவர்களெல்லா நீரில்சேர்ந்து, சட்டியமாய்மலசலத்தைச் சாகிஞ்சாகும் சடத்திலுள்ளனல்வினைகஞ் சாசித்தேபோம், மேட்டியிந்தகருக்குழிதான்மென்மேல்சுற்றி வெண்மதியுஞ்செங்கதிரோன் விளக்கத்தாலும், நாட்டிவிடுங்குழம்பதனை முன்போல்வற்றி நயந்துதிரிபுகையதனால் நமனேய்போச்சே. (௬௬௧)

அடுத்தபுகைமூன்றுநாள்கொடுக்கும்போது அவ்விடத்திலிருந்த புண்களாறிப்போகும், தடுத்துபுவிமாண்பர்களுந்தடுக்கப்போகா சாபமெய்துமவகசியபசிய சுவாதா, தொடுத்தவிழ்தமனுபோகிராசயோகி குவலயத்தில்ஞானபண் டிதனாய்வாழ்வார், தொடுத்தேன்திருவள்ளுவன்வரக்கமிர்தவாக்கியஞ் சூக்ஷசடாதாரசூழ்தொழுதேனுண்டே. ()

தொடுத்ததிந்தசண்டமாருதத்தைப்போற்றி சூக்ஷமெல்லாமிந்நூலில்சொல்வேன்காணும், கொடுத்துவிட்டாருலகருக்கு மதியோவில்லை குணமில்லைவேதாந்தக்கூறுமில்லை, விடுத்துவிட்டாராமாகில் வினையோயில்லை மெய்க்குருவையறியாத வீணர்வீணர், அடுத்துமனிரெண்டாண்டுஆசான்சொல்ல அறியாலஞ்சாரவித்தை ஆண்டேகேளே. ()

சூதகத்தில்வாய்வதுபோல்சொக்குங்காலை சுருதியெனும்வன்னிபித்தர் துணையாய்ச்சேரு, மாதவிடாய்நாகமதும் வஸ்துக்கட்டுமாதாக்தங்கட்டினதால்மாதுதேகம், ஊதுவுடல்சரீரமெல்லாங் கருப்பைதந்து உதிரநீர்சூசிகா வாய்வுந்தோன்றி, வாதனையால்வயிறாட்டலும்பெறுத்துவூதி மகத்தான அடிமூலம்வாதஞ்சேர்ந்தே. (௬௬௪)

மாதருக்கிவ்விதகூறு மருவுங்காலை மங்கையர்க்குமனிதர்சொலும் வாதுகேளீர், சூதகமுங்கட்டினதால் கெர்ப்பங்காணுந் தோகையர்கள்கண்டுமந்த விதஞ்சொல்வார்காண், நாதமென்றசூலையினால கெர்ப்பசூலை நாடிவிதையறியபண் டிதஞ்செய்வாரோ, வேதமிந்தசூலையினால் மலமென்பார்கள் வினைப்பயனையொழித்திடவும் விளங்காராண்டே. (௬௬௫)

கெர்ப்பக்கோளறிந்துவினை யொழிந்தோன்ஞானி, கேதமிலாராஜபண்டினேயோகி, துற்பவித்தசூலைபதுநாதசூலை சுக்குலமுஞ்சுரோணிதமு மிரண்டுஞ்சேரா, சுற்பகமாம்விந்துஒருவழியிற்பாயுங் கருக்குழியில்சுரோணிதமுங் கலக்காதாகில், முற்பகஞ்செய்தனுபோகக்கூழிலலாகாண் முச்சுடரிலுதித்தகெனுமொழியலாமே. (௬௬௬)

மொழிவதுங்காண்சண்டமா ருதக்குழம்பில் முன்பாகஞ்சொன்றி
யிடைமூன்றுநாளும், அழிஞ்சிவேர்த்தயிலமதில்பலந்தான்வாங்கிஅத்
தயிலந்தனிலுரைத்து அதின்பின்கேளீர், பழையபனைக்கற்கண்டுந் தே
னுங்காசும் பருத்துடனுஞ்சேர்த்துவுண்ணந் திடுவீராகில், மழையது
போல்வாரியது மலத்தைப்போக்கு மனதுதிடச்சித்தமதாய் மகிழச்
சொல்லே. (௯௯௭)

துவரைமுளநீருஞ்சுண்டை வற்றல்கூட்டி துதுபத்திரியினுட
வற்றல்சேர்த்து; அவரையவரைக்கீரைமுளை கதுவுங்காயம் அதிபேதிக்
காலின்போர் சுக்குலமம், வினைகஞானவெட்டியருள் பணிந்துபோ
ற்றி வெள்ளுள்ளிசீரகமு மரத்தையோடு, தவராதுயிவ்வகைகள் சே
ராதென்னில் தகர்த்துவதுப்புளிபுகையுந் தள்ளலாமே. (௯௯௮)

தள்ளுவதுபெட்டுநாள் திரிநாளுண்டு சண்டமாருதக்குழம்பில்
பணந்தான்ரெண்டு, தெள்ளிமையால்திரிபதுகாண் முல்போல்செய்
து தீங்கில்லாமூவேளைபுகைதானூட்டி, எள்ளளவும்பிழைவராதெண்
சாண்தேகம் இருந்தகெர்ப்பச்சூடதுபோல்குலைபோகும், கள்ளமில்
லாநீர்களெல்லாங் கடலேபுக்குங் கருக்குழியுஞ்சுத்தியதாய்க் கருத
லாமே. (௯௯௯)

வாதமென்றதேகியென்னிலஞ்சுநாள்தான் மருவும்பித்ததேகியெ
ன்றால்நாலுநாள்தான், நாதசேத்துமதேகி மூன்றுநாள்தான் நயந்து
சண்டமாருதத்தை நாட்டுங்காலே, வேதமெனுங்கியானபொரு ளதீத
மிந்நூல் விதித்தவிதியெள்ளளவும் விதம்போகாது, காதலிந்தசாஸ்திர
த்தைக்கண்டபேர்கள் கைவிடார்கருக்குழியில் கருதுவாரே. (௲)

வெந்துகருக்குழியதுவும் புண்ணாய்ப்போகும் வெட்டையினுவ
திதேக மீறிப்பாய்ந்து, உந்தியெனுங்கமலமதில் யிரணங்கண்டு ஓரிடி
யாயிடித்துவயிற்று வலியுண்டாக்கி, தந்திரமாய்கிடைகொடுக்கா பிர
ட்டல்சோபந் தாபம்வருமூல்வினையாய் சடத்திலெய்தும், யிந்துவெ
னுஞ்சுரோணித மிரண்டுங்கூடி யிருக்குமந்தகாலமதில் வாய்வாலா
ண்டே. (௲௧)

வாய்வுடனுசரிக்குமட மாதர்க்கேதான் மாதாந்தங்கடியது ம
ருவுநாளில், பாயும்ரதிபுருஷருமே புணர்வாராகில் பரிதியெனுநாதமதி
ல் விந்துஞ்சேரில், தேயுவெனுங்கனலேகக் கனலினாலுஞ் செவ்விள
நீர்போலவுமே யுதிரஞ்சாயும், பேயசனல்பெரும்பாடு அதீதமென்
பார் பேருலகிற்கல்லெரியு முனியென்பாரே. (௲௨)

சாயுமடைமதகில்சலஞ்சாரித்தாப்போல் தங்குதடையில்லாமல் சாருமாப்போல், ஓயாமலுதிரமதுமோடிப்பாயும் ஒருதிங்கள்நாதவிந் துலக்கச்சேர்ந்து, மாயுமடமங்கையரோடனுபோகித்தால் மருவியுமே போகமதில்மகிழ்ந்தாராகில், தாயிருமூன்றதுநாலுமஞ்சுமாறு துகை யேழுளட்டிரண்டும்பத்தும்பாழே. (௩௩)

கருவுருவாய்திரண்டுகெர்ப்பங்கருதுமாப்போல் காசினியில்யாவர்களுக்கணக்கென்பார்காண், உருவதுமுண்டாச்சுதென்பா ருலகமாதர் உறுதியென்பார் துருதமென்பாருகமையென்பார், சிறுவரெனும் புத்திரனென்பார்திருமாதென்பார் சிலபேரிதுவென்னசெய்கையென்பார், வருவதுசெய்வினையிதென்பார் வளர்பாண்டென்பார் வசனமெ டுத்துரைப்பவர்கள்மாதராண்டே. (௩௪)

பத்துதிங்கள்சென்று சரியாச்சுதென்பார் பாரில்மடமாதர்வந்து பரிசோதிப்பார், கற்றுணர்ந்தபேர்கள் பெருவயிறென்பார்கள் கடிந் துரைக்குஞ்சிலபேர்கள், குளியதென்பார், குத்தமில்லாப்பலபலவா யோசிப்பார்காண் கூருவேனுண்டையீனிகுறித்துயானும், சுத்தமெ னுஞ்சண்டமாருதக்குழம்பில் கூட்டியெடுத்தொடுகுன்றி கொடுக்கத் தானே. (௩௫)

கொடுக்கலாந்தூதுளத்தின் பழத்தின்சாற்றில் சூதமொருபண விடைதான்பொரித்துக்காயம், மடக்கலாமிந்தயிடை பதினெட்டிட் டுமத்தித்துமூன்றுநாள் யடந்தைக்கீய்ந்து, கெடுக்குமந்தஉதிரமதாஞ் சூலையாயுங் கெடுதிமலசலஉதிரமெல்லாம்போக்கும், விடுக்கலாங்கரு க்குழியுஞ்சுத்தியாகும் விளங்குமுன்புதிரிபுகையைவிளங்கலாமே. ()

சண்டமாருதத்திரியை முன்போல்பாகந் தாக்கானயோனிவழி புகைதான்செல்ல, முண்டடெனனும்வாய்வுகனல்மேகசூலை முச்சுடரில் வெட்டைகனல்மூலமெட்டும், கண்டிதமாய்குழம்புஅதிவேகத்தாலுங் கண்காணுதோடி அனல்புக்குமாகில், உண்டிடவுமுதிர்சூலையோடிப் போகும் உடல்சுத்திகருக்குழிதன் புண்கள்போமே. (௩௭)

அறுவிதத்தால்சூலைசெய்துங் கெர்ப்பக்கோர்ன்கள் அடைவுதனை யறிந்திந்த அவுழ்தத்தாலும், பரவசமாய்ச்சொன்னதிந்நூல்யோகிக்கா க பரிகைஷயனுபோகமிதைப் பாரில்மாண்பர், கெறுவமில்லாப்பண்டி தற்குச்சொன்னேனுண்டே கேவலமாயிருந்ததனு லென்னவாய்க்கு, மாறுபடாஞானவிதி யறிவோனுகில் மகாபஜபூபதிபண் டிதனேயூ ண்டே. (௩௮)

வேறு-விருத்தம்.

அன்னையபிராமிசிரோ மணியருளாலாண்டை யினியவுழ்தஞ்சொல்வேன், நன்னயமாய்சண்டமா ருதக்குழம்பிற்குன் றியிடை நல்குவீராய், மன்னர்மண்டலீகருமே மகிழ்ராஜபண்டிதனை வணங்கிப்போற்றி, யின்னிமித்தமறியசுக சன்னியதும்விலங்கிடவு மினிசொல்வேனே.

வேம்பினுடவித்ததனில் வெள்ளாட்டுப்பிச்சதுவிட் டிழைத்துமேலும், செம்பதுவின்பற்பமொரு அரிசியிடைக்குழம்புமறைக்குன்றித்தாக்கி, நம்பியிதுாளுமொரு மித்தவர்க்குநாவதனில் நன்றாய்த்தேய்த்து, வெம்புதலைவாராமல் வென்னீருங்குடிப்பித்து மிகச்செய்வீரே. (கூ௰)

நயனமிருவிழியதனில் கலிக்கமிடுங்கடுகளவு நாடியேற்ற. பயமணுகுஞ்சன்னியதும் பறந்துவிடுஞ்சரபானம் பாய்ந்தாப்போலும், துயரமணுகாதுயிரு விழியதனில்நீர்த்தாரை சொரியுமாகில், சயனமிது கனல்வேக மென்சாணுதேகமெல்லாந் தணலாமாண்டே. (கூசக)

தணல்பாயபாதாதி கேசமளவனல்சூழுஞ் சன்னிதோஷம், அனலருவியரிக்கும்விதந் தொண்ணூறுகடிகைமனோ வேகத்தாலும், புனல்சொரியும்பேதியர்தம் பத்தியமுந்துவரைமுள நீருங்கூட்டும் அனல்வேகமடங்கிடுங்கா ணொருவேளையன்னமது மருளுவீரே. (கூசஉ)

மூன்றுநாளிற்றவித மொருவேளையவுழ்தமது முண்ருங்காலே, நின்றுயிருநாசியினு முன்சொன்னவற்றியது நசியமேத்த, பண்டுபெழுகின்தோஷஞ் சுகசன்னிபறந்தோடும் பாரில்விட்டு, கண்டுமிந்தப்பெரியோர்கள் கருத்ததனுலெனக்குரைத்த கருவிதாண்டே. (கூசங)

கொச்சகம்.

காயாபுரியிலகுங் கனனியபிராமியருள்
தாயாமதியமிர்தந் தந்துவரமேயளித்தாள்
மாயாமருந்தறிந்தென் வாசிகொண்டுநான்மகிழ்ந்து
சாயாவிருக்ஷமதின் சஞ்சீவிகண்டேனே. (கூசச)

மதுரசஞ்சீவியுமே வாச்சுதுகொண்டுசென்றால்
விதுரனெனுஞானசிங்கம் வெட்டியருளால்மொழியும்
சதுர்முகஷட்கோணவரைத் தாண்டிசண்டமாருதத்தைச்
சுதனருள்தன்கிருபையினல் சோதிமதியாயெனக்கே. (கூசரு)

கலித்துறை.

பிரசண்டமாருத மெய்ஞ்ஞானபோத பிரபர்தமாய்
வரமுத்திஞான குருமுனிவாக்கிய மகிழ்ந்தெனக்கு
திரமாய்விவேகமுங் கல்வியும்பேரின்பத் தேன்புகழ்ந்து
சுரமாயதீத துரைராஜபண்டிதன் சதுர்மறையே. (கூகூசு)

வீராதிவீர அதிவீரஞான வெட்டியெனும்
பேராற்பிரசண்ட மாருதபாணப் பிரயோகமதால்
வேரானநோய்க ளதமாய்பறந்து வெளிப்படவும்
தேராதவுத்த மனுபானஞ்சொல்லத் தொடங்கினனே. (கூகஎ)

வெண்பா.

கண்டீரோபண்டிதரே காலைதனிற்குன்றிபது
சண்டமாருதக்குழம்பைச் சாதித்தால்-எண்டிசையில்
மண்டலத்தோர்காண்க மருவியொருவேளை
அண்டிபஞ்சதாரையினி லாம். (கூகஅ)

வாதமுதல்வாய்வும் வரும்பித்தசேத்துமங்கள்
மாதவிடாய்சூதகமு மாண்டுபோம்-கோதையே
அவரைதுவரை யரைக்கீரைத்தூதளங்காய்
விரையில்லாக்கத்திரியை மேவு. (கூகக)

விருத்தம்.

சம்பப்த்தின் சாறதனில்கற்கண்டிட்டு சண்டமாருதக்குழம்புகுன்றிகூட்டி, நம்புதலாயதிகாலைதனிலேயுண்ண நவராட்சிசுரதோஷஞ்சன்னிதீரும், அம்புவியில்மூன்றுநாளிச்சாபத்தியம் அகன்றுவிடுமாண்டையினியறையக்கேளீர், கெம்பீரபாணமிதுவதிதவேகங் கேட்டீரோபண்டிதரேகேள்வியாண்டே. (கூ௨௦)

வேறு-விருத்தம்.

அதிவீரசண்டமா ருதக்குழபிலொருகுன்றி அவிழ்தந்தன்னில், துதிசெய்துமாவிலிங்க மூலமெனும்வேர்பயிலங் கழஞ்சிதூக்கி, விதியதுவாய்மிளகுசுக்கு திப்பிலிமென்பொடியிலத்தேன் விரவிக்கொண்டு, சதிசெய்யும்வினையதுகாண் சச்சுவாய்வதுநசைக்குஞ் சாற்றுவீரே. (கூ௨க)

சதிசெய்யுங்குமரகண்டன் பாரிசமும்பச்சைதொந்தி தமர்வாய்வோடு, மதியபக்தமுசல்வலியுங் காக்கைவலிமூற்சையதும் வாதரோ

கம், யிதுக்கதிதமுன்னிகவு பின்னிசுவுயிரைப்பிருமறெழும்புஞ்சுகா
சம்; அதிதமெனும்வாய்வதசை யையஞ்சுமோரஞ்சு மகலுமாண்டே.

பக்ஷமிந்தப்படியவுழ்த மதிகாலையொருவேளை பாலித்தேதான்,
துஷ்டவிளையகற்றுமஷ்ட குன்மவலிமூலமெட்டுந் துலைந்துபோகும்,
கஷ்டமென்றகர்மமெல்லா:மவுழ்தத்தாலகலுமெனுங் கருதினேங்கா
ண், யிஷ்டமெனும்பத்தியந்தா னியம்பிடுவீரன்னமிது வேளைதானே.

விருத்தம்.

திரிபுரத்தையெரித்தபதிரவிமைப்போற்றி ஜெணகாதிரிஷிகள்பதி
னெண்பேர்போற்றி, கருதவிந்துநாதவிந்துகமலப்போற்றி கனகரத்
னதீபசுழிமுனையைப்போற்றி, மருமலரம்பிகைஞான குருவைப்போ
ற்றி மதிகெசகுண்டலிகமலபதமேபோற்றி, நிருபமணிமகுடமுடிவா
னசோதி நிர்மலத்தாய்பதம்பணிந்துங்கழ்த்துமேலனே. (கஉரு)

பஞ்சாமிர்தகுளிகை-ரு.

பஞ்சாமிர்தகுளிகைப்பாரும்-பூபதியாண்டே
ரஞ்சிதாதவிர்தானுரா னுண்டுகண்டேன்.

கஞ்சமலர்க்கணேச கமலபாதார்விந்தஞ் செஞ்சொல்மொழிமெ
யஞ்ஞான திருவள்ளுவன்பிரபந்தம் - ஜெகமும்பணியமதியமிர்தபரிபூர
ண-திருவம்பலமிகுஞ்சுழியின்முனைகருணை தெரிசித்தொழு மலர்குடி
யும் வருஷித்துதி தமிழ்பாடியும். (பஞ்சா)

சூதங்கெந்திமால்தேவி தய்யப்பாஷாணம்லிங்கம் - தினுசொன்று
க்குப்பலந்தானிடையதும் - தையஞ்ச துகிளிகொண்டொருபத்தது
வுகண்மை - தொழுதுநாதமொன்றிடையமூரிாலுமந்திடை சுகமெய்ப்
பொருளதுசுத்தியில் தகைப்படியனலக்கினி. (பஞ்சா)

வீரமென்றவிந்துநீர்காரமென்றநாதநீர்-வீரமும்பூரமுமன்றுமமே
வியும்-விரவியசாடியிலிரவிமதியைச்சாடி-மிகவும்வைத்து நான்மூன்
றுதெளியவைத்துநாளொடும் விபரத்துடன் கிளிதொங்கிட கமலாக்கி
னையனல்வீசிட. (பஞ்சா)

நீர்தொக்கிடாதவிந்ததித அட்டுலெட்டுப்பு - நிறமுந்தல்மதிபோலவுநிலவுபோல்-கிகரிலகுதிசைபி னுலகுமிகபுகழும்-நெடியகமலமிர்தபடிகமெனும்லவனம் நிகழ்பந்தொரு கதிர்காந்தியில் துருவெண்மதி ஒலிவீசவும். (பஞ்சா)

அஞ்சுபஞ்சபூதத்தி லாடுஞ்சரக்கதஞ்சு-ஆனல்சுத்தியிதாண்டேயஞ்சுங்கட்டினமாச்சு-அமுரியுவர்க்கனலில் விபரமதுசலநீர்-புகலரவியினொளி நிறமுஞ்செழுமையுரு அதுபந்தன மிதுசிப்பியில் வெகுபந்தன புகையாய்வரும். (பஞ்சா)

இருவிகூஸ்திராபி நிருவிசாஸ்திரபேதி-யெலமிதஞ்சுவகையினமதும்-இடைபலமுமவ்வித கடல்நுரையுமிளகும்-மிருசீரகமுஞ்சுக்குவகையுமிடையுபல மெடுமஞ்சினை திடமித்தொரு இனமாமிவை மனமேவிசீர். (பஞ்சா)

சாதிக்காயும்பத்திரி செண்பகஞ்சவ்வாது-சட்டஞ்சந்தனங்கஸ்தூரிகுரோசனியுந்-தவளநிறமதிபடிகமடெநகன - தனதுபசுமை யொளிகனலும்பூரமதுகாண் சரிதானிடை பிதுரோகஸி யதுகாலரை பலமாவதும். (பஞ்சா)

கருதுஞ்சீனச்சரக்கு வமைபலமரைகாண் - கடைசரக்கதுவஞ்சுங் கணக்காய்பலமதுகாண் - கடினம்வினவுசரக்கதிதமதுகாலென்கடுரமில்லாவகையுங் கருதுமந்திடைகாணும் கவனத்துட னவலேசதுசயனத்துடன் சரிபார்த்திடை. (பஞ்சா)

கொச்சகம்.

மதிரவியுநாதவிந்து வந்தவரலாரறிய
மதியும்ரவிவாதபித்த வன்னும்விண்ணுமேபடைத்த
மதியுங்கதிர்சோதிமின்னல் வாரிபொழிந்தேசொரியும்
மதியுஞ்சலகூஸ்திரமாய் வந்தவகைகாண்கிலரே. (கூஉடு)

கதிருதையநாதவிந்து கண்டுமெனதென்றுருவை
திருமருவெண்சக்கரைபோல் தீக்ஷைபத்துஞ்சென்றதுகாண்
அருவுருபோல்அவ்வும்உவ்வும் அன்னந்தண்ணீருண்டபலன்
வருவதுமுன்போனதெல்லா மதிரவியாற்காண்கிலரே. (கூஉசு)

கலித்துறை.

நாலஞ்சொன்றாகி பிருதிவுராத ரசமுறவாய்
மாலான அப்பு மால்தேவியுப்பு மதிரவியும்

மேலானதீப நதிமேவுஞ்சோதி மெய்க்குருவை
ஆலாலமுண்ட சிவனுலுஞ்சொல்ல அதுகழஞ்சே. (௩௨௭)

இருபத்துமூன் றுமொருமித்துச்சுற்றி யினிமருந்தை
ஒருமித்துநாடி யபிராமிபாத மொருபொழுதும்
அருபத்தில்நின் று கமலாலயத்தி லருள்தனையே
புருவத்தினேரில் துரியாதீதத்தைப் போற்றினனே. (௩௨௮)

வெண்பா.

இந்தரரக்கதனை யிட்டுகுளிக்கல்லில்
விந்துகருநாய்த்தலைசன் வெண்மதிபால்-இந்தசரக்
காட்டியொருவாரமது தானதின்பின் தேசியின்பால்
ஆட்டியதுமுன்போலா வாண்டே. (௩௨௯)

கேசரியின்பால்விடவுங் கேட்டீரோ ஆண்டையினி
மேஷம்வெள்ளையாட தின்பால் விட்டு-கேசரிபை
பொற்கமலமேவி:பூமலரையான்பணிப
சொற்கபரஞானமதி சொல். (௩௩௦)

விருத்தம்.

மதிநிலவுரவியொளிமருவுக்கன்பாலில் வாரமொருநாள்பிசகாம யனமாட்டி, கதிருதையமிஞ்சிரசமதனுலேமூ கர்ப்பூரவெற்றிலைச்சாற தனிலேழாம், சிறுகீரைமூலமிடித்தொன்றுக்கெட்டு சுத்தசலம்விட்டு அனல்படியொன்றாக்கி, குறுகுமிந்தக்கியாழமிட்டுவாரமாட்டி கொடி தாகமெழுகுபதங்குடோரியாண்டே. (௩௩௧)

குடோரியெனுங்குளிகைநிருலர்த்தல்வாரங் குடோரமில்லாசி றுபயர்போல்குளிகைசெய்து, மிடைபயறினிடையதுகாணிடைவெவ் வேறாய் இருந்தமருந்திடைகுறைந்தாலீதுவேகங்காண், மடையர்க ளேகவனமில்லாமதிவேறானல் பருந்ததுவுமிடைகுறைந்துமனிதர்க் கூட்ட, புடமதுகொண்டதுபொழியுங்காந்திவீசும் பொல்லாதகிரா ணசுரதோஷமாண்டே. (௩௩௨)

பாவமென்னசெய்தொழிலின்தோஷத்தாலும் படித்துகுருஆசா னைப்பணியாதாலும், ஆவதென்ன அருள்பொருளுமறியாதாலும் அடு த்ததசதீக்ஷைகொண்டு அமைத்ததாலும், மேவுதிறப்பதுவாசல்திறவு கோலால் வெளியாகும்வெளியில்பரவெளியுங்காணும், வேரிஷியோர் பணியுஞ்சுழினைதீபஞ் சேர்ந்தொருநாள்கடிகையொன்று தெரிசித் தேனே. (௩௩௩)

மாதரைவிட்டகன்றுகற்ப மறியாதாலும் மவுனமென்றேவாசி கொண்டுமாறுதாலும், வேதனையாம்விந்துவிட்டொழிந்ததாலும் வீண் வேஷமெடுத்துலகில் விருதாவாலும், பாதையறிந்தென்னகுறைபடிக் காதாலும் பாழ்யோனிக்காகமடிந்திடுவாராகில், சூதகவித்தையமுரி யென்றசூக்ஷத்தாலுஞ் சுகஞானபதவிதனில்சொக்கார்தானே. (தஙச)

கொச்சகம்.

சாத்தியமென்றசன்னி சுரதாபசன்னிதானெழிய
மாற்றிவிடுமோ அவுழ்த மந்திரபஞ்சாக்ஷரத்தை
ஏற்றிவிடுமோர்குளிகை யிஞ்சிரசந்தனிலும்
கார்த்திடுநாள்மூன்றுதினங் காலையொடுமாலையுமே. (தஙரு)

தாந்தரிகசன்னிசுரந் தாபசன்னிவாதசன்னி
ஆந்தரிகப்பித்தசன்னி யையனெனுஞ்சேத்மசன்னி
விந்தைசுகசன்னிகுறி மேகமதுபோல்கறுத்து
சுந்தரமாய்பிரதாபஞ் சொல்லிதுபராற்றுமதே. (தஙசு)

கலித்துறை.

வாதத்தில்மூன்று பித்தத்தில்ரெண்டு வன்னியொன்று
தாதுத்தமத்த மீரஞ்சுவாயில் சாரந்துதெனில்
பூதந்தலைப்பட்டு நானுவினோதம் புலப்படுமாய்
பேதமிதுவறி யாமலுமாண்பர்கள் பேசுவரே. (தஙஎ)

மூலாக்கினைதன்னில் பித்தமுவாதமு முன்னுழைந்தால்
காலாக்கினைகொண்டு வன்னியும்வாயுவுங் கருதினதால்
வேலாக்கினைரண சூராதிவீர விகாரமந்தம்
பாராமல்பூத வேதாளம்போல்வந்து பாயுமதே. (தஙஅ)

வெண்பா.

வெள்ளெருக்குமாவிலங்கு வேர்க்கொடியும்வேலிபுனல்
மெள்ளவிடுமுருங்கை.வேர்ப்பட்டை-உள்ளபடி
இஞ்சியதின்சுரச:மினியசரியஞ்சுமிடை
அஞ்சுபஞ்சபூதரச மாம். (தஙகூ)

காலையதுமாலை கதிருதையகாலத்தில்
வாலைபருவத்தில்வரும் வாதசன்னி-காலைதனில்
இஞ்சியதோடஞ்சு மினியசுரசமதில்
அஞ்சிலொருகுளிகை யாம். (தச0)

### வேறு-விருத்தம்.

விரவினயல்வெதுப்பிவெட்டுக் கொருபங்காய்சுரசமது மினீர் வாங்கி, தூறவியெனுமமிர்தபஞ்சாட் சரமெனவுந்தொடுத்துவழங்குஞ் சக போகிக்கு, நிருவியெனுஞ்சன்னியறு வகைவிபரதோஷமதுந் தீருந் தீரா, சுரமிந்நீரதனி லிழைத்துமருந்திருவிழிக்குஞ் சூட்டிடமே. ()

பனிநீர்போல்நீர்த்தாரை கடிகைகொள்ளூற்றுருவிழி பகட்டி மூடி, இலியமருந்தனுபானஞ் சுரசமிருவேனொயிடு மிழைத்துநாவில், சனியன்விடுஞ்சன்னிசுரந் தாபம்விடுந்தாந்தீகந் தலைமேற்கொண்டா, மனிதனல்லவென்றுபுகை வற்றிநசியங்கள்செய்து மாற்றலாமே; ()

### வேறு.

சூஸ்திரசன்னிவாதந் தொடுப்பித்தசேத்மசன்னி
வேற்றுமைபலதொந்தங்கள் விகாரத்தினிடரினாலும்
சேந்துமமிகவும்விம்மி சென்னியில்கனலுண்டாகும்
பார்த்திரோவேதஞான பண்டிதரறிகுவீரே. (தசங)

நாபியில்சூடுண்டாகி நற்குளஞ்சிதறிப்போகும்
நாபியில்வாதஞ்சேரில் நமனதாய்வாய்வுமீறும்
நாபியில்தோஷமெய்தும் நாவரட்சியுமேயுண்டாம்
நாபியில்பித்தஞ்சேரில் நளிர்குளிர்சுரங்காணுண்டே. (தசச)

கண்டிடுங்குடைச்சலண்டங் கதிர்மடியிடியுங்குத்தல்
அண்டிடுந்தாபசோப மருட்பிரள்கடிக்குங்கைகால்
சூண்டியும்வாய்வுபித்தங் கொலைவயிறிடிக்குமூஷ்ணம்
கண்டமோராண்டோரிந்த காரசாரத்தின்வாறே. (தசரு)

### கொச்சகம்.

கோரோசனைகஸ்தூரிபச்சை குங்குமஞ்சவ்வாதுசட்டம்
அறுவகையிலேனைர்பழந்தான் அறுத்ததனிலுங்குழைத்து
மாறுமணிமாத்திரைகாண் வைத்ததிலுந்தேனுமிட்டு
கூறநுவாம்மூன்றுதினங் கொண்டிருக்கலாமறியே. (தசசா)

ஆறேழுசன்னிபதினாறாகுமனுபானமதால்
ஈரேழுவாதகாயிஞ்சிசுரசந்தனில்போம்
பாரேழுமேபடைத்த பஞ்சாமிர்தக்குளிகை
காரார்கமலாசனருள் கர்மவினையேகிடுமே. (தசஎ)

கலித்துறை.

கொட்டாவீயிட்டு விக்கலுமேப்பமுங் குன்மகூயம்
ஒட்டாச்சயமீளை உப்பிசமன்ன விரோசனமும்
தொட்டால்வலிவயிர் காசமுஞ்சத்தி சுவாசபித்தங்
கட்டோடுசென்னி சுரங்குளிர்குத்தல் கடல்புக்குமே. (௲௰௮)

ஆடாதொடைஞ்ச மாதண்டைத்துப்பை யதின்பூரசங்
கோடாசலைரசம் போர்த்தலையிஞ்ய குறிக்கிருமூன்
றுருய்சுரசம் வகைக்குப்பலங்கொண் டன்னீரினில்தேன்
நோய்சரியிடை மாத்திரையொன்று ரிகழ்த்திடுமே. (௲௰௯)

உரைத்திருவேளை விழிக்கொருவேளை யோரைந்துநாள்
துரைபபடிநோய்க ளகல்வனுநன்று பின்னாட்கள்சென்றால்
முறைப்படிவற்றி புகைகொண்டுநாசி முடிக்குடனே
மறப்புனல்நீரு நதியாய்ப்பெருகி விழுந்திடுமே. (௲௨௰)

வேறு-கவி,

சண்டமாருதக் குழம்பின்வேகஞ்சத கோடிகோடிவினை சருவிபோங்
கண்டபோதுசுர சன்னிதோஷங்கடல் புக்கியோடிவிடுங் காண்கிலார்
விண்டவேதையிதில் சண்டமாருதமும் வெள்ளிசெம்பதுவெவ் வேற
தாய், துண்டுதுண்டம்வராகனோரிடைபுந் தூக்குவாய் தகடு சூக்ஷமே.

ரஸிதமாவதும் ஐவராகனிடை தகடிலிந்தகுரு காற்பலம்
விசிதமாயமுரி யுடனும்வைத்துகுழை மேலுஞ்செம்பதுமே பூசிடு
காசிடுங்கதிரில் காய்ந்ததின்னுமியில் காட்டுமஞ்சமுற மாமெடு
நேசகிழதுமேல் வன்னியிட்டுகனல் நீறினுலுமியி னேர்மையே. ()

நீறியாறியது யாருஞ்செம்பினொளி நேசிதுக்குவய தெட்டதாய்
யாறிசீவனமும் வாழ்வீர்க்கடதினும் வாசிவாவெனவுஞ் ரேசிதான்
வாரியோடுநிலை வங்குசிங்கெனவு மாறிவாழ்வீர்கண்ட தாரையில்
ஆசியண்டவரை;மிழுமேலுமிது ஆவிநின்றிட மதிதிடே. (௲௨௰௩)

பாருஞ்செம்புபசும் பொன்னின்வர்ணமது பரிசவேதைகுருபாகதகா
ண், வாரிவெள்ளியது வராகனூறிடை வாங்கிடுங்குருவிற்கால்பலம்
வேருமேயமுரி விட்டுமத்திபது வெள்ளிமேலுந்தக டாகிதம்
போகுமேகதிரில்.வாலைவீசகனல் போடுமுன்னுமியல் புடமிடே. ()

தகடுநூறுவரை கனலில்போடபுடந் தவளமென்றநிற ரசிசமாம்
முகடுமேவரா வயசுபத்தரையு போடியாகிபொன் ஒணிதான்

அகடுமேயிலைபார் சீவனஞ்செய்து அம்பவிதனிலும் வாசமாய்
எகடுதன்வரா மவுன்சாதனையி லெய்திடுமமுரி மாறிடே. (தருரு)

மாறிமாறிவர வாசியூதிவர வாசிவாசியதும் வீகியுந்
கேறிதேறியொரு நாளுநாளுமுனி தேகசுத்திசித ருமலுங்
வாரிவாரிகட லாழியானசல மாறமாறகதிர் வாலைகாண்
சூரிசூரியனுந் தேகதேகமொளி சுகுபசூக்ஷசுக சுத்தியே. (தருசு)

வருஷமொன்றுமதி மாறமாறகதிர் வர்னமாமதித தேவதைகாண்
புருஷனோடுரதி போகமோகமது போவிங்காரசார போதனி
பரிட்சையாய்வருதல் காயதேகியெனும் பாடுபாடுவெகுபாடுகாண்
அருளிலங்குமதி சந்திரபுஷகரணி யமிர்தசஞ்சிவியி னூட்டமே. ()

நாலுங்கண்டுவெகு நாள்கள்சென்றுஉடல் நாடிநாடிவெகு நானுதும்
போலுங்கற்பமுண ரம்புவிதனிலும் பூதலத்தில்சில ஞானிக
ளாலும்வாதரச போதனைச்செயலி லாவிதானுஞ்சுடு காடுபோய்
தேலுந்தேலிடினுங் காரசாரகுரு தேடிதேடியலை வார்களே. (தருஅ)

மாதுயோனிதனில் வாழ்க்கைநாள்சிலது வாடிவாடிகில மாய்கையால
ஓதுநாள்முழுது மோடியோடிபுழன் ருர்களம்புவியி லோசிலர்
வாதினால்சிலது நோய்களாய்சிலது வறுமையால்சிலது நாள்கள்போய்
ஏதுகாயந்தளர்ந் தானபின்புசட மேதுநாள்தினமு மில்லையே. ()

சயிலமஞ்கம்ரவி கானலுண்டுவர தானுந்தன்னறிய லாகுமோ
சயிலமாமதுவின் சாரமாவதனில் சத்தும்சித்தும்விளை யாடலாம்
சயிலங்கானுதக தயிலஞ்சுண்டுஞ்சை தன்னியத்தில்மனஞ் சாரிடா
சயில்மஞ்சுமது தானேதானதுவாய் தாததும்வலுவ தாகுமே. ()

வேறு-விருத்தம்.

மூலகுண்டலி முப்மதவாரிசூழ்
ஆலமுண்டயான் மால்திருபொற்பதம்
வாலிகுண்டலி மாமுகனைத்தொழு
சீலமாமலர் சேவடிபோற்றுவாம். (தகூக)

வேறு-கவி.

அண்டரண்டபகி ரண்டமண்டல அகண்டகுண்டலியின் பொற்பதம்
நின்றிலங்குமதி வாரிசூழ்கருலி நிகழுலாலியதன் நிர்மலம்
கண்டதாரையுட லாதியந்தசுழி கருணைஞானதமிழ் கருதயான்
தென்றலாவிகல்ர்திருப்பரங்கிரியில் திசைமுகன்கபலம்போற்றுளாம்.

வேறு.

வெற்றிதருஞானவெட்டி ஆயிரத்தைம்பதுக்கு மேலாமஞ்சில்
சித்திதருங்காயகற்ப நாலாண்டுசென்றதின்பின் செனித்தநோய்க்கு
முத்திதருமவுழதமொடு வாதவயித்திய முறுப்பு முடித்தவாறும்
சத்தியமாமமிர்தமுண்டு சண்டனையுஞ்செயித்துநிலை சாதித்தேனே. ()

இத்தலத்தில்முன்னோர்கள் மறைத்தமறைப்பொருள்களெல்லாமியம்
கற்றறியார்கற்றுணர கற்பசித்தியோகசித்தி காயசித்தி [பலானேன்
சித்ததிதசத்துஞ்சித்து மித்துருசத்துருக்களின் செய்தியெல்லாம்
முத்தமிழால்குருமுனியி னனுக்கிரகமிருந்ததனால் முடிந்ததாண்டே.

முடிவதுமெய்ஞ்ஞானகுரு பரனருளாலாறுண்டு முடியவேணும்
வடிவுடையவம்பிகை வாளாம்பிகைப்பெண்ணருள இந்நூல்பவுனந்த
ன்னில், கெடிவீரசிங்கமெனு ஞானவெட்டியாலமைத்த கீர்த்திதன்னு
ம், படிபடியாயெய்துமதி ரஸியதனால்பதம்பெற்றுப் பாரில்வாழ்வார்.

இருப்பிறப்புமகற்றகற்பம் வாசியதுநிலைத்துவிட இயம்பலானேன்
சற்பமதின்சாரையினால் சருகினதாலிடையூறு சார்ந்ததாலும்
கற்பமதையுண்டுவரும் காலமதிலவபத்தியம் கருதுங்காலை [டே.
உற்பனநோய்லபித்திடிலு மதற்குவயித்தியஅவுழத முறைப்பேனன்

கற்பமுண்ணுங்கால் அபத்தியநேரிடுமாகில்

அதற்குவயித்தியம் கரு.

வயித்தியம்பாடுகிறே-னண்டே கேளீர்-வயித்தியம்பாடுகிறேன்.

வயித்தியம்பாடுகிறே னயித்தியமாகவுஞ், சயித்தியமாம்பித்தசர
பசோபந்தீர, பயித்தியகாசமும் பாண்டுசோகையுஞ்சொரி, பச்சை
கொந்திகாமாலை பறந்துவிட்டோடவும். (வயி)

மூலப்புளித்தையும் முறைவாய்மைபோலரைத்து, முருட்டிபெடு
த்துருட்டித் திரட்டிக்காலைமாலையுஞ், சாலவும்பித்தமுஞ்சோகைக்ஷய
முமதிதகாசந், தானெனும்பறந்தோடவு நானெனுமுரைத்தேனண்
டே. (வயி)

சுக்குடன்வாதமடக்கி திப்பிலிஓமத்துடனும், உச்சிரமகாருமு
ருக்கன் பூவதுஞ்சேர்த்தரைத்திவை, பக்குவமாகியகாலை மாலையுப்வி
டாமலுண்ண, உக்கிரமதாகியநோய்க ளோடியுப்பறக்குமாண்டே. ()

அண்டவாதங்கள்வாய்வு அகிரணத்தால்பேதியு, மையிருலாய்வ
ரோசிக மதிதமாய்கடுக்கு, மண்டையிடியுஞ்சூலை கிரந்தியரையாப்புட
ன், வாதமும்பித்தசேத்ம மாகிடுசுநோய்களாண்டையே. (வயி)

பூரணமாமதுலைந்து புனலாவதுமைந்து, பொறியாவதுமைந்து
புளியைந்துகாயைந்து, ஆரணமாகவரைத்து அமுரிவிட்டரைத்துண்
ணு, அலறியோடியோடிக்கு மதிதநோய்களாண்டையே. (வயி)

காரீயசெந்தூரந்தனில் கரியுப்பதனைக்கூட்டி, கருவாலரைத்துரு
ட்டிக் காலையுமாலையுமுண்ண, நாரியர்கெர்ப்பத்தின்வாய்வு நடக்கும்
பிரளயமோடி, நமனென்றதிதநோய்கள் நாடியேபறக்குமாண்டே. ()

காலையிலிந்துப்புடனே சுறியுப்பிட்டுப்பதுவுங், கடுக்காயுடனரை
த்து கலக்கியமுரிதனில், ஞானமேகொள்ளவுங்குன்ம நாடியேசூதயங்
களோடி, தேடியேபறக்குநோய்கள் சேதியைக்கேளுமாண்டையே. ()

கருவிழுதியின்வேரி லோடியேவடவேர்ப்பட்டை, கானகந்தனி
லுமிச்சங் காணுவோர்மதியில்கொள்வோர், ஆலகாலவிஷத்தி னமுரி
யதின்மேற்கொள்ள, வாலவயதுண்டாகுங் காலனில்லையே ஆண்டே. ()

கருவசலையுங்கைப்பு காணுவோர்பெருகள்தோறுங், காடுகள்
தோறுந்திரிந்தால் காணுபோகருவசலை, திரிபுவனந்திரிந்துங்காடலை
வோர்தமக்கு, செழுந்தேன்பொழியுமோ சொல்வீரிம்மூலிபார். (வயி)

வசத்தைவால்மிளகுட னரத்தைவாதமடக்கி, வரிசையதாய்கழ
ஞ்சி வாங்கிடுமனல்வெதுப்பி, வசலையதுசரக்கும் வாங்கித்தூளதாய்ச்
செய்து, வாரியெனுமமுரிவார்த்து விட்டாட்டிமைபோல். (வயி)

கதிர்மதியும்வருத லுவகையாக்காலைமாலையும், கருதிசுண்டைக்
காய்பாகங் கண்டுகளிகூறவும், உதையமண்டலமுண்ண பற்பமதனி
லூட்டி, ஒருபணவிடைகொண்டு உணர்ந்துயோகஞ்சாதித்தால். ()

நீலக்கொடியின்வேருஞ் சாதிப்பத்திரியேலம், நேர்சமனதுவ
கையதுவுஞ்சேர்த்தெடுத்து, ஞாலமதினீர்விட்டுரசனைக் கவசமாட்டி,
நாற்பதுநாளிருவேளை நாமேயுண்டுவிட்டோங்காண். (வயி)

கறுப்புக்கையான்தகரை கருஞ்சீரகமுஞ்சுக்கும், கடுக்காய்த்தோ
டுங்கழஞ்சி வகைக்கிவ்விதமாகும், நறுக்கியமுரிதனி லுடனுண்டிரு
வேளையும், உபமாய்மண்டலங்கொண்டு உணர்வீரென்றுண்டையே
கேள். (வயி)

கனகாம்பரமெனவுங் காசிடைகாண்வேரின்தோடுங், கடுக்காய்
கற்காடசிங் காசிடைகணக்கதாகும், செனகாதிதமேவிய அமுரியத
னலாட்டி, தினமுமிருதன்வேளை யொருமண்டலமுமுண்ண. (வயி)

காட்டுமுளசருனை கருத்திலகப்பட்டாக்கால், கறுப்பாயிருந்து
கண்டால் பொறுப்பாய் சமூலம்வாங்கி, கூட்டுமிளகுசுக்குங் குரோச
னையுங்கஸ்தூரி, கொடுத்துப்பணமரைதா னெடுத்துமதிநீர்விட்டே.()

மதிநீர்விட்டுமையன மதுபோல்பெழுகுபதம், வருதவிரண்டுவே
ளை மகிழுமண்டலங்காணும், விதியிருந்தோர்தமக்கு விட்டகுறைவந்
தெய்தும், வேதசாஸ்திரத்திலுள்ள விசிதமிதுவறியும். (வபி)

விருத்தம்.

காஞ்சபுளிதனையெடுத்துத்தூளாய்செய்து கம்பியுப்புக்கிடைக்கி
டைதான்கலந்துவுண்ண, தஞ்சமென்றருன்மமெல்லாம்பறந்தலறுடுஞ்
சுனைங்களுக்குமாகாதே தோஷமெய்தும், ஒஞ்சமென்றபுளியமுரிசார
ணையுங்கூட்டி யுண்டிடவுநோய்பறக்குமுடனேதானும், அஞ்சாதநோ
ய்களெல்லாமமுரிதன்னால் அலரியதுமுடலைவிட்டகலுமாண்டே. ()

அகலவும்பத்தியங்காணுமருளக்கேளு அவுழ்தமதில்கோளாறு
அனேகமார்க்கம், புகலவுசாதாக்களுரைசுதமிர்தவாக்கியம் பூட்டினார்
வெகுநூல்கள்புனிதமாக, விகற்பமில்லாமலுரை மறப்பாய்ப்போச்சு
வெளியாகப்பாடியுமே விசுற்பமாச்சு, உரையதுவாயுரைத்திடுநூல்செ
ய்தியெல்லாம் உரைதவறுதுரைத்துவிட்டா ரொளியாய்த்தானே. ()

காலசருங்கைபெரியுங் கண்வாய்கூசும் கண்டமதுபச்சைப்புண்
ணதிதங்காணும், ஆலவிடந்தீண்டினதுபோலாந்தேகம் அசதிமெத்த
தீபனமுமதிதங்காணும், வாலையொருதிங்களுமூன் றுச்சுதானல் மயக்
கமெனும்பேதியதாமனந்தாளாது, கோலமெனுமனதுமே தேறவே
ணுங் கொடிதாகக்கொண்டறிந்துகொள்ளலாமே. (கஎ0)

உள்ளிருந்தநோய்களெல்லாம் வெளியேகாணும் உடம்பெல்லா
ம்புண்ணாகவெந்துநீறு, வெள்ளிலைபோல்மேனியெல்லாந் தடித்துக்கா
ணும் இந்திரியமுடைந்தல்லோதண்ணீராகும், கொள்ளியால்சுட்டபு
ண்போல்நாபிவேகுங் குமட்டுவதாலவுழ்தத்தைக் கொள்ளொட்டாது,
துள்ளிவிழுந்தாலறுமதாமெரியுந்தேகம் சுருக்கெனவும் நீர்கடுப்புந்
தோன்றுந்தானே. (கஎக)

ஒட்டொட்டாய்மேனியெல்லாங் கடுப்புத்தோன்றும் ஊதுமதுநீ
ர்த்தாரையுடனேபுண்ணாங், கட்டிவைத்தபழங்கனிபோல் தேகங்காந்
துங் கலகலென் றுநரம்பெல்லாந்தளர்ந்துகாணும், முட்டியல்லோவா
ய்வுஅங்கேயேறிமீளும் முறைமையைந்துதிங்களுக்குளொருமையாகு

ம், ஒட்டியம்போல்மடமயிலாள்தன்னைநம்பி ஓங்காரபீடமதிலூன்றிடாயே.

(௱௭௨)

கற்பமுன்னும்போது சேரிடுந்துன்பம்-தரு.

தனனுந்தன தனனு-தான-தந்தனுந்தான தனனு.

அண்ணமாரேகேளீரோ - அந்த-அஞ்சுதிங்கள்படும்பாடதனில், என்னமென்று யானுரைப்பேன்-நல்ல-இடிபோலிடிகள்முழங்கிடவே, மன்னர்மன்னர்கூடியல்லோ-நல்ல-மல்லுயித்தியங்கள்வளர்ந்ததுபோல் தன்னுடலுந்தன்னுதல்ல-விந்து-தாமரைதண்ணீர்போல்தான்வருதல், சொன்னேன்படும்பாடு-இந்நூல் - சூதிதன்றுந்தள்ளிடலாகாது, உண்டால்தெரியுமதாம்-அமுரி-உடலுக்குள் தொண்ணூற்றாறுவருமே, சென்றுவுயித்தியங்காண்-மீளா-சித்திரவதையினைநீயறிந்து, பண்பெழுகிறதால்-பின்பு-பாவையருடன்சேராதே-தனனுந்.

(௱௭௩)

கண்டாலும்பேசாதே-மெத்த-கடினமதாம்பேதிகாளாது, நரம்பு எலும்புகளும் - மச்சை-நாடிகளுள்ளபசைகளும்போய், கரும்புமுறிந்ததுபோல் - அஸ்தி-கட்டுதளர்ந்துவிட்டுவிடுங்காண், துரும்பாகிடுஞ் சடலம்-செல்லுந்-தூணெரித்ததுபோல்காணும், வருமேயனேகவினை-மட-மாதுமயல்கொண்டனுகாதே, அந்தியினிற்கொள்வதற்கு-புளி-சந்திற்கிடக்குதுதானறிந்தும், தன்னைப்போலிருக்குமதாம் - கற்பம் - தானையறிந்திடுவோர்களுக்கு, முன்னமேயான்சொல்லிவிட்டேன்-அந்த-முக்கோணமாகியகேசரியை-தனனுந்.

(௱௭௪)

அன்னம்போலிளமயிலாள்-அந்த-அம்பிகைபாதத்தை நம்பினேன்யான், என்னைப்போலெளியவர்கள் - இனி-எங்கெங்குமுண்டோபார் வையகத்தில், சாதியில்விரதீஸ்பரன்காண்-எந்தன் - தாயோபராபரை தானளித்த, வேதியர்குலங்காணும்-பிர்ம-வேதவேதாந்தம்விதித்தகுலம், நாதன்பரகுருவாம்-பிரம-நாதாந்ததிலகதரித்தோர், பேதாபேதங்களொன்றன்-சாதி-பிரபல்லியமெலாரறிவார், ஆருந்தான்திங்களிலுந்-தோம்- அசதியின்மெத்தவுறக்கமதாய், மாருதமயக்க - மங்கமாதிரமுமனல்சேகமதே-தனனுந்.

(௱௭௫)

தோராதுடல்கூசுந்-தொண்ணூற் - றாறுகருவியுஞ்சோபமதாம், வெறுப்பெவ்வேறுபடுத்தி-மாது-வேதனைபோலுடல்வேசாறும், வீறுடன்பசிகோபங்-கனல்-வேகமெத்தகாணும்பூரணத்தில், கூறுடனறிந்து கற்ப-மதி-கொண்டாலல்லாதேகக்கூறுகாணும், தேறுவதுபெழுதிங்கள்-மாது-செல்வமயக்கங்கள்பொல்லாது, பேறுபெற்றறிந்தோர்கள் - பிர்ம-கற்பமதின்கூறுபிறபல்லியமே, யெட்டாந்தான்திங்களிலு

ம் - மெந்த - ரொட்டாவிவிட்டாலுயிர்போகும், பட்டால்தெரியவரு ம்-பாடு - பட்டதனுல்பாலையாவதுகாண்-தன்னுர். (௱௭௬)

விட்டால்விந்துவெந்திடுங்காண்-வினை - மீளாதுகாயக்குரோதத் தினுல், கெட்டாருலகருமே - மாது - கேணியோனிதனில்வேகமாய், ஒன்பதுகாண்திங்களிலே-பின்-னுபாயமதாகவுந்தேறவேணும், ஜென் மவினைப்பயன்போகுஞ்-சிவ-யோகராஜாங்கச்செயல்காணும், பொன் போலுடல்விளங்கும் - மாயப்-போதனைகண்டவர்போய்மீளார், ஐம்பூ தமாறிவர் - மதிஅப்புஅறிந்தோரவர்மாளார், பத்தாந்தான்திங்களி லும்-துயர்-பாலன்படும்பாடுமெத்தவுண்டு, கற்ருர்கல்வியார்காணுங் - கற்பங்-காயசித்திபெற்ருல்காலனில்லை-தன்னுர். (௱௭௭)

வித்தால்விளைவுமுண்டு-மிகு-வேதனைமெத்தவெகுபாடு, சற்றுநி லுப்பொறுக்காச்-சடஞ் - சாக்காடுசாகாதிருப்பதுபார், உற்ருருறவி ன்முறை-சற்றத்-தார்களொருதுணையானறியேன், இதுக்குமருந்தது வும்-புவியில்-எங்குமில்லைகருகண்டறியார், உதவாதினியறியேன் - கற் ப-முண்டிடுவோர்மாற்றதுகாணும், இருவார்கதிர்மதியால் - செட்-மெ ண்சாணுடலும்வலுத்திடுங்காண், பரவசமாயளித்தேன்-ஜென்ம - பா தகஞ்செய்தால்பறந்துவிடுந், துஙரராஜயோகத்தினுல் - துன்பஞ் - சே ராதுகற்பச்சுகாதீதமே-தனனுர். (௱௭௮)

விருத்தம்.

திங்கள்தசபத்தாச்சுபாலனுர்க்கு சிறுவனுமேபிறந்திட்டான் திங் கள்பத்தில், கங்கையணிசடையாரைப்-போற்றிசித்தங் - கருத்தாலு மெடுத்துலகில் கெணித்தேன்காணு, மங்கையுடன்வாதாடி யபிர்தங் கொண்டு மனோன்மணிதன்பாதமறவாமல்போற்றி, அங்கிருந்தவண் மையெல்லாமுரைப்பேன்காணும் ஆதிகுருபாதமறவாமல்தானே. ()

மூலமெனும்வச்சிரப்பை-வீட்டுக்குள்ளே - மூங்கில்முளைபோல துவங்காரசாரம், வாலையருளாலமைத்தவாறுதன்னுல் மதிரவியுங்கூடி யதுமிரண்டுஆண்டில், பாலனதுபோல்ஜெனித்துப் பிறவியாகிபத்து திங்கட்குள்ளுஞ்சிறுபாலனுகி, தூலமிந்தமூலமதி லுதித்தவண்மை சொல்வெனினிகாயம்வந்தசூக்ஷமாண்டே. (௱௮௰)

காயசித்தி-தரு.

காயம்வலுத்ததுகா-ணுண்டே-காயம்வலுத்ததுகாண்.

காயம்வலுத்தது மாய்கைமறந்தது, கவலைதெளிந்தது சகலமெர ழிந்தது, நேயனருள்பணிந் தாக்கைவலுத்தது, நீயென்றுநானென்று நேசமொழிந்தது. (காயம்)

கூற்றுவனென்ற கொடூரமழிந்தது, கோடானகோடி வியாதியிறந்தது, யேற்றியிருந்தஇகழ்ச்சிமறந்தது, என்னுள்ளேயீஸ்பரன்தன்னையறிந்தது.

வாசமாய்நித்திரை பாசமறந்தது, வையகத்தோர்கள் வசியம்பிறந்தது, தூஷணைபற்றது பூசைநைவேத்தியஞ், சொல்லுமந்திரசெபஞ் சொக்கியும்போச்சுது. (காயம்)

தத்துவந்தொண்ணூற்றாறும்பிரிந்தது, தாதுகள்நாடி சடமும்வேறாச்சுது, சுத்தசகலமென்ற மூரிதேனுச்சுது, சுகஞானதீபஞ் சுழிகனலாச்சுது. (காயம்)

காமப்பாலுண்ட சருக்குமழிந்தது, காமக்குரோதலோபங் கண்டிதமாச்சுது, தாமப்பால்கொண்டு மதியொளிகண்டு, மகிழ்ச்சியடைந்து வச்சிரதேகமாச்சுது. (காயம்)

மூலத்தினுள்ள மூப்பாழுமறிந்தது, முன்னமேயன்ன மயமும்பிரிந்தது, ஞாலத்திலேறவும் வாசிவளரவும், ஞானசிரோமய கியானவனுண்டையே. (காயம்)

ஓராண்டிக்குள்ளே யுடல்வெவ்வேறுச்சுது, ஓங்காரத்துள்ளேயுயிருறவாச்சுது, நீங்காதவாசி நிராமயமாச்சுது, நின்னுள்ளே நின்மயநேசமாச்சுது. (காயம்)

பிராணயவாசியும் பின்னிட்டிழுக்காமல், பேசுமூலாதாரம் வாசம்பொருந்திட, விருனவாயுவுந் தசபத்துங்கூடியு, மேவியொருமித்துத் தாவியுமொன்றதாய். (காயம்)

பத்துமொருமித்துப் பாய்ந்திடுநாடிதான், நித்தம்வாசியது நேர்பிசமாமலும், சத்துஞ்சித்தானந்த முத்தியருள்தருஞ், சித்தியனுக்கிரகசுத்தமதிமலர். (காயம்)

நித்தம்வாசிரூகி நின்றுருசாதியும், மற்றதுகைப்பு அப்புவுஞ்சுன்னமாம், பெற்றபரிப்படி பேர்பெறுஞானிகள், உத்தமர்சொல்லுமுண்மையிதாண்டையே, (காயம்)

வாசிநிலைபாதேன் மாண்டிடுந்தேகமும், பாசம்வைத்து விசுவாசித்துவூதிடும், பேசப்பேசவெகு கோடிரகசியம், ஈசனருள்படி யனுக்கிரகநிலையினில். (காயம்)

இந்தவாசியூதி யெந்தேசகாலமும், அந்தப்படி யனுக்கிரகநிலையினில், சிந்தைதவைக்காமலுஞ் செய்கைவிதப்படி, விந்தையாக விளங்கிஞானண்டையே. (காயம்)

சந்தேயங்கள்வாரா சாகாநிலைப்பாரும், வந்தவழிவரு மாறலகப்படும், எந்தன்கருத்ததின் தந்தவிதிப்பயன, சிந்தனையுமில்லா நீடூழி வாழ்வார்களே. (காயம்)

கட்டும்வாசியறு கால்பன்னிரண்டினால், நெட்டிட்டேறுமலும் நீஞ்சிடநீஞ்சிட, மட்டுப்படுமிந்த அம்பிகாயோகமும், தட்டுப்படுமெங்கணகம்பலசோதியில். (காயம்)

அட்டியில்லாமது மாண்டையினிமேலும், ஒட்டிக்கண்டதாரை ஓயாமலூறிடுங், கெட்டிகெட்டிவச்சிர தேகமதாகிடும், நெட்டிநெட்டியேற நிர்மலசுரூபமே. (காயம்)

நாளுநாளுக்கு வினாடிவினாடிகொண், டாளுந்தினந்தின மப்படியேறினால், ஏழுமேழும் பதினாலுலகங்களும், சூழுஞ்சூழுஞ் சுகாதீதங்காணுமே. (காயம்)

விருத்தம்.

தராதலவிராசர்களுந்துரும்பதாச்சு தரணிதனிலுள்ளவர்களெறும்பதாச்சு, துராதுரைகளணுவளவுதுன்பம்போச்சு துலையாதசெகமாய்கைதுலைந்துபோச்சு, மாறுசுடர்கோபமாதிப்போச்சு மகிதலமுமண்டரண்டமறியலாச்சு, வீராதிவீரனென்றும்வேகம்போச்சுவேதாந்தசாரமெல்லாம்வெளியாய்ப்போச்சே. (தஅஉ)

கல்லுமலைகாடெல்லாம்பொன்னதாச்சு கண்பட்டவிடமெல்லாங்கயிலையாச்சு, நல்வினைதீவினைக்கவுந்தங்கற்பமாச்சு நாடினபேரெல்லோர்க்குஞானமாச்சு, சொல்லவல்லபெரியோர்க்குத் தெய்வமாச்சு சூரியப்ரகாசவொளிதேனலாச்சு, புல்லறிவுகொண்டோர்க்குப் பேய்தானாச்சு பூரணத்தையறிந்தவர்க்குஞானமாச்சே. (தஅங)

கொச்சகம்.

காலையிலுண்டாலமுரி கடும்பேதிகாணுமதாம்
மாலையிலுண்டாலமுரி வருமேபெருவாழ்வு
சாலையிலுநின்று தடுமாறிபோகாமல்
வாலையெனும்பாதமலர் வணங்கினேன்பூரணமே. (தஅச)

விருத்தம்.

சொல்லவொண்ணாப்பூரணத்தைச் சொல்வேனுண்டேசோதிமதியாயிருந்தசூக்ஷந்தன்னை, வெல்லவொண்ணாதாயிரத்தெட்டுநூறுக்குள் விரித்துரைத்தேன் மகத்துகளின்மறைப்பெல்லாந்தான், வல்லமையா

ன்சொல்லவில்லை அம்பாள்சொல்ல வசனித்தேன்கற்பவிதி மார்க்கமெல்லாம், நல்குவேன்பட்டசனம் நன்மைதீமை நயந்திந்நூலறிவதற்கு நல்குவேனே. (தஅடு)

### பூரணமுறை-தரு.

பூரணஞ்சொல்லுகிறே-னுண்டைசேளீர்
பூரணஞ்சொல்லுகிறேன்.

பூரணகுப்ப முனியனுக்கிரகத்தைப், பொன்போலிருத்திடு மைம்பத்தோராக்ஷரங், தாரணையாகவுந் தற்பரலிங்கஞ், சதாசிவஞானசடாக்ஷரங்கண்டுபான். (பூரண)

காலத்திலேறிய போதகந்தன்னைக், கருவாலறிந்து அறிவறிந்தர்ச்சனை, ஞாலத்திலுங்கண்ட தாரையிலும்வாசி; நாமறிந்தாதிடவாமப்பால்கொண்டுமே. (பூரண)

பசசைப்பசுங்கிள்ளைப் பாலகன்தன்னையும், பாவியறியாதபாவனையானதால், உச்சிதம்மேலுண் டுலகந்தைசுற்றியும், ஒன்றுங்கிடையாம லுண்டார்களாண்டையே. (பூரண)

தேசங்களோடித் திரிந்தலையாமலுஞ், சென்மமீடேறத் தசதீட்சைசெய்துயான், மோசம்வாராமலும வாசிகண்டதாரை, ரேசிததுப் பூரண விலாசத்தைநம்பினேன். (பூரண)

அந்தநல்லுப்பதைச் சந்தித்துக்கொள்வதும், ஆனால்வெகுமோசமாக்கினையும்வருந், தந்தையுப்பகன்று பேதிகடைத்தது, சாரகாரவேகத் தாலுஞ்சுன்னமாண்டே. (பூரண)

காலையில்மூலப் புளியுண்டீராண்டினில், மாலையிலுஞ்சந்திர மாமதிமாறிடும், வாலப்பருவம் வருஷமீராண்டுபோய், மூலச்சுழிமுனைமுத்தியுமெய்துமே. (பூரண)

சத்திசிவபொரு மித்துஈராண்டினில், சுத்தவைராக்யஞ் சூக்ஷமிந்நூல்முறை, விந்தைவேதைக்கு வேதாந்தக்கருக்கடை, சித்தாஞர்சிலர் சின்மயசித்தியே. (பூரண)

அஞ்சுபஞ்சபூத மாதரவாயிக்க, நெஞ்சுநேர்நடு மையத்துவாரமில், நஞ்சுமேபாலுமிருந் தாடியநாதனுங், கொஞ்சியேவிகுழந்தைபோலாவரே. (பூரண)

வாலைவாலை வரும்வயதேகளை, மாறிமாறி படைக்க அல்லங்களை, நீலமேகச்சவ் வாரியூகியூதி, விருடியாக்கள் வெளிவாராதாண்டையே.

காலைகாலையதி காலையில்வாசியும், ஆலமுண்ட அயிர் தந்திறல் மூலமும், பாலையுண்டுவான் குமிறிப்பாலுடனே, சோலைவாழுஞ் சிற்று மணக்கெண்ணேயே. (பூரண)

மூலசுத்திமுன் ஞளதிகாலையில், பானுமென்னப் பருக்துசரிசமன், நாலுஞ்சோதி யுள்ளுக்குஒருபலம், காலையில்கரி சாலையுமுண்டிடே. (பூரண)

சிற்றுமணக்குச் செழுமலர்மேவிய, முத்தாடியான முன்னமேமயெண்ணேதான், நித்தமமாமூலிச்சாறுஞ்சரிசமென், வைத்துவாலைக் கதிர்முகமாண்டையே. (பூரண)

பூமிபாரம் புவியில்நாளுக்குநாள், சாவிநாவினுண்ணுக்கு அண்ணுக்குமேல், நாமியொன்று பெருவிரல்தோய்த்துடன், நாமினூட்டினன் நாவினில்தேய்த்திடே. (பூரண)

சாய்க்கச்சாய்க்கத் சரித்திடுங்கோழையும், வாய்க்கவாய்க்க வழலையுமற்றது, தேய்க்கத்தேய்க்கச் செனித்திடுஞ்சேத்துமம், தோய்க்கத் தோய்க்கச் சுழிமுனைகாணுமே. (பூரண)

மண்டலமிந்தப் படிமூலமாவது, வாங்குஞ்சிறுகுடல் வாங்குமலப்புளி, கண்டதோர்பலங் காலையினுண்டிட, கற்பமலமுந் தூற்மாங்கிஷமேகுமே. (பூரண)

பாலுஞ்சாதம் பதமாகும்வகைசரி, வேலுமயில்மீதில் வாலசுப்பிரமண்ணியர், மேலுங்கண்டகாக்ஷி விளக்கமருளியுங், கோலாகால குமரகுருபரன். (பூரண)

என்குருசுவாமி யெனக்குபதேசிகன், பொன்போலும்பூரணன் போதித்தனுக்கிரகம், அன்புவைத்துசுழிய யப்பாசசாதனே, முன்பனுக்கிரகசம் பூரணமாச்சுதே. (பூரண)

வழலைக்கபமு மலமுமும்மலமும், விழலாகப்போச்சுது வேதனையாச்சுது, சுழலும்ரவிமதி சுத்தமொன்றச்சுது, சோதியொளிநாதச்சுரோணிதம்வாச்சுது. (பூரண)

மும்மலமற்றது மூன்றுமண்டலத்தில், தம்மையறிய சுத்திரமாச்சுது, நன்மையுந்தீமையு மிம்மையும்போச்சுது, நாதவிந்தாலும நவசித்திரவிடாச்சுது. (பூரண)

விந்துநீரு வெளியினுலாவிய, அந்தவாய்வு அதுசப்பத்துடன், எந்தஞசாமெனக் குபதேசமு, மைந்தனென்று மகிழ்ந்துரைத்தார்களே. (பூரண)

### விருத்தம்.

புளிபதனையுண்டதனாலாவதேது பூரணத்திலேறியல்லோ தேதவேணும், வெளியானவிந்துவைத்தா னறியவேணும் வேதாந்தசாரமதைக்கட்டவேணும், சுளியானகாரணத்தைபறியவேணும் காரமுன் சாரமதைக்கட்டவேணும், எளிதல்லவிந்தமூரியிதனாலாச்சு யின்னமொன்றுசொல்லுகிறேனினிதானுண்டே. (கூஅஎ)

### வெண்பா.

கேளும்புளியுப்பால் கேசரப்போய்பாய்ந்துவிடும்
நாலுநாலாண்டுதிங்கள் நானறிந்தேன்மீளவுடல்
கண்டேன்கனகசபை காயசித்திலாயறிந்து
உண்டேபரந்தனிலும் ஓம். (கூஅஅ)

### சரக்குளிகை-தரு.

குளிகைகட்டிக்கொண்டேன்-சூதரச
குளிகைகட்டிக்கொண்டேன்.

குளிகையெனுமூல பாலத்திலுகின்று, வெளியொளிதற்பர வெண்மதிசாரத்தில், களிணமதாசவு நாதத்தைச்சேர்த்துடன் புளியிலங்கித்துமே பூரணத்தோடவும். (குளிகை)

காரசாரத்தைக் கரைத்தொருபாண்டத்தில், வீரத்தையுங்கிளியாய்கட்டிமேலுடன், சாரத்தைக்காரத்தை யேபொடிதூளாய், நீரதிவிட்டு நிகழ்த்திருசாமமே. (குளிகை)

பார்த்துவன்னியனல் பாச்சுங்கமலாக்கினே, ஊரலையற்றவீர முற்பனமாகுங்காண், காரசாரசுன்ன சங்கைவேகத்தினால், வாரதினாலது வஸ்துவுங்கட்டிடும். (குளிகை)

விந்துடனாத மிகவைத்திடும்பதம, வெந்தணலாலுஞ்சவ் வீரம்வலுத்திடுங், தொந்தமிவைதச பந்துடனாகிடில், அந்தமிதுசுன்ன மாகிடுமாண்டையே. (குளிகை)

சவ்விரசுன்னஞ் சரக்கையிறுக்கிடும், எவ்விதமாஞ்சரக்காவதுஞ்சுன்னமாங், கவ்வியுமீய்ந்திடு நீரிற்குழைத்துமே, நவ்விக்கடுங்கதிர் நாடியசுன்னமே. (குளிகை)

வீரசுன்னத்தால் வெகுவேதையாகிடும், மேலுந்துரிசுக்கு வீராகனுமிநீரால், காரசுன்னம்படமேலுங்கவசமாய், சூரியனிற்சுட சுன்னமதாகிடும். (குளிகை)

பாச்சுங்சமுஞ்சுப் பாஷாணமசிக்குதுமேல், தேச்சுக்குருவினில் செங்கதிரில்பட, வாச்சுதமூரியில் மாட்டிரவியினில், கூச்சமில்லாமலுங் கூறிதுவாண்டையே. (குளிகை)

ஜசபத்துடனிடை தாளகம்வாங்கிடும், விசையதாயிடில் விராகனுமாகிடில், கசையலர்கழஞ் சாமதுசுன்னமும், யிசைய அமுரியில் வேதைக்கவுந்தமே. (குளிகை)

தாளகந்தன்னைத் தணல்கதிர்வேகமில், ஆகமப்படி யனலுப்படபட, தூளதாகிடுஞ் சுன்னமதாகிடும், ஆளுமேவருகாதுகாணுறவே.()

லிங்கமொருபல மாகவிளங்கிடில், அங்கசைவிர ஜெயசுன்னமுன்னிடை, வங்கத்தினீரில் மதிவிட்டரைத்துடன், பொங்கிப்புத்தாகிடில் போச்சுதுசுன்னமே. (குளிகை)

தாரமாந்தனி சுன்னமதாகிடில், வீரமாவதி துக்குயிணையதாய், தாரசுன்னமுந் தங்கமுஞ்சேர்த்திடில், தாரஞ்செம்புத் தவளமதாகுமே. (குளிகை)

கேசரிதன்கிரு பாகரமேவிய, வாசமாமதி வாழ்க்கைமுயற்சியான், பேசும்பேசா தெழுத்தறவோதினும், மேஷமேது விளங்குமகத்துகள், (குளிகை)

வாசியென்றுஞ்சும்மா வாவென்றழைத்ததால், நேசமுன்னாள் நெடுநாளல்லவோ, ஆசைவைத்து அமுரியோராண்டுநீர், பாசம்பாசம் பரியாசமில்லையே. (குளிகை)

தேசியென்றால் செழுந்தேனுணருமாய் ஊசியாவ தொருமுனைகாணுமாய், வாசிவாசி வருமென்றழைத்ததால், மாசில்லாக்கதிர் மாதலதிருவாம். (குளிகை)

கண்டுகண்டு கனவுமறிதலால், நின்றுநாளுநெடுநாளனுவலேன், கண்டகண்டக் கருத்தைப்படைத்ததால், அன்றுமின்று அறிந்தவர் ஞானியே. (குளிகை)

வேறு-விருத்தம்.

விஜையமெனும்ரசகுளிகை மனோவேகஅதிதமெனும் விதித்தசங்கை, பசைந்தமண்ணீருண்டபலன் தீக்ஷையிரண்டுடன்சேரப் பனிரெண்டாண்டில், விஜைபகுருதீக்ஷைவச மாவதுவுங்கடினமது இசையுமாகில், அசவதுகாணிருபத்தோ ராயிரத்துஅறுநூறு மடியிற்சேர்ந்தே. (௯௧௦)

விருத்தம்.

மூலமதிலடங்கிசுழியண்டம்பாய்ந்து முடியில்நின்று நடுவணையீன்முனைக்குள்ளாகி, ஆலவிடமாமதுரவாசியுண்டு அடியில்நின்றுமேலெழுப்பிஅண்டம்புக்கி, காலையிலுமாலையிலுந்தாரையூதி கமலமலர்க்

குண்டலிவல்லபையைப்போற்றி, வாலையெனுமம்பிகைப்பெண் வடிவென்றுத்தாள் வசனமதுவால்வாசிவசமதாச்சே. (௬௯௧)

ஒன்றானவுடனாயிருமொன்றாப்போச்சு ஒளிவானரவிமதியுமொருமிதாச்சு, கண்டிரோமகத்துகளீச் சூரியசந்திரன் கதிர்மதியுமொரு சுருபங்காணுங்காலே, அன்றுடம்பிராணுயவாசியூதி அசைதுவும்பிரியவொட்டாஅமிர்தமுண்ணும், சென்றுடும்பிவ்விதமா யுலகில்வாழ்வார் சிவயோகமிதுவாதிந்தால் ஞானிதானே. (௬௯௨)

மனோநிடங்கூறல்-தரு.

தனந்தனந்தன தானனே-தன-தனந்தனந்தன தானனே.

மனமினம்பொருந்திசையருள் தானே-மனந்-தணிந்துநீமிக விழுவானேன்-கன-மினமறிந்துடல்விழுகாதே-ஞானக்-கவியறிந்துநீ மறவாதே. (தனந்)

மூலப்-புளியெனுங்கற்பமிதுதானே - வாலைப் - பருவமாமதிவருவோனே-காலே-அரவத்ததினிடவெண்சாரை-மாலே - அழுரித்ததுவிஷமறவாதே. (தனந்)

புவி-இசைந்துவாய்மொழிவாராதே-தவ-மிருந்தொருநிலை பிரியாதே-மது-வருந்தியறுசுவையதமாக-குரு-விருந்தசுழிமுனை யருள்பெறவும். (தனந்)

கண்-சிவந்துபோமது பாராதே-மதி-குலைந்துகாணிதுசாராதே - உண்-ணுகந்ததசதிங்களுமதிபால்-உட - லுயர்ந்துலைதனையுணராதே.

அறி-வறிந்தபின்னவரராரோ-சுழி - அமர்ந்திருந்தபின்னறிவாரோ-இது - ஒருவிருந்ததின்மலக்கூடு-இன்ப - மிசைந்திருந்ததுறக்கந்த வீடு. (தனந்)

மனம்-பிரிந்திருந்தபின்பேராரோ-அது-தெரிந்தபேரினைதசொல்வாரோ-தன-மிருந்தபொக்கிஷமதுதானே-வினை-யொழிந்துபோமது-குருதானே. (தனந்)

இடை-கலைக்குமறவாதருவாபோ-பின்-கலைக்குஒருவழி குறைவாமோ-கட-லலைக்குநிபாரெதிராமோ-அலை - கடலிதுக்கொருநிகராமோ. (தனந்)

உந்திச்-சுழியினில்நீமனமே-வாசி-உழன்றுமேலங்குபடிமாட்டி-மூல - சந்திரபுஷ்கரணிநதிமூழ்கி - திவ்விய - சமுத்திரசலத்தினுவர்நீக்கே. (தனந்)

திரு-வனர்த்குருபரசிவஞானப்-பிஜக - மனைத்தாஞ்செயல்பெறு மெய்ஞ்ஞானம்-குரு-வரத்தினருள்விட்டகுறைவிதிபார்-மதி-பரத்தில் கெதிபெறுநாளுண்டே. (தனந்)

நந்திக்குருபரநாதனருள்-திரு-நாமத்தைநயந்து வுணர்ந்துருகி - இன - மிர்தப்படிரவிமதிகாட்டமிருந் - திரு - வினையொழிந்தேநாளு ண்டே. (தனந்)

முக்கோணச்சுழிமுனைநடுவே-மூலா - தாரக்கணபதியருள் தனி னும்-நாம்-எக்காலந்தொழுதே பணிவோம்-என் - றெண்ணிலையாதேம னமே. (தனந்)

பிர்ம-சதுர்முகனருள் திருமலரடியில்-மதி - தவமொருநிலைபெற ஓராண்டு-கர்மச்-சடமொருவினையொரு ஒழியதவப்-அருள்-தருங்கெ திபாகுருநீயாண்டே. (தனந்)

கண்டமகத்துகள்விண்டதில்லை-கற்பங் - கருத்தையறிந்தவராரு மில்லை - செகம்-எண்டிசையனைத்துமே யாராய்ந்தா-ரதி-லெவரெவரெ ன்றறிவாய்மனமே. (தனந்)

குயில்-போலிளமொழிமடமாது-இரு-கொங்கை யெனும்விழிபா ர்வையினால்-மய-லகிலமுழுதும்யோனிக் கேணிதனில்-விழுந் - தாவங் கடித்துமாண்டிடுமனமே. (தனந்)

இரு - விழிசிமிட்டிகள்ஸ்தனபாரம்-கலை - யெடுத்துமுகமுருவது காட்ட-அருந்திப்-பின்தொடர்ந்தவள் மாமயலாள் - வாடைப் பொடிய தும்போட்டியல்வாய்மனமே. (தனந்)

இரு-துடையரவப்பாய்பதுகடிக்க-மருந் - தெலருமறியாரிவ்வுல குதனில்-அருள்-விரகமதுகாமக் குரோதமெனும்-விஷம் - விக்கிரமெ னுமறிந்திடுமனமே. (தனந்)

நிலவுபொழியுமதிசந்திரகலை-வரு - மிரவுபகலதுமாறிடவுங்-கன ல்-மனமுஞ்சலமதுநீரதுபாய்த-லலை-கடலுமிதுக்குநிகராமனமே. (த)

சுழி-யின்முனையிலகுப்நடுவணைகாண் - சொன்ன-தூரியமதிநிலவு பொழியவரும்-விழியி-னொளிவுபிறைமதி சலநீர் - விட்ட-விதியென்ன வித்துநீராமனமே. (தனந்)

பஞ்சபூதாதியஞ்சும் பரவெளிதான்-அப்பு - பருதிமதியிரண்டும் பழகினதால்-நெஞ்சுப்-புண்ணாகிடுங்காண்கடுங்காரம் - நின்ற-நிர்மலம் போக்கிடுங்காண்மனமே. (தனந்)

மும்மலம்-போக்கிடு முப்பாழ் மூலசுத்தி-முதல்-முக்திசித்தியுமெய்தல்முனைகாணல்-அருள் - ஞானசித்தியுமெய்தல்காயசித்தி - ரவி-கடனமென்னுலருள் நாமுரைப்போம்-தனர். (௲௯௩)

கொச்சகம்.

அண்டமெல்லாஞ்சூழ்ந்துநின்ற ஆதித்தனென்றேயறிய
மண்டலமெல்லாமொளிவாய் வளர்பிறையின்சூக்குமதை
கண்டேன்மதிமலர்பார் கனகவம்பலத்தினருள்
உண்டேன்வெஞ்சாரையதை யோகசித்தியாலறிந்தே. (௲௯௪)

சித்திதரு ஞானவெட்டி செங்கதியாற்றருகே
சத்தியாம்வேதாந்தவொளி தாய்ப்பதத்திலேதுதித்து
முத்தியாமுப்பாழ்கடந்து மூலச்சுழிதன்னருகில்
மத்தியத்தில்நின்றமதி வாமப்பாலுண்டேனே. (௲௯௫)

சொல்லப்போகாதெனில்நான் சுகபோகவேளைதனில்
வெல்லப்போகாதுகண்டாய் வேதாந்தகற்பமதை
அல்லப்போவென்றுலகி லில்லைவதனாலாவதுண்டோ
வல்லமைபால்கொங்கணர்க்கு வாய்த்ததுகாணிப்பொருளே. ()

எத்திசையுமேபுகழு மித்திரன்தனக்குரைத்த
புத்திநிலையாமனுமே புதுமைகேட்டிருந்தகமை
சத்திதனைவிட்டுவெகில் தடுமாறிபேதவிர்த்த
வெற்றிபெற்றகொங்கணர்க்கு விரித்துரைத்தார்வள்ளுவரே. ()

தாயார்சரஸ்வதியுந் தந்தையெனும்பிர்மாவாம்
மாயப்பிறவியினால் வந்தார்புவியுதனில்
ஓபாக்கவலைபெற்று வுழன்றுலகில்வாழாமல்
காயாப்பிறவிதன்னைக் கற்பத்தால்கண்டேனே. (௲௯௮)

கொள்வதுமெப்படியெனது குருவருளேயென்றுநம்பி
உள்ளமதிகலங்கி யுலகிலுலவுவதேன்
கள்ளமல்ல இந்நூல் கூகடர்தனக்கெய்துவதோ
வள்ளுவனார்தாமுரைத்த வசனமிதப்பாதே. (௲௯௯)

விருத்தம்.

கொள்வதென்னமூலமென்ற காரந்தள்ளி கொண்டிடவுந்தினந்தோறுமாண்டஞ்சாச்சு, தள்ளுவதுமெண்ணெய்சுன்னங் கடுங்கோடுள்ளி சாதித்துவருந்தையிலும்பேதிகாணும், அள்ளுவதுமூலமென்ற

புளியைமாற்றி அந்தியிலும்புளியருந்தி பருவேநோக்கி, கள்ளமல்ல விரமுண்டா லஞ்சாண்டாகில் கடினமெத்தஎழுதிங்கள் தருத்தாமே.

கன்னியெனுமம்பிகைப்பெண்வடிவென்தாயார் கல்வியிலுமுயர்ச்சிமெத்தகாமரூபி, உன்னிதமாய்பூருவத்தில்மூலத்தாய்தான் ஓங்காரத்துள்ளொளியாயுலவுமாத்தாள், வன்னியெனும்வலேயறுத்துமேருதாண்டி வாசியிலுஞ்சிவயமெனவைத்தூஷகி, சென்னியெனுங்கருவேகொண்டமூலத்தாயை தேடுதற்குமிகவரிதுசெப்புவேனே. (தாக)

செப்பிடினுந்தாயெனக்கும்பிள்ளையானள் தேவியம்பிகையவட்குச்சிஷனுமேனன், ஒப்பிதமாய்குருவானுளடியேனுனே ஓமேகாமேகாவேதபெண்ணுருவுமானள், இப்பிறப்பிற் பெண்ணுகிசேர்பெண்ணுய் எண்டிசையும்புகழ்பெரியதெந்தன்வாழ்க்கை, அப்புவின்பூவறிந்துமூப்பூவொன்ருய் லகிலபுவனங்களுக்குமிகமேன்மேலே. (தாஉ)

இன்னமினிசொல்வதெந்தன்வாழ்க்கையாலும் எச்சாதிப்பெண்ணுகியிருந்தாலுந்தான், அன்னையெனுந்தாய்தந்தைபிள்ளைசுற்றம் அவரோரோகாருரோ அகலத்தள்ளி, வஞ்னியன்தநம்புதலாய்மனதாய்நின்றேன் வாகானபூரணத்தில்மருவினேன்யான், சென்னிதனில்மாதர்களேக்கண்ணிற்கண்டால் தேசம்விட்டுமறுதேசஞ்சிறந்திட்டேனே. ()

உந்தியெனுமோங்காரமூலகற்பம் உறுதிபெற்றுமண்டலந்தான் கடந்தபின்பு, வந்துதிக்குஞானகற்பமோராண்டுண்ண வரிசையுடன் கொள்ளவுமே வகைதான்வேணும், உந்தியெனுஞான கற்பமாண்டேயொன்று ஓரெட்டாம்பன்னிரண்டில்முடிந்துபோச்சு, அந்தலபிதன்ளுண்டு அகடும்வாரா தகமிருதலேமலபியுமமைந்ததாண்டே. (தாச)

ஏமனுக்கும்நமனவளாயிருந்தாளாத்தாள் ஈஸ்பரருக்குத்தமக்கதிகமிவள்தானுச்சு, காமனேக்கண்ணுலெரித்தகதைபோலாச்சு கருவியெல்லாமாண்டதுவுங்கசடிபோச்சு, பூவதுபோலிருந்தஉப்புமயம்பொனுச்சுபொன்மேருகிரியிவட்குமணிவதாச்சு, வீமனுக்கும்வியலியும்போல்தேகமாச்சு வெகுசுருக்குமெத்தநன்றுவிந்துப்பாண்டே. ()

கொச்சகம்.

ஐங்காயமாச்சுதகா லேக்தாண்டுகற்பமுண்ண
தங்கநிறமாற்றதிகச் சாட்சியறிந்தேனுபமாய்
வெங்காயமாமதித வெள்ளேக்கல்லுப்பதனுல்
பங்கமில்லாமலுண்டால் பத்தியசதிற்பமுதிலேயே. (தாசு)

பத்தியத்திலேபழுது பாகமதுமுன் தவிர்த்தால்
அத்தியத்திலுங்கனல்தொண் டசீரணத்தால்பேதியெய்தும்
சுத்தமதிப்பாலுடனுஞ் சொர்னமலருண்டதனால்
சித்திசெய்துலேகியத்தான் செப்புகிறேனுனதிங்கே. (௲௭)

கலித்துறை.

அஞ்சாண்டில்கற்ப மருந்தப்புளியு மதுபடவும்
நஞ்சாகும்பேதி யடிக்கடிக்கேவ நமனதுவாய்
கஞ்சாவதுப்பட மலங்கட்டும்இராணி கண்களும்போம்
இஞ்சொற்றிருவள்ளுவ நாயனுமுண்ட இயல்பதுவே. (௲௮)

மாமாந்தகற்பம் பனிரெண்டுமாண்டு வருந்திடினும்
நான்மாத்திரங்கடு களவுப்பிரமாணம் நடந்தறியேன்
தேன்மொழிவேல்விழி மாதர்சம்போகஞ் செய்திடினும்
தான்போய்மரணஞ் சுடுகாடுயேகுஞ் சவமதுமே. (௲௯)

கற்பலேகியம்-தரு.

லேகியங்கொண்டேன்காண்-காயகற்ப
லேகியங்கொண்டேன்காண்.

லேகியங்கொள்வனினி யருளின்பம், அளாவிய அண்டபிண்டமப்புவின்காரமும், தாவியிடித்துச் சரக்காதிகங்களுப், பாகமதாகவும் பாண்டம்விட்டேபதம்-லேகி. (௲௰)

ஆவியதுக்கு ளகலாமலும்படி, தாவிநாதவிந்து தாக்கியேசூரணம், மேவியதற்பர வேதசாரத்தினால், பூவதுலேகியம் பொன்னிறமாகவும்-லேகி. (௲௰௧)

பெற்றிடுமெய்ஞ்ஞானங் கற்றறிந்தோதிடுப், சுத்தவாலைகியுஞ் சித்தர்பதம்பெற, வித்தகிங்களா லுத்தமர்சொல்மொழி, சத்தியமாகவும் நித்தம்பூசிக்கவும்-லேகி. (௲௰௨)

மூலத்திலேறி முனைபிராணமலுப், காலத்திலுங்கற்பங் காயம்பேலப்பட, ஞாலத்திலும்வாசி நாடிச்சுழிமுனை, பாலத்திலேறி வாசிதினம்-லேகி. (௲௰௩)

அப்புமுப்பு மறிந்துப்பையகன்றுமே, கைப்பொருள்விந்துக்கருத்தருயாமலும், மெய்ப்பொருளாவி விலங்காமலும்படி, தற்பரைசோதி யானந்தமீதாகவும்-லேகி. (௲௰௪)

சத்தியெனுநாத மூலப்புளிதனில், சாரநீர்கொண்டுடன் வீரம தாகவும், சித்தமனுசரி வாசிகொண்டுதாரை, சித்திபோகராஜ தேகம்வலுத்திடும்-லேகி. 1115

துரிசியிதென்று ஜெகமழியாமலும், உரிசைகொண்டுமனு ஒடித்திரிந்துடன்; வரிசையென்றுங்கடை துரிசியிதென்றுமே; வாதஞ்செய்தேயூறல் மாற்றிடுவாமலும்-லேகி. 1116

முத்திகொடுக்குஞ் சிவசத்திதன்பதம், மூலாதாரத்தின் கருவியறுத்திடும், வெற்றியதாக சமைத்துஉட்கொள்ளவும், மேலானகேசர யேறிப்பறக்கவும்-லேகி. 1117

நாசிவழியிற் சுவாசத்தைவிட்டுடன், ஊசிகண்டதாரை யோகஞ்செய்யாமலும், பூசிதமாகவும் நேசித்திடாமலும், வாசியறிந்துடல் மாளுவதில்லையே-லேகி. 1118

சயிலமிரத முதலூங்கூடியுந், தற்பரானந்தசிவ சத்திகிருபையால், அகிலம்புகழ்காய மைங்காயமாமிது, தயிலமதாகியுந் தானதுலேகியம்-லேகி. 1119

பிருதிவுமப்பு தேய்வுடன்வாய்வதுவும், பேர்பெரியசத்த மைந்துமங்காயமாய், துரிதத்துடன்பஞ்ச பூதமொன்றாகியுஞ், சூக்ஷ்மகாரண லேகியமாச்சுது-லேகி. 1120

தன்னைத்தானறிந் தாக்கைபிலத்தது, சாம்பசதாசிவ சங்காணுச்சுது, அன்னையென்னைப்பெற்ற அம்பிகையால்செட, முன்னையும்விந்துடல் முத்தியுண்டாச்சுதே-லேகி. 1121

மூலப்புளியில் மூலாக்கினிதோன்றியும், மூலாதாரத்தினி லப்புவந்தோன்றியே, ஆலவிடமதி தக்கினிதோன்றியும், அக்கினியாலசவாகிடும்வாயுவே-லேகி. 1122

தூலமெனும்வாய்வு சத்தமுண்டாகியுந், தோன்றியஞ்சுபஞ்சபூதமொன்றாகியும், ஞாலபஞ்சாக்ஷர நாதனிருப்பிடம், நந்திகொலுவிலிருப்பதமுரியே-லேகி. 1123

அமுரிபஞ்சாக்ஷரமஞ்செழுத்தாச்சுது, அண்டமெனுஞ்சிவ லிங்கமதாச்சுது, குமிறிடுஞ்சாகரம் வெண்மதியாச்சுது, கோசபீசமெனுங் குருலிங்கமாச்சுதே-லேகி. 1124

கோசந்தனிவிரு கூறதுமாச்சுது, கூறியபீச மடிமூலமாச்சுது, வாசுகின்றேகுகை புளிசுன்னமாச்சுது, வாலகுண்டலியின் பீடமதாச்சுதே-லேகி. 1125

### விருத்தம்.

மதியிருந்துநடனமிடும்பிராணயத்தில்மதூரமிருந்திலகுமின்பமவுனபீடம்,கெதிபெறுங்காண்மகத்துகளின்மோக்ஷபீடங் கெவுனரசகுளிகையிருந்தாடுபீடம், துதிபெறவுமெய்ஞ்ஞான சுகாதீதங்காண்சோதிசுடர்மணிவிளக்கில்தூண்டாகின்ற,விதியைவெல்லும்வீசிதரத்னபதியைவீசும் மிருத்தபஞ்சரத்தினத்தை விளம்பினேமே. 1126

### வாதமுறை தரு.

வாதவிதிபாடுகிறேன் ஆண்டையேகேளீர் வாதவிதிபாடுகிறேன்.

வாதவிதிபாடுகிறே னுதமதிலுமிருந்து,சோதிமணிபூரகத்தைதருட்டியுஞ்சூக்ஷமதுவாய், பச்சைத்துருசியதைச் சத்திநாதநீரிலூட்டி அச்சமரவும்ரவியில் வைத்துபார்நாலுசாமத்தில். (வாத)

ஊரலறுமேகளிம்புவேறில்லைசுன்னமதாகுஞ்,சீருள்ளசூதத்தைக்கட்டுமேருவும்பொன்மயமாகும்,அம்பிகையெனக்குரைத்தகெம்பிரசுன்னமதாகும்,நம்பியுங்கற்பமதனை வம்புசெய்யாலுமுண்டால்.

ஆண்டுதசமானதுபின் னறுபத்துநால்வரையு, மாண்டுபிடவுமருந்து வாச்சுதறிவாய்மனமே, தசவாண்டதின்பின்கற்பஞ்சடசித்தியானதின்பின், பசுமையறவெளுமை பார்க்கப்பளிங்கதுவாண்டே.

கற்பசாதனையில்லாமல் கனகஞ்செய்வார்களில்லை, அற்பமூலிகைதழையா லாவதுமுண்டோமனமே, மூலப்புளியைவிட முதகியுமுனக்கேதுகாண், ஆலகாலவிஷமேயமுரியாண்டொன்றுண்டால்.

அமுரியாண்டதுமுண்ண அப்புவால்காலனுமேது, விமலசர்வாணியின் விளக்கமிதாமனமே,வாதவித்தையாவதென்னசூதகவித்தைகாணமுரி நாதமும்விந்துவுங்கூடி நவலோகம்பொன்னதாக்சி.(வாத)

இப்படியாகியசெய்தி யாவரறியாதவிதம்,முப்பூவும்பூரணங்கூடிமுடிந்தல்லோசெலமாச்சு. (வாத)

கருங்கடல்நீரையுண்டு கைப்பது மாறினவிதம், ஆருமறியார்களோ பின்னதுசுத்தநீர்மகிமை,வாய்கொண்டுவுண்டசலத்தை மாறிடமாறிடகாயந். தேயசுமதிதசித்தி தேகமும்வலுத்ததாண்டே. (வாத)

காயாதிலேகியமிது கருதக்காலனுமேது, மாயாதுவாசியொன்றானல் மரணமடையாராகில், வாய்வுமீரஞ்சுமொன்றாய் மாறிமாறிதாரையில் ஓயாமலூதியூதிடும் யோகாதியோகமிதாச்சே. (வாத)

எழுபத்திராயிரநாடி நரம்பிலிருந்தசவு, பழுதுவாராதுகாணும் பாருஞ் சாதனையாண்டே-வாத. 1127

கொச்சகம்.

மூட்டுவாய்மூலகற்ப முக்கியமதாயாண்டுபத்து
ஆட்டுவாய்பொட்டிதனி லடைத்தரவமாவதுபோல்
நாட்டுவாய்கும்பமுனி நாதனருளாலுங்கற்பம்
பூட்டினேன்குருவருளின் பொக்கிஷத்தவிண்டேனே. 1128

ஞானவெட்டியாயுலகில் நானுதித்துப்பாடுபட்ட
பானரசகற்பமதைப் பாடிவிட்டேன்கைமுறையாய்
வானம்புவியுள்ளவரை வாழ்ந்துலகிலும்புகழ
தானவனும்முத்திபெற்ற சங்கைவறியாய்மனமே. 1129

விட்டகுறையாலுதித்த விந்தினிடசெய்கையினல்
தொட்டதொருகற்பமெல்லாஞ் சூட்சசித்தியாச்சுதுகாண்
பட்டசளமெத்தயிந்தப் பாருலகிலேயறியார்
வட்டமுலையாளுரைத்த வசனமதுந்தப்பாதே. 1130

கலித்துறை.

அஞ்சாண்டுகற்ப மானபின்பயித்திய மாருண்டுதனில்
வெஞ்சனங்கூட்டும் வகைவிதஞ்சொல்ல மேவிடினும்
ரஞ்சிதநாடு கருவூர்விளங்க நாமறிந்து
வஞ்சமில்லாமல் வெஞ்சனங்கூட்டு மகிழ்ந்ததையே. 1131

விருத்தம்.

வெற்றிதரும்பத்தியந்தா னுவின்பாலும்வெள்ளாட்டின்பாலுமது வொன்றுவேளை; புத்திதரும்பச்சரிசிபயறும்பாசிபொசிப்பதற்குப் போசனமாம்புகழ்தான்மெத்த, சித்திபெறும்புளியாரை கொடுக்கப் போடுசிறுகீரைசிரகமுங்கரியவேம்பு, முத்திதருமிளகுபசுநெய்தானுகும் முக்கியமிதுபின்பதுகேள்முறைதானுண்டே. 1132

ஆண்டையினிகேளும்புளிசுன்னத்தாலும்அதிதவித்தைவாதமெல்லாமடங்கலாச்சு, தாண்டவமாய்நடனமிடுங்கணேசன்சத்தி தாயானவல்லபையுந்தானேதோற்றும், மாண்டிடும்பேரில்லையிந்தவையமீதில் மகத்தானகற்பமுண்டால் மாய்கைபோச்சு, பூண்டிந்தவுலகமெல்லாஞானியானல் புவியெல்லாந்தேவர்களாய்ப் பிறப்பாராண்டே.

அறிந்திடுங்காண்புளியமுரி மாலையுண்ண அப்பும்ரவியிலுண்ணவயதைந்தாச்சு, பிறிந்துகொள்ளுமபுளிசுன்னமமுரிகூட்டி பேரானவாலையிலுந்தயிலம்வாங்கி, தெரிந்துபுளிசுன்னமதை யமுரிக்கேற்றி

செயநீராய்சரக்குகளில் சுருக்குமேற்ற, குறித்தரசம்ரவியில்சுருக்கி
டவுஞ்சாகுங் கூகூகூவாதமிதிற்கொள்ளைதானே. 1134

ஞானவெட்டி தரு.

வெற்றிக்கொடிகட்டினேனாண்டே ருக்ஷா திருக்ஷ
வெற்றிக்கொடிகட்டினேனாண்டே.

எத்திசைதனிலறியசத்திநாதனிந்துங்கூடி, புத்திமயங்காமல்நின்று சித்தியுமறிந்தேனாண்டே, அண்டபிண்டங்களுமேவுமண்டலமெல்லாம்புகழுங், குண்டலிவாசியைக்கொண்டு கண்டிதசாதனைசெய்து.

ஆதியந்தமாய்நிறைந்த அம்பரவெளியில்நின்று, சோதியாஞ்சுன்னம்புளியுஞ் சுக்குலசுரோணிதத்தால், நீதிநினைவாலறிந்துநிச்சயமனந்தெளிந்து, சாதனையென்னுக்குள்நாடுந் தனஞ்செயனைச்செயித்து.

காலனென்றகாமனைக்கட் டறுத்துக்கடந்துமுப்பாழ், ஞாலமென்றவுட்கருவி நாடியேயடக்கியபின், மாதுமயலாலமைத்த வல்வினைக்கோராஸ்திரங்கொண், டேதுதாரைவாசியினா லோட்டியேவெட்டியெரித்து வெற்றி.

பாலுடையஸ்தன்னியமயல் பாவையர்களைத்துலைத்து, சீவமுடனேயெனது சிஷர்மனமெய்க்கவுமே, உற்றார்சுற்றத்தார்களுமுலகுதனிலுள்ளோரும், பெற்றாராசையைவிட பெண்டிராசையைவிட்டு.

மெத்த என்மேல்மனதை மெய்யிலுமிகவுநொந்து, குற்றமறமாதுதன்னாசை குடோரம்விட்டுனதுபதம், உற்பனமத்தியானமது கற்பனசாரத்தையுண்டு, விற்பனமூலப்புளியை விதமாயுண்டுதேறினன்.

தேகசித்தியுமாச்சு தீவினைகளும்போச்சு, ஆகமப்படியாச்சு ஆயிரத்தைந்நூறுமாய்ந்தால், இந்நூல்ஞானவெட்டியி லெடுத்தேன்முறைபிசகா, நன்னூல்ஞானகாவியம் யான்வெளியாயுரைத்தேன்-வெற்றி.

விருத்தம்.

புத்தியினில்மத்தியானமதுஅமுரியுண்டேன்பூரணத்தைமாலைதனில்புளிதானுண்டேன், சத்தியினால்கொல்லுமிந்தகருவியெல்லாஞ்சண்டாளவாய்வுமெங்கேசாருந்தானாய், வெற்றியதாமந்திசந்திகாலைமூன்றும் வேகமில்லைகுருமுறையைவிளம்பினேனென்பார், நித்தியமனுசரியதிதகாயகற்பம் நீடூழிகாலமதுவாழ்வாராண்டே. 1136

ஆண்டொன்றில்லைதேகசுத்தியமுரியாச்சு அதுதள்ளியாண்டுமுதல்கற்பஞ்சித்தி, தாண்டவமாமிரண்டாண்டில்மாற்றுரெண்டு சாதித்

தால்மூன்ருண்டில்மாற்றுமூன்று, தூண்டாகும்நாலாண்டில் மாற்று
நாலு சொல்லிவிட்டோமைந்தாண்டில் மாற்றைந்தாகும், பூண்டாகு
மாருண்டில்மாற்றுமாறு பொன்மயமாமேழாண்டில்மகற்றுமேழாம்.

மாற்றெட்டாமாண்டினிலும்வயதுமெட்டு மாறிடவும்புளியமுரி
லேகிபஞ்செய்து; வேற்றுமைகள்வாராதுஒன்பதாண்டில் இதுபுளியு
மமுரியுமேவேகச்செய்து, பார்த்துவன்னிதனிலுங்களிபதமாய்பாக
ம்பகருவாய்பத்தாண்டில்மாற்றுப்பத்து; பூத்திடுபூநீருபுவிதனிலுமூ
லப்புளியிருந்துபனிபடவும்பூர்க்குமுப்பே. 1138

இந்தவிதஞ்செய்திடுவோர்க்கெய்துமுப்பு இகந்தனிலுமுவர்சவு
டுமுப்பாகாது, வந்துஅடைத்திந்தவித வினிமேல்காணும் மறைத்த
பொருளனைத்துமின்னுல் வகையாய்சொல்வேன்,சுந்தரப்பெண்ணமி
ர்தமடமாதுவாலைக் குகூஷமெல்லாமெந்தனுக்குச்சொன்னுள்மேலும்,
அந்தவிதம்பத்தாண்டுந்தாண்டியேற அருள்வேன்காணளவையினிய
ருள்வேணுண்டே. 1139

பத்தாண்டுகடந்தபின் பதினென்ருண்டில் பத்தரைக்குமதிகம
தாம்பசும்பொன்தேகம்,சித்தானதிங்கள்ரெண்டுமாற்றுமொன்றுதிங்
களுமேநாலதுக்குள்மாற்றுரெண்டு,வித்தாகுமாறுதிங்கள் மாற்றுமூ
ன்று மிருநான்குஞ்சென்றபின்புமாற்றுநாலு,பத்தானதிங்களுக்குள்
மாற்றுமஞ்சு பதினென்ருண்டதுக்குளது பரிட்சையாண்டே. 1140

ஆறுபத்துமரையும்வயதறிவதேதுஅம்பிகையால்பதினுறுஅரை
மாற்ருச்சு, மாறுவதும்புளியுமப்பு மாறிப்போச்சு வச்சிரத்தாலிட்டி
ழைததகாயமாச்சு, தேறுவதும்பனிரெண்டாண்டடுத்துக்காத்துசிவ
குருகடாகூமதின்செய்கையாலும், பேறுபெற்றமகத்துகள்தான்கட
ந்தமார்க்கம் பேருலகில்மானுக்கள்பேசுவாரோ. 1141

திங்களெனுமதிகடந்தால்மாற்றென்ருச்சு செங்கதிர்மூன்றதுக
டந்தால்மாற்றமூன்று, செங்கமலதேகமதாந்திங்கள்நாலில்செம்பொ
னிறவயததுவுநாலுமாகும்,அங்கமெனுந்திங்களஞ்சில்வயதைஞ்சாகு
ம் ஆறுதிங்கள்வயதாறுஏழுக்கேழு,எங்குகதிர்சூரியனுமெட்டுக்கெட்
டு இனியொருபத்தாறுதிங்கள் பனிரெண்டாமே. 1142

வாலையெனும்பதினுறுஅரையும்பத்து வதிஇருபத்தாறரைகாண்
மாற்றுமாச்சு, காலையெனுங்கற்பமுண்டேன்பனிரெண்டாண்டு கனக
மென்னுள்விளைவாச்சுகற்பத்தாலும், சோலையெனுங்கொய்துடுத்துசி

றுபெண்ணுத்தாள் செப்பினதோர்வாதமதுஞ் செடத்திலாச்சு, ஆ
லையெனுங்கரும்பினுள் சாறுபோலும் அலைவதில்லையடி சுன்னமமை
த்தவாறே. 1143

## யோகஜெயம் ஏலப்பாட்டு தரு.

ஏலேலோஏலேலே-சிவசிவ-ஏலேலோஏலேலோ.

கதிர்மதிசூழ்கமலவிதழ் - இடைபின் - கலைசுழலுங்கருணைமலர்
பொழியும், விதிகருவூர்நகர்செழிக்கும்—மெய்ஞ்ஞான-வெட்டியருள்
வேதாந்தகற்பஞ்சுழிபின், முனையருள்புரியும்பரி-பூரணகற்பங்-துரிய
துரியாதிதமமுமதியிலறுந்தேதான்,பொழியமிர்தமதுரரசபாண-மதி
னுலும்-புகழ்விஜையமாண்டுபனிரெண்டளவுக்தேறி,தொழிலனேகம
காராசயோக-மதில்வாசி-சூக்ஷசடாதாரமதுமீராறுங்காண்டி, வழிபல
சுகாதிசுயசோதி-மணிவாசில்-வாலையபிராமிமலர்பாதந்தெரிசித்தே.

திருவமிர்தமதிமலர்சூழ்-கருவூர்-செழித்துவளர் தேன்பொழியு
ம்புனல், மருவும்விந்துநாதசக்தி-செனித்த-காறுகன்னையானருளமூ
லமணி, பூரகமனுகதம்விசுத்தி-மூடுதுறை - யாக்கினைசுகாதிசுடர்தா
ண்டி, மேலும்வளையாறுதிருவாடு-துறைதாண்டி-விக்கிரகமவியான
னையஸ்வமதாய்பூட்டி, ஞாலமதில்கூர்மனெனுஞ்சினி - யதைமாட்டி-
நாடியதனஞ்செயனையங்குபடியாக்கி, வாலையருள்பொற்கமலபாதந்-
தொழுதேதான்-வாசிதனிலேறிமதியமிர்தநதிபாய்ந்தே-ஏலேலோ.

தூலவுடல்சூக்ஷதேகமாய் - மேனி - துய்யநிறந்தசவாண்டினிலு
ம்வினை, தாவிவருஞ்சூடுகனக-ஒராண்டில்-தாபம்வருஞ்சோபமெத்த
அவுழ்தம், போகமெனுங்காமத்தை-வாமத்திலேற்று-பொல்லாதமூ
தேவிசாதத்தைமாற்று, கோவித்து அந்தியைச்சந்தியினில்தள்ளு-கு
ற்பம்-வீணிலும்போகாமலூணியேகொள்ளு, நோயற்றுபோக்கிவிடு
ஞ்-சிரொத்துபாரு-வுன்னிதமாய்பத்தியமு நிர்ணயமிதாண்டே-ஏலே

காலையிஞ்சியமுரியுண்ணு-தினமூங்-கடுக்காயும்புளியுமுண்ணு அ
ந்தி,மாலைசுக்குவிந்தமுரி-சேரு-மருவிகிற்கும்பரிசூரணமும், பாலன்
படும்பாடதுவும்-பார்க்கவொண்ணாது-பாழானபத்தியமும் பாகமது
கேளு, தூலமெனுமகைவசமாகவும்-வேணும்-சூதானபேதியதுமூன்
றுதிங்கனெய்தல், மாலானபூரணமனே-யின்பமாகும்-மதுதள்ளினுலி
ற்சந்தியதுவாகும், நாலுபேர்யஞ்சிலுமடங்காது-பேதி-நமனுக்குமே
ல்திகநஞ்சதுகாணுண்டே-ஏலேலோ. 1147

ஆறுந்தான்திங்களிலும்-தேகம்-அசதிமெத்த அரோசிகங்காண், ஏழாந்தான்திங்களிலும்-உதிரம்-இறங்கும்பெரும்பாடதுபோ, சிரெட்டுதிங்களினில் சீதளமுங்காணும் - செய்கையென்பதுதிங்கள் தேகமதுவாடும்—கூரானபேதியுடன்வாந்தியுங்காணும், கூசாமலேடணையுஞ்சீதசுரமெய்தும்-வீறுனநோய்களதும்-வேகமிகக்காணும்,விக்கலதுகக்கியுருமாறிவிடுமாகில்-நேரானகற்பமுறை பேராகச்சொன்னேன்-நிச்சயமதாகுமிது அச்சமில்லையாண்டே-ஏலேலோ. (1148)

கடல்பெருகுஞ்சமுத்திரத்தில்-கப்பல்-கரையோரம் போகையிலும், பூத்த-மடல்பெருகும்பாமரத்தை-நன்றாய்-மடக்கிநடுமத்திபத்தில்சுக்காணுடலதனில்வருகின்றசுவாசத்தைப்பாரு-ஒன்பதுவாசலுங்கட்டியிருக்கும்-திடமுடனேகம்பத்திணுனியிலுமேறி - தீண்டாதமணிசுடரைத்தாண்டாமலேற்றி,புடம்வைத்துகருவிகளைசுட்டேயறுத்து-பூரணபஞ்சாக்ஷரபிரணவத்தைமூட்டி-நடுமரஞ்சுக்காணைமையத்திற்பூட்டி, நாடியேமதுவுண்டுயான்பணிந்தேனே-ஏலேலோ. ()

மதியமிர்தமதுவமுரி-மதுர-வாசியெனுஞ்சாரை வெள்ளை, கற்பம்விதியகடுங்காரசுன்னப்-அப்பு-நிலவுபொழிஉப்புமிப்பிதுவே,ரதிதவிதஅமுரியதுமுப்புவுமாச்சு-அமிர்தரசமானது-கள்ளுமதுவாச்சு, மதிரவியுஞ்சிவசத்திவாகியதிலாச்சு - வழலையறிபூரணமும்வஸ்துவெலுமாச்சு-பரிமளசுகந்தமலர்செந்தமிதுவாச்சு, பகாரியசாந்துசவ்வாதுபுழுகாச்சு-துரியதுரியாதிதமுஞ்சுழியின்முனையாச்சு சொற்பனமுஞ்சாக்கிரமுஞ்சுற்றிவலமாச்சே-ஏலேலோ. 1150

காயகற்சமாண்டுசதம்-அதினபின்-கடந்தபின்புவழலைமுறைமூல, சாயசரக்கெடுத்துலர்த்தித்-தயிலந்-தான்புடம்போட்டெடுத்தபின்புதனிய-மாயாமல்பார்க்கவுமேனுன்மணியின்விந்து-மாணிக்கஒளிவதிதவழலைமுப்பாகும், தாயானகெந்திரசகாயமதுசாரந்-தயிலமிது நாலையுமேசாரும்புடம்போட்டு-உபாயமதுவாகவொருகழஞ்சியிடையுண்டு, முன்னுடலெனக்குவொளிவாகுமதுகோடி-நயமாகபோதமயமானந்தங்காட்டும்-நங்கென்றபூரணவிலாசத்தில்நின்றே-ஏலேலோ.

முன்னுன்கும்பன்னிரெண்டில்கற்ப-முறைதவறுமணதுகந்து-உறுதி,அன்னுள்முதலப்பரத்தை-மிகவும் - அதிதமதாய்வளரும்விந்துவாசி, தூக்கியிறுக்கிச்சுருக்கியதைபாரு-சொன்னபடிகண்டமதிலுதிவிடுதாரைதீர்க்கமுடன்செந்தணலைதாண்டியதுபாயுந்-தீமஜ்ஜொளிப்பிரகாசதெரிசனமுமாகும்-மார்க்கமுடனறிவர்,சொன்னேன்கருவா

ளி-மனதுஒருமித்துவைராக்கியமதுவாககார்க்கசிலம்பொலியோசை
காணுமதுரூபங், கயிலாசபரகெதியில்காட்சிபெறுவாரே-ஏலேலோ.

இருபத்தோராயிரத்தறுநூறு-சுவாசம்-இறிக்கிகண்டதாரைத
னில்-சுருக்கி,கருத்துகந்துமூலக்கருக்குழியில்-இருத்தி-கற்பமுண்டு
வாசிகருதிடினும்,சுழியி-லுற்பனமதாகவொருஓங்காரநாடி-ஒன்றான
கம்பத்தில்பாய்மரமீரெட்டு, விற்பனமதாகபதினாறுகயிற்பூட்டி-வீசி
விடுவாசிபதைநாசிநுனிபாயா-சொற்பமதுசந்துகள்துவாரமதிலோ
டா-சொக்கிவிடலாகாதுசுவாசமதிலேறி, கற்பனைசுக்கானைரசக்கண்
ணடிபூட்டி-கருதியேவிடுசீனிகலப்பையதைநாட்டே-ஏலேலோ. ()

சித்திரமணி மண்டபத்தில்-கண்ட-தீபவொளிப்பிரகாசமதில்,
அருள்-முத்திபெறுமதியமிர்தம்-வாசி-முனையிடை பின்கலைபிராண,
இன்ப-சித்திரவிஸ்தாரசுழிகமலவிதழ்நாடி-திருமருவு சோதிமயச்தீ
பசுடர்தேடி,இத்தலமெய்ஞ்ஞானகுருபரிபூர்ணவாலை-யிங்கிதமலர்க்
கமலஞ்சிங்காதனமேவி-பத்தியுடனும்பணியசத்திசிவரூபம்,பச்சை
யுடனுஞ்செழுமைபார்க்கபரங்காணுர்-கர்த்திகசதாசிவமனோமணி
ப்பிரகாசங்-காணுங்கயிலாசகிரிகாட்சிபெறுவாமே—ஏலேலோ. ()

விருத்தம்.

இவ்வுலகில்யாவர்களுங்கண்டிந்நூல்ஞானவெட்டியிகழ்ந்திடாமல்
அவ்வம்பரமானந்தசின்மயத்தி னருள்பெறவும்அர்ச்சித்தேன்காண்,
செவ்வையென்பதடியறிந்துசெய்கையெல்லாமய்ந்து சிவசத்திபாத
ம்,எவ்விதமாய்கற்பமுறையியல்புதனி லினிமோக்ஷமெய்துவாரே.

எய்துர்த்தசதீக்ஷைபத்துமிரண்டு பனிரெண்டதுவாஇனிதானச்
சு, பழுதுவருகாமனுமேபாடினதோ னர்வாக்கியமதைப்பழிப்பீரா
கில், எழுநரகில்விழுந்துவுபி ரிருக்களவும் வினைப்பயன்வந் தெய்து
மாகில், தொழுதுவடிவம்பிகையின்மலர்ப்பதமுங் கெதியடைந்தால்
சொர்க்கஞ்சேர்வாம். 1156

இகத்தாசைபாசமிருந் தென்னுளுழன்றிடுவோர்க் கெய்தா
தொன்றும்,நகைநகைத்துமினுமினுக்கும் விழிசிமிட்டிவரவழைத்து
நாணஞ்செயயும், புகைசூழ்ந்துயிருள்மூடிமாய்கையினி லழிந்திமிக
ப்போவாராகில், அகத்திலிருந்தருள்ஞான தீபவொளியறியாமலமை
த்தாராண்டே. 1157

அனித்தியமிந்தவுயிர்வாழ்க்கையுண்பதுவு முறங்குவதுமதுவால்
ஞானர்,தனுவெனுமன்பதபான அஸ்திரத்தாலவர்மாளச்சபித்தார்

சன், வனிதையில்லாவுலகமில்லைவாழ்க்கையில்லைபிறவியில்லை மண்ணீரில்லை, யினமறியநாதவிந்து யியல்பில்லாவுலகமெல்லா மிருள்தானுண்டே.

கொச்சகம்.

சுந்தரரேயெங்கள்குலஞ் சூதுபறையென்றதுவுஞ்
சந்தயமேயானுரைக்க சாட்சியறியாவிதங்காண்
நிந்தைவுலகாதிதமு நீசனெனவேபழிக்கும்
வந்தவழிகண்டறிந்தால் மாய்கையிருள்மாறிடுமே.
அண்டமென்னபிண்டமென்ன அம்புவியாதீதமென்ன
கண்டதென்னகேட்டதென்ன காருவில்லாமாறியுண்டோ
எண்டிசையெல்லாஞ்செனித்த யிந்திரியஉப்புமயம்
நின்றவுப்புவாரியினல் நீடுலகெலாமுவரே.

கலித்துறை.

மயமானஉப்பு கடல்சூழ்ந்தவாரிதி மாலின்மயம்
செயலானசார மதிசந்த்ரசோதி திருநடனம்
நியமிந்தவாழ்க்கை நிராமயத்துப்பு செறியறியார்
கயமானகைப்பு வுலகமெல்லாமிந்தக் காரணமே,

கொச்சகம்,

உப்புமயமப்புமய மமோகோநாதவிந்தின்மயம்
இப்புவியெல்லாஞ்செனித்த யிந்திரியவாழ்க்கைமயம்
கைப்பிதுவில்லாமல்ஜெகங் கண்டதென்னகாண்கிலென்ன
முப்பதுகாணுதியிலு முடித்துவைத்தாரீசனுமே.

கலித்துறை.

எழுபத்துநான்கு நூறாயிரலட்ச மெவ்வுயிர்க்கும்
உண்பதுங்கைப்புவர் சாரத்தினலுயி ருற்பகங்காண்
ஐம்பத்தோரக்ஷர வோங்காரங்கொண்ட அவ்வெழுத்தில்
உண்பதுறங்குவ துப்பொழிந்தால்செக மொன்றில்லையே
உப்புவரின்றிச் சடமில்லைகார சாரத்தினல்
அப்புவினல்முடிந் தாண்டுபத்துங்கடந் தானபின்பு
செப்புகிறேன்மதி நாலுக்கொன்றேரவி சேர்த்துவிதம்
அப்புவினுப்புவு மட்டுப்புவொட்டுப்பு மானதுவே.
காரமுஞ்சாரமுங் கம்பியுப்பாகுங் கரைத்துபதம்
சேரவுமூன்று தினஞ்சென்றபின்பு தெளிவிறுத்துக்

கூரவும்வன்னிக் குமிறிட்வுஞ்சலங் கொண்டிறக்கி
வாரமதிரவி மீங்கான்தனிலிட்டு வைத்திடிரே,
ஒன்றாகிமுப்பு ஒருருவாகி யொளிவதுவாய்
கொண்டேயொருபலம் பண்ணைச்சவ்வீரங் குறித்துசமன்
நன்றாகுநாதமும் விந்ததுங்கூட்டி ரவிமதியாய்
அன்றுடங்காய மதில்வருநீர்விட்டு ஆட்டிடுமே.

வெண்பா.

விந்துநீர்விட்டுவிடாமலிதையாட்டி
அந்தமதுவழித்து அருணனி-லிந்த
முகம்படவும்வைத்து மூடியகலதனில்
புகழ்சீலைசெய்துபுடம் போடு
ஆறினதோர்பின்பு அதற்குச்சரிசூதம்
வாறறியமுன்பதமாய் வார்த்து-மீறிவிடா
ஆட்டியதைவழித்து அருணன்முகம்படவும்
நாட்டுமுழப்புடத்தில் நன்று.
நன்றிதுகாண்கழஞ்சி நாதவிந்துவிட்டமர்ந்தி
துன்றுதுருசிதனில் தொந்தித்து-நன்றறிய
மூலப்புளிகவச மூன்றுமண்சீலையது
ஞாலக்கவுதாரிபுட நன்று,

முப்புமுடித்தல்-தரு.

மூப்புமுடிந்ததுகாண்-மூலப்புளி-முப்புமுடிந்ததுகாண்

மூப்புமுடிந்தது கைப்புமறிந்தது, அப்புமுப்புங்கம்பி யுப்பிது மூன்றினால், கற்பகஞானவா லாம்பிகைதன்னருள், அற்புதமாமலரார்ச்சனைசெய்துபான். (முப்பு)

சீனச்சரக்கறு பத்துநாலுஞ்சுன்னஞ், செந்தூரபற்பமுஞ்செயநீர்திராவகம், பானத்தினல்குடோரிகட்டுங்களங்கதும் பார்க்கப்பார்க்கசரக் காதிதமுநீறே. (முப்பு)

துருசிசுன்னமுடிந் தாச்சுதுமுப்பினால், தொந்தங்கோடாகோடிசோதிக்கவேதைகாண், பரிசைவேதை யிதிலனந்தங்கோடி பாடுபட்டுச்செய்தோர்க் கெய்திடுமாண்டையே. (முப்பு)

காரியஞ்சேரொருசேர்த்துஅயச்சட்டி, கண்டுகனத்திகாரீயஞ் சலமதாய், வீரியமாமுப்புச் சுன்னங்கழஞ்சிடை, வேகந்துரிசியிடை சரிசுன்னமே. (முப்பு)

கம்பியுப்புபதி னூறுபலமதில், காட்டிடுஞ்சுன்னங் கலக்கவுமூட்டியுந், தம்பிமுகன்பதம் போற்றியாட்டிப்பின்பு, தொந்தித்துக்கிராசமுந் தாவிக்கடைந்திடே. (முப்பு)

அஸ்வகெந்திக்கிழங் கவ்விதவேரினல், யிசைவதாக யிருசாமம் வறுத்துடன், பஸ்பமாகும் பருதியொளிவுபோல், நிசமதாகு நிலைகண்டறிவதே. (முப்பு)

பச்சைப்பனைபதி னேடுசெந்தூரிகம், பழையசட்டி தனில்நடு வைத்துகாண், உச்சிதம்புகழ் செந்தூரந்தன்னிலும், அச்சமில்லாவிந் து நாதம்விட்டாட்டிடே. (முப்பு)

நாதவிந்துநீர் விட்டொருசாமம், நேரஆட்டி விடாமலுங்காசுபோல், தீதில்லாமல் ரவிமுகங்காட்டியும், பேதமில்லாமல் செந்தூரத்தில்மாட்டிடே, (முப்பு)

சட்டிமேலுஞ்சந் தில்லாமல்சீலைமண், கெட்டியாய்கவ சங்களுமேலதாய், கட்டியில்லங்காற் றில்லாமலும்படி, முட்டிவன்னி முதல் சதுர்சாமமே. (முப்பு)

ஒட்டியேகம லாக்கினிதீமிதம், யோகநாதவாலாம்பிகைதன்பதம், வெட்டியால்வீர சாம்புவமூர்த்தியால், அட்டியில்லாமலென் னுண்டே முடிந்ததே. (முப்பு)

கர்த்தனருள்கரு வங்கசெந்தூரம், நித்தம்பூசித்துடன் நின்றறிவோர்கள்தான், சித்தியெய்துஞ் சிவசத்திபொற்பதம், முத்திமோக்ஷமெய்ஞ் ஞானம்லபிக்குமே. (முப்பு)

இந்திரனுமதி ரவியுங்கதிரொளி, சந்திரசூரியர்விந்துநாதஞ்சேர்ந்து, இந்தயெண்சாணுடல் பஞ்சபூதங்கூடி, ரஞ்சிதஉப்பு நவலோக நீற்றுமே. (முப்பு)

நீலமேகவர்ன மானின்மதிமலர், வாலைரூபி வடிவம்பிகைதன்செயல், மூலாதாரமு மண்டலஞ்சூழ்மதி, ஆறுதார மமைத்தவாரான்டையே. (முப்பு)

கற்பகோடிகற்ப சாதனைசெய்கினும், உற்பகங்க ளொருவரறிகிலார், சற்பமாவ ததுகடிந்தேவிஷம், கைத்தால்ஞானங் கரைகண்டறிவரே. (முப்பு)

வங்கசெந்தூர மிருபத்துமேகமும், வாரியேழு கடலேழுஞ்சுழலவும், தங்கமிதுபதி னறுகலையினல், கருவங்கசெந்தூர மருவினல் தங்கமே. (முப்பு)

இந்தத்தேக மிருந்தெவ்வுயிர்க்குமே, வங்கசெந்தூரமதுகுன்றித்தேனிடை, அந்திடைவாத மடக்கியுமந்திடை, செந்தாவின்கிருதத்திலூட்டியுணருவாம்.
(முப்பு)

காரிலுதித்துரு வாயிருபத்துமே, கட்டளையின்படி மேகங்கள் சூழ்கிலும், சாருமுடல்விந்து நாதத்துலாவியும், பாயுந்தங்கரச வங்க செந்தூரங்காண்.
(முப்பு)

குமரிலேகியத்தில் குன்றியிடைசெந்தூரம், அமிர்தமேயரை மண்டலமுண்பீரால், தமதுதேகம்பொன் காலையுமாலையும், அமிர்தமாகு மாவின்பால்கிருதங்களே.
(முப்பு)

பாலுமன்னம் பரிந்துஅருந்திடில், வாலையாகும் வயதுயிளமையாம், சூலைகிராணியெட் டெட்டுமெழும்பிடுஞ், சோபதாபமா யாசங்களும்விடும்.

வாதமெண்பது பித்தமுநாற்பது, மாறுஞ்செத்தும மிருபத்துமேகிடும், நாதவிந்துமூ லப்புளிசுன்னத்தால், காதமோடிகருங்கடல் புக்குமே.
(முப்பு)

விருத்தம்.

அந்தவொளியாயிலகுஞ்சுழிமுனைமீதில் அருள்பரமசிவகுருவேஆண்டேகேளீர், வந்தவழிமுப்புமுன்னுளமைத்தவாறு மனிதர்களில்மறுபிறவிசெனித்தவாறும், சுந்தரமேயென்குருவேயகத்திய சுவாமிசொன்னமறுபிறவியென்னசூக்ஷஞானம், எந்தவிதமாகிலுமேகற்பக்கூறுல் எண்சாணுதேகமதுவேறாய்ப்போச்சே.

கருவிதொண்ணூற்றாறுஞ்சுட்டகாயமாச்சுகாமப்பால்வேறுபடகர்மம்போசசு, திதிமருவுங்கருவூருபெலத்துப்போச்சு திருநடனசெகச்சோதியறியலாச்சு, வரும்வினைக்குமூன்றுப்புமுடிந்துபோச்சு மகத்தானசெந்தூரம்வசியமாச்சு, பெரியோர்கள்மறைத்தகருவெளியாய்ப்போச்சு பேதபேதங்களெல்லாம்பேசலாச்சு

ரசபஸ்பம்-தரு.

சூதரசபற்பங்காண்-ரசசூத-வாலைரசபற்பங்காண்.

சூதமென்றால்ரச வாதசூதரசம், சோதித்தொருபலஞ் சூட்சமதர்கவும், நாதவிந்துகார சாரம்பத்தாண்டினில், மாதுநீர்நாதமருவியும்பாய்ந்திடில்.
(சூதரச)

நீதமெனும்விந்து நாதத்திற்பொங்கியும், வேதசாரம்விந்து வெண்மதிபாய்ந்திடும், வேதசாரம்பழச் சாறெனுங்கூறிடில், விதமஞ்சுபல நாதநீராண்டையே.
(சூதரச)

தோகையென்னுமட மாதுமாதவிடாய், சூதமதைச்செப்புபாத்தி ரந்தன்னிலும், சூதத்தைவிட்டுப் போற்றித்தீபாக்கினை, நாதத்தைவிட்டிருநாலுகடிகைக்குள். (சூதரச)

மாதவிடாய்சருக்கேற்றவாலைரச, மேலுமேன்மேலும் வெகுவலுவாகிடும், நாதசத்திமூல நாடிப்புளிக்குளே, சூதவாதசித்திகுகை மலப்புளிசிலையே (சூதரச)

மலப்புளிசரக் கானதுகுக்கிடம், வன்னியிட்டு அனலாறிசூதபற்பம், பலமிந்தஇடை மாறுதொருபலம், பார்க்கப்பார்க்கப பளிங்காகும்பிரகாசமாய். (சூதரச)

நலமிந்தவுட லெமனென்றநோய்வினை, நாடிடுமேபதினெட்டுகுஷ்டத்துக்கும், வலையதும்வீசும் பஞ்சதாரைக்கிருதமெனும், அதில் குன்றியிடைவைத் தரைமண்டலமுண்ண (சூதரச)

வாதமடக்கிவேற் கொம்புபறங்கியும், இரவுமேகொடிவேலிவேர்தோளதும், வீதஞ்சரியிடை சூரணமாய்ச்செய்து, மேருதேன்கூட்டிக் குழைத்தந்தபற்பத்தில். (சூதரச)

வேதஞ்சொலும்படி மேகவாய்வுகுத்தல், பேதமானகடி முடக்குப்பிடிப்பதும், சூதபற்பங்குன்றி காலையுமாலையும், நாதனருளரைமண்டலநல்கிடே. (சூதரச)

மூலமெட்டுமூல கிராணியெட்டுவாய்வு, குன்மமெட்டுசேர தோஷத்தோடேழதும், நீலமேகங்க ளிருபத்துஒன்றுடன், காலையோடி கடல்புக்கிமாறுமே. (சூதரச)

வாலைசூத மகிமைமகத்துகள், பேதபேதமாய் பேசினர்நூல்களில், நாதவிந்துகார சாரமகிமையால், சூதபற்பமுஞ் சூட்டினேனுண்டையே. (சூதரச)

ஊழ்வினைப்பய னோடிப்பறந்திடும், மைவிழிமட மாதருசூதகம் போம், பையவினைப்பழி பாண்டுரோகம்விடும், மெய்யிதுஞான வெட்டியிதுண்மையே. (சூதரச)

கர்மாந்தரநோய் கருதிப்பயந்திடும், மர்மமேது வழலைமகத்துவந், தர்மநோய்க்குத் தகந்தவுழ்தமிட, கர்மநோய்கள் காணுதுசுபஸ்தமே-சூதரச.

## விருத்தம்.

வடிவுடையதிருமால்தன்தேவியானமதிதலத்திலவதரிக்குமரிதாரங்காண், கெடிவீரசிங்கமெனுஞ்சரக்கிதாகும்கேவலமாய்ச்சொல்லுகிறேன்கெருவமில்லா,மடிமீதிலெணைவளர்த்தஅமிர்தந்தவாலையபி

ராமிமலர்க்கமலம்போற்றி, அடிநடுவுமுடியுமெனக்கனுக்கிரகிக்க அரிதாரபற்பமதை யருள்வேனுண்டே.

அரிதாரபற்பமுறை-தரு.

தாரபற்பமிதுகாண்-திருமாலின்தேவியிதுகாண்

தாரந்தனில்திரு மாலின்தேவிபலஞ், சிராய்காரங்கல்லுசுன்னத்தில்தாளித்து, நீரமுரிபடி நாலுக்கொன்றுகாரம், நேசத்துடன்மூன்று நாள்கரைத்துப்பின்பு, தாரமூன்றுநாளில் தெளியுஞ்செயநீரதில், வேறொருபடி வெண்காரசாரமும், பூரம்பலஞ்சரி யொக்கத்தூளாக்கிப்பின், தூறிடுநீரினில் தூள்செய்துபோடுமே-தார

சாரகாரசெய நீரதும்பீங்கானில், வீறதாகவிடு பெய்ப்பொருள் முப்புவும், காரநீரினில் கழஞ்சிடைபாய்ச்சியு, மேறநீரு மிறுத்துங்கடிகைதான்-தார.

புரசையாவதும் பூமுருக்கநிறம், வரிசையாயயச் சட்டியில்தாரமும், சுரசநீர்செய நீரதுஞ்சாமனால், துருசமாகச் சுருக்கிட்டுப்பாருமே.

சுருக்கேறவுந்துய்ய வெண்ணரிதாரமாம், மிறுகுங்கட்டி மினுமினுப்பேகிடும், இறுகுமுப்புக் கழஞ்சிடைவிந்துநீர், இரண்டுமிழைத்துக் கவசமுஞ்செய்திடே-தார.

தாரங்கட்டிடுஞ் சத்துகள்வெட்டையாம், ஈறம்வற்ற இனிரவியின்முகம், நீறுந்தாரம்பத்தி ராட்சியரைத்துமேல், சோரச்செய்துவெண் சுன்னநீர்சிலையே-தார

சிலைமண்ணுடன் செய்தெருவஞ்சினில் வாலையம்பிகை மாது அருளினால், சாலமாமலர் தாயைப்பணிந்துடன், நீலமேதிரு மாலைப்பூசித்தேனே-தார.

வன்னியிட்டுப்பார்க்க வாசம்புகைவரா, துன்னிதமாய்பொன்னரிதாரநீறிடு, மன்னையருள்திரு மாலின்தேவியெனுஞ், சொர்னபற்பந்துடி சொன்னேனீதாண்டையே-தார.

அரிதாரமதுநீறும் பரிசவேதை, லாதலால் தேயுவினது பத்துக்கொன்றிது, காரியமாமெனும் பொன்னரிதாரத்தில், வீரியமென்ன விதமறியார்கள்காண்-தார.

கூறறியுமாவின் கிருதமுந்தேனுடன், சீர்மேவுந்திப்பிலிசிறுமிளகுமது, வாறறியுங்கிராம்பு வாதமடக்கிவேர், பாருஞ்சுக்கதுவும் பலமதாகுமே-தார

வகைவகைக்குச்சரி சமனாய்த்தூளாக்கிப்பின், அரியும்பற்ப மதுகுன்றிதன்னிடை திகையில்லாமல்தேன் கூட்டிகற்கத்தினில். பகையில்லாதொரு பக்ஷங்கொண்டுணருமே-தார.

வகையிந்தப்படி காலையுமாலையும், புகையுமேபுளி பொட்டெனத்தள்ளிடுந், துகையதாஞ்சய காசமிரும்பலுஞ் சுவாசத்தோடிரப்பாவதுநீங்குமே-தார.

சதமிந்தப்படி மேவும்பட்சத்தினில், தாரபற்பமுஞ் சடந்தனிலுறினால், வாதம்விக்கலுடன் பித்தரோசிகம், வாந்திசத்திசுர சன்னியுமேகுமே-தார.

சூதத்தினால்வயிறு வலியுடனூஷ்ணம், வாதத்தினால்பெருவயிறுந்துற்குணம், நாதத்தினால்பிர மூலப்பிரமியங்காசத்தினால்தொண்ணூற் றுருசயம்விடும்-தார.

பரங்கிப்பட்டைச் சிற்றரத்தைசுக்குடன், சிறந்தவாத மடக்கித்திப்பிலியும் நிறைந்ததோர்கொடி வேலிவேற்பட்டையுங். குறந்திடாமிள கருணையேழுமே-தார.

ஏழுவகைக்குச் சரியிடைபாகமும். இடித்துத்தூள தாயினிபதனத்துடன், வாழுமாமலைத் தேன்பசுங்கிருஞ்சரி, வார்த்துமத்தித்துமதிபற்பங்குன்றியே-தார.

பற்பங்குன்றியிடைகாலையுமாலையும் உற்பகமாயொருபட்சமுணர்வீராய். அற்பதேக மசாத்தியநோய்களுந், துற்பலமாவதுந் தூணதுவாகுமே-தார.

சிறுநாசி யடைப்புநீர்பாய்ச்சலும், சேருஞ்செவிதனில் சீழுமடைத்தலும். தேறுங்கபாலத்தின் சூலையும்பாண்டுடன், ஊரைவிட்டேகியுகாந்திரமோடுமே-தார.

காசரோகங்கன மேகப்படைகளும், நாசியடைப்புப் புண்புரைச்சிலைகளும். வாசமாகிடுஞ் சிழுங்கிருமியும். மாறியோடும் வலுவான நோய்களே-தார.

கெற்பகாசங் கிரந்திபுஞ்சூலைகள்; அற்பநோய்க்குஅவுழ்தங்கொடுத்திட, முற்பகச்செய்கை மூலங்களுமறும் மெய்ப்பொருள்காரபற்பத்தாலாண்டையே-தார.

கொச்சகம்.

மூலப்புளியமுரி முன்னேயுன்னுள்ளத்திலும்
வாலையதுவாய்செனித்து வாசியினால்சுன்னமயம்

சூலதுவாவந்தமைத்த சூகறிந்தும்பூவின்
காத்திலுங்கற்பமுண்ட காரணத்தினால்முடிந்தே.

முடிந்ததுகாண் தீட்சைபத்து மூலப்புளிசுன்னமதால்
படிந்ததுகாண்முப்புசுன்னம் பார்தனிலுமார்முடிப்பார்
கடிந்தமுரிகற்பசுத்தி காயசுத்தியானதினால்
வெடிந்ததுகாண்சற்குருவால் வெகுசரக்குமீற்றினமே.

கலித்துறை.

ஆண்டுதசப்பத்து கற்பாதிகற்பத்தி னாதரவால்
பூண்டுத்திறந்தந்த மூலப்புளியென்றபொக்கிஷத்தை
வேண்டிவாலாம்பிகை பாதாரவிந்தத்தில் மேவிடயான்
தூண்டியெனக்குப தேசந்தந்தென்னைச் சோதித்தளே

சோதியானந்த பரிபூரணானந்தசூட்சமதால்
வாசுவைபித்திய நானறிந்தம்பிகை மாதுமலர்
சாதனைசெய்தொரு ஈராறுமாச்சுது தானறிந்தேன்
நீதிமெய்ஞ்ஞானத்தில் வெட்டியென்றேவேதநிர்மித்தனே.

வெண்பா.

வேண்டுமரிதார வேதையிடபாதையிது
தூண்டிதுகாண்மூலப் புளிசுன்னம்-வேண்டுலகில்
கண்டால்கலகமது காசமறுசன்னிசுர
முண்டாலுமூழ்வினைபோம் போம்

தேனுமனுபானஞ் சேர்த்துயந்தொண்ணூற்றாறுமது
மூனைவிட்டுவோடிவிடு மூழ்வினைபார்-தேனதனால்
நானுணர்ந்தஞானவெட்டி நன்னூலதுவாயருள
பானமதையுண்டதுவும் பார்

விருத்தம்.

இந்தமதியாலெடுத்துரைத்தேன்காணும் எண்டிசையுங்கீர்த்தி பெறஇந்நூல்பாடி, சந்தயமெல்லாய்வெளியாய்த்தானேதோற்றும் சங்கையென்றமர்மமெல்லாஞ்சார்வாய்தோன்றும். கந்தமலர்ப்பூங்குழலாளன்னைபாதங்கருத்தில்வைத்துக்கருளியெல்லாங்கணக்காய்ச்சொன்னேனன், இந்தமதியெய்தின தாலாண்டேகேளீர் இனியுரைப்பேன் சவ்வீரசுன்னமாண்டே.

சவ்வீரச்சுன்னம்-தரு.

அதிவீரசுன்னங்காண்-சவ்வீர-மாலகாலவிஷங்காண்.

விதியிருந்ததி னுலிந்தசுன்னமு, மதிவிதவீர சவ்வீரபற்பங்காண், மதிரவிராசகெம்பீரபூபதி, கெடிரண சூரமகிபதிராசா. அதி

கட்டுமறுபத்து நாலுசரக்கையும், வெட்டியெறிந்து வெண்ணீரதுபோலவும், கெட்டிக்காரசார சிஷ்டையினுல்வீரம்பட்டுப், பட்டுப் போய்மர்த்தனம் பற்பமதாகிடும். அதி

வீரம்படநவரத்தினமர்த்தனம், வேகமிதால்வச்சிரங்களுமர்த்தனம், காரமபடநவ லோகமுமர்த்தனம், காலனென்றுயெமன் கற்பத்தால்மர்த்தனம். அதி

தாரத்தினுல்செம்பு வங்கமுமர்த்தனம், தங்கமுதல்ரசி தங்களுமர்த்தனம், சாரத்தினுல்சரக் காதீதமர்த்தனம், சத்துருமித்துருவைத்துசெய்மரணம். அதி

வீரந்தனிலொரு மேலும்பலமறிந், தேனுமறுவகை நீரிலொருபடி, பானந்தனில்முப்பு நானறிந்தோர்களும், சேனத்திலுமயச்சட்டிக்ருளிட்டுமே. அதி

சாரநீருலுஞ்சவ் வீரஞ்சுருக்கிட, காரசாரசெய நீரினில்கட்டிடு மூரலறறுமுழுக் கட்டுமிருரெண்டு, சாமத்திலுஞ்சத்த பேதியாமாண்டையே. அதி

முப்புசுன்னந்தனில் மூன்றுபணவிடை, கற்பூரமுங்காடிக்காரமுமைந்திடை, உற்பகநாபியுரமுவெங்காரமும், இப்படிகூதமினமரிதாரமே அதி

மடையன்புனுகு மனோசிலையங்கிடை, இடைபிசகாமலு மிந்திடைபூரமும், நடைகுருவண்டு நாதவிந்துநீரில், உடனேமூலட்புளி யூட்டியரைத்திடே. அதி

விந்துநாதத்தினுல் விட்டொருசாமமு, மந்தசரக்கு மதுமைபோலாகவும், சநதயமில்லாசவ் வீரத்தின்மேலெழு, விநதையெனும்ரவிவேகம்படபட. அதி

காயகாயகதிர் காணசவ்வீரமு, மாயும்படியதுமாறிமாறியிட, சாயமேறிசரகாயுலர்ந்தாகிடில், வேகங்கண்டுவீர மேவிடுமாண்டையே.

தனியமூலப்புளி தான்சரகானதி, லினியதாளாக் கிடுமொருசட்டியில், கனியஓரஞ் சதுகாரமதுபலம், இனியகீழ்மேலுமிவ்வீரத்தைப் பூட்டிடே. அதி

ஊட்டிமேலோடு ஓரேழுகவசமும், நாட்டிரவிவன்னி நாலுகடிகையில், நீட்டியனலுமூ லாக்கினைபாய்ந்திடில், மேட்டியாகுமிதுவீர சுன்னமிதே. அதி

வேகம்படஇந்த வீரசுன்னத்தினு, லோகங்கள்நீறு நுழைந்ததில் பாய்ந்திடில், சாகுமறுபத்து நாலுசரக்கது, மேகமிறுபத்து ஒன்றது மாறுமே. அதி

ஆலகாலவிஷ மானஅவ்வாறினுல், காலனேதுபின் கலிவருகாதுபார், மூலமெட்டு முறித்ததுமோடியும், பாலையாவதும் பாருஞ்சவ் வீரமே. அதி

வெள்ளியீரஞ்சு மிதுசுன்னங்குன்றிடை, யள்ளியேமூசை யதுவுருகும்பதம், கொள்ளியாஞ்சுன்னங் கொடுத்திடபத்துகாண், கள்ளமில்லை கனகமிதாண்டையே. அதி

தெய்வுமீரெட்டுஞ் செலுத்திடமூசையில், பாயுங்குன்றிடை பரிட்சையைப்பார்த்திடில், வாய்வுபத்துக்குமே வைத்திடுதேனதில், மாயுமதுநோய்கள் மரணங்காணுண்டையே. அதி

அசுவகெந்தி யாதண்டம்வேர்ப்பட்டையுந், தினுசுவேரிஞ்சிதிப்பிலிக்கோஷ்டமும், அசதிவாத மடக்கிவேற்காற்பலம், வயதியோர்சமன் வைத்தரைசுரசமே. அதி

சுரசமாமதில் சூட்டிடுசுன்னமும், அரிசிதன்னிடை யாவதுங்காண்கிலார், துரிதமாகத் தொடுத்திடுமஞ்சுநாள், பரிதிகாலையு மாலையுமூட்டிடே. அதி

ஓடுமூற்சையுள் மாந்தமுசல்வலி, சாடுஞ்சன்னிசந்து வாதத்தின் தோஷமுந், தேடியுங்கடல் புக்கித்தீவாந்தரம், நாடியோடியுநாசமதாண்டையே. அதி

குமரன்கண்டன் குலைவலிபாரிசந், திமிர்கள்குஷ்டஞ் செடத்தைவிட்டோடுமாய், தமர்தன்வாய்வு தலையிடிவிக்கலுங், குமிறுங்கோள்கள் குலைவலியேகுமே. அதி

திசைகளோடித் திகைத்திடும்வாயுவும், விஜையவீரம் விளங்கிடும்பாகமாய், பசையுநீர்கள் பறங்கிக்கிரந்தியும், கெசமிதுக்கெதிர் வீடுவராதுகாண், அதி

நடனமாதுவோ லாம்பிகைதன்னருள், காதவிந்துமூல முப்புவதால்சடம், உடலிலுள்ளவூழ் வினைகளேகிடும், முடமுடக்குக் கடிப்பது மாறுமே. அதி

ஞானவெட்டி நாதாக்கள்மறைப்பெலாம், பானத்தினுல்விந்து நாதத்தினுலதும், வானமும்மாரி மழைகள்பொழிந்திடும், தானறிந் தேவீர சவ்விரத்தாட்டமே. அதி

சூரனென்றசுத்த வீரசுன்னமது, காரசாரத்தினுல் கட்டுண்டு போச்சுது, மாறகொடிவலு வேதைகளாகிடும், வாலசூதத்தை மடக் கியேகொல்லுமே-அதி. துஉ௱க

விருத்தம்.

அம்பரமாஞ்சுழினேதிருநடனவோசை அகண்டபரிபூரணத்தில குஞ்சோதி, தும்பமுகன்வல்லபைதன் தாளைப்போற்றி சுகத்தில்சுக மெய்ஞ்ஞானசுகததில்நின்று, எம்பிரானெனதுகுருமுனியைப்போற் றியெள்ளளவும்பிசகில்லே யானும்சொன்னேன், நம்பியுங்காண்பாடு பட்டால்கற்பம்வாய்க்கும் நாதவுந்தறியாரேல்நரகந்தானே. துஉ௱உ

நரகமென்றுஞ்சொற்கமென்று நடத்தைக்காணுர் ஞானமென்று ம்யோகமென்று காட்டக்காணுர், துரகமென்றவாசிதனிலேறிஞான சுழிமுனேயைக்கண்டுமதியமிர்தமுண்டு, இரதமென்றயானேயைத்தா ன்குளிகைசெய்து இகபரத்தின்வெளிதாண்டியெய் துங்காலே,பரமபத சொற்கமென்ற தீபங்கண்டு பரஞ்சுடரில்நின்றுதினம் பணிந்தேனு ண்டே. துஉ௱௩

கொச்சகம்.

கடலலேக்குமுறிவிடுங் காரணம்போல்கண்டமதில்
அடாவுமேதாரைவிட்டு அங்கிருந்துவூதிடவும்
கிடுகிடென்அண்டரங் கீழ்மேலுந்தத்தளிக்க
வடம்பூட்டாவாசினுல் வங்குகளிருந்தூதினனே. துஉ௱ச

ஊதிடவினுடியெட்டு உள்ளமதில்நின்றுமனம்
சாதனேசெய்தேயடியேன் சற்றுமறியாமலுங்காண்
வீதியிந்தமூலம்விட்டு மேல்வரையில்வாசியொட்டி
சேதியறிந்தேனவிடஞ் சிக்கென்றும்வினுடியெட்டே. துஉ௱ரு

கலித்துறை.

நாடிடுங்காற்பத்து வோடிடும்வாசி நவத்துவாரத்திலும்
ஆடிடுநாக மரவத்தின்சாயலவ் வழிகளெல்லாம்
மூடிடுங்கற்ப முனேசுழிகாண மூலாக்கினியில்
தேடியொருவழி பாயுங்கலேயொன்று தேறினனே. துஉ௱சு

காலாக்கினிகற்ப நாதவிந்தூரிய காயத்திலும்
வாலாம்பிகைநின்று வாழ்ந்திருந்தாள்மூல வட்டமதில்
தாலாட்டியம்பிகை யமிர்தத்தைத்தந்து தசவருஷம்
நாலாம்பதவிக ளனுக்கிரகவாழ்க்கையை நாட்டினளே. ௲௨௱௭

வெண்பா.

தந்துமதியமிர்தந் தாயாரிருந்தெனக்கு
வந்துகலிதீர்க்கும்வா லாம்பிகைப்பெண - முந்தி
வாதவயித்தியத்தின் வாறறியநாதவிந்து
சூதவித்தையின்னதென்று சொன்னாள். ௲௨௱௮

சூதவித்தையின்னதென்று சொல்லவாலாம்பிகைப்பெண்
வாதவித்தைமார்க்கம் வசனித்தேன் - சூதவித்தை
ஆண்டுவொருவருஷ மாததாளமிர்தமதை
பூண்டறிந்துகொண்டேன் புகழ். ௲௨௱௯

கௌரிபாஷாணச்சுன்னம்-ஆனந்தக்களிப்பு-தரு.

தனனத்தனன தந்தனா-தான-தனனத்தனனத்தந்தனாதந்தனா.

சவுரியமிதுவென்னசிங்கம்-சரக்-கானதில்கெடிவீரகெவுரியந்தங்கம், கெவுரிசிந்தாமணிகாணும்-கெடி-யானபாஷாணத்தின் பற்பமுந்தோணும், கௌரியில்கோடிதொந்தங்காண்-கனக-வேதைதாம்பரத்தின்வேதையிதுகாண், எவருமரியாரிச்சூக்ஷம்-ஏம - மிப்புவியில்பரிபத்துக்குமோக்ஷம்-தன. ௲௨௱௰

பாஷாணம்பலமொன்றுவாங்கி - பழம்-புளிசுன்னமோரிடை பாணநாலிடைதான், காமாயம்போல்கரைத்தில்லங்-தெளிய - கருதிடுமூன்றுநாள் கணக்குச்சென்றெடுத்து,தாழாண்மைவாரா தெளிந்து-சலநீர்படிகொண்டுசவ்வீரத்தின்பற்பஞ், சூழனந்ததாரபற்பங் - கெடி.-துருசியின்பற்பமுஞ்சூதபற்பங்காண்-தன. ௲௨௱௰௧

சினம்வெங்காரம்பொட்டுப்பு - சாரஞ்-செய்கைவகைக்குப்பலங்கொண்டுதூளாய். பாணத்திலிட்டுமுப்பூவில்-பணம் - பற்பமெல்லாமினியாதிடைதாக்கி, ஈனம்வாராமற்கடுகை-ரவி-மேல்முகம்வீசிடவைத்துகலக்கி, ஊனதுவைக்கொண்டுபார்க்க-கலி - யாணமுருக்கம்பூவதுக்கொப்பாம்-தன. ௲௨௱௰௨

கண்டதிந்தசெயநீர்காண்-அயங்-கருதியசட்டியில் கௌரியைத்தாக்கி, விண்டிடவுநாலுசாமம் - மிக-மேன்மேல்வன்னியாக்கினியாக

த், தொண்டுசெய்துசுருக்கேற்ற-கெவுரி-துவண்டு இறங்கிவலுத்திடுமா
கில், நின்றதைப்பார்க்கவெளுத்து-சந்திரன் - நிலவுபளிங்குவெண்து
ய்யநிறந்தான்-தன. ௲௨௱௰௩

வெளுத்திடுங்கெவுரியைவாங்கி-துருசி - வேகமென்றசுன்னமுப்
புவின்சுன்னம், அழுத்திடவகைக்குக்கழுஞ்சி-அந்த-அம்பிகைநாதவி
ந்தீதுசலம்விட்டு, குளிர்த்தியாய்குழைத்ததின் மேல்காண்-கொஞ்சங்
கொஞ்சமாய்பூசிரவிதன்முகத்தில், வளர்த்தியேகாய்ந்தபின்கொண்டு-
பின்பு-மலப்புளியிருபலமாதுநீர்விட்டேதன, ௲௨௱௰௪

மயனம்போலாட்டிவழித்து-கெவுரி - மலப்புளிசுன்னங் கவசங்
கொடுத்து, வய ணமதாய்ரவிவைத்து-மகிழ்ந்-தானறினபின்புமடைய
ன்சுன்னங்காண், நியமதாய்பலம்ரெண்டரைகொண்-டினி-நின்றஅமு
ரியினுப்புமந்திடைகாண், துயரில்லாமலிரெண்டுஞ்சேர்த்து-சட்டிச்-
சுத்தமதாய்கொண்டின்னீரில்பாதி-தன. ௲௨௱௰௫

பாதியதிலிட்டுகெவுரி - நன்றாய்பாச்சியேபின்னந்தபாதியுமிட்டு,
ஆதியாயத்தியேயத்தி-அதின்-மேலொருசட்டியடக்கமாய்மூடி, நீதி
யாய்சந்துமண்சிலை-நிலை-நிற்பந்தமாகவு நேராய்முடித்து,தோதியடுப்
பின்மேலேற்றி-கம-லாக்கினையாகவுஞ்சாமர்தீமாறு-தன- ௲௨௱௰௬

மாறுமனலும்வன்னிமூட்டி - அது- மாற்றித்தீயாறினபின்னெடுத்
தேதான், பாராய்கெவுரிசுன்னத்தை-சந்திரன்-பளிங்குநிறமதுக்கதித
மாகும், சிராய்செம்புபதினாறு-குகையி--லிட்டுஉருக்குமுகம தனில்கு
ன்றி, நேராய்ப்பாச்சிவிடும்போது - கெவுரி-நிகரில்லாதசெம்பொன்னி
துபத்துமாற்றே-தன ௲௨௱௰௭

ரசிதம்பத்துக்கொன்று நாட்டு-குடவன் - நடப்பு இருபதுக்கொ
ன்றியபத்தாம், விசித்தமிந்தகெவுரியாட்டு-வேதை-விஸ்தாரமென்று
ள்விளங்கவொண்ணாது, பசியொருநாளினுமில்லை-சென்மப் - பாதகஞ்
செய்திடுவோர்க்கென்ன வாய்க்கும், நிசுத்தமசுத்தமறிந்து - பற்பம்-
நேராய்ப்பாடுபட்டுநேரறிந்தோரே-தன. ௲௨௱௰௭

நவலோகநவரத்தினநீறு-நாத-விந்துநீர்விட்டுச்குழைத்துச்சுருஞ்
சு, இவைதான்பற்பங்களுந்நீறும் - பின்னு-மிரும் புராசிதமுந்தங்கமுநீ
றும், அபச்சத்துகளெல்லாநீறும்-கரு-வங்கம் வெள்வங்கமுங்கமுங்கு
டவனுநீறும், சவமாகிலுமெழுந்தோடும் - சத-கோடி சரக்குங்காண்த
வளமாமாண்டே-தன. ௲௨௱௰௯

சத்திவிந்துநாதத்தாட்டு-சித்தர் - சமத்தெல்லாங்காரசாரத்தினூட்டு, வெற்றியெய்தும்வேதவாக்கியம்-வீர-சாம்புவமூர்த்திகாண்வெட்டியானுண்டே, சித்தியெய்துஞ்செயமாகும்-தச-தீக்ஷைபெற்றமூலந்தெளிந்திடுவோர்கள்; முத்தியெய்துங்கெவுரிசுன்னம்-பற்ப - முடிந்ததுஆண்டையேமுப்புவாலாச்சே-தன. ௲௨௨௰

வேறு-விருத்தம்.

வேலியெனும்பருத்தியின் வேரஸ்வகெர்திகெருடனுமேகிளகுஞ்சுக்கும், காலியென்றசிரகமுங் கார்க்கோலந்திப்பிலியுங்கடுகுரோமம், வால்மிளகுபரங்கியுடன்வகைவகையுமிஞ்சரிதான்சமனாய்க்கொண்டு, சூலியபிராமிபதம்பணிந்துபலமிடைகுறைவாய்த் தூக்குவாயே.

சூரணமாச்செய்துவடிக் கட்டியதில்பசுங்கிருதந் தேனுங்கூட்டிகாரணமாய்பிறைக்துரவி முகம்படவுமூன்றுநாள்கருதிமேலும், வாரணமாம்கழஞ்சியதின் பிரமாணம்லேகியத்தில் வசனிகுன்றி, சாரணையாய்கெவுரிபற்பங் காலையொடுமாலையுமேசாற்றுவீரே. ௲௨௨௨

கொச்சகம்.

சிராய்செழுங்கெவுரி சேர்த்துவுண்ணலேகியத்தில்
திராயரைமண்டலஞ் செய்கைநிலையானதுபின்
பாராய்பரங்கியொடு பல்லறணைநாவரணை
மாறிவிடுநோய்பிணிகள் மண்டையிடிபோமதுவே. ௲௨௨௩

மண்டையிடிகண்வலிரு மார்வலிகைகால்குடைச்சல்
குண்டிவலிகுன்மமெடுங் குடல்வாதமேகிடுங்காண்
அண்டையிடிவாழையரை யாப்புசிலையோடுபுண்கள்
கண்டமணிமாலையொடு கர்ணிகம்விட்டேகிடுமே. ௲௨௨௪

கலித்துறை.

விட்டேகுநோய்கள் கோடானகோடி வினைப்பயனும்
கெட்டேகடல்புககி சடலம்விட்டேகுங்கெவுரியினல்
கிட்டாதுசன்னி சுரமேழுதோஷங்கிறுகிறப்பு
தொடடாலும்பற்பம் விட்டேகுமென்று சொல்கின்றேனே. ()

மாறுராஜமேகம் வரும்புண்கள்வாய்வு வாதபித்தங்
கெதியில்லையென்று கர்மாந்தரேநோய்கள் கிடுகிடுத்து
மதிசந்திரசோதி வாருதிபான மதினளவால்
சதிசெய்யுங்கால னெமனென்றஅஸ்திரந் தலைப்படுமே. ௲௨௨௬

வெண்பா.

இஞ்சிசுரசத்திலிடுங்குன்றிப்பமது
அஞ்சிப்பயந்தோடு மாறுசன்னி-இஞ்சி
பித்தசுரந்தேனிலிடும் பேசாமலோடிவிடும்
சத்தேழுதோஷமும்போந் தான். ௲உஉ௮

பளிங்குபாஷாணபற்பம்-தரு.

பளிங்குபாஷாணபற்பமென்னுண்ணடையே
பார்க்கவுஞ்சொர்ணபற்பம்.

விளக்கலாகும்வெள்ளை வெண்மதிசந்திரன், கல்மசங்களில்லாக் கண்பார்த்ததொருபலம், துலங்குந்துய்யநிற சுந்தரமாகிடும், கலங்க மாகும்வெள்ளைப் பாஷாணங்கட்டுமே. பளி

கருவில்மூலப்புளி கண்டதுமோரிடை, சுரூபசாரநீர் தூக்கிடு நாலிடை, புருவமாய்கம்பி உப்புவெங்காரமும், புரசனுப்பு உருவியும் பாண்டையே. பளி

பூவணிவணங்கிப் புகழிந்துஉப்பது, மீனமிதுசரி பாகஞ்சமனதும், தானேமூலப்புளி நீருறவாக்கியே, சாருமூன்றுநாள் தண்ணீர் போலாகிடும். பளி

தேனேசெயநீரினில் சேருமுப்பூவதின், மானேகழஞ்சிடையதி விட்டுத்தாக்கியே, நானே அயச்சட்டி தன்னில்பாஷாணமும், யானும்வைத்துச் செயநீர்சுருக்கானதே. பளி

ஏற்றுநாலு மிடைவிடாச்சாமமும், போற்றிமூலப் புளியொருதன்பலம், சாற்றுமோவிந்து நாதனீரரட்டிப்பின், ஏற்றுங்கவச மினந்தெரியாமலும், பளி

காற்றுரவிமுகங் காயவைத்தானபின், மாற்றுமுப்பின் வகைவகைக்கோர்பலம், வேற்றிடாவெள் ளெருக்கன்பால்விட்டது, பார்த்துஆட்டிப் பாஷாணத்தின்மேலுமே பளி

அட்டியில்லா லதுகவசங்கன, மருணகாந்தி யதுமுகம்வீசிட, கட்டிவைதுக் கனரவிகாய்ந்தபின், கவசமேழும்மண் சீலைதுசெய்தே பளி

வெட்டிடுமேபுடஞ் சோடசமாவது, கெட்டியதாய்சுண்ணங்கீர்த்தியதாகுமால், சொட்டுப்போடுஞ்சுண் ணத்தினுல்வேதைகாண், வெட்டிடுமேவெள் வங்கமும்வெள்ளியே. பளி

வெள்வங்கமிரு சேரயச்சட்டியில், கண்விட்டாடக் காலாக்கினி தீயினல், பண்பெற்றேசல நீரதுபாகமாய், பாஷாணசுன்னம் பணைவிடைதாகருமே. பளி

எண்விதப்புகை யெட்டுமேகட்டிடுங், கண்விதப்பத மாகக்கருதினல், விண்ணுமண்ணு மிதுக்கெதிரில்லைகாண், நணணுந்தீது வராதுகாணுண்டையே. பளி

சுத்தபற்பஞ்சுக சன்னிதாந்தரிகஞ், சூலைபேதிசுர தோஷமசிரணம், உற்றநோய்களூன் வாய்வுடன்கிராணியும், உள்மூலமாவ துடல்மூலமெட்டதும். பளி

வித்தில்மேகம் விப்புருதிகட்டியும், வெட்கைபுண்கள் வெடிசூலைகுஷ்டமும், சத்திவிக்கல் சயரோககாசமுந், தானேபறந்திடுஞ் சங்கைகளில்லையே. பளி

பற்பங்குன்றிபஞ்ச தாரைக்கிருதந்தனில், பாகமதாகவும் பாசுங்காலைமாலை, கெர்ப்பநோயோடி கெதிகெட்டுபுககிடுங், கிலேசமில்லையரை மண்டலமுண்பீரால். பளி

அற்பநோய்தனைக் காவின்பாலன்னமும், ஆகுஞ்சருக்கரை யந்தவிதப்படி, சற்பவிஷங்கடித் தாலுமேறுதுகாண், சாரகாரசவு காரமிதாண்டையே. பளி

இந்தபற்பமீ ரேழுலோகத்திலும், சங்கைகாண்ப தரிதரிதாகையால், விந்தைபார்விந்து நாதக்கருவியால், வந்தநோய்கள் வாராதுசெடத்திலும். பளி

மநதமும்வயிறு முப்பசமேப்பமுந்,கொடுந்திடுங்குலை நோய்கள் பறந்திடும், அந்தமாகு மருணனெளிவுபோல், அந்தபற்ப மெவர்செய்துண்பார்களோ. பளி

வெள்ளைப்பாஷாண மிதுகற்றறிந்திடில், வேதைகோடிவெள்ளீயம்ரசிதமாங், கொள்ளைவெள்ளை கோடானகோடிவினை, கூறறிந்து கொடுத்திடநோய்கள்போம். பளி

விள்ளஇல்ல வேதாந்திகள்சூதுகாண், விந்துநாதம் வெளிமறைத்தேகினா கள்ளமில்லைக் கருதியநோய்களில்,காட்டினர்கரு காணபதருமையே. பளி

பற்பங்கோடி பலபலநூல்களில், பாடினர்கள் பழம்பொருளாகவும், கற்பங்கோடி கருவறியாமலும், காட்டினர்கள் கனகத்தின்வேதைகாண். பளி

சற்பஞ்சாரை சவுக்காரமுப்பூவினல், தப்பிதங்களொரு சங்கை வராதிடில், அற்பசண்டாளருக் காகுமாகாதிடில், ஆண்டேஞானவெட்டி ஆயிரத்தைந்நூறே-பளி. (கூஉஉஅ)

## விருத்தம்.

பித்தசுரஞ்சன்னியதுக்கிதுமேதேனில் பிசகாதுபயறளவுமின்வாங்காது, உத்தவினைக்கொருவேளைபூட்டும்போதுஉடலிலுள்ள சுரதோஷமேடுமாகில், செந்தசவமானாலுமெழுந்துருத்தும சிலேத்துமசுரசன்னிபதுசடுவீராகில், பற்றறுங்காண்மூலைப்பாலில்பயறுப்பிரமாணம் ப்றந்துவிடுமேகசிரம்பயந்துபோமே. (௲௮௧)

சுக்குடனேதிப்பிலியுமிளகுந்தாளாய் தொந்தித்துப்பயறளவுகுளிகையூட்டி, இக்குவையாயிஞ்சிபதின்சுரசங்கானில் இடம்பிடுமேபொருவேளையிதுவுணபீராய், சொக்கிவிடும்விக்கலசத்திக்குன்மமெட்டுச் சூலைபதினெட்டும்பறந்தோடுங்கண்டாய், மக்குவமாயமுதுகொள்ளுமிச்சபத்தியம் பார்த்துமென்ன இறைச்சிமீன்பகராதென்றே. ()

பறங்கியெடுத்தாக்கைமிளகுஞ்சுக்கும் பற்றமதாய்பொடிசெய்துபயறுப்பிரமாணம, திரமதுவாகுளிகையிட்டுத்தேனூட்டி தீண்

டிவோராமாகில் தினமுமொன்று, குறைநோய்கள்குமரகண்டன்மூலவலிப்பு குஷ்டம்பதினெட்டும் துகுடிபோக்கண்டாய், அறாவளத் தஅம்பிகைப்பெண்ணருளால்சொன்னேன் ஆண்டையினிபதினமேமலாமருளுவேனே. (தநடஅங)

காயமொடுதிப்பிலியுமரத்தைசுக்குங்கருதங் கொடிவேலியின்வேர்ப்பட்டையஞ்சும், சாயமுடன்வகைசமனாய்வறுத்துத்தூளாய் சாற்றிடிலுங்குளிகையொன்றுதாக்கிமேலும், உடாயமுடன்வேறுகப்பிரமாணந்தன்னில் ஊட்டிவிடுமொருதினத்திலோடும்வாய்வு, அபாயம்வருகாதுஅசீரணமும்போகும் ஐயிரண்டுவாய்வதுவுமகலுமாணடே.

மிளகருணைதிப்பிலிலவுங்கத்தோடு மிளகுடனேசரிசமனாய்பொடிதானசெய்து, களங்கமில்லாஆவினுடகிருதந்தன்னில் மருதியுமேகுளிகையொன்றுகாட்டிமென்மேல், விலங்கிடவுமூண்டிதனையிச்சாபத்திய மிதுவருந்தநோய்களதுவிடுபட்டேபோம், துலங்கிடவுங்காசமருஞ்சயகாசம்போம் சுழற்றலொடுபயித்தியமுஞ்சுவறிப்போமே. ()

கடுகுரோகணியது மிளகுஞ்சுக்கும் கண்டுபறங்கியுகடுக்காய்கஸ்தூரியஞ்சள், இடுமிதனைசரிசமனாய்சங்கஞ்சாற்றி லிட்டரைத்துப்புன்னைக்காயளவுநேர்மை, கெடுதியில்லா அவ்விலைச்சாறதனிலூட்டிக் கிலேசமில்லாக்குளிகையொன்றுகிளர்த்துங்காலை, விடுவும்கம்பாண்டுவிஷப்பாண்டுக்கேற்ற விப்புருதிசோகைமுதல்விலகுமாண்டே. ()

சிங்கிபஸ்பம்-தரு

சிங்கிபற்பமுஞ்செல்வேனுண்டே மிருதார்சிங்கி
ஜெயவிஜையசுன்னங்காணுண்டே.

செங்கமலபூபதி கங்கைநதிபெருகும், பொங்குங்கடல்சூழ்வாரிசெங்கநதியில்வளர், எங்கும்பரிமள சுகந்தசவ்வாதுவீசும், குங்குமசந்தனகெந்தமெங்கும் வாசமேவிய. (சிங்கி)

தங்கமெனுமம்பிகை பன்னிரண்டாண்டுமுதல், கொங்கைமதுரவின்பந் திங்கள்மதியுணரும், எங்கலியுமிவளா லிறவாதுடலுயிரும், இருக்கக்காயசித்தியு முருக்கமதாயளித்தாள். (சிங்கி)

சந்திரபுஷ்கரணியில் ஸ்நானபானங்கள்செய்து, உந்தியின்மூலாக்கினைகொண்டுணர்ந்துவாசியோகத்தில் இந்திரபதவிபெற்று ஜீரவியெனும்புளியை அந்தியிலுணர்ந்துபாலே யசடில்லாமலுங்காணும

யந்திரடஞ்சாகூரத்தை மதியம்ரவியிதென்று மறவாமலுக்குரு
வின் துரைசாமியின்சொல்வாக்கால், சந்தையப்படாமல்மூல சரக்கு
மமுரியுண்ட, சாதகத்தாலெனது சரீரமிதாச்சுதாண்டே. (சிங்கி

மதியென்றமுரிநாலு படிநீர்பாண்டத்திலிட்டு, விதிபென்றதுவு
ம்ரவி விளங்குமிதிலொன்றிட்டு, பதியவதுகரைத்துப் பாகமதாய்வடி
த்து, அதனைமூன்றுநாள்வைத்து அளவாய்தெளிவிருத்து. (சிங்கி)

நீதியாய்வீரமுஞ்சார நேர்சமனதுசினமுங், கெதியாய்பலம்வ
கைக்குக் கெணிதம்பொடியாய்ச்செய்து, அதிதகாரசாரநீ ரளந்துபடி
தானவாங்கி, மதுரமதாகுப்வெள்ளை விளங்கும்பிங்கானிலிட்டே. (சி)

காரசாரமதுநீ கருதியபிங்கானிலிட்டு, நீரதனில்பொடியைத்தா
க்கி நெறியாய்ச்சொல்வேன்கேளீர், கூறபாண்மிருதார்சிங்கிக் குண
மாய்பலமிரணடு, வீரமாய்செயநீரிலூட்டி செலுத்துஞ்செயநீரிலா
ண்டே. (சிங்கி)

சிராயபக்கம்பினுல் செயநீரதைக்கலக்கிப், பாராய்முப்பூவின்சு
ண்ணம் பாச்சிக்கழஞ்சியிட்டு, வீராய்கதிர்முகத்தில் விசிதநாளுக்குநா
ளும், பேராய்வற்றவுவிட்டுப் பிங்கான்பதனம்வைத்தே. (சிங்கி)

வற்றவைத்தொருபட்சம் வகையாய்ரவிமுகத்தில், முத்துமுத்த
துபோலு முனையில்சுற்றிக்கட்டுங்காண், சித்தர்சொன்னமறப்பைத
திருவள்ளுவனும் விண்டேன், பற்றிடுஞ்சுற்றிலுங்காணும் பசுவின்
வெள்ளைபோலாண்டே. (சிங்கி)

நித்தநித்தமுடியக் காண்டிகொண்டுவழித்து, சித்திபெறவும்பிங
கான் சிறுசாயதனிலிட்டு சுத்தவெண்ணிறமதாய் துலக்கமாகுமதி
போல், வைத்தமருந்தாதீதம் வருகும்வெண்ணெயெடுத்தே. (சிங்கி)

சித்திரைவைகாசிநாளில் திரமாய்கதிர்முகத்தில், வைத்திடும்வெ
ண்ணெயைவாரம் வைக்கவைக்கவெளுப்பாம், புத்துப்போலவுங்கண்
டால் பின்னும்வைத்திடும்வாரம், சுத்தவெணணிறமதாய்சிங்கிசுன்ன
மிதாண்டே. (சிங்கி)

பற்றுப்படாமல்வெள்ளை பரிவாகுப்பியிலிட்டு, நித்தம்பூசித்துப்
வாலைநேமியருள்பதங்காண, கர்த்திகர்த்தினருளால் கண்டேன்சிங்கிசு
ன்னத்தை, வித்துவெணும்முரி விந்துநாதத்தாலாச்சே. (சிங்கி)

நவலோகங்களுமபற்பம நவரத்தினமும்பற்பஞ், சிவமுஞ்சத்தி
யுங்கூடிச் சேர்ந்துசிங்கிமுப்பாச்சு, புவனந்தனிலும்பொருள்கண் டு
றைசெய்வார்களோ, கெவுனுதிகளானாலும் கிலேசப்படுவார்காணும்.

தவத்திலதிகதவந் தாணிதனிலென்னகாண், மகத்துவங்களுமெ
ன்ன மதிரவியுங்கூடிகாண், கவந்துவங்களுமில்லைகற்பங்காயசித்தியா
ல், சவமாகிலுமெழுந்து சற்றேபேசிடுமாண்டே.　　(சிங்கி)

வாய்மொழியால்படித்து வாதாடுவாருலகில், தாயுந்தந்தையுமல்
லாத் தான்பிறக்குமோபிள்ளை, நாய்போலுமேகுலைந்துஞானவாக்கிய
மெல்லாம், பேய்போல்தெருத்தெருவாய் பிதற்றிடுவார்களாண்டே. ()

பாயுமில்லாமல்கப்பல் பறந்துவிடுமோசும்மாய், பாறுஞ்சக்கரமி
ல்லாப் பாய்ந்திடுமோவண்டிகாண், நீயும்வாசியில்லாமல் நேராய்நடக்
கலாமோ, தூபவெளியென்னவார் சுக்குலசுரோணிதமாண்டே. (சிங்கி)

அன்னமேயம்பிகைமாது அமுரிமூலப்புளியும், ஆரறிவார்களிந்
த அதிசுகுருசூக்ஷ்மத்தைக்கண்டு, சொன்னேன்மெய்ஞ்ஞானசூக்ஷந் சுழியி
ன் முனையதுக்குள், சூதவிந்தநிந்தால்வாத மேவல்கள்செய்யும். (சிங்கி)

உன்னிதமெனும்பரிதா னுருக்கித்துட்டதுபோலும், ஒருபலந்
துக்கொண்ணரை யகலமுற்பனக்காணும், இன்னமிருதார்சிங்கியெடு
த்துக்கழஞ்சியிடை, உன்னுமிநீர்க்குழைந்து உருதெரியாமல்பூசே. ()

பூசிடும்ரவிமுகத்தில் புகலும்பரியுலர, வீசிடுங்கற்பூரமெனும்வெ
ற்றிலைமுதுகாலதும், மாசிபாட்டிக்கவசமதின்மேல்சந்துசளில்லா, வா
சிமண்சீலைசெய்து வதுகெசப்புடமாண்டே.　　(சிங்)

வீசியபயேனல்புன் விதமாயெடுத்துப்பாரு, மாசில்லாமலும்பரி
தான் மசிர்ந்துபற்பகரும், வேசிவாலையின்மூல நேசத்துடனேவா
சி, நாசிநுனிமுனைமேல் வாசியோகங்களாண்டே.　　(சிங்)

வேறு-விருத்தம்

ரசிதமதுபலமதுக்கு மிருதார்சிங்கிச்சன்ன நவினமாகும், விசித
மொருகழஞ்சியிடை யுமிநீரில்குழைந்ததம்குமேலும்பூசி வசியஉத்தா
மணியிலையை யரைந்துநன்றாய்கவசமிட்டு மண்ணுஞ்சீலை,முசிபாமல்
செய்துகெசப்புடந்தனிலுமிதைநீற்றுமொழிந்திடீரே. (தாடஅஅ)

வெள்ளங்கம்பலமதற்கு மிருதார்சிக்கிச்சுன்னம் விளங்கிடீர்கா
ண், களங்கமில்லாக்கழஞ்சியிடை உமிநீரினல்குழைந்துக் கருகிமே
லும், விளங்கும்விஷ்ணுகாந்தியரைத் ததுக வசஞ்செய்துமிக விளங்
குஞ்சீலை, குழங்காமல்கெசப்புடம்போட்டெடுத்துவெகுபதனமதாக்
கூறுவீரே.　　(தாடஅகூ)

கருவங்கம்பலமதற்குசிங்கிசுன்னங்கழஞ்சியிடை கணக்காய்கொ
ண்டு, உருவஉமிநீர்விட்டு மேல்கிழும்பூசிபுரு தெரியலாகா, அருவான

சடைக்கஞ்சா அமூரிவிட்டுஅரைந்துரெண் டடையாய்த்தட்டி, விரிவில்லாமேற்கீழும் பதியசந்துதெரியாமல் விளங்குவீரே. (௩௱௯௰)

மண்சீலைசெய்துகெசப் புடந்தனிலுநீற்றியதை வளமாய்வைத்து, உணர்வாகந்தாம்பரத்தி லொருபலங்காண் கழஞ்சிசுன்னம் உமிநீர்விட்டு, எண்ணெனுமோரிலையரைத்து பதியசந்துமூடியிதற் கினிமேல்காணும், விண்ணெனுமோரிலையரைத்து உமிநீரிற்குழைத்துமிகக் கவசஞ்செய்தே.

(௩௱௯௰௧)

அதிதமருந்தகனியிரு அடையாகச்செய்துஅதுக் குள்ளேதாக்கி, புரைவருகாமண்சீலை செய்துகெசப்புடம்போட்டுப் பிறகுகாணும், முறையெனும்பாரும்பதற்குச் சிங்கிசுன்னமொருகழஞ்சி யுமிநீர்விட்டு, திரையெனுமில்லாமல்படி குழைத்துஅதின்மேல்பூசி தெளிவாய்த்தானே.

(௩௱௯௰௨)

கறுப்பதுகாண்வசளையாது கைப்புமலைதனிலிருக்குங் கருவாய்க்கண்டு, உறுப்படியுமுனதுஉமி நீரதுவிட்டரைத்துவுள்ளங் கீழுமேலும், அறுபடிரெண்டடைநடுவில் பதியவுங்காண்வைத்துமண்ணுஞ்சீலையெயது, துறைப்படியும்பிசகாமல் கெசப்புசித்தில்நீற்றியதைச் சுன்னஞ்செய்வார்.

(௩௱௯௰௩)

எழுகுஒருபலமதற்குசிங்கிசுன்னங் கழஞ்சியிடை யியம்புங்காலே, அழகுபெறுமுனதுஉமி நீரதனல்குழைத்து அதின்மேலும்பூசி,உழலைவராதெட்டியெனுங் கொழுந்திலுமிநீரதுவிட்டுருவாயாட்டி, பிழைவருகாதடையில்வைத்து சீலமண்செய்தடக்கமதாய் புடந்தாறுண்டே.

போட்டெடுக்க அபச்சுன்னம் பொருமியது பற்பமதாய் பெரிபேல்நீறு, மூட்டிடவுங்காத்தொரு பலமதற்குஒருகழஞ்சியுமிநீர்விட்டு, வாட்டிடவுங்குழைத்து வரிதெசியமல்பூசிவன்னி முகமேவைத்து, மேட்டியெனும்விழுதிபிலைக் கொழுந்துஉமிநீரதுவால்விட்டு ஆண்டே.

(௩௱௯௰௫)

இரண்டைதான்செய்துபிது நடுவில்வைத்துப்பதியவுமே யியல்பாய்சீலை; திரளவுங்காண்கெசப்புடத்தினனலால் வலுக்கச்செய்து, செகொவ்வாது, உறவைதுவாய்நவாச்சாரம் பலமதற்குச்சிங்கிசுன்னங்கழஞ்சியூட்டி, பரவஉமிநீர்விட்டுக்குழைத்து அதின்மேல்பூசிப்பகர்வேணுண்டே.

(௩௱௯௰௬)

பகாரியஆடுதின்னுப் பாளையம்மான்பச்சரிசி பரிவாய்க்கொண்டு, நிகரில்லாஉமிநீர்விட் டரைத்துஅதுக்குள்ளடக்கி நெறியாய்மேலும், திகழொண்ணுமண்சீலை செய்துஒருமுழப்புடத்தில் திறமாய்

நீற்றிச், சுகமதுவாய்நவாச்சாரசுன்னமதுநீற்றினத்தால் சொர்னமா ணடே. (தஙகூஎ)

தரிசதுகாண்பலமதர்குசிங்கி சுன்னங்கழஞ்சியிடைதுப்புநீரால், பரிசமெனும்பூசிகருஞ்செம்பனியும்பூவும் பறித்துமென்மேல், வரி சைபெறவகைக்குப்படி யுமிநீரினலரைத்துவதுமேல்பூசி. தரிமமெனு மண்சீலே மூன்றதுகாண்செய்துமிகச்சொல்வேனுண்டே. (தஙகூஅ)

ஐந்துவிரலதுக்குமுத லதுவிரலால்பத்தைவைத்து ஜயஞ்சாகில், சஞ்சலமில்லாதபுடம்போட்டெடுக்கத்துரிசதுவுஞ்சங்கையேது, பஞ் சமில்லாதழை ளெல்லாஞ் சலம்பொழியுங்கயிலம்வரும்பாடுபட்டா ல். வஞ்சமில்லேகற்ப முண்டு வழலேயதின்யெருமையினல் வசனித் தோமே. (தஙகூகூ)

முன்சொன்னகாரிய முறையதுகாண்சுன்னமதில் முறையக்கே ளீர், யின்னமந்தசுன்னமதி லொருபலந்தான்கல்லுப்பு உகமையாகு ம், உன்னிதமாம்வெண்கருவிட் டொருசாமமாட்டிவழித் துணர்வா ய்பில்லே, வின்னமில்லா ரவியுலர்த்தியகலில்வைத்துமேலகலும்விதமா ய்மூடே. (தசா)

சந்துதெரியாமலுங்காண் மண்சீலேயுணரதுவுஞ் சார்வாய்செய்து து, யிந்தவிதமிந்னேயிருபத் தெருவில்புடம்போட்டு எடுத்துப்பார்க் க, அந்தமிகுஞ்சந்தரனுக் கதிதமிந்தக்கவருவங்க மார்தான்செய்வார் விந்ததிதசுன்னமிதைக் குப்பிதனிலடக்கிவெகு பதனஞ்செய்யே.()

அரிதாரமதுக்குயிர்கா ணதிதகருவங்கசுன்னங்கழஞ்சிவாங்கி, உ ரியஉமிநீரிலிட்டுக் குழைத்ததின்மேல்பூசியபின் னுடனேபாரில், பரி யாசம்வாராமல் சுதிரவன்தன் முகம்படவும் பண்பாய்வைத்து, பிரிய முடனத்திமரப் பட்டைதனிலுமிநீர்விட்டுப் பிலமாயாட்டே. ()

மயனமதாப்பாட்டிவழித் திடுமூசையதுக்குளரி தாரம்வைத்து, வ யனமதுவாகவுந்தான் மேல்மூடியதினைவால் வலுக்கச்செய்து. செ யம்பெறவுமண்சீலே திருத்தமதாய்மூன்றுவிதஞ் செய்வித்தேபின், நய மதுகாணுண்டையெரு பத்ததற்குளடக்கமதாய் நாட்டிடீரே. ()

விருத்தம்.

பூனேக்காஞ்சோரியிலேபுங்கம்பாளே புகழ்சமனுயுமிநீரதுவாலும் த்தி, மானேகுகைவலுவதுவாய்செய்துமேவி வாங்குமொருபலந்துரு சுவளமதாக, தேனேயரிதாரசுன்னங்கழஞ்சிவீதம் தினுசளவினுமிநீரா ல்குழைத்துப்பூசி, ஆனேமுகன்கமலமலர்பணிந்துபோற்றி அக்குகை மேல்மூடிசந்துஅருளுவீரே. (தசாச)

மேல்மூடிசிலைமண்ணுமூன் றுஞ்செய்து டென்மேலும்பத்தெருவி ல்புடந்தான்போட, ஆலவிடமுண்டசிவனாலும்வெல்லா அறுபத்து நாலுசாரக்கதிதமாகும், வேல்விழியம்பிகைமாதுநடனஞ்செய்வாள்மே லானகெந்தகமுந்தயிலமாகும், பால்போலுமதியுடைய நிமமெவ்வா து பார்ப்பதற்குந்துசிசுன்னம்பாடினேமே. (தசாரு)

வீரமொருபலமைரச்சத்தார சுன்னம்விளங்கியொருசமூஞ்சியிடை யுமிநீர்விட்டு, தேமவுங்காண்குழைத்து அதின்மேலும்பூசிசெப்புகிறே ன்ஞானவெட்டித்திறத்தைக்கேளீர், வீறுகின்றநெருஞ்சிதனிலுமிநீர் விட்டு விமலவாலாம்தகைவயப்போற்றிசெய்து. மீறவுங்காணரைத் து அதைக்குகையாய்ச்செய்து மேலுமபத்தெருவில்புடஞ்செய்வீர்தா னே (தசாசு)

சூதமொருபலமதுவுங்கலுவத்திட்டு சுயமான வீரசுன்னங்கமூஞ் சித்தாக்கி, பேதமில்லாஉமிநீர்விட்டுக்கடிகையேழும் பிலமாகஅரைத் துவழித்துண்டையாக்கி, சோதியெனுமூசிப்பாலிலையைவாங்கி சொல் லுமுமிநீர்விட்டுகொடதித்தேதான், விதியெனுமேகுகையதுசெய்திலே ச்சார்தன்னில் விளங்கவுங்காறபலம்வாங்கிவிரைந்திடுரே. (தசாஎ)

சாரமதின்சூதவுண்டைத்தோய்த்துத்தோய்த்து சங்கையில்லார விமுகத்தில்காயக்காய, மாறியுண்டைசாறதுவுஞ்சுண்டக்சுண்ட மக த்தானகதிர்மூகதன்காந்திவீச- ஊரியந்தசாரது வுமுலர்ந்துபோகும் உண்டைதனையெடுத்துகுகைதனிலுநாட்டி- வாறதுவாய்பேல்மூடிமூ ன்றுசிலை வசனியுங்கர்ண்பத்தெருவில்புடந்தானுண்டே. (தசாஅ)

இந்தசாக்குருவிலொருகழஞ்சிவாங்கி யிரும்பதுசட்டியிலும்வெ ள்ளைவங்கந்தாக்கி- சுந்தரமேயுருகியதுக்கண்விட்டாடும் சுட்டிவிடு ஞ்சூதசுன்னந்தொந்தித்தாக்கால்அந்தநீரதிதமெல்லாங்குடித்துப்போ டும் அரைகடிகைக்குள்ளாகரசிதமாகும்- எந்தவிதமாகிலுமேகற்பஞ் சாதித் திருப்பராலிம்மூறையுமெய்துமாண்டே. (தசாகூ)

இந்நூலில்சொன்னமுறையடங்காமற்றூன் எண்ணூறுவயித்திய ந்தானியம்பலானேன்- அனாலுமிந்நூலுமார்க்குக்கிட்டு மனுபோ கிகற்பமுண்போரவர்க்குக்கிட்டும்- பின்னமொருநாளுமில்லைபிழைதா னில்லை பெருநூல்காணுயிரத்துஐன்னூறிந்நூல்- முன்னமேயான்பா டிவிட்டேன் ஞயிரத்துமுன்னூறு முடித்துவைத்தேன் குறளதுவாயுல கோர்க்கான்டே. (தசாய)

இரண்டாயிரத்துமுன்னூற்றுச்சொச்சததுள்ளே நெறியானதத் துவமுங்கற்பக்கூறும்- அண்டரணங்கொள்ளாத அதிதமெல்லாம்

அடியுடன்முடியறிந்து அருளலானேன், கண்டுநவலோகமெல்லா நீற்றிப்போட்டேன் கரையில்லை துறைகளில்லை கருவின்வாறுல் விண்டபொருள்நாடிவித்தின்விதியாலச்சு மேதினியில்விதையறியார்விளங்குவாரே
(தசா௰க)

## வேறு-கவி.

மதியினாலுதித்தசூதம் வாரிவிந்துசாரம்
அதிதமூலநாத சோதியந்தகாரசுந்தம்
விதியினாலிசைந்தபூரி வேதசாரகாலிடை
அதிதகாரமோரிடை யளந்துபார்கணக்கிதே. (தசா௰உ)

விண்ணுமண்ணுமேயிசைந்து வேறதாயொருயினம்
பண்ணுமேவிடுங்கழுஞ்சி பாகமாய்ப்பிரமாணம்
வெண்ணிடுமெழுகுபோலு மேவுமென்மேல்காசிடை
கண்ணிடுங்கதிர்முகத்தில் காய்ந்துலர்ந்துகண்டிடே. (தசா௰ங)

பச்சையாவதும்புளி பருதியாவதுஞ்சுழி
உச்சிதமெனும்ரவியு தாரமுப்பூலட்புளி
தச்சொரூபமாமதியின் சாரமும்பூரிதான்
வைச்சமீதார்பொருளிதுநேர் வாளமுஞ்சமனதே (தசா௰ச)

அகாரமாயனமத்தது மபூரியால்படைத்ததும்
உகாரமாயுதித்தது மபூரியாலபடைத்ததும்
அகாரமும்உகாரமு மருவுஞ்செகாதிதம்
சிகாரமேசிவசுரூப சித்திமுத்தியாகுமே (தசா௰ரு)

ஏனமாவதேதுகா ணிசைந்தபாண்டந்தன்னிலும்
வாளமும்வழலையொக்க மாட்டிசில்லுவாகதாய்
ஏனமேயிசைந்துநாடி யேழுசீலைவண்ணமும்
நாளுமிப்படியதாய் நளினசெய்கைபாருமே (தசா௰சா)

பூமியில்குழித்தயிலம் போடுமெவ்விதமலகைய்
தேமமாயொருவரும் நெருங்கிடாமலுப்பதம்
வாமியம்பிகையருள் வாலாம்பிகைமலர்ப்பதம்
சுவாமியென்குருபதஞ் சுகாதிதம்பணிகுவாம (தசா௰எ)

ஆதியந்தமாய்நிறைந்த அண்டபிண்டஞ்சூழ்ந்திடில்
ஆதியுமனாதியு மதிலுதித்தவாறுகாண்
ஆதியிலமைத்தவிந்து அந்தமூலநாதலாய்
ஆதியில்முன்னோர்மறைத்த ஆதிவிதமதாண்டையே (தசா௰அ)

மதிநிறைந்தகுப்பியில் மகிழ்ந்து இத்தயிலமும்
பதியவும்வெகுபதனம்பாருமபாரும்பண்பெற
விதியினலமைத்ததிந்த விந்துநாதபூரணம்
துதியுமவாதமெண்பதுஞ் சிறந்துபோமிதாண்டையே

வாதநோய்வரும்பிணி அதீதகாலேதன்னிலும்
வீதமாவதும்பண விடையெடுத்துச்சீலேயில்
காதலாலுணர்த்திடக்கருதுநோய்களோடிடும்
வாதபித்தசேத்துமம் வணங்கிடுங்காணுண்டையே (தசஉய)

காலேமாலேயேழுநாள் கருதிடுவீராகிலும்
மாதுருநவாய்வதும் வயிர்வலி அசீரணம்
மூலமும்பவுத்திர முசல்வலிடனைத்துமே
சூலேயுஞ்சுரங்கள் சன்னி தோஷம்போங்காணுண்டையே

வாலேபாகறக்குமே வரும்பிணிகள்மாந்தமும்
சீலமாய்குரோசனேயுந் செண்பகப்பூசுக்குடன்
காலவுங்கஸ்தூரியுஞ்சவ்வாதுமேபுழுகுடன்
சாதிலிங்கந்திப்பிலி மிளகும்பச்சைபூரமே (தசஉஉ)

பச்சையானஉப்பதும் பழம்பிளிபமுரியும்
இச்சைநாலுமொன்றதா யிதைக்கரைத்துநீறதாய்
பச்சையுந்தெளிந்து நீர்பரிகரித்துவன்னில்
உச்சிதமாசுண்டிணுலுவர்ப்புபாமிதாண்டையே (தசஉங

அஞ்சுமஞ்சுமொன்றுடன துபதினென்றுகவும
சஞ்சலமவராமலுஞசரிசமன்கழஞ்சிடை
பஞ்சபாதகங்களேசி பாரிலும்பறந்திடும்
நஞ்சுமேமுறிந்திடும்ரவிமதியிதாண்டையே (தசஉச)

சரிசமன்மருந்தினந் தயுலமவிட்டிலுந்தினம்
வடநந்திடுமருந்திதையயனமாயவருந்தலால்
பிறந்திடுவதேதுகாண் பிரகாசமாய்மெழுகதாம்
மருந்திதைச்சிமினில் வருந்தியோதுதிப்பரே (தசஉரு)

துதித்திடுமோடாதொடை சுரசமாமதிலிதை
விதித்திடுந்துவரையின் விளங்கிடீர்பிரமாணமாய்
மதித்திடுங்கனப்பிரளி மாந்தமோடிகுவதும்
கெதித்துவோடிபுக்கிடும் கெணிதமொன்றுநாளிலே (தசஉசா)

சுரங்கள்சன்னிதோஷமும் கிணங்களர்சூக்கிராணியும்
சுவாசமுமசீரணம் பசாசுபூதமோடியும்
திரமனந்தகக்கல்விக்கல் சோகைபாண்டுவீக்கமும்
சுரங்களேழுமோடிடுஞ் சுரசமிஞ்கியாணடையே. (௧௪௨௭)

கடுகளவதாகிடுங் கருதிடும்விழிதனில்
விடுமுதல்நலேசனுய் விதித்திடும்பால்விட்டுமே
கடுகளவெடுத்துமத்தி கண்கள்ரெண்டில்வீசிட
படும்வினைசுரங்கள்சன்னி பத்துமூன்றுமேகுமே (௧௪௨௮)

சுத்தவானதிவதிக்த சூக்ஷமாய் குழப்பதை
வித்துவான்வயித்தியன் மிருத்தண்டிதர்களும்
கற்றிடுமெய்ஞ்ஞானிகள் கனத்தயோகவாசிகள்
வித்துவானிவர்களுக்கு மேலெவர்களில்லையே (௧௪௨௯)

வாதபித்தசேத்துமத்தின்வாறறிந்தடண்டிதர்
சூதவித்தைவாசியோக சூக்ஷமத்தைக்காண்கிலீர்
வாதமூலநாடிகாண் மதியும்பித்தவாரிகாண்
நாதவிந்துவாசியும் நடந்தவாறிதாண்டையே (௧௪௩௦)

வாதமாவதுபுளி மருவும்பித்தவாருதி
சூதவிந்துநாதமுண்டு தேறிடும்வயித்தியர்
பூதமஞ்சுஞ்சேத்துமம் பொறிபுலன்மூலாக்கினை
வேதசாரமூலமும் விளங்கும்பண்டிதர்களே. (௧௪௩௧)

இடைசந்நாடிமூலமு மெழுந்தவாறுகாண்கிலீர்
எழுபத்திராயிரத்திலேகபோகமாகுமாய்
பசைந்துமண்ணுந்தண்ணியு ம பலிதமாயிதாகவும்
இசைந்தபண்டிதர்களோ யெண்சாணுடல்சலமந்தே (௧௪௩௨)

மூலாக்கினையிருந்தெழுந்து மூச்சுடர்களானதும்
முப்பாழ்கடந்தெழுந்திருந்து முனைசுழிபறிந்ததும்
காலாக்கினையிருந்தெழுந்து கற்பஞ்சாதித்தப்புரம்
மூலாக்கினைமுடிவில்நின்றுமுந்திசித்தியாகுமே (௧௪௩௩)

கால்கள்பன்னிரண்டுமூலங் கைகள்பத்து ஆறுமே
கால்கள்பன்னிரண்டுகாலுங் கட்டிடுங்கழிவிலா
கால்களுமிருந்துமூலா காரமுங்கதிரொளி
கைகளுங்கலையிரெட்டுங் காணுஞ்சாரகாரமே (௧௪௩௪)

சாரகாரம்இரண்டதுஞ் சரமாரியேற்றவல்லிராய்
சாரகாரமும் பொருந்த சண்டனில்லையில்லைகாண்
சாரகாரவீரபூரஞ் சந்திரசூரியர்கள்காண்
சாரகாரமாறமாற சத்துஞ்சித்தானந்தமே (தசாகரு)

இந்தஎண்சாண்தேசமா யிரவியுமதியுமாய்
இராவுடன்பகலுமேயிராவுமாய்
இந்திரனிரவியு மென்னுக்குளேயறிந்தபின்
இந்திரனிரவியு மிராப்பகலுமில்லையே. (தசாகசு)

வேறு-விருத்தம்

இருவினையொழித்துஇந்நா விருள்தனையகற்றிஞானக்
கருவிதைபநீற்றிநீறல் காலனையெரித்துமேலும்
வரும்பெறகெதிக்குள்வாசி மருவிமேயமிர்தமுண்டு
அருந்தவஞானசோதி யருளில்நின்றர்ச்சித்தேனே. (தசாகஎ)

திருவுருவுடனசோதி தெய்வனுபகனுலெந்நூல்
வருமதிரவியினுலு மாய்கைபோய்மவுனமுற்று
கருக்குருதானுய்நின்ற கடவுளின்கமலந்தன்னில்
துரிதமாய்துரியாதீதஞ் சொர்க்கவாழ்பதவிசேர்ந்தே. (தசாகஅ)

அறிவிதமாயாசக்தி யம்புவிதனிலும்யாவர்
துதிசெய்துபணிந்துபோற்ற சுகாதிதமனைறப்புண்டாகி
விதியிந்தசெய்மையாலும் விட்டதோர்குறையினுலும்
மதிரவியொளியினுலும் வாசியில்மகிழ்ந்தேனுண்டே. (தசாககூ)

யோகநிலை தரு.

சித்திரவிசித்ரத்தின திவ்ய அமிர்தமே-செழுந்
தேனருவுபாயுஞ்சிரோரதன்னதீபமே.

முத்தமிழமிர்தசிவஞானசுருபி- செக- மோகனவாலாம்பிகை புவனேஸ்பிகைபரூபி, சத்திசிவசாம்பவி சடாக்ஷரிசமலஞ்- சர்-வேஸ்பரிசெகதீஸ்பரியெனைத்தம்கார்க்கவேணும் வித்தியாதாரணிசர் வாணிமேதநாயகி--மெய்ஞ்ஞானிகள்பூசித்து தெரிசித்துசேபணியுஞ் சுத்தபரிபூரணிசுராகாதீத அன்னமே - சுழி - சூக்ஷசடாதாரபிரணவசோதி முன்னமே. (சித்)

சூரியசந்திரகாந்திமின்னலொளிவே - தூல் - சூக்ஷகாரணப் பிரகாசசொர்னவொளிவே, வாரிசூழமிர்தபானமாமதுரமே - திரு - வள்ளுவன் சொற்கபதவி வாழ்விக்கவருமே, துரியதுரியாதிதமும்சிவா

யும்பாயும் சுயம்பிரகாசதீப சுடர்சோதிகாணவுந், தேறியபெரியோர் பாதஞ்சேவைசெய்யவுந்—திரு - நடனகாரசாரசெய்கை யாண்டையே. (சித்)

வாசிவாசிவயநவங்கென்றூதியே—வாசி - வரவழைத்துவாய்வு பத்துமாறியூதியே, தேசிகன்திருவடிதெரிசனம்பார்க்க —சிங்கென்று- கண்டதாரைகொண்டுதினந்தினந்தீர்க்க, நாசிநுனிமீதில்சுழிநடனசேர்வை - காண - நாதாந்தசின்மயத்தினருள்நாதனைப்பணிய ஊசிமுனைமேலிதவுச்சியின்கீழுமுள் — மூல--கண்டதாரையாசை யோகவாழ்க்கையே (சித்)

ஊதிடுங்கண்டதாரையிலுங்கென்று-மூலம் - உள்ளுக்குள்ளவும ரேசித்துக்கும்பியூதிடுந்தானா, ஆதியானசோதிகண்டு ஆராதனைசெய்து அகண்டவெளிகாணுமந்திடத்திலூதவும், பூதாதியைபந்துரம்பொருந்திபூரணமதிலுஞ்—சுழி - புருவமையநேரில்நின்று புகழுமம்பரமே, நீதியச்சதாசிவன்தனநேசமுங்காண்க நீடூழிகாலமவாழ்ந்து முத்திநிலைபெற்றேன்காணும்-சித். (தசசமு)

வேறு-விருத்தம்.

சோதியாய்நின்றதீபச் சுழிமுனைக்கமலந்தன்னில்
நீதியாய்வாசியூதி நின்றொருநிலையில்கண்டஞ்
சாதனையோகஞ்செய்து தற்பரத்தருளைப் போற்றி
நாதனைப்பணிந்துமேன்மேல் நான்மலரர்ச்சித்தேனே. (தசசுக)

இருபத்தோராயிரத்து அறுநூறுசுவாசந்தன்னில்
வருங்கலையொவ்வொன்றாக வாங்கித்தேட்பிறையில்லாமல்
அருங்கலையாலுங்கண்ட அதிசெயமனேகமுண்டு
வருவதுஞ்சொன்னேன்மாண்பர் மாய்கையில்மயங்கினாரே ()

கொச்சகம்.

இந்தசெனனமிருந் தென்னபலனென்னவிதம்
எந்தவிதமாகிலுமே யீசனைக்கண்டேபணிந்தால்
வந்துதபித்தே விடுங்காண் வாசியெனறதும்பொருந்த
மந்திரமாய்நின்றசுழி வாசிவசமானதுவே. (தசசரு)

வாசியைக்கொண்டுநீதிகண்ட மார்புநடுகோகிழ்மையம்
பூசிதயப்பாசமதில் பூரணத்திலும்நினைவாய்
வாசிவாசிவயநமவா வென்றும்விளைடிபத்தும்
நாசிநுனிதிபமதில் நான்பணிந்துநின்றேனே. (தசசச)

## கலித்துறை.

நமசிவயவென்று நாட்டத்திலுமனம் நான்மகிழ்ந்து
அமைப்பதும்வந்து அணுகினதால்அவ்வும் உவ்வுஞ்சித்தி
இமையவராலு மிவ்வழிகண்டு இருப்பதுகாண்
நீமைப்போதும்வாசி நிலேத்ததனல்நெஞ்ச நேர்படுமே (௧௪௬௫)

வாசிஸ்யககண்ட தாரையிலூதி மருவிமனம்
ரேசித்துப்பூரித்துக் கும்பித்துவாசி நின்றிடவும்
பேசிடும்பேசா திடமுனக்கெய்தும் பிரபல்லியங்காண்
காசிக்கும்ராமே சரத்துக்கும்வாசி காண்கிலரே. (௧௪௬௬)

நடப்புக்கெட்டாத நாதாந்தவாசி நாட்டத்திலும்
அடர்ந்தூதிகண்ட அகண்டப்பெருவெளியம் மூலத்திலுங்
கடந்தந்தமூலக் கருக்குழிநாடிக் கழிந்துவிடா
துடர்ந்துமோங்காரப் பிராணயவாசி தூக்கத்திலே. (௧௪௬௭)

ஓங்காரங்கொண்டு வாசிகீழ்பாய உதாரணமாய்
நீங்காமல்பிகை பாதாரவிந்தம் நிற்பந்தமாய்
வாங்காமல்வாசி மேல்நோக்கிசா ஊவசப்படவும்
தேங்காமல்தேங்கித் திருச்சிற்றம்பலந்தனைத் தெரிசித்தனே.()

எந்நாளுமிந்த யெண்சாணுடலி லிருந்தவுயி
தன்னல்வளர்பிறை தசைபத்துவாயுவுந் தன்னுக்குள்ளே
முன்னளில்விட்ட குறைவந்தசூழ்ந்து முடிந்ததுகாண்
இன்னளிலேவரும் யானுமொன்ருகி யிருந்திட்டனே.(௧௪௬௯)

## வெண்பா.

கற்பமதனல்முடிந்த காயசித்திவீட்டினிலும்
உற்பகமாய்வாசியிருந் தோங்கினல்-கற்பமதால்
நவாத்தினவீட்டில் நாதனுமேயானுமாய்
அவமொருவனுயிருந்தோ மாண்டே. (௲௫௱)

அசைவுயிருந்தாலல்லோ யைம்பூதமாச்சுதுகாண்
நிசவோடும்பாவனேபோல் நீஞ்சினேன்-அசைவதனல்
பத்துப்பனையுயரம் பாய்ந்துஅண்டகோசரமாய்
நித்தநித்தம்வாசிகொள்ளு நெஞ்சே. (௲௫௱௧)

வான்புவியுமாதல் மதியும்ரவியதனல்
நானுமருள்பெற்று நான்மகிழ்ந்து-வானும்

காலுபொருளறிந்தால் ஞானம்வந்துவாய்க்கும்
காலும்பனிரெண்டளவால் காட்சி. (௲௫௱௨)

ஈராறுமெட்டெட்டு மிரவிமதிகாணும்
வாறாகவாசிகொண்டு மாறினால் - ஈராறும்
கற்றோரேகற்றார் காயசித்திப்பெற்றார்
வித்தால்விளைந்ததுகாண் விந்து. (௲௫௱௩)

விருத்தம்.

அருள்பொருளுங்காயசித்தி கற்பஞ்சொன்னேன் அண்டமதில் நிறைந்துநின்றகருவுஞ்சொன்னேன், வரும்வினைக்குள் வல்வினையின் மாறல்சொன்னேன் மதுரதமிழ்பொழியுமதிரவியுஞ்சொன்னேன், திருவுருவாய் நின்றிலங்குஞ் சிவமுஞ்சத்தி திங்களின்சந்திரகாந்தி தேவமாது, இருவினையைபகற்றியெனக்கமிர்தமூட்டி யெனைவளர்த்தஅபிராமிமூலந்தானே. (௲௫௱௪)

மூலமெனும்வாசியொளிவானபீடம் மூதண்டப்பிராணய மூனைமேலாக, காலனையுஞ்செயித்தகதிர்மதிநீர்சாரங்காயசித்திகற்பமிந்தக் கருத்தினாலும், ஆலவிடமமுரியினாலாண்டுக்குள்ளே அதிதசுத்தி ஆச்சுஅட்புஉபயின்சாரம், தூரவுடல்சூக்ஷமதும் பெலத்துப்போச்சு துவாதசாந்தவெளியறியலாச்சே. (௲௫௱௫)

வேறு-கவி.

இந்தவாசி யெழுந்திடுமூலமும், அந்தகார மப்புமுப்புங்கூடியும், விந்தையாய்பழ மூலமுமூலமும், வெந்துநீறாய் வெடிசுன்னமாதலால், எந்தனுவியென் சாணுடல்சுத்தியாந், தந்தைவிந்து தரணியில்விட்டநாள், அந்தவோர்குறை அவ்விதமாகிடில், விந்தினாலுடல் வேறுகூறுண்டையே. (௲௫௱௬)

காலியுங்கழிந் தோடுவதாகையால், வாலிபங்கள் வளர்பிறைமாறிடும், பாலனாய்வாலி பங்களில்கற்பங்காண், வாலையாமினி - வச்சிரதேகமாஞ், சிலவாசி சினேகிதமானதால், தூலமேயுடல் சோதிப்பிரகாசமாய், மாலியேது மறலியுமேதுகாண், சூலிகபாலி சுடர்கோடிதீபமே. (௲௫௱௭)

தீபகுண்டஞ் செழுந்தேன்பொழிந்திடுந், தீயாபகங்கள் கணேசனிருப்பிடம், பாவமேது பரமெனும்பானமுஞ், சாபமேது சாரத்தாலறிந்திடுந், தாபதீபங்கார சாரமுமாகலால், தாபமெல்லாம் க்ஷணத்திலொழிந்திடும், ஆவதென்ன அழிவதுமன்னமாஸ், சாவதில்லைகாண் சண்டனுமில்லையே. (௲௫௱௮)

உப்புங்கார முணர்ந்துருசிப்பதாய், அப்பும்உப்பு மறிவறிந்துண்டார்காண், இப்பொருள்கண் டிரவிமதியுமே, கைப்பொருளுன்னுள் கணக்கில்லேவேதைகாண், செப்பினர்கள் தெளிந்தபண்போர்களும், அப்படியாண்டே யகத்தியர்வாக்கினால், சொற்படியினி சுரோணித சுக்குலம், இப்படிகண்டு வியம்பினேனுண்டையே (௲௱௮௰௯)

வேறு-விருத்தம்.

அந்தணர்முனிவரோடு ஆய்ந்தநூல்பதினெண்பேருஞ்
சந்ததமாகத்தானுஞ் சாஸ்திர நூல்கள்பாடி
செந்துகள்தனிலுமாண்டர் சித்தராய்தெளியத்தானும்
சுந்தரஞானவெட்டி சூக்ஷமுமறிந்திடீரே. (௲௱௯௰)

ஞானத்தைவெட்டிநாத விந்துவின்கருத்தினாலும்
பானத்தையுண்டு ஆண்டு பழக்கமதாகயானும்
வானத்தினீரால்சுத்தி வாசியால்காயஞ்சித்தி
யூனற்றுவுறக்கமற்று யோகத்திலிருந்தேனாண்டே. (௲௱௯௰௧)

யோகத்தின்விதிதானென்ன உடலுயிர்பிலக்கத்தானும்
ஆகமப்படியேஞான ஆயிரத்தைந்நூறுசொச்சம்
பாகமாயாய்ந்துபானம் பழக்கமோராண்டுஉண்டால்
சாகத்தான்போமோ இல்லே சாக்காடுதவறிப்போமே. (௲௱௯௰௨)

சாரமோராண்டுஉண்டு சடமதும்வலுக்கச்செய்து
காரபூமிரண்டாண்டில்தான் காலேபோய்மாலேயுண்ண
மாறவுங்கழிந்துமூன்று வருஷமுங்கடந்துதானல்
வீரமாமுதகப்பாயும் வேதையும்வாச்சுதாண்டே (௲௱௯௰௩)

வாலேபிராமியெனுங்கமலந்தன்னில் மலரடியைப்பணிந்துமதியமிர்தமுண்டு, பாலமிர்தமுமமெந்தன் இல்லாவாழ்க்கைப் பன்னிரண்டு வருஷமதுஞ்சென்றுமேலும், ஆலவிடமுண்ட சிவனருளாலாண்டே ஆயிரத்து அந்நூற்று அறுபத்தொன்றும், சீலமருள்ஞானவெட்டி நிறைந்தசோதி சிவசமையந்தழைத்தருள்வாய்சித்திமுற்றும். (௲௱௯௰௪)

வேறு-கவி.

மூத்துதித்தவெண்மதி யுதித்தசந்திரமால்மயம்
வித்துதித்தநேர்மையால் விளங்குமிந்நூல்வாய்ந்தனர்
கற்றுதித்தசித்தர்கள் கடந்திடுங்கருத்தினால்
பத்திரண்டுராறுங்கூடி பலித்துதிந்ததீட்சையே. (௲௱௯௰௫)

தீட்சைபெற்றிரண்டுடன் தச தீட்சைபெற்றபேர்களும்
தீட்சையானபேர் தமக்கு தீங்குவாராதாகிலுந்
தீட்சையாமீராறும்பெற்ற சித்தர்கட்கதீதமாம்
தீட்சைபெற்றயோகிகட்கு சேதமில்லையில்லையே. (௫௱௰௬)

சரிதைகிரியையோகஞான சங்கைகள் தீதமாஞ்
சரிதையாவதேதுலக தந்தைவிந்துநாதமும்
சரிதையிலுதித்தஞான சாஸ்திரமறிந்தகால்
சரிதைகிரியையோகஞானசாட்சியின்நூல்காண்பரே. (௫௱௰௭)

நாலறிவதேதுகாணுமைந்து ஆய்ந்துபார்க்கபேர்
நாலறிந்தபுன்புயோனி நோக்கமமறிவதோ
வாலையுந்தன்றாயெனு மறந்துகோவிழியொளி
வாலையின்வயிற்றில்வந்து வாரறிந்தபேர்களே. (௫௱௰௮)

யோனியாசைதீனியி லுழலுகின்றமாண்பர்கள்
யோனியாசையாலுயி ரொடுங்குவாறறிங்கிலீர்
யோனியிலுதித்தபின் னுபஸ்தங்கொண்டுமாய்கிறீர்
யோனிபாசையும்மறந்து ஊதுதாரையோகமே. (௫௱௰௯)

தாரைகொண்டுவூதியோக சாதனைநிலைத்திடும்
வாதையேது ஆண்டுபிண்பு வாரியால்முப்பாழதாம்
வேறுகூறுமும்மலம் வெறுப்புகொண்டுமாறுமாய்
தேறுங்காயசித்தியென்சாண் தேகவச்சிரகாயமே. (௫௱௨௰)

பசைந்தமண்பழமலம் பரிகரிக்கவல்லிராய்
இசைந்ததீவினையிரண் டினிபறந்துஏகிடில்
பசைந்தமண்ணதர்மமும் பகர்ந்தகங்கைகாமமும்
பசைந்தமண்ணுந்தண்ணீகாண் பாரும் உப்பகற்றியே. (௫௱௨௰௧)

உப்பகன்றுகற்பமு முவர்ப்புகாரசாரமும்
அப்புஉப்புமாற்றிஞ லவர்பெருமையென்னகாண்
கைப்பமாறதேக காந்தியென்னசூரியன்
உப்புமுன்னைக்கொல்லவந் துளவதென்றறியுமே. (௫௱௨௰௨)

கைப்பல்லோஇருந்துஉப்பில் காலனுகுமூழ்வினை
அப்பல்லோஇருந்துலோக மானதுமழிவதும்
உப்பல்லோவிரகதாப காமிதப்புணர்வதாய்
இப்பொருளிருந்தல்லோ எழுந்துஎண்சாண்தேகமே. (௫௱௨௰௩)

கெந்திராவகர்-தரு.

அந்தபரிபூரணகெந்திர வகைகாணும்-அருள
அதின்பிரகாரமாயிரக்கண்வேணும்.

இந்திரனைத்தூய்பவெண்ணந்தமதியொளிவாய்
இந்தவர்ணமுடைத்தால்விந்துநாதநீர்காணும்
இலதுபரி-திருசூரிபன்-அழகுமூல-சரகும்படி. (அந்த)

அந்தமதிசாரநீரமுரிநாலுபடிகொண்
டறிந்துபாண்டத்திலதாக்கிபகத்தியரைப்பணிந்து
அதுபானநீர்-சாமால்கரை-வடிநல்திரி எடுநாதநீர். (அந்த)

விந்துநாதநீர்கொண்டுவேறொருஏனத்திலூட்டி
சுந்தரப்பூநீர்பலம்பத்கொடுத்துடனுப்பின்புகாண்
தொழுதுப்பணி-வழுவாமலும்-பழுதேதுகா-ணிதுவேகமும். (அந்த)

சிந்தையில்லாமல்காணுந்தெளிவாய்மடையன்சுன்னம்
வெந்துநீறானதுவுமிடவும்பலம்பத்தாகும்
வெருவாய்கரைத்-தந்துமூன்றுநாள்-சொகுசாய்சுத்த-சலநீரது. (அந்த)

துய்யகெந்திதனையுந்தோளக்கிரங்கள்செய்து
தூக்கிக்கிழியாய்க்கட்டிச்சுடர்கமலம்போலையன்னி
சொரிந்துக்கனல்-பொழிந்துக்குறி-பறிந்துப்பதம்-மெரிந்துத்தணல்- ()

எரியஎரியேதணலிதுநீர்தொக்குந்தொக்கிடும்
இனம்பார்கெந்திமெழுகுஇளகுமிதனைவாங்கி
எரிப்புத்தனி-விந்துநீர்சல-மிருபத்துடன்-னெருப்பாறியே. (அந்த)

காரசாரசொல்நீர்கருதுமிந்தநீர்முன்பு
கருநீசெடுக்கோரினமாறுநீர்பதனஞ்செய்து
கணக்காயெடு பலமொன்றது-எனக்கானது-இரவிமதி. (அந்த)

இரவிமதியளவாவிருதகற்பகாலங்கள்
சுரவிதளிகையினுஞ்சிவராஜாங்கயோகஞ்
சுழிபேதக-முனைமீதினில்-விழிபார்திரு-நடனங்களில். (அந்த)

கெந்திமெழுகுதன்னைமுந்திகலுவத்திட்டு
இந்தநாதநீரிட்டுஇளைவிடாமலொருநாள்
இதுநீர்விட-மயனப்பத-மதுபோல்வரும்-வழித்தேயெடு. (அந்த)

மயனங்கொண்டுவாலைசரிதன்னிலும்வாரங்காண்
நயனமார்வையுநாடியடிக்கடிவிருடி
சவிதன்சுடர்-கனலிலானபது-கவியும்படி பருணமெனி. (அந்த)

கருவாய்ப்பழுகெடுத்துக் கருவங்கனிலடக்கி
கம்பியுப்பதுசேர்த்துக் கலக்குஜாமமூராட்டி
கருதும்பொடி-வருகாண்பதங்-காணுங்கன-வேகத்துடன் (அங்க)

செப்புக்குடத்திலூட்டிச்செம்பினுல்வாலைபூட்டி
அப்புமதின்மேல்சோர அடிக்கடியுநீர்பாய
அனல்கொண்டிட-னுநசாமமூ-மனைசூழ்ந்துடன-வருதிர வகம். ()

தேய்வைச்சேர்ந்தபரக்கிலிநீர்கெந்திசாக்கு
பாயும்ரூகந்தனிலும்பற்பமாகுமனேகம்
பரிபத்தறு-கழுஞ்சாவதும்-குறியொத்துடன்-குமைக்கிட்டுமே. ()

மேலுங்கொல்லனுலையில்வேவியருகுப்பதம்
வேகமாங்கெந்தித்திராவகம்விட்டு ன்றிடும் விதம்
மிதங்காண்குமைக-பதமாய்விடுமே-வெடிகாண்கெடி-யரைநாழியில், ()

சித்தர்சாபநிவர்த்தி செப்புமிந்நூலவகையில்
உத்தசெய்தியுண்டாமொருதுளியில்வட்டாகு
மூலசந்தனில்-தசதீக்ஷையில் ஒருதீக்ஷைசா-ணருள்பெற்றிடில். (அங்க)

வெட்டையுருக்கத்தங்கம் வெள்ளையென்னசொல்வேன்காண்
அஷ்டதிசையுஞ்செம்பொனதிதமாற்றுமிருநால்
அதுகுன்றிடை-பரிவெள்ளையுமா-சிதமிசை-தபோன்றுகாண். ()

வேறு-விருத்தம்.

வாறிகடந்தோராண்டு மற்றவோராண்டுமுதல் வருகவேசாய்
காரியென்றவுப்புசல மமிர்தபாணக்களினுல் களிம்பதற்று
வீரியமென்னுல்விளங்க ஆத்மசுத்திதேகசுத்தி விளக்கமாகுந்
தேறிடும்பேர்முதற்கொண்டுசெய்கையினுலருந்தவமுஞ்சித்தியாண்டே

பலமதற்குக்குன்றியிடை பரிவெள்ளையெனுங்குருவைப் பாச்சுவீ
ராய், விலைமதிப்பாரொருவரில்லை வெளிசெப்புகாண்பதரி தெதிர்வந்
தாப்போல், சலமதுபோல் நீர்தெளியு முருக்கிக்குழியினில்விட்டுவுமொ
ளிப்பிரகாசம், தளதளவெனிகனிகன கைசூரியனெதிர்வருதல் காண்கிலீ
ரே. (கருஉகூ)

நவரத்னமிதுக்குநிகர் நாநிலத்திலறிவதுண்டோ ரவிகரண்தேய்வு
கவையுலகத்தார்தமக்கு எய்திடுஞ்செம்பதுடலங்காண்சனமாய்மூசை,
சிவயநமலுங்கிலிஓம் அம்உம்மென்றுசெபி உருநூற்றெட்டு, துலவுஅ
லைகடல்புக்கி தீவுதீவாந்திரத்தில் சொக்குந்தானே. (கருஉஎ)

ரசிதசெம்புகுன்றிபினை தேய்வு செம்புமலதனில்நாடிச்செல்ல, உசிதமிதுவயதிரைஞ்சொளிலதுகாண்சூரியனை யொளித்தப்போடும், வசியமிதுபவுத்திரஞ்செய்கோமத்திரளட்சணியுமருகையோடும், பசிவரும்போதிலதையெடுத்து காமதனிலிடும்வழிசெல்பரிதாணுண்டே. ()

பரியானமாத்தமைதா னுடைத்திடவுமஷ்டசித்தும்பலிதமாகும், வரிபாணமண்தவளைசெரியெனும்பேர்தினமமுரிமனிதர்பேரில், பிரியமாய்மொழிந்திடவுஞ் சொரிசொரியாய்தேகமெல்லாம் பேகாபேதம், தெரியுமதுயாவருக்கு மொருநூறுசரகுலர்த்திச் செய்கைபாரே ()

வரிந்தவளைபெனுமதுகேள் குழித்தயிலக்காட்டெருவாம் வன்னிமூட்டி, குறிக்கஅந்தத்தயிலமதி லொருபலந்தாகைமதுங் கொண்டுமேலும், விருத்துநக்கித்தயிலம்விந்மேழுவிசை உருக்குருக்கிவிளங்கச்செய்தால், துரிதபச்சைவண்டதுபோ லொளிவாந்தாகாசமோகோடி கோடி. (௯௫௯௰)

பச்சையென்றஒளிவதுவாம்பரிவிறங்காண்வர்ணமதுபரிசோதித்தால், கஷ்டமில்லாநாக ச்சை விலையெல்லா மதிரவியுங்கடந்துவோடும், பிச்சையென்றுவருபவர்க்குதிரவியங்கள் கொண்டுவரும் பேசப்போகா, நச்சரவம்பூண்டசிவஞானகுருநற்கமல நான்பணிந்தே. ()

நாகபச்சைதனையெடுத்தமூசைதனிலிட்டு மென்மேல்நாடிக்சொல்லன், வாகதுவாயுலையிலிட்டுஉருக்கு முகம்பரிவெள்ளைவசனிகுன்றி, பாகமதாய்தாக்கிடவும் பரிகோடிமதிகோடிபானுகோடி, மோகமெனுமெடுத்தகலில்சாய்த்திடவுநாகசெம்பை மொழியலாமே. (௯௫௯௨)

கொச்சகம்.

மதிரவியுமொன்றாகில் மாளுவதேன்மாள்வதில்லை
விதியிருந்தோர்க்கெய்துமிது வித்ததனுலாவதென்ன
அதிசொமாலயிக்கு மாண்பிறவிநீயானல்
கெதிமோட்சற்குருவின் கிருபையனுக்கிரகமதே. (௯௫௯௩)

பச்சையிலுநாகபச்சை பரியில்பனிரெண்டுகளை
வைச்சபொருள்மதிபதினுர் மாவின்களையிரண்டொன்றுப்
கச்சணிசேரம்பிகைப்பெண் கருணைமதிபணமதை
இச்சையுடனொருமனதா யிருந்திடிலுங்காண்கிலீரே. (௯௫௯௪

நாதவிந்தோரகம் நாறுமலம்போக்கிமறு
சாதனைசெய்தோபெரியோர் தாரணியிலுமறியார்
மாதவிடாதன்மயமாய் வாறுதண்மைநாதமுன்னுள்
வேதமிந்தப்படியைவிட்டு வெறுங்கூறுயாடினரே. (௯௫௯௫)

ஜெகமதிலுநாகசெம்பு சித்தர்செய்வார்வாதிசெய்வார்
அகமாண்பராசையிலே லம்புவிழிலும்மறிவார்
சுகமதனுபோகசுக குழுமன்னசாரமுடன்
அகமாயுறக்கட்ரவி அஞ்சைவிடவுஞ்சுங்காண். (௲௫௬௬)

இந்தசுகமன்னவித மேகபோகமாயுலவும்
அக்தபரிபூரணத்தை ஆறிவாராண்டையேகேள்
விந்தையிதுநாகசெம்பு மேவியெருகுன்றியிடை
சந்ததமெனுங்குடவன் தனித்தொருபலமதற்கே. (௲௫௬௭)

அண்டபிண்டக்கூறறிந்து அக்குகைக்கொல்லன்னுலேயில்
விண்டதிதுவேயுருக்கி மெய்விழிக்கண்ணுடிவரும்
கண்டவுடன்குன்றியிடை காட்டிடவுநாகசெம்பு
உண்டிடுங்குடவனைத்தானுகவனைக்குழுமன்றுடுமே. (௲௫௬௮)

### கலித்துறை.

நீடாழிசூழுங் கதிர்மதிகோடி நிலவொளியாய்
நாடாளுமராஜ பெம்பிரங்க ராஜரிஷி
மேடானமேடி யகத்தீசர்பெற்றதம் வேதரிஷி
கோடானகோடி அதிவிதஞான குருசிஷ்டையே. (௲௫௬௯)

ஈரைஞ்சுமாற்று அரைமாற்றகூடி யிருபத்தரை
பாரஞ்சுபூதம் பொன்னிதுமாச்சுது பார்தனிலும்
ஆறிந்தாடுங் கரையில்லைகோடி அளவில்லைகாண்
தூறில்லைராச படமில்லைமோதிரந் தொடுத்திடுமே. (௲௫௭௰)

ஆக்கினைசத்த மறிவிக்குஞான ஆண்டவனை
டாக்கியசவுக்கிய மஷ்டாங்கயோகப் பதவியிலும்
நீக்கியநிரா தர நிர்மலசுரூப நிஷ்டைதனில்
வாக்கியமெட்சணி யுனக்கேவல்செய்குவள் வனிதனே. ( )

மேருவில்வாசங் கருங்கூளிநேச மேதினியில்
காருமீபவாசங் காட்டகதேசங் கானகத்தில்
பாருமேபாறை பலகோடிவர்ணம் பலவிதத்தில்
பேருமேபொன்று தனியாகநிற்கும் பிறவியதே. (௲௫௭௨)

இருவினைபோக்கக் காயாதிசற்ப மெய்திடுவோர்
அருந்தவஞான ஐயஞ்சுமாற்று அவருளமுங்
கருவியைக்காண்க ஐம்பசிபாசங் கனபிசலில்
குருதனுக்கிரக மெய்மகிழுறக் குணமதுவே. (௲௫௭௩)

அவிடம்போய்சேர்ந்து அனேகநாள்வாச மதினருகே
பவர்ணமிகூடும் நாள்வருங்காலம் பாறையின்சிழ்
அவிடத்தில்சேர்ந்து வலைகொண்டுவீசி அறிவுளதாய்
மவுனசுபத்தி னிவர்த்திகாணுறு வசனியுமே. (௯௫௪௪)

வெண்பா.

நாட்டிக்கருங்காக்கை நாயில்கருநாசாணு
பூட்டுங்கரும்பூனையதின் புகழ்கேள் - நாட்டுசரு
வலிபின்கருக்குருவி வால்நீண்டபட்சியதுங்
கலைவிலங்குமெரியோத்தி காண். (௯௫௪௫)

கழுவிலிருந்திடுவோர் கண்டமட்டுந்துண்டுசெய்து
முழுதுமுரலிலிட்டு வோரிடியாய்-முழுதும்
அண்டத்துடன்வழலை ஆறுடனேஎழாச்சு
என்றறிமூலப்புளிகாணீது. (௯௫௪௬)

அப்புவியிலெட்சணியெட் டஷ்டசெகசித்துமதும்
நம்பியொருநாட்டமதாய் நாடினல்-அப்புவியில்
அறுபத்துநாலுமது ஆடுமந்தஅஷ்டகரு
திறவிகட்குவேணுமெனுஞ் செப்பு. (௯௫௪௭)

எட்சணிகளெட்டுக்கு மெண்கருவியெண்ணெழுத்தும்
பட்சணிக்குமாகுளிகதப்பாகம்-தெட்சணிமாண்
அன்னவருஞ்சொர்ணம்வரும் அயிஸ்பரியக்கியாணம்வருஞ்
சின்னவயதாகுமன்னை சொல். (௯௫௪௮)

என்னையன்னையீன்றபல னெவ்விதங்காண்சல்லூரலில்
அன்னைசொல்லயானறிந்து அஷ்டவிதம்-முன்னையுமே
நாடிவியகம்பதனுல் நாலிரண்டுஎடடையுமே.
சாடிவிநாள்மூன்று தான். (௯௫௪௯)

காட்டெருவுகொண்டு கண்டதிடம்பாண்டமதில்
நாட்டிமுடிசந்ததுவு நாலிரண்டு-காட்டெருகாண்
குழித்தயிலமெண்ணதிகங் கோடானகோடிரவி
பழித்திடலர்காதுவன்னி பார். (௯௫௫௦)

கெந்திமெழுகெடுத்து சேருமொருகுப்பிதனில்
அந்தரமாய்த்தொங்கவிட்டு ஆனதால்-கெந்திமெழு
குழியில்குழித்தோண்டி கொண்டுகுப்பிபந்தனஞ்செய்
வழியதுவாய்பாண்டம்வைத்து மண். (௯௫௫௧)

எருவதுகொண்டக்கினியு மிட்டு அநுபோகமதாய்
உருவதுவ யானபின்பு வோசைபார்-எருவதுகொண்
டக்கினியைமூட்டியன லாறிலிடும்பதமும்
உக்கிரமதாயிறங்குமே. (௲௫௫௨.)

தயிலமிதுபதனஞ் சந்தனஞ்சவ்வாதுடனும்
மயிலமதியிலகு மாண்புழுகு-தயிலமது
குங்குமப்பூகஸ்தூரி குரோசனையுங்கொண்டுஇடை-
அங்கமெமருகபூஞ்சியாட்டி. (௲௫௫௩)

## வேறு-விருத்தம்.

தயிலங்குட்பிகனிஸ்பதனமாமெனவுஞ் சயிலமானது வுந்தயிலமாம், தணியவும்மிருதன்மண்டலம்பிறகு சாட்சிபாரதுவுமைபதம், குயில்கள்போலுமட மாதுவம்பிகையின் குறைவிலாக்கமலபொற்பதம், குமபமேவிவரும்வாசிவாவெனவுங் கூறும்ரேசிகண்டதாரையில், ஓயில்கள்போலுமசைவாகியெங்கும்வள ரொங்வொன்றாதிடுமூதிரே, ஓங்காரமூலகணதேவதேவகுரு உவ்வென்றாகி உருத்ராக்கவும், கயிலைமேவுசுழிவாலைபுவனையருள் கமலமூர்பணிந்தெழுவதாய், கருணைதிரிபுரையுமேயந்திரியாமளையும் வராகிசாமளையுமேழதே. (௲௫௫௪)

சக்ரதேவிபருள் பாதபங்கைகமுந் தாள்பணிந்துமதிமலர்தொழும், சனகாதிரிஷிகள்பதினெண்பேர்கமலபதஞ் சரணபரிபுரசற்குருபதம், அக்கரங்கள்பிதர்தூர்க்கிசாமுண்டியுமாயிரந்தலைகல்லெறிவனும் அகோரவீரஅநுமந்தனேடுகுட்டிச்சாத்தியுமஷ்டபயிரவர். ()

சக்கரங்கள்சுழிகணேச சுப்ரமண்யசாடன்மாடன் வேதாளமும், சத்தியெட்டுகருபதுமையோடுசெப மணியுமெட்டு அஷ்டதிசையதும், உக்கிரசிலையிருநாலுடனதித ஓரிரண்டதுகையாசனம், உண்மையுண்மையஷ்டலட்சணிகளது உனையும்விட்டுஅகலாதுமே. (௲௫௫௬)

கட்டிவாவெனவுமோதிரந்தனையுங் கருவிமைநடவிகாரமதில், இட்டுஸ்திரீகள்தனைமோகமவர்நடவி யிடதுகைபிடியும்வாவெனும், கெட்டிகாரனெனுபின்துடர்ந்துவரு வார்கள்மாதர்களின்பேதமை, அட்டியேதுஅவரிட்டஆபரமாதிகம்முனக்களிப்பரே. (௲௫௫௭)

சார்வகாலமுனை தழுவிபின்துடர்வர் சரணஞ்சுவாமியெனைரட்சியும், பார்வைவைத்துஅடியாளைகார்த்துபர கெதிக்குளாய்வழிதன்பாலியும், தார்புவிகள்மலைமிருகமாதலவர் சத்திராதிகளுன்முன்வரும், ஆரபாரமிருகஆனையோடுபுலி யனேகமிருகமுதல்வசியமே. (௲௫௫௮)

ஆனவரெவனவு மோதிரக்கரமு மதிமாக அதின்மேல்பட
வானமேவும்புவி சூழும்பின் றுடரவாருஞ்சுவாமிநியனவாழ்வியும்
நானுமுன்பிறகு நாடியும்வருகல் ஞாயமாமெனை தன்ரட்சிபும்
சேனையானைமுதல்சர்வமிருகங்களுந் தேடியும்வருவர்தேவரா. ()

பரிட்சைபார்பரிதன் மோதிரந்தனையும் பத்தியுமொருவர்கரமதில்
துரிதமாகஇதில் தயிலம்பூசியொரு சின்னபையல்கரந்தன்னிலும்
வரிசையாயவர்தன் கரமுமேவிவிட மாகைகர்க்கடைடஜாரினில்
குறிசிராப்புகரங் கொடுத்துமாறிவிடு குணமதாம்வயதுபத்துமே. ()

மாறியும்வரவுந்தேடிராவுதனில் வசியமும்ஸ்திரியும்வாவெனும்
வசியமாம்பரிதன் மோதிரங்களையும் வங்குசிங்கெனவும்வருதலாய்
எறியுமேயுனது இல்லந்தேடிவரும்எமசொர்னமெனும்ரசிதமும்
இனியதோரளவை ஆதிதங்களுமே யாவதுமுனதுசொந்தமாம். ()

வெறிகள்கொண்டுமிக வேதைபாகிசெகமேவிபோடியலே வார்கள்தான், மீறும்பேய்களதுவாடியோடிமுழு மேவுஞாயமதுபோலென, தேறுந்தேறுஞ்செக ஞானபண்டிதர்கள் தெட்சணுயனருள்கிருபையால், தேசதேசரசவாதயோகிகளுந் தேறுந்தேறுஞானவெட்டியே.

கெடிதன்சூரண மோடிவைக்கும்விதங் கேள்விநாடதிலுங்கெடியதாம், கேளுங்கேளும்பரி யோர்கள்செய்கைதனைக் கேட்டுங்கேள்வியதுமில்லையோ, நாடியுஞ்சபையில் மோடிகாரர்வரும்நானெடுப்பனெனுமோடிதான், ஞாயமாகவருவார்கள் தானெனவும் யானுமேவிசபை மோதிரம், சாடிமஞ்சளினில் பசுமைகாணரிசி தயிலமேவியதைதடவியும், தரணிமீதிலபவுத்திரத்தின்மோதிரமுந் தயிலந்தொட்டுதனையெரியவும், மோடிமோடிபெடும் போகள்மீதிலெறி ஓகோசெங்குளவி வண்டெனும், ஓநகோடிகோடிகோடிகுளவிவண்டுகளு முயிர்வதைத்துஉடல்மாயுமே. (௬௱௯௩)

வேறு-விருத்தம்.

மோதிரமுமெடுக்கவரு வோர்களதின்சேஷரிசி மொழிவிராகில்
வீதியெல்லாங்கருங்குளவி செங்குளவிகருவண்டுவீசிக்கொட்டும்
சாதிபுளியிலையுருவி தயிலமதும்பிரட்டிசபை யோரஞ்சென்று
பேதியிலே தூவிவிட தேளரணைகாலிசெய்யா னரவந்தானே. (௬௱௯௪)

வேறு-விருத்தம்.

குளவிவண்டுடனுஞ்செங்குளவியோடு கொடூரமான விஷமதிதமும்,
கொட்டுந்தேளரவ காலிசெய்யானுடன் சொல்லுமாகிமெரிமண்டலம்,

அளவில்தகித அரவஞ்சூழ்ந்திடினு மள்ளிசேஷரிசிநாவிட, அகோரமானசரமெரிவுதேகமது கூடறிந்துஎடுப்பார்களோ, நரினைபாகவுங்கலபாதமதில் நமஸ்கரித்தஅடிதொழுதிட, ராஜராஜர்மகிழ்மோடியாமிதனை நாமிதெங்குமறிமேபோமென, வளமிதாருமொரு நாகசெம்படையவசிடமோகிராழம்வாஙகிடில், மையெனுந்தபிலம் பிசறிமோதிரமும்வைத்தெடுமெனவும்வாழ்த்தினர். (௲௫௯௫)

வேறு-விருத்தம்.

வாழ்த்தினாரெனமோடியெடுப்பவர் - மணலையள்ளியதில்கருகூட்டியுங் - தாழ்த்தியோம்சாமளா தேவிசாம்பவி - சவ்வும்ஓம்சிவசங்கரிநசிமசி - போற்றியம்மம்மசர்வகாரணியம்ம - பொட்டெரிபெருங்காற்றுமழையுமாய் - சாத்தினர்கக்கிரெந்தங்களாய்- சபைசொல்லாஞ்சற்றேசிரிப்பார்களே. (௲௫௯௬)

மண்ணைவாரிமலைபோல்தும்போடுமாய் - கண்ணுங்கெட்டுக்கடக்கப்போவார்கள்காண் - சொன்னமோடிசுக்கல்சுக்கலாதமாய் சோபதாந்துயரப்படுவர்தான் - எண்ணமாயிளியிவ்விதமாகினல்-ஏக்கங்கொண்டுயிலைத்துயிருப்பர்காண் - அன்னவாலைலருகிலிந்துமேமுன்னமேமொழிமுத்தியளிப்பதே. (௲௫௯௭)

இந்தமோடிபெடுக்கும்நரிசபை-விந்தையாய்சூழ்வெட்டிச்சதுர்திசை - அந்தமாசக்ஈழற்சியின்காய்தனில் - ஆருபேயறுயாமலுமார்க்கமாய், தொந்தமாகத்துபாக்கிமருந்துகாண் -சோதித்தேபலமஞ்சுஅந்நாறதும் - தந்திரமிது,தார்புவிமூலைநால் - பிந்தவிதமியம்பிடாண்டையே. (௲௫௯௮)

நாலுமூலைநடுமையமாமிது - நாடிபேசரிவாலைடந்தனம் -தேடிடாமலுஞ்சிலைமண்மூடியுந் - சேறுஞ்சில்லுசிறுகத்துவாரமாம் - வாலதாகவளமெனும்நாவினல் - சீலதாகசசிரக்களைபாச்சியும் - நாலுமேலும்நானிதெரிதேவிட-காலமேசுளிமண்ணிருள்பந்தனம் - வேலையாயிவெளியிதையானருள் வீதியில்விரும்பாமலொளித்திடே. ()

கதிரவனொளிகாலையில்மோடிதான் - அதிரவுமிடியாகாசமாவுட்- பதறிடாமலும்பாரில்மகாசனம் - பக்கஞ்சூழப்பலபேரதிரமும்-விதியதாகவிட்டெரிச்சிலை செருடனையிரக்கிலியுஞ்சவ்வுமெனும் - மதியிலாடுமகாமந்திரத்தினல்-கதியவுங்கனல்வத்திக்கருதுமே. ()

கருதும்வன்னிகனல்படவத்தியில் - விருதுமோவெடிசத்தங்காணுமாய் - துரிதமாகத்துபாக்கிமருந்தினல் - தாக்கிவாரிச்சுடர்புலக

சூழுமாய்- அரிதுகாய்களது வெடித்தங்ஙனே - பொருதுமேபொடியா கவுந்தூசிபோல்-சுருபமோடியைச்சூழ்ந்தசபையெலாம்-சொக்கியோடி சுழலுறலைவார்களே. (௩௫௭௧)

## விருத்தம்.

சபைதனிலிலகுமான்பர் சனங்களுமோடிப்போவார்
அலையயென்றழுதுமோடி பரதவித்தலைந்துபோவார்
உபையமாங்கழற்சிவித்தை பொருமோடிக்குள்ளேதானுஞ்
சுபையெனுஞ்சூக்ஷமோடி சூக்ஷதிரமறிந்திடீரே. (௩௫௭௨)

வணக்கமாய்மோடிக்காரர் மலரடிக்கமலம்போற்றி
இணக்கம்வைத்தெங்களைத்தா னிடரதுவருகாமலும்
நுணுக்கமாயடியோர்க்காக நுண்கருத்ததனைவைத்து
அணுக்கமாயருள்வைததேதா னுதரித்தருள்செய்வீரே. ()

செய்கையிற்கருத்தினாலுஞ் சேவடிவணங்கும்போதில்
வையகமணிந்தரெல்லா மகாமோடி வைத்தாரென்று
மெய்யெனுமகிழ்ந்துமேலு மிணையடிதொழுதாரென்றால்
சையெனமோதிரத்தை க்ஷணம்வையாதெடுத்துப்போடே ()

எடுத்துவிட்டியம்பக்கேளீ ரிளிபதோராவின்பாலில்
விடுத்துடன்மோதிரத்தை விட்டுமேகழுவிப்போடு
தடுத்து ஓம்கங்வங்ஸ்ரீயுஞ் சக்கமப்ராராவென்று
தொடுத்துடனுருவஞ்செய்து திருநீறுமவர்மேல்வீசே. ()

வீசிடும்போதிலுந்தான் வெறிசுரமிரத்தங்கக்கல்
தூசிபாய்விடுபட்டேபோஞ் சுகமெனும்சுபஸ்தம்பாரே
ஏசிடுமவர்களைத்தா னிருத்திடுஞ்சனங்கள்யாவும்
பேசுமேளிதங்கள்கோடி பின்புரைத்திடுவனுண்டே. (௩௫௭௬

தயிலமும்வாங்கிமெற்றி தனியொருபொட்டும்போட்டு
அகிலமாமபுவனந்தனனி லம்புவியரசர்வீட்டில்
கயிலைநாதனையும்போற்றிக் கடவுளின்கமலம்போற்றித்
தொழிலெனுபவேணசெம்பொன தூக்கியும்போகலாமே. ()

போனதட்சணத்திற்காணும் பொக்கிஷமனந்தங்கொண்டு
தேனெனும்ராஜதேவி ஸ்திரீயுமூன்சரத்தால்தொட்டால்
மானெனுந்துடருவார்பார் வரவழைத்துடனுஞ்செல்ல
தானெனும்வசியமாகி சதாகாலந்திரிவாள்தானே. (௩௫௭௮)

மையெனுந் தயிலவித்தை மகாஜாலமாடுமாடும்
சையெனுந் தாயைப்போற்றி தனதுமோதிரத்தைதாங்கி
கையெனுந் துலைவைத்துக் கனகமும்வாங்கிமேலும்
செய்கையாயுனதுயில்லந் தேடியும்வருவார்தானே. (ருஎசு)

கொச்சகம்.

நாடியில்லந்தேடிவா நான்குதலைவைத்தநகை
வாடியவர்கிலேசமிட வந்துவிடுமில்லமதில்
ஆதிதிருவம்பிகையி னுத்தாளைப்போற்றிசெய்து
மோடியெனுமிந்தவித்தைவிவேகிகளைக்கெய்தமதே. (ருஅ௰)

பாடியமோதிரத்தைப் பத்திரமாய்வைத்திடலுங்
கூடியருள்தந்தவித்தை கோடானகோடிவரை
வாடாமல்சித்துவித்தை வையமதிலும்மதிகம்
வீடுகள்தோறுஞ்சுவைகள் வேண்டியதைத்தேடிடுவார். ()

வேண்டியவெல்லையாண்ட குரு விவேகத்தால்யான்தெளிந்தேன்
ஆண்டவென்சற்குருவால் அகத்தியனையானபணிந்தேன்
தூண்டிகுருமாமுனிவர் சூட்சஉபதேசமதால்
ஆண்டிவேஷம்பூண்டுமதி ஆராய்ந்தேன்பூரணமே.(ருஅஉ)

ஒன்றானபூரணத்தை யோகவிதிசாரணத்தால்
அன்றுடமென்மதியா லாய்ந்துவுடலாத்துமத்தை
வென்றேன்வினைப் பயனை வேதனைசாரமதுவ
கண்டேன்கருவிதொண்ணூற் றாறுங்கடந்தேன்சுடரே ()

சுட்டுவிட்டேனப்பகனல் தொண்ணூற்றாறுவரையும்
மட்டுமிதமில்லாத வாரியுப்பைநீற்றிவிட்டேன்
கட்டுக்கமூன்றதுகாண் கருநீரமுரியினால்
விட்டகுறையாலும்விந்து தொட்டதெல்லாம்பொன்மயமே. ()

கலித்துறை.

பொன்மயம்பூண்டு மனோமயமாகிய பொக்கிஷமுந்
தன்மயம்பூண்ட மதியலங்கார தற்பரத்தில
நன்மயசற்குரு ஞானப்பிரகாச நாதவிந்தால்
சின்மயமாச்சுது சிற்பரசுரூப சிவசிவமே. (ருஅரு)

சுரூப அரூப சூட்சாதார சக திரமாம்
நிருபநிர்பாகர நிரஞ்சனநிற்குண நிராதாரமுந்

குறுமுனியாதி தமிழ்பொழிஞான குண்டலிக்குஞ்
செபசித்திமுத்தி யருள்பெற்றமேபர்க ளதிசயமே. (௲௫௮௬)

ஜெபசித்தி முத்தி யருள்ஞானதீப சிவபதங்காண்
பயமற்றபோதி லிராப்பகலொன்று பகரறியும்
பயமற்றுப்போச்சு வலுவாகுந்தேகமும் வச்சிரமாம்
சயனத்திலாடவும் அம்பிகாயோக சவுக்கியமே. (௲௫௮௭)

ஆண்டான்றிலன்று அதமூன்றாஆண்டி லசவதுவும்
நீண்டாடிநின்று நிலையொன்றுமூல நிலையிலிரும்
ஆண்டாண்டுஆண்டி லம்பிகாயோகமாறுதனில்
தூண்டாமணிவிளக் கேற்றியதீபச் சுடர்கெதியே. (௲௫௮௮)

செடியானசித்து அறுபத்துநாலுங் கிரகிக்கவும்
துடிபெற்றறிந்து அதினதினுள்ள துன்பங்களெல்லாம்
படிபடியாய்ந்து கருக்கண்டுதேறிப் பலகலையும்
முடிப்பித்துஞான முத்தியுண்டாக்கு முனைசுழியே. (௲௫௮௯)

## வெண்பா.

முத்திசித்தியுண்டா மூலச்சுழிநடுவில்
சத்திசிவமிரண்டுமொன்றாய் தான்தோற்றும்-நித்தியமும்
காலையொடுமாலை கண்டமதிலும்பசவு
வாலையதாகுமிது மாற்று. (௲௫௯௰)

மாற்றும்வகைபறியார் வாசியெனுங்காணசவு
பார்த்துகண்டதானைவிடப் பாலித்து-மாற்றும்வகை
அண்ணைக்கண்ணுடமசவுமதுபிரியா
விண்ணையொட்டிவாசிகட்டுமே. (௲௫௯௧)

மேல்கீழும்வாசி விரும்பவொருவழியாய்
கால்வாகிப்பாயாது காலைபதும்-மேல்கீழும்
சுவாசமதுமோடாது சொக்காதசவெனவும்
உவாசமதுவூதுமோடாதே. (௲௫௯௨)

அன்னமயமதித மடிக்கடி தாளுகாது
வின்னம்பரவு மமேலுஞ்-சொன்னேன்காண்
பசும்பாலுஞ்செய்கையொன்று பாலாகாமற்றொன்று
வீசாவின்பாலொன்றே மேல். (௲௫௯௩)

வருஷமூவாண்டில் வாசிகொண்டுதானை
உருவேற்றங்கண்டங்கி முபாயமதாய்-வருஷமாம்

கீழிருந்துமேலுங் கீழ்மேலும்பாயும்விதம்
பாழ்வீட்டைசுத்திசெய்து பார். 1583

வாசியடங்கவுமுன் மனைசுத்தி[illegible]த்தி
பேசினதுஞானவெட்டிப் பே[illegible]-வாசியது
ஒன்பதுதுவாரகுழி ஓடாதுசுவாசமது
மென்குருகடாட்சமெனு மேல். 159௯

ஆதியொருவாண்டி லழுக்குகளெல்லாமுறியும்
பேதியினாலுண்டமுரி பெருமைகாண்-ஆதியிலும்
முழுவயிரமுன்னாண்டில் முக்காலாம்பின்னாண்டில்
பழுதிலைமூவாண்டுவரை பார். 1696

அரைவயிறுசாதம் புக்கடியுமாகாது
துரையதுவுமொருவேளைச் சொன்னோம்-அரைவயிறு
அதினாலுமாவதென்ன அமுரிபிடியன்னம்
மெதுவாகஅன்னமுண்ணு வேல். 1597

விருத்தம்.

மூன்மலமெலாமொழியலவணம்போச்சு முனதுசடமாதிதமுங் தங்கமாச்சு, தன்மயமாயெடுத்தவிதஞ்சரிதானாச்சு தந்தையில்லாதன்மமெப்படியுண்டாச்சு, உன்மயத்தாலுனக்குதந்தையுருதானாச்சு உப்புஅந்தப்படிவிதங்காண்யோகியாச்சு, மன்மதங்காணீசனுடமவுனமாச்சுமயமானசித்திரையைமாற்றினாரே. 1398

மாற்றினார்மும்மலத்தைவாரிசூழ மலப்புளியுஞ்சலமதனால்மதியினாலும்,ஏற்றினார்சரமாரிமாவின்பாணம் இந்திரியமெனுமமுரிராமபாணம்,தூற்றினார்போலுமிது அறிவோனாகில் சொற்பேதங்குருபேதஞ்சொல்வாரில்லை, நீற்றினாருப்பதுவும்நீறிப்போச்சு நீற்றினத்தைவடிரவியில்நீர்போமாண்டே. 1599

இந்தவிதந்தொண்ணூற்றூற்கருவிச்சுட்டுளண்சாணைதேகமதிலிருந்தசுவாசம், வந்தயெதிர்மனிதர்களைவிழியால்பார்த்த வகையதுபோலுட்கருத்துமணிதீபங்காண்,உந்தன்வழியொன்பதுவுமொளித்தும்போச்சு ஒருவழிகாண்போய்வரவும்வாசியாச்சு, வெந்தணலால்கட்டியதோர்வாசியோகம் மேலானயோகங்கடந்தார்களாண்டே.

வேறு விருத்தம்.

இருபத்தோராயிரத்துஅறுநூறுசுவாசமதுமெல்லாமொன்றாய் கருதிரண்டுவுருவதுபோல் பத்தாண்டுங்கடந்துதசதீட்சைக்கப்பால்

அருவுருவாய்நின்றசவு சரிப்படுங்காண்குறைந்ததெல்லா மாண்டே கேளீர், குருவருளால் யோகமென்ற வழிபெற்றதுறைகளெல்லாங் கூறினேனே. 1601

அஞ்ஞானம்போக்கிசிவ மெய்ஞ்ஞானத் துறையறியவனேகங் காலம், விஞ்ஞானவஸ்துசொல்லுந்தயிலமுறையறிபவராய் வேதஞானி, சன்னசிமகத்துகள்தான் வசியமெட்சணிசெய்வார் சகஸ்திரஞ் சொல்வார், எஞ்ஞானமுழுதுமறிந்திருப்பவர்களவரிடத்தெட்சணி யும்வாழ்வாள். 1602

விருத்தம்.

வாதவயித்திய ஜோஸ்யமாந்தரீகம் மறுபிறவிஞானசிவவாழ்க் கைதன்னில், ஜாதியிலும்வம்மிசவான்கல்வித்தானால் தசதீட்சைசுய ம்புவெகுவர்னங்காணும், சோதியிதுவயதுநாறுபிறவியானால்செகம திலுஞ்சிவயோகிசெல்வவானும், சோதிமணிதீபவொளிப்பிரகாசத் தில் சுரூபமணிநிரூபமதிசுயம்புமுத்தர். 1603

முத்துநவரத்தினம்போல்முடிந்தரூக்ஷம் முன்னோர்கள்பதினெ ண்பேர்கமலம்போற்றி, சத்திசிவதீட்சைபத்துமிரண்டும்வாழிசன காதிமாமுனிவர்சித்தர்வாழி, பத்துநூராயிரத்துமேலாமின்னூற் ப ரிபூர்ணசொச்சமெனுமிருபத்தெட்டும், வித்தினால்விளைவானசகஸ்தி ரசன்னூல் வேதாந்தஞானவெட்டிவிளக்கமுற்றே. 1604

ஞானவெட்டியான்

முற்றிற்று.

# பிரயோஜன அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| தன்வரலாறுகூறுதல் | 7 |
| தத்துவவுற்பத்தி | 13 |
| சரீரவுற்பத்தி | 18 |
| ஆருதாரவகை இந்திரியவிவரம் | 21 |
| தசநாடிமுறை | 24 |
| வசையமுறை | 28 |
| ஆயர்விருத்தி | 37 |
| அவயவங்குறையுமுறை | 42 |
| இடைபின்கலையினளவு | 47 |
| பிண்டோற்பத்தி | 47 |
| கெர்ப்பக்குறி | 51 |
| ஆருதாரதரிசனை | 53 |
| ,, ஆனந்தக்களிப்பு | 57 |
| ஜெனனகாலதரிசனை | 59 |
| பிணடங்கிழ்நோக்குற்றமுறை | 65 |
| ,, நொண்டிசிந்து | 66 |
| பிறவித்துன்பம் | 69 |
| பிறந்தவகை | 73 |
| பாலுண்ணல் | 78 |
| தொட்டிலாட்டுஞ்சிறப்பு | 80 |
| சிவபூசைசெய்தவிவரம் | 84 |
| ஜாதிவேற்றுமை | 89 |
| ஜாதிவகை | 90 |
| உலகவுற்பத்தி | 95 |
| மதபேதகண்டனம் | 99 |
| ஜாதிபேதகண்டனம் | 101 |
| பொய்க்குருவைவிலக்கல்விருத்தம் | 102 |
| ஈஸ்வரசிருஷ்டி | 105 |
| ஜீவலயம் (கொச்சகம்) | 115 |
| ,, தரு | 116 |
| கற்பசாதனை | 116 |
| யோகசாதனை | 120 |
| வாசிதாரணை | 124 |
| கற்பமுண்ணுமுறையும்பத்யமும் | 127 |
| அண்டச்சூரணம் | 130 |
| வாசிவசப்படுதல் | 138 |
| யோகசித்தி | 143 |
| சர்வசித்தி (ஆனந்தக்களிப்பு) | 146 |
| முப்பூவினிலக்கணம் | 151 |
| பூநீருற்பத்தியாகுங்காலமும் அஃதெடுக்கும்வகையும் | 155 |
| முப்பூவினுல்செயமாகுஞ்சரக்குகள் (விருத்தம்) | 158 |
| சண்டமாருதக்குழம்பு | 165 |
| பஞ்சாமிர்தக்குளிகை | 178 |
| ஜன்னிவிவரமும் அதற்கனுபானமும். (கொச்சகம்) | 182 |
| கற்பமுண்ணுங்கால்அபத்தியநேரிடுமாகில்அதற்குவயித்தியம் | 185 |
| கற்பமுண்ணும்போதுநேரிடுந்துன்பம் | 183 |
| காயசித்தி | 189 |
| பூரணமுறை | 192 |
| ரசக்குளிகை | 194 |
| மனோதிடங்கூறல் | 195 |
| கற்பலேகியம் | 200 |
| வாதமுறை | 202 |
| ஞானவெற்றி | 204 |
| யோகஜெயம் ஏலப்பாட்டு | 206 |
| முப்பூமுடித்தல் | 210 |
| ரசபஸ்பம் | 212 |
| அரிதாரபஸ்பமுறை | 214 |
| சவ்வீரசுன்னம் | 217 |
| கௌரிங்பஷாணச்சுன்னம் | 220 |
| பளிங்குபாஷாணபஸ்பம் | 223 |
| சாதிலிங்கபஸ்பம் | 226 |
| குமரிலேகியம் | 230 |
| நாகபஸ்பம் | 232 |
| வாலைதிராவகம் | 236 |
| மகாமேகபூபதிலேகியம் | 240 |
| மதனகாமேஸ்வரதயிலம் | 242 |
| நாராயணசெந்தூரம் | 249 |
| நவலோகபூபதி | 252 |
| சிங்கிபஸ்பம் | 255 |
| யோகநிலை | 264 |
| கெந்திதிராவகம் | 270 |
| எட்சணி (வெண்பா) | 274 |
| மோடிவகை | 286 |
| மாந்தரீகம்அஞ்சனமுறை | 296 |


பிரயோஜன அட்டவணை.

முற்றிற்று.